


கந்தரநுபூதி

(உரையுடன்)

கிருபானந்தவாரி

உ

முருகா

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த

கந்தரநுபூதி

(உரையுடன்)

உரையாசிரியர்:

கிருபானந்தவாரி

வானதி பதிப்பகம்
தி.நகர் :: சென்னை-17

ஐந்தாம் பதிப்பு: 1976

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 5-00

ஜீவன் பிரஸ், சென்னை-600 005 (2014)

முருகா

முன்னுரை

இறைவன், உயிர், தளை என்ற இந்த மூன்றும் என்றும் உள்ள பொருள்களாம். இக்கருத்து வேதாகமங்களால் கூறப்படுவது.

சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள, மறையெலாம் மொழிய நின்றன,
ஆன்றதோர் தொல்பதி, ஆருயிர்த் தொகை,
வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே.

—கந்தபுராணம்

"பதியினைப்போல் பசு பாசம் அநாதி"

என்கிறார் திருமூலர்.

உயிர்கள் இறைவனால் படைக்கப்பட்ட பொருள்கள் அல்ல. இலது உளதாகமாட்டாது; உளது இலதாக மாட்டாது; இது சற்காரியவாதம். இதுதான் நமது சைவ சமயத்தின் அடிப்படையான உண்மை.

கேவலாவத்தையாகிய ஆணவ இருளில் ஆன்மாக்கள் கட்டுண்டு முழுத் துன்பத்துடன், அறிவு சிறிதும் இன்றிக் கண்ணில்லாக் குழவிகளைப்போல் கிடந்தன. இறைவன் தனது அளப்பற்ற கருணையால் அவ்வுயிர்கட்கு இந்த உடம்பையும் உடம்பில் உள்ள கரணங்களையும், உலகத்தையும், உலக நுகர் பொருள்களையும் பிரகிருதி மாயையிலிருந்து உண்டாக்கி வழங்கியருளினான். குளிரால் நடுங்கும் ஒருவனுக்குச் சட்டை தருவதுபோலவும், கண்ணில்லாதவனுக்குக் கோல் தருவதுபோலவும் எனவுணர்க.

"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட்டு" —தாயுமானார்

எனவே இறைவன் என்று உள்ளானோ அன்றே உயிர்களாகிய நாமும் இருக்கின்றோம்.

"என்று நீ, அன்று நான் உன்னடிமையல்லவோ?" என்கின்றார் தவராஜசிங்கமாகிய தாயுமானார்.

எங்நாட்டவரும் இறையென்று வணங்குகின்ற பரம் பொருளைச் சிவம் என்று கூறுகின்றன வேதாகமங்களும் திருமுறைகளும். "செம்பொருள்" என்று பொதுமறை புகல்கின்றது.

சிவம் மூவர்க்குந் தேவர்க்கும் மேலான பொருள்:

"ப்ரபஞ்சோபசமம், சாந்தம், சிவம், அத்வைதம்,
சதுர்த்தம் மந்யந்தே; ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய:"
—மாண்டூக்ய உபநிடதம்

"ப்ரம்ம விஷ்ணு ருத்ராதீதம் பகவந்தம் சிவம்"

"முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்" —திருவாசகம்

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு. —திருக்குறள்

இத்தகைய சிவததுடன் தொடர்புகொண்டது சைவம். சிலா—கல்; கல்லின் தொடர்புடையது சைலம் திலத்தின் தொடர்புடையது தைலம்; இதுபோல் சிவ சம்பந்தமுடையது சைவம் எனவுணர்க.

"தெய்வம் சிவமே; சிவனருள் சமயம்
சைவம்; சிவத்தொடு சம்பந்தம் என்றான்"
—சிற்றம்பல நாடிகள்

சைவம் எல்லாச் சமயங்கட்கும் தாயகமாகவும் நாயகமாகவும் விளங்கும் ஒப்பில்லாத உண்மைச் சமய மாகும்.

எண்ணில்கோடிப் பிறவிகளில் அபுத்தி பூர்வமாகச் செய்த புண்ணயத்தால் இம்மனிதப் பிறவி யெய்துகின் றது. இது கடலைக் கையால் நீந்திக் கரையையடைந் ததை யொக்கும்.

அண்டசம் சுவேதசங்கள் உற்பிச்சம் சராயுசத்தோடு
எண்டரு நால் எண்பத்து நான்குநூ றுயிரத்தால்
உண்டு பல்யோனி யெல்லாம் ஒழித்துமா நுடத்துதித்தல்
கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண்.
—சிவஞானசித்தியார்

"அரிது அரிது மானிடராதல் அரிது" —ஔவையார்

மனிதராகப் பிறந்தாலும், பிறநாடுகளில் பிறவாது மக்கள் வாழும் நாட்டில் பிறப்பது அரிது; மக்கள் வாழும் தேயங்களில் பிறப்பதினும், தெய்வம் உண்டு என்னும் சித்தமுடைய பாரதநாட்டில், அதிலும் சிவத்தை வழிபடும் சைவ மரபில் பிறப்பது அரிது. இது எண்ணில் கோடி பிறப்புக்களில் செய்த புண்ணியம் நண்ணிய தால் கிடைக்கும்.

நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண் ணியத்தாலுகும்
தரையினில் கீழைவிட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசமயங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணுைதே.

—சிவஞானசித்தியார்

செல்வம் மிகுந்த வாழ்வும் மையல் செய்யும்; வறுமையும் மையல் செய்யும். ஆகவே வாழ்வு, வறுமை என்ற இரு சிறுமைகளும் இன்றி, அடக்கம் என்ற பெருமையுடன் சைவ சமயத்தில் சாரும் ஊழ்பெறு வதும் அரியவற்றுள் அரியதாம். இச் சிவசமயஞ் சார்ந்து, சரியை, கிரியை, யோகங்களைச் செய்து, சிவ ஞானம் பெற்றவர் சிவனருள் பெற்றுச் சிவமாம் பெற்றி யைப் பெறுவர்.

வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாம் சமயஞ் சாரும்
ஊழ்பெறல் அரிது; சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியினானைப் போற்றுவார் அருள் பெற்றாரே.

—சிவஞான சித்தியார்

சமயங்கள் பல; இவைகளை நுணுகியாராய்ந்தஆன் றோர்கள் நான்காகப் பிரித்தார்கள். புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயம் என்பன வாம். இவைகளுள் ஒவ்வொன்றிலும் ஆறு பிரிவுகள் உள. அதனால் நாலாறு இருபத்துநான்கு சமயங்களா தும். இவைகளின் விரிவைச் சிவஞான போதத்துள் காண்க.

புறச் சமய நெறிகளில் நின்று, அவற்றில் செய்த புண்ணியப்பயனுல் அகச் சமயஞ் சேர்ந்து, ஸ்மிருதி களைப் படித்து உழன்றபின் ஆச்சிரம நெறியைக் கடைப்பிடித்து ஒழுகி, அறத் துறைகளையடைந்து, அருந்தவங்கள் செய்து, அரிய கலைகளைக் கற்று, அரு மறைகள் ஓதிப் பதினெண் புராணங்களை யுணர்ந்து வேத உபநிடதங்களை நுட்பமாகத் தெளிந்து, அந்நெறி நின்று சென்ருல் அவைகளின் பயனுக ஒருவன் சைவத் திறத்தினையடைகின்ருன். சைவத்தையடைவதுதான் அம்மம்ம! எத்தனை எத்தனை தூரம். இதனை இனிய கனியமுதம் போன்ற செஞ்சொற்களால் எடுத்துத் தொடுத்துத் தருகின்ருர் சந்தான குரவர்களில் ஒருவ ரான சகலாகம பண்டிதர்;—அருணந்தி சிவாச்சாரியர்.

புறச்சமய நெறிநின்றும், அகச்சமயம் புக்கும்,
புகல் மிருதி வழி யுழன்றும், புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள்
புரிந்தும்,
அருங்கலைகள் பலதெரிந்தும், ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்ருல், சைவத்
திறத்தடைவர் இதில்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்.

எல்லாச் சமய நெறிகளையும், தன்னகத்தே கொண்டு அவைகளைப் படிமுறையாகக் கொண்டு, அவைகளுடன் பிணங்காமல் இணங்கி, பாதரசத்தால் கரைந்து மறையும் மற்றைய உலோகங்கள் போலன்றி நின்று நிலைத்துத் தங்கும் பத்தரைமாற்றுத் தங்கம் போல் தன்னியல்பு என்றும் குன்ருது, இயமம் முதலிய அட்டாங்கயோக நெறிகளைக் காட்டி, இன்பத்தையருள வல்லதும் மற்றைச் சமயங்கள் அனைத்தும் தனக்குப் பரிவாரமாக விளங்க, சிட்சை, வியாகரணம், சோதிடம்,

சந்தஸ், கறபம், நிருத்தம் முதலிய வேதாங்கங்கள் வணங்க,மௌனம் என்ற மகுடத்தைச் சிரத்தில் தரித்து அரசு புரிவது வைதிக சைவ சமயம் எனவுணர்க.

“செப்பரிய சமயநெறி யெல்லாம் தந்தம்
தெய்வமே தெய்வம்எனும்; செயற்கையான
அப்பரிசா ளரும் அஃதே பிடித்தால் இப்பால்
அடுத்த அந்நூல் களும்விரித்தே அநுமா ஞதி
ஒப்ப விரித் துரைப்பர்! இங்ஙன் பொய்மெய் யென்ன
ஒன்றிலேஒன் றெனப்பார்ப்பது ஒவ்வா தார்க்கும்
இப்பரிசாம் சமயமுமாய் அல்லவாகி
யாதுசம யமும்வணங்கும் இயல்பதாகி.

இயல் பென்றுந் திரியாமல் இயம மாதி
எண்குணமும் காட்டியன்பால் இன்பமாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வாரம் ஆகிப்
பண்புறவும் சௌபான பட்சங் காட்டி
மயலறு மந்திரம் சிட்சை சோதிடாதி
மற்றங்க நூல்வணங்க மௌனமோலி
அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்ததுவை திகசைவம் அழகிது; அந்தோ.

அந்தோஈது அதிசயம் இச் சமயம்போல் இன்று
அறிஞ ரெல்லாம் நடுஅறிய; அணிமா ஆதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வேறு இல்லை; இல்லை
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்க நெறி இந்நெறியே தான்சன் மார்க்கம்’’

என்று அநுபூதிமானாகிய தாயுமானப் பெருந்தகையார் அருளிச் செய்கின்றார். அட்டமாசித்தி கற்றாரும், இந்திராதி போகநலம் பெற்றாரும் இச்சைவ சமயத்தையே தமக்குத் தாயகமாகக் கொண்டு உய்கின்றார் என்று கூறும் அருமையையும் பெருமையையும் பெற்றது சைவ சமயம்.

பூக்களில் சிறந்தது தாமரை; தண்ணீரில் சிறந்தது கங்கை நீர்; மணிகளில் சிறந்தது உருத்திராட்சம்; பெண்களில் சிறந்தவர் உமாதேவியார்; குமாரர்களில் சிறந்தவர் குமாரசுவாமி; மலைகளில் சிறந்தது இமய மலை. இதுபோல் சமயங்களில் சிறந்தது சைவ சமயம்.

சைவசமயமே சமயம்; சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டும், இந்தக்
கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமய நெறி புகுதவேண்டாம்;
முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும்
செகத்தீரே. —தாயுமானுர்

சைவ சமயம் சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில்—ஐவரைவென்று
ஆனந்த வெள்ளத் தழுந்துவது முத்தியெனில்
வானங்காள் பெய்க மழை.
ஓதிநூல் கோடி உணர்ந்தும் உணரார்கள்;
பாதிவெண் பாவில் பகரக்கேள்—ஆதி
சிவமே பொருள்; அதனைச் சேரும்நெறி அன்பே;
பவமே பகை; அருளால் பார்.

''அந்திக்கு நிகர் மெய்யண்ணல் அருள்புரிந்து
அறிஞராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகம்
ஆறுங் கொண்டான்'' —கந்தபுராணம்

இதுகாறும் கூறியவற்ருல் சைவ சமயத்தின் தனிப் பெருஞ் சிறப்பு ஓரளவு உணர்த்தப் பெற்றது.

சிவ பரம்பொருளின் தொன்மை வடிவு அறுமுக வடிவம். தொன்மையும் நன்மையும் உடைய இந்த ஆறுமுக வடிவு அநாதியானது.

இறைவனுடைய ஐந்து திருமுகங்கள், ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்பனவாகும். இவை முறையே ஆகாயம், கிழக்கு,

தெற்கு, வடக்கு, மேற்கு என்ற ஐந்து திசைகளை நோக்கியுள்ளன.

ஈசானம்: எல்லாவற்றையும் ஆளுந் தன்மையது.

தற்புருடம்: தேவசரீரம் மானுட சரீரம் ஆகிய வற்றில் அதிட்டித்து நிற்பது.

அகோரம்: சாந்தமாக இருப்பது.

வாமதேவம்: அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை ஆன்மாக்களுக்கு அருளவல்லது.

சத்யோஜாதம்: உயிர்களுக்கு உடல்களைத் தோற்று வித்து உள்தோன்றி அருளவல்லது.

இந்த ஐந்து முகங்களுடன், கீழ்நோக்கும் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகம் ஆகி சிவம் உயிர்கட்குத் தனிப்பெருங் கருணை புரிகின்றது.

"ஐந்துமுகத்தோ டதோமுகமுந் தந்து
திருமுகங்கள் ஆறுகி" —கந்தர் கலிவெண்பா

இத்தகைய எந்தை கந்தவேளின் இன்னருள் பெற்றூர் பலர். நக்கீரர்; சிகண்டி முனிவர்; பொய்யாமொழி; ஔவையார்; வசிட்டர்; காசிபர்; இடைக்காடர்; சிதம்பர முனிவர்; சிற்றம்பல நாடிகள் முதலிய பலப்பலர்.

இவர்க்குள் முருகவேள் மலர்வாக்கால் பிரணவ மந்திர உபதேசம் பெற்றவர்கள் இருவர்களே. ஒருவர் அகத்தியர், மற்றொருவர் அருணகிரிநாதர்.

"எட்டிரண்டும் அறியாத என் செவியில்
எட்டிரண்டும் இதுவாம் இலிங்க மென
எட்டிரண்டும் வெளியா மொழிந்தகுரு முருகோனே."
—திருப்புகழ்

முருகப்பெருமானுடைய முழுமுதற்றன்மையை முழுதொருங்குணர்ந்த முனீந்திரர் அருணகிரிப் பெருமான். இம்மாமுனிவர் அருணையம்பதியிலே பதினைந்தாம் நூற்றுண்டில் பிரபுடதேவன் காலத்தில் சிவஞான பாநுவாய் அவதரித்தவர். சைவ சமய குரவர்கள் நால்

வர்க்குப்பின் வந்த ஐந்தாவது குரவர் எனத் தெளிந்த சிவஞானிகளால் போற்றப்பெற்றவர். இவருடைய பெருமை அளவிடற்கரியது.

அருணகிரிநாதர் அருளிச் செய்த நூல்கள் ஆறு திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், வேல்மயில் விருத்தம், கந்தரநுபூதியென்பன.

இந்த ஆறு நூல்களில் கந்தரநுபூதி வடிவத்தில் சிறியது; மகிமையில் பெரியது. மந்திர சாத்திரம் ஆகும். இதன் பெருமையையுணர்ந்த தாயுமானுர் கூறுவதைக் காண்க.

"கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநுபூதி சொன்ன
எந்தையருள் நாடி யிருக்குநாள் எந்நாளோ."

இது, அருணகிரிநாதர் வெறும் இலக்கண அறிவால் பாடிய நூல் அன்று. கந்தருடைய அநுபூதியைப் பெற்று கந்தரநுபூதியைப் பாடியருளினுர்.

அருணகிரிநாதர் வேலவனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். "அப்பனே! அடியேன் உமது பவளமனைய பாதமலரில் ஒரு மந்திர மலர்மாலை சாத்துமாறு அருள் செய்.

அம்மலர் மாலைக்கு என் மனமாகிய தாமரை குஞ்சமாக அமையவேண்டும். அன்பான நூலினுல் தொடுக்க வேண்டும். நாவிலே அழகாகக் கட்டவேண்டும்; அதில் ஞானம் ஆகிய நறுமணங் கமழ வேண்டும்; அம்மலர் மாலை ஒளி செய்ய வேண்டும்; குற்றமில்லாத அறிவு என்ற வண்டு அதில் ஒலிக்கவேண்டும். ஆறு ஆதாரங்களில் உள்ள அகாரம் முதல் க்ஷகாரம் ஈருகவுள்ள மாத்ருகா மந்திரங்களாகிய ஐம்பத்தொன்றும் மலர்களாகத் திகழவேண்டும். இத்தகைய மந்திர மலர் மாலையை ஐயனே! உனது செய்ய பாத மலரில் புனைதல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

"ஆசைகூர்பத்த னேன்மனேபத்ம
மான பூவைத்து நடுவேயன்
பானநூலிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி ஒருஞான
வாசம்வீசிப்ர காசியாநிற்ப
மாசிலோர் புத்தி அளிபாட
மாத்ருகாபுஷ்ப மாலைகோலப்ர
வாள பாதத்தில் அணிவேனே" .—திருப்புகழ்

இந்த வேண்டுகோளின்படி தான் கந்தாநுபூதி யென்ற செஞ்சொல் மலர்மாலையை வேலையேந்திய விமலனுக்குச் சாத்தினுர்.

மூலாதாரத்தில்	4	எழுத்துக்கள்
சுவாதிஷ்டானத்தில்	6	,,
மணிபூரகத்தில்	10	,,
அநாகதத்தில்	12	,,
விசுத்தியில்	16	,,
ஆக்ஞையில்	2	,,
அதற்குமேல்	1	எழுத்து

ஆக 51 எழுத்துக்கள்

"அகரமுதலென வுரைசெய் ஐம்பந்தொரட்சரமும்" என்ற திருப்புகழாலும் அறிக.

கந்தன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள்கள் உள.

(1) கந்தன் பகைவர்களுடைய ஆற்றலை வற்றச் செய்பவன்.

"ஸ்கந்தயதி சத்ருன் சோஷயதீதி ஸ்கந்த:"

—வடமொழி அமரகோச வுரை.

(2) ஆறு திருமேனிகளும் ஒன்ருகப் பொருந்தினவன்.

எந்தை சக்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்து போல ஒன்ருகியே கூடிய முறைபோல்
அந்த மில்லதோர் மூவிரு வடிவும் ஒன்ருகி
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.

—கந்தபுராணம்

(3) கந்து அன் கந்தன். கந்து-பற்றுக்கோடு. யானைகட்டுந் தறி. ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாகத் திகழ்பவன்.

அநுபூதி :—

அநு-உடன்; பூதி-ஆதல். ஆன்மா இறைவனுடன் ஒன்றுவது அநுபூதி. ஒன்றுவதால் உண்டாகும் அநுபவ ஞானம் ஆகும்.

எனவே ஆன்மா கந்தக் கடவுளுடன் ஒன்றுபட்டு (அத்துவிதமாகி) அதனால் விளையும் மெய்யுணர்வு எனவுணர்க.

"ஆசாநிகளந் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே"

என்று இந்நூலில் 43-ஆவது திருப்பாடல் தெரிவிக்கின்றது.

ஞானம் மூன்று வகைப்படும். பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்பன.

வேதம், சாத்திரம், மிருதி, புராணம் முதலியவாயும், பிறவாயும், மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம், கலை ஆகிய பாசப் பொருள்களின் உதவியால் உண்டாகும் ஞானம் பாச ஞானம் எனப்படும். அது பாசபந்தமாகிய பிறவியைத் தரும்.

மாயா காரியங்களாகிய மந்திரம், பதம், வன்னம் முதலிய இவ்வறுவகைப் பொருள்களின் தன்மையையுங் கண்டு, தான் இவற்றின் வேறாகிய பொருள் என்று, தனது சொரூபத்தை ஒருவாறு கண்டபோதும், பதியுண்மையையும், தனக்கும் பதிக்குமுள்ள தொடர்பையும், பசு எனப்படும் ஆன்மா உணராமையால், தான் பாசத்தின் வேறுபட்ட அறிவு சொரூபமான பொருள் என்பதை மட்டுங்கண்டு, "நான் பிரமம்" என்று தருக்குற்று நிற்றல் பசுஞானமாகும்.

வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியாதித் திறங்கள் மேலாம்
நாதமுடி வானவெல்லாம் பாசஞானம்
நணுகியான்மா இவைகீழ் நாடலாலே
காதலினுல் நான்பிரமம் என்னும் ஞானம்
கருதுபசு ஞானம் இவனுடலில் கட்டுண்டு
ஓதியுணர்ந் தொன்ருென்ரு உணர்ந்திடலாற் பசுவாம்
ஒன்ருகச் சிவனியல்பின் உணர்ந்திடுவன் காணே.
—சிவஞான சித்தியார்.

பாச ஞானத்தையும் பசு ஞானத்தையும் அகற்றிப் பதியை அவனருளால் உணர்ந்து, அப்பரமன் அடிக்கீழ் நின்று உணர்தலே பதிஞானமாகும்.

"சீவனொடுக்கம் பூதவொடுக்கந்
தேற உதிக்கும் பரஞானம்" —திருப்புகழ்

ஆகவே இச் சிவ ஞானத்தைத் தெளிவுறத் தெரிவிப்பது கந்தரநுபூதியாகும்.

கந்தரநுபூதி என்ற சொல் மூன்று வகையாகப் பொருள்படும்.

(1) கந்தரைச் சேர்ந்து அடையும் அநுபூதி. "ஐ" என்ற இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலைத் தொடர்.

(2) கந்தரால் அடையும் அநுபூதி; 'ஆல்' என்ற மூன்ரும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை நிலைத் தொடர்.

(3) கந்தரின்கண் அடையும் அநுபூதி; "கண்" என்ற ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொடர்நிலை.

இனி இதன் பொருளை விளக்குதும்:

(1) கந்தரைச் சேர்ந்து அடையும் அநுபூதி என்பது: —

இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் என்ற மூன்றையும் முறையே அடைந்து பக்குவப்பட்டஒருவர்

எல்லாவுயிர்களும் தம்மைப்போல் இன்பம் அடைய வேண்டும் என்றும், கந்தக் கடவுளின் கருத்துக்கு இணங்க, அவரை அன்புடன் வழிபட்டு, தாம் வேறு: கந்தக் கடவுள் வேறு என்னாது, உடலும் உயிரும்போல் அவருடன் கலந்து ஒன்றுபட்ட அத்துவித நிலையைக் குறிக்கும்.

(2) கந்தரால் அடையும் அநுபூதி என்பது :—

அங்ஙனம் ஒன்றுபட்ட அத்துவித நிலையை அடைந்தவருக்குக் கந்தக் கடவுள், கதிரவன் ஒளியும், கண்ணொளியும் போல அவரின் வேறாய் நின்று தம்மை யறிவித்துக்காட்டும் உதவி செய்து பொருளால் வேறாய் நிற்கின்ற அத்துவித நிலையைக் குறிக்கும்.

(3) கந்தரின்கண் அடையும் அநுபூதி என்பது: —

அங்ஙனம் வேறாய் நின்று அறிவித்துக் காட்டும் உதவி செய்யப் பெற்றவரைக் கந்தக் கடவுள், உயிரறிவும் கண்ணொளியும் போல தம்மோடு உடனாய் நிற்கும் செயலிலுஞ் செலுத்திக்காணும் உதவி செய்து உடனாய் நிற்கின்ற அத்துவிதத்தைக் குறிக்கும்.

இங்ஙனம் கந்தரநுபூதி என்ற தொகைநிலைச் சொற்றொடர், மூவகைத் தொகாநிலைத் தொடர்களாய் விரிந்து, பக்குவம் அடைந்த அடியார் ஒவ்வொருவரும், கந்தக் கடவுளும், கலப்பினால் ஒன்றுபட்டு நிற்கும் அத்துவித நிலையையும், பொருளால் கந்தக் கடவுள் அவருக்கு வேறாய் நின்று காட்டும் உதவியைச் செய்யும் அத்துவித நிலையையும், செலுத்தி நிற்குந் தன்மையால் கந்தவேள் அவரோடு உடனாய் நின்று காணும் உதவியைச் செய்யும் அத்துவித நிலையையும் குறித்து, அம்மூவகை அத்துவித நிலைகளாலும் அவர் அடையும் அநுபூதியாகிய பதிஞானத்தைக் குறிக்கும் எனவுணர்க.

எனவே கந்தரநுபூதி என்பது அத்தகைய மெய்யுணர்வைப் பற்றிக் கூறும் நூலுக்குப் பெயராய் அன்மொழித் தொகையாய் வந்தது.

மேலே கூறிய மூவகை அத்துவிதங்களைச் சிவஞான போதம்,

"அவையே தானே யாயிரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே"

என்ற சூத்திரத்தால் நுவல்கின்றது.

அவையே தானேயாய் என்ற சொற்றொடர், அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் என்று மூன்று வகைப்பட்டு நின்று பொருள் தருகின்றது.

"அவையேயாய்" என்பதனால் உடலின் கண் உயிர் நிற்கும்போது, உடல்வேறு உயிர்வேறு பிரித்துக் கூற முடியாது; உடலேயாய் இருப்பதுபோல், இறைவன் ஆன்மாக்களுடன் கலந்து பிரிப்பின்றி நிற்கின்றான்.

"தானேயாய்" என்பதனால், காணுந் தன்மையுள்ள கண்ணைக் காணச் செய்தற்கு, கண்ணின் வேறாய் கதிரவன் ஒளி உதவுவதுபோல், ஆன்மாக்களின் வேறாய் நிற்கின்றான்.

"அவையே தானாய்" என்பதனால், காணுந்தன்மையுள்ள கண்ணானது ஆன்மபோதம் இலலாதபோது காணுமாறு இல்லையாதலின், கண்ணுக்கு ஆன்மபோதம் எவ்வாறு உடன் நின்று உதவுகின்றதோ, அவ்வாறு உடனாய் நின்று இறைவன் அருளுகின்றான்.

............"உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும் அத்துவித மாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கலுற்றாம்"

என்று சிவப்பிரகாசமும் இதனை வலியுறுத்துகின்றது.

ஆதலால் இந்தக் கந்தரநுபூதியைக் காதலால் தினம் ஓதுவோர் கந்தவேளுடன் கலந்து, அத்துவிதம் எய்திச் சிவஞானம் பெற்றுப் பேரின்பம் எய்துவர்.

அன்பன்,
கிருபானந்தவாரி.

பாட்டு முதற்குறிப் பகராதி

உ

முருகா

கந்தரநுபூதி

காப்பு

நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள் சண்முக னுக்கியல்சேர்
செஞ்சொல்புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானை பதம்பணிவாம்.

பதவுரை

தஞ்சத்து—அடியார்கள் "நீயே எனக்குப் புகலிடம், வேறு புகலிடம்இல்லை" என்று கூறி ஏத்தும்பொழுது,
அருள் சண்முகனுக்கு—அவர்கட்கு அவர்கள் வேண்டிய வாறு அருள் புரிகின்ற ஆறுமுகப் பெருமானுக்கு,
கனகல் நெஞ்சமும்—ஓதுவார் கேட்பார்களுடைய கடின மான கல்போன்ற இளகாத நெஞ்சமும்,
நெகிழ்ந்து உருக—கரைந்து உருகும்படி,
இயல் சேர்—இயற்றமிழுக்குச் சேர்ந்த,
செஞ்சொல் புனைமாலை—செம்மையான சொற்களையுடைய பாமாலையாகிய இந்தக் கந்தரநுபூதி நூலானது,
சிறந்திடவே—சிறப்படையும் பொருட்டு,
பஞ்ச கர ஆனைபதம்—ஐந்து திருக்கரங்களையுடைய யானைமுகக் கடவுளின் இரு திருவடிகளையும்,
பணிவாம்—யாம் வணங்குவாம்.

பொழிப்புரை

"ஐயனே! நீயே புகலிடம்; வேறு தஞ்சம் இல்லை" என்று கூறி அடியார்கள் ஏத்தும் பொழுது, அந்த அடியார்கட்கு அருள்புரிகின்ற ஆறுமுகப் பெருமானுக்கு, ஓதுவார்-கேட்போர்களுடைய கடினமான உருகாத உள்

ளமும் உருகுமாறு, இயல் தமிழான செவ்விய சொற்க ளால் தொடுத்த கந்தரநுபூதி என்ற இந்தப் பாமாலை சிறப்பு அடையும் பொருட்டு, ஐந்து திருக்கரங்களை யுடைய யானைமுகப் பெருமானுடைய இரண்டு திருவடி மலர்களையும் யாம் வணங்குவோம்.

விரிவுரை

நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந்துருக :—

இறைவனை நினைக்கும்போதும், துதிக்கும்போதும், வழிபடும்போதும் உள்ளம் உருகவேண்டும். அநேக ருடைய உள்ளம் உருகாது கடினமான கல்லைப் போல் கெட்டியாக இருக்கிறது. "அப்படி உருகாத கல் மனத் தையும் உருகச் செய்யும் பொருட்டு இந்தக் கந்தரநுபூ தியை நான் பாடுகிறேன்" என்கிறார் அடிகளார்.

இறைவன் ஆன்மாக்களுக்கு ஒன்ருய் வேருய் உட ஞய் நின்று ஒவ்வொரு கணமும் உதவி புரிகின்ருர். பேச்சும் மூச்சும் அப் பரம கருணாநிதியின் தண்ணரு ளால் அமைந்துள்ளன. அப் பரம பிதாவின் திருவருளை நினைந்து மனம் உருகிக் கரைந்து நீராய் ஓடவேண்டும். சிவஞானிகள் உள்ளம் அவிச்சின்ன தாரையாய் உருகிக் கொண்டிருக்கும். உருகியதற்கு அடையாளம் கண்ணீர் வெள்ளமாய் ஓடும்.

"வெள்ளந்தாழ் விரிசடையாய்! விடையாய்! விண்ணோர்
பெருமானே' எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலில் கீழ்மேலாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள்நின் றுச்சியளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா!
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்தீ வினையினேற்கே"

என்று கதறுகின்ருர் மணிவாசகர்.

"கல்லேனும் ஐயவொரு காலத்தில்உருகும், என்
கல்நெஞ்சம் உருகவில்லையே" —தாயுமானுர்.

"கள்ளுருகு மலர்மணம்போல் கலந்தெங்கும் நிறைந்தோய்!
நின் கருணைக் கந்தோ!
முள்ளுருகும்; வலியபராய் முருடுருகும், உருகாத
முறைசேர் கல்லும்
வள்ளுருகும், மலையுருகும்; மண்ணுருகும்; மரம் உருகும்;
மதியிலேன்றன்
உள்ளுருகும் வகையில்லை; என்செய்கேன் நான்; ஏன்
பிறந்தேன்? ஓதியனேனே"

என்று உருகிப் பதறிக் குழைந்து பாடுகின்றுர் வடலூர் வள்ளலார்.

பரமனை நினைந்து உருகி நிற்பாரது ஆணவ இருளை இறைவன் போக்கி அருளுகின்றுன்.

"உருகு மடியவர் இருவினை யிருள்பொரும்
உதயதினகர! இமகரன் வலம்வரும்
உலக முழுதொரு நொடியினில் வலம்வரு
பெருமாளே." —திருப்புகழ்.

ஊனுக்குள் உயிர் உறைகின்றது. உயிருக்குள் இறைவன் இருக்கின்றுன். முதலில் ஊன் உருக வேண்டும்; பிறகு உயிர் உருக வேண்டும். உருகிய உயிரில் இறைவன் அத்துவிதமாகக் கலந்து விடுகின்றுன்.

அரக்கில் தங்கமும், தங்கத்தில் மணியும் இருக்கின்றன. முதலில் அரக்கும், பின்னர் தங்கமும் உருகினுல் அதில் உள்ள இரத்தினமணி தங்கத்தில் பதிந்துவிடுகின்றது.

இவ்வாறு உருகும் அடியார்கட்கு, மூவர்க்கும் தேவர்க்கும் மற்று யாவர்க்கும் அரியனுகிய இறைவன் எளியனுகின்றுன்.

உடல்குழைய என்பெலாம் நெக்குருக, விழிநீர்கள்
ஊற்றென வெதும்பியூற்ற,
ஊசிகாந்தத்தினைக் கண்டணுகல் போலவே
ஓருறவும் உன்னி உன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடியாடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்ந் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித்துக் கூப்பி
வானே! யவ்வானில் இன்ப
மழையே! மழைத்தாரை வெள்ளமே! நீடூழி
வாழியென வாழ்த்தி ஏத்தும்
கடல்மடை திறந்தனைய அன்பர் அன்புக்கு எளியை :
கல்நெஞ்சனுக்கு எளியையோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. —தாயுமானார்.

தஞ்சத்தருள் சண்முகனுக்கு :—

உத்தமமான அடியார்கள் முருகனையே அடைக்கலம் புகுந்து தம்மையே அர்ப்பணித்துக் கொள்வார்கள்.

"இறைவனே! நீயே எனக்குப் புகலிடம். உன்னையொழிய வேறு புகலிடம் இல்லை" என்று கூறித் தஞ்சம் புகுவார்கள்.

தஞ்சந்தஞ்சஞ் சிறியேன்மதி
கொஞ்சங் கொஞ்சந் துறையேயருள்
தந்தென் றின்பந்தரு வீடது தருவாயே.
—(வஞ்சங்கொண்) திருப்புகழ்.

இவ்வாறு தஞ்சம் புகுந்த மெய்யடியார்கட்கு ஆறுமுகப் பெருமான் அருள்புரிகின்றான்.

ஆகாயம், கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு, கீழ் என்ற ஆறு திசைகளையும் நோக்கியுள்ள ஆறு முகங்

களையுடையவன் முருகன். எல்லாத் திசைகளையும் அப் பரமபதி பார்த்தருளுகின்றான்.

சருவஞ்ஞிதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்த சத்தி, அநந்தசக்தி, சுவதந்திரம் என்ற ஆறு குணங் களே எம்பெருமானுக்கு ஆறுமுகங்களாய்த் திகழும்.

ஏவர்தம் பாலுமின்றி எல்லைதீர் அமலற்குள்ள
மூவிரு குணனும்சேய்க்கு முகங்களாய் வந்ததென்ன
பூவியல் சரவணத்தண் பொய்கையில் வைகும்ஐயன்
ஆவிகட் கருளுமாற்றால் அறுமுகங் கொண்டானன்றே.

—கந்தபுராணம்.

பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, குடிலாசத்தி;

அ, உ, ம, நாதம், விந்து, கலை;

மந்திரம், பதம், வன்னம், புவனம், கலை, தத்துவம்;

ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம்,வைராக்கி யம்.

இவைகளும் ஆறுமுகத்தின் உண்மைகளையுணர்த் தும். கணபதி, பிரமா, திருமால், உருத்திரன், மகேச் சுரன், சதாசிவம் ஆகிய இந்த அறுவரும் முருகனுடைய சொரூபமே.

பிரணவமும், பஞ்சாக்கரமும் சேர்ந்த,ஆறெழுத்தும் அவன் முகங்கள் என வுணர்க.

"தாரக எழுத்தும் சார்பெழுத்தஞ்சும்,
வாரண முகவன் மலரோன் திருமால்
வருத்தமில் உருத்திரன் மகேச்சுரன் சதாசிவன்
உருத்தெளிந்திட நம் உருவேயாகும்
ஆறுமா முகத்து அமர்ந்ததும் இதுவே
வேறிலையென்று மெய்ம்மொழி செப்பீர்.

—சிற்றம்பல நாடிகள்.

ஆறுமுகங்களிலிருந்தும் வெளிப்படும் ஒளிகள் வருமாறு:

1 ஞானப்பிரகாசம்
2 ஞானுனந்தப்ரகாசம்
3 சர்வஞான வியாபகப்பிரகாசம்
4 சுத்தஞான சாக்ஷிப் பிரகாசம்
5 சர்வ பரிசுத்த பிரமஞானுனந்த அருட்பிரகாசம்
6 அநாதிநித்ய பிரமஞானுனந்த சிவப்பிரகாசம்

இயல்சேர் செஞ்சொல் புனேமாலே :—

இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ், இது, இயற்றமிழால் ஆயது. செஞ்சொல்—தமிழ்.

''செஞ்சொல்மாதிசை வடதிசை குடதிசை
விஞ்சு கீழ்திசை'' —(பஞ்சபாதக) திருப்புகழ்.

இச் செஞ்சொல் மாலே, கந்தப் பெருமானுடைய திருவடிகளே அடைவிக்கும் நலந்தரும் சொற்களால் ஆயது.

சிறந்திடவே :—

யாதானும் ஓர் இடையூறு இன்றி இனிது முடிந்து சிறப்படையவும், இதனே ஓதும் அடியார்கள் இறைவன் அருளேப் பெறுதலால் சிறப்படையவும், இதனுல் இனிய தமிழுலகம் சிறப்புறவும், எனக் கொள்க.

பஞ்சக்கரவானே பதம் பணிவாம் :—

விநாயகர் ஐந்து திருக்கரங்களேயுடையவர். ''ஐந்து கரத்தனே யானே முகத்தனே'' என்பார் திருமூலதேவர்.

ஐந்து திருக்கரங்கள் ஐம்பெருந் தொழில்களேப் புரிகின்றன.

எழுத்தாணி ஏந்திய திருக்கரம் படைத்தல் தொழிலேயும், மோதகம் ஏந்திய திருக்கரம் காத்தற்றொழிலேயும், அங்குசம் ஏந்திய திருக்கரம் அழித்தல் தொழிலேயும், பாசம் ஏந்திய திருக்கரம் மறைத்தல் தொழிலேயும், துதிக்கை அருளல் தொழிலேயும் புரிந்தருளும் எனவுணர்க.

பஞ்ச அக்கரவானே எனப் பதம் பிரித்து, ஐந்து அட்சர வடிவானவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

ஓம் பஞ்சவர்ணய நம;

—சுப்ரமண்ய அஷ்டோத்தரசத நாமம்;

விநாயகருடைய பதம் பணிவார் எல்லாப் பதவிகளையும் பெறுவர்.

உருக என்னும் செய்ய என்ற வாய்ப்பாட்டு வினையெச்சம் புனையென்ற வினையைக் கொண்டு முடிந்தது.

சிறந்திட என்னும் செய்ய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் பணிவாம் என்ற வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

கருத்துரை

தஞ்சத்தருள் சண்முகனுக்கு நெஞ்சக் கல்லுருகும் பொருட்டு அநுபூதி யென்ற செஞ்சொல் புனைமாலையைச் சூட்டுகின்றேன். இது சிறப்புறுமாறு விநாயகரை வணங்குகின்றேன்.

நூல்

1. ஆடும்பரி வேலணி சேவலெனப்
பாடும்பணி யேபணி யா அருள்வாய்
தேடுங்கய மாமுக னைச்செருவில்
சாடுந்தனி யானை சகோதரனே

பதவுரை

தேடும் கய மாமுகனை—துன்புறுத்துவதற்காகத் தேவர்களைத் தேடிச் செல்கின்ற கயமுகாசுரனை,

செருவில் சாடும் - போர்க்களத்தில் தாக்கி வென்ற,

தனியானை சகோதரனே—ஒப்பற்ற விநாயகருடைய இளையவரே!

ஆடும்பரி—ஆடுகின்ற மயில் எனவும்,

வேல் —வேல் எனவும்,

அணிசேவல் என—அழகிய சேவல் எனவும்,

பாடும்பணியே—அடியேன் எப்போதும் பாடும் செயல் ஒன்றனையே,
பணியா அருள்வாய்—தொண்டாக அருள் புரிவீராக.

பொழிப்புரை

தேவர்களை எப்போதும் துன்புறுத்தும் பொருட்டு தேடிச் செல்கின்ற கயமாமுகனைப் போர்க்களத்தில் தாக்கி வென்ற ஒப்பற்ற விநாயகப் பெருமானுடைய இளைய தம்பியாராகிய ஆறுமுகக் கடவுளே! ஆடுகின்ற மயிலையும், வேலாயுதத்தையும், அழகிய சேவலையும் துதி செய்து பாடுகின்ற ஒரு சிறந்த பணியை எனக்குத் தொண்டாகத் தந்து அருள் புரிவீராக.

விரிவுரை

ஆடும்பரி :–

கலைகளில் சிறந்தது நடனக் கலை. நடனக் கலைக்கு அரசர் நடராஜர். அவர் நஞ்சைக் கண்டத்தில் அடக்கிய நீலகண்டர். மயில் இயல்பாகவே—ஒருவரும் கற்றுக் கொடாமல்—ஆடும் இயல்பையுடையது. மயிலும் நஞ்சுடைய பாம்பையடக்கும் ஆற்றல்படைத்தது. மயிலுக்கும் நீலகண்டம் என்று பெயருண்டு.

"நீலக்ரீவ ரத்னக் கலாப மயிலே" –மயில் விருத்தம்.

நடராஜமூர்த்தியின் திருவாசி ஓங்கார வட்டமானது; மயிலின் தோகை ஓங்கார வட்டத்தைக் காட்டுகின்றது. வளைந்த கழுத்தும், விரிந்த தோகையும், தூக்கிய ஒரு காலும், ஊன்றிய ஒரு காலும் ஆக இவைகள் பிரணவ வடிவைத் தெரிவிக்கின்றன.

"ஆன தனிமந்த்ர ரூபநிலைகொண்ட
தாடுமயிலென்ப தறியேனே" –(வாதினை) திருப்புகழ்.

ஐயன் ஏறும் மயில் ஒரு நொடிப் பொழுதுக்குள் அகில உலகங்களைச் சுற்றிவரும் வேகம் உடையது.

"சிந்தாமணிக்கலச கரகடகபோலத்ரி
யம்பகவிநாயகன் முதல்
சிவனைவலம் வருமளவில் உலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாப மயிலாம்" –மயில்விருத்தம் (1)

மயிலின் புதிகவேகத்தைக் கண்டு, அகிலலோக ஏக நாயகராகிய சிவபெருமானே அன்பு கொண்டு மகிழ்கின்றாராம்.

" நறையிதழி யறுகுபுனல் புட்பத்திரட்களொடு
சிறுபிறையு மரவுமெழி லப்புத் திருத்தலையின்
நளினமுற அணிசடையர் மெச்சிப்ரியப்படவு
மயிலேறி
நவநதிகள் குமுகுமென வெற்புத்திரட்சுழல
அகிலமுத லெழுபுவன மெத்தத் திடுக்கிடவும்
நவமணிகள் உரகனுடல் கக்கத் துரத்திவரு
முருகோனே"
–(சிறுபறையு) திருப்புகழ்;

திருமுருகவேள் இந்த ஒரு மயிலேறி, பல மயில்களையுங் கடந்து வந்து அடியார்களின் துயர்களைக் களைகின்றார்.

மயிலின் ஆற்றல் அளவில்லாதது அதன் தோகை அசைவதனால் ஏற்பட்ட காற்றுப்பட்டு மேருகிரி அசைந்தது! அம் மயில் நடந்ததனால் எண்திசைகளில் உள்ள குலமலைகள் துகள் பட்டன; அத் துகள்களால் கடல் திடராயிற்று.

குசைநெகிழா வெற்றிவேலோன் அவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்ததுமேரு; அடியிடஎண்
திசைவரை தூள்பட்ட, அத்தூளின் வாரி திடர்பட்டதே.

ஒரு சமயம் எம்பிரான் ஏறுமயில், சுற்றுலா வரும்போது பாலாழியில் கிடந்த ஆயிரம் பணமகுடமுடைய ஆதிசேடனைக் காலால் எடுத்து உதறியது. அறிதுயில்

புரிந்து கொண்டிருந்த நீலமலை போன்ற நெடுமால் திடீர் என்று ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியினால் பதறி விழித்தலறி மூர்ச்சித்துவிட்டார். அவருடைய திருக்கரங்களில் இருந்த சங்கு சக்கரங்கள் நெகிழ்ந்தன. அவருடைய திருமார்பில் இருந்த திருமகள், விழிநீர் தனங்களின் நடுவே பெருக அழுதாள். நலம் தீது அறியாத சிறு குழந்தையாக உந்திக் கமலத்திலிருந்த பிரமன் தாய்முகத்தை நோக்கிக் கதறியழுதான். இத்தகைய ஒரு திருவிளையாடலை மயில் செய்துவிட்டது.

அம்மயிலின் திருவடியில், ஆதிசேடனுடைய பணா முடிகளில் இருந்த மாணிக்க ராசியும், உலகங்களைக் காக்கும் திருமாலும் சக்ராயுதமும், பாஞ்சசன்யமும் அணிகலங்களாகக் கிடந்தனவாம்.

சேலில் திகழ்வயல் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலில் கிடப்பன மாணிக்கராசியும் காசினியைப்
பாலிக்கு மாயனும் சக்ராயுதமும் பணிலமுமே.

—கந்தரலங்காரம் (97)

நீலக் கிரிபோல் கிடந்துறங்கும்
நெடுமால் பதறி, விழித்தலறி
நெஞ்சந் திடுக்கிட் டாழி சங்கம்
நெகிழ்வுற் றவசம்உற; உரந்தோய்
சீலக் கமலத் திருமாது
செழுங்கோங் கரும்பாம் முலைநடுவில்
செவ்வேல் விழிநீர் விடுத்திரங்கத்
தீதும் நலமுந் தெரியாத
பாலப்பருவம் கொளும் உந்திப்
பங்கே ருகத்தான் அனைமுகத்தைப்
பார்த்துப் பார்த்துக் கதற; அலைப்
பாலாழியி ல பாம் பெடுத்துதறும்
கோலச் சிகியில் பவனிவரும்
குகனே தாலோதாலேலோ

கொடியா டணிமா டப்புதுவை
குமரா தாலோ தாலேலோ
—வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

பரி - குதிரை. பரித்தல் - தாங்குதல். தாங்குதலால் பரியெனப்பட்டது. அது உவம ஆகுபெயராக மயிலைக் குறிக்கின்றது. இவ்வாறு அருணகிரிநாதர் பல இடங்களில் கூறுகின்றார்.

"பட்சியெனும் உக்ரதுரகமும்" -(பக்கரை) திருப்புகழ்.
"ஓகார பரியின் மிசை வரவேணும்"
-(இரவி) திருப்புகழ்.
"மரகத துரகத மிசையேறி"
-(கொடிய மறலி) திருப்புகழ்.

வேல் :—

வேல் முருகப்பெருமானுடைய ஞான சக்தியாகும். வெல் என்ற முதல்நிலை நீண்ட தொழிற்பெயர் வேல். எல்லாவற்றையும் வெல்வது ஞானம் ஒன்றேயாகும். ஞானம் என்ற சொல் தமிழில் அறிவு என வரும்.

அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உள. ஆழம், அகலம், கூர்மை. வேலின் அடிப்பகுதி ஆழமாகவும், இடைப்பகுதி அகலமாகவும், நுனிப்பகுதி கூர்மையாகவும் இருப்பதை நுனித்து உணர்க.

"ஆழ்ந் தகன்ற நுண்ணியனே" -சிவபுராணம்.

மயிலை 'ஆடும்பரி' என்றார். சேவலை 'அணி சேவல்' என்றார். வேலைக் கதிர்வேல், வடிவேல், வஜ்ரவேல் என்று அடைகொடாமல் வெறுமனே 'வேல்' என்றார். ஏன்? அடையில்லாமலே பெருமை பெற்றது வேல். வேல் ஞானம், மயிலும் சேவலும் அசுர சம்பந்தம் பெற்றவை. சூரபன்மன் சேவலு மயிலுமாக ஆனான். ஆதலால் சேவலையும் மயிலையும் பார்க்க வேல் மிகப்

பெரும் பெருமையுடையது. அதனால் கச்சியப்ப சிவாசாரியர் சேவலுக்கும் மயிலுக்கும் ஒருமுறை போற்றி கூறி, வேலுக்கு இருமுறை போற்றி கூறுகிறார்.

"சேவலு மயிலும் போற்றி; திருக்கைவேல் போற்றி
போற்றி"

ஒருபுறம் மயிலும், மற்றொருபுறம் சேவலும் நிற்க, நடுவில் நடுநாயகமாக நின்று வேல் அருள்புரிகின்றது. வேல் என்னும் சொல்லை அறிவு என்ற பொருளில் பிற மதத்தினரும் எடுத்தாள்கின்றனர். ஜைன முனிவரான திருத்தக்கதேவர், விஜயை, மயங்கியவள் அறிவுபெற்றெழுந்தாள் என்று கூறுமிடத்து "வேல் பெற்றெழுந்தாள்" என்று சிந்தாமணியில் கூறுகின்றார்.

'வேல்' 'வேல்' என்று கூறித் துதிசெய்தால் சிவஞானம் உண்டாகும். ஞானம்-ஒளி வேல் நூறுகோடி இளம் ஞாயிற்றுக்களின் ஒளிகள் ஒன்றுகூடினாற் போன்ற மிக்க ஒளியுடையது.

"உலா வுதயபானு சதகோடி யுருவான
ஒளிவாகு மயில்வேலங் கையிலோனே"
—(அவாமரு) திருப்புகழ்.

"மரகதபட்ச குலத்திவாகரர் வடிவையுருக்கி வடித்த
திருக்கைவேல்" —பூதவேதாள வகுப்பு.

அணி சேவல் :—

சேவல் அழகான பறவை. இது கதிரவன் வரவை உணர்த்துவது. அதுபோல் முருகனுடைய சேவல் ஞான சூரியனாகிய முருகனுடைய வரவையுணர்த்தும் சேவல் வீரமுள்ள பறவை.

"வாளகிரியைத் தனது தாளிலிடியப் பொருது
வாகைபுனை குக்குட பதாகைக் காரனும்"
—வேளைக்காரன் வகுப்பு.

செவ்வேளின் சேவல் ஆவலுடன் சிறகை அசைப்பதனால், கடல் கிழிந்து அண்டகடாகங்கள் உடைந்தன; உடுக்குலங்கள் உதிர்ந்தன; குல மலைகளும் மாமேரு மலையும் இடிந்தன. அத்துணை ஆற்றல் படைத்தது சேவல்.

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப்பதாகை
யென்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்டகடாகம் உதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேருவெற்பும் இடிபட்டவே.

—கந்தரலங்காரம் (12)

கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடும் சோலை''

—திருமுருகாற்றுப்படை.

'சேவல் கொடி வாழ்க' என்று தெய்வமகளிர் பாடியாடுகின்றார்களாம்.

''தாரை வடிவேலைச் சேவல் தனை ஏனற்
சாரல் மறமானைச் சிந்தியேனோ''

—(பேதகவிரோத) திருப்புகழ்.

ஆதலால் அன்பர்கள் காதலால் சேவலைக் கண்டால் கைகூப்பி வந்தித்து முருகனைச் சிந்திக்கவேண்டும். கருடனைக் கண்டவர்கள் "அரி அரி" என்று கன்னத்தில் கையால் தட்டித் திருமாலை வணங்குகின்றார்கள். அதுபோல் கோழியைக் கண்டால் "முருகா, முருகா" என்று கன்னத்தில் கை தட்டி வணங்கவேண்டும். அதனால் ஆணவ இருள் தொலைந்து சிவஞான ஒளியுண்டாகும்.

வந்திப்பேன் அனுதினமும் வாழ்த்திடுவேன்
உனதுதிரு வடியை நாளும்
சிந்திப்பேன் முப்பொழுதும் சேவிப்பேன்
செஞ்சூட்டுச் சேவலே! கேள்

"பந்திப்பேன் எனது வலிபார்" என்னும்
ஆணவமாம் பகைவிண்டோடக்
கொந்திற்றேன் பொழிசாரல் தணிகைவரை
யான்வர நீ கூவுவாயே. –தணிகைச் சந்நிதிமுறை.

வயலூரில் வடிவேற்பெருமான், அருணகிரிநாதருக்கு, 'மயிலையும் சேவலையும் வேலையும் வைத்துத் திருப்புகழ் விருப்புடன் பாடுதி' என்று அருள்புரிந்தார்.

பக்கரை விசித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பட்சியெனும் உக்ரதுர கமுநீபப்
பக்குவ மலர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கது மதிக்க வரு குக்குடமும்......
....
வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே.
—(பக்கரை) திருப்புகழ்

மயில் விந்து; வேல் ஞானமாகிய கலை; சேவல் நாதம். நாதம், விந்து, கலை என்ற இம்மூன்றுக்கும் தலைவர் முருகர்.

"நாத விந்து கலாதீ நமோநம" -திருப்புகழ்.

பாடும் பணியே பணியா அருள்வாய் :—

மயிலையும் வேலையும் சேவலையும், புகழ்ந்து துதிக்கும் வேலையையே எனக்கு வேலையாக அருள்செய் என்று அருணகிரிநாதர் ஆண்டவனிடம் வேண்டுகின்றார்.

இதனைச் சிவஞானபோதம் பத்தாவது சூத்திரமும் கூறுகின்றது.

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடும் வல்வினையின்றே."

"............செந்திலோன் திருக்கை
வேலென்கிலை; கொற்றமாயூர மென்கிலை; வெட்கித்
தண்டைக்
காலென்கிலை; மனமே! எங்ஙனே முத்தி காண்பதுவே"
என்று சுவாமிகள் கந்தரலங்காரத்திலும் கூறுகின்றார்

வேலையும் மயிலையும் சேவலையும் பாடினால் முத்தி காணலாம் என்பது இதன் பொருள்.

தேடுங் கயமாமுகனைச் செருவில் சாடுந் தனியானை :—

கயமுகாசுரன் சிவபெருமானிடம் தவஞ்செய்து அரிய வரங்களுடன், சாகா வரமும் பெற்றான். அதனால் தருக்குற்ற அக்கொடியவன், தேவர்களைத் தேடிச் சென்று துன்புறுத்தினன். மாலயனாதி வானவர்களைத் தினம் ஆயிரம் தோப்புக்கரணம் போடுமாறு செய்தான். துன்புற்ற அமரர்கள் முக்கட் பெருமானிடம் முறையிட்டார்கள்.

சிவபெருமான் உமாதேவியாருடன் திருக்கயிலை மலையில் ஏழு கோடி மந்திரங்கள் பொறித்த மந்திர மண்டபத்துக்கு எழுந்தருளினார். அம்மந்திரங்களுக்கு இடையே சமஷ்டி பிரணவம், வியஷ்டி பிரணவம் என்ற இரு பிரணவங்கள் இருந்தன. இரு பிரணவங்களையும் அம்மையும் அப்பனும் திருக்கண்ணோக்கம் புரிந்தருளினார்கள். இரு பிரணவ மந்திரங்களும் ஒன்றுடன் ஒன்று மருவ, அப் பிரணவத்தினின்றும், பிரணவ வடிவை யுடைய விநாயகப் பெருமான் திருவவதாரம் செய்தருளினார். சிவபெருமான் ஆணையை மேற்கொண்ட ஆனை முகப் பெருமான் பூதகணங்களுடன் போர்க்களம் புகுந்து கயமுகனுடன் போர் புரிந்தருளினார். எந்த அத்திர சத்திரங்களாலும் அவனுக்கு இறுதி நேராததைக் கண்டு, தமது கொம்பினை ஒடித்து ஏவியருளினார். அது ஞானமேயாதலால், அஞ்ஞான வடிவாய கயமுகனுடைய உடலைத் தடிந்தது. அவன் தேவாதி தேவனி

டம் சாவா வரம் பெற்றிருந்தபடியால் பெருச்சாளியாகிப் பெருமானை எதிர்த்தான். விநாயகமூர்த்தி, கருணைக் கண்களால் நோக்கி, அவனை அருள்வயப்படுத்தி, ஊர்தியாகக் கொண்டருளினர். மாலயனாதி வானவர்கள் கயமுகனிடம் இட்டதுபோல் கணபதியின் திருமுன் தோப்புக்கரணம் இட்டு வணங்கி வழிபட்டார்கள்.

சகோதரனே :—

சூரபன்மன் 1008 அண்டங்களையும் 108 யுகங்களாக அரசு புரிந்து, மாலயனாதி வானவர்களை வருத்தினன். துன்பத்தால் துடித்த வானவர்கள் ஈசன்பால் தஞ்சம் புகுந்தார்கள். ஐம்முகச்சிவம் ஆறுமுகச் சிவமாகி, சூரபன்மனை ஞானவேலால் பிளந்தருளினர். ஒரு பாதி மயிலாகவும், மற்றொரு பாதி சேவலாகவும் வந்தான் சூரபன்மன். பறவைகள்மீது பரம கருணை பொழிந்து, மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் குமரவேள் கொண்டருளினர். தமது தமையனர் செயலையே தாமும் மேற்கொண்டார். விநாயகருக்குப் பின் தோன்றியதனல், சரவணபவனை "யானை சகோதரனே" என்று கூறினர்.

சூரபன்மன் ஆணவமலம். ஆணவமலம் என்றும் நித்தமாகவுள்ள பொருள். அது சிவஞானிகட்கு வலி குன்றி யடங்கி நிற்கும். ஞான வேலால் ஆணவம் வலி குன்றி அருள்வயப்பட்டது எனவே வேலையும் மயிலையும் சேவலையுந் துதிப்போமானல் நமது ஆணவமலம் வலிகுன்றி நிற்கும் என்பது குறிப்பு.

கருத்துரை

விநாயகருக்கு இளையவரே! மயிலையும் வேலாயுதத்தையும் சேவலையும் பாடும் பணியையே பணியாகத் தந்தருளும்.

2. உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலையோ
எல்லாமற என்னை இழந்தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

பதவுரை

முருகா—முருகப்பெருமானே,
சுர பூ பதியே—விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலைவரே!
உல்லாச—இன்பமுடையவரும்,
நிர்ஆகுல - துன்பம் இல்லாதவரும்,
யோக—சிவயோக மூர்த்தியும்,
இத—இனிமையாகப் பேசுகின்றவரும்,
சல்லாப—மகிழ்ச்சியைத் தருகின்றவரும்,
விநோதனும்—அருள் விளையாடல்களைப் புரிபவரும்;
நீ அலையோ—தேவரீரல்லவோ? ஆதலினல்,
எல்லாம் அற—புறப்பற்றுக்கள் யாவும் அற்றுப் போகவும்,
என்னை இழந்த நலம்—யான் என்ற அகப்பற்றும் அற்றுப்போகவும் அதனால் எய்தும் பேரின்ப நலத்தை,
சொல்லாய்—அடியேனுக்கு உபதேசித்தருளுவீர்.

பொழிப்புரை

முருகப் பெருமானே! பொன்னுலகிற்கும், பூவுலகிற்குந் தலைவரே! இன்பமுடையவரும், துன்பம் இல்லாதவரும், சிவயோகமூர்த்தியும், இனிமையாகப் பேசுகின்றவரும், மகிழ்ச்சியைத் தருகின்றவரும், அருள் விளையாடல்களைப் புரிகின்றவரும் நீரேயாதலால், அடியேனுக்கு, எனது யான் என்ற புறப்பற்று அகப்பற்றுக்கள் நீங்க அதனால் உண்டாகும் பேரின்ப நலத்தை உபதேசித்தருள்வீராக.

விரிவுரை

உல்லாச :!—

உல்லாசம்-இன்பம். சூராதியவுணர்களை வதைத்த பின் முருகவேள் தெய்வயானை யம்மையை மணந்து,

உயிர்கட்கு இன்பத்தைத் தரும் பொருட்டு திருப்பரங் குன்றத்தில் அமர்ந்த அருள் திறத்தைக் குறிக்கின்றது.

நிராகுல :—

ஆகுலம்-துன்பம். நிராகுலம்-துன்பம் இல்லாமை. கடல் அலைகள் சதா வந்து கரையில் மோதுவது துன்ப அலைகளைக் குறிக்கும். இது செந்திலம்பதியைக் குறிக்கும். பிறவிப் பெருங்கடலில் தோன்றும் துன்ப அலைகள் அப்பெருமானுடைய திருவடியில் வந்து ஓய்ந்து அமைதி பெறுகின்றன. இன்பத்தை தந்து துன்பத்தைத் துடைகின்ற மூர்த்தி.

யோக ;—

ஞானதண்டினை யூன்றித் துறவுக்கோலத்துடன் பழநியில் எம்பெருமான் சிவயோக தயாபரனாக நிற்கின்ற அருட்கோலத்தை இது குறிக்கின்றது.

இத :—

திருவேரகத்தில் எந்தை கந்தவேள் குருபரனாக இருந்து தந்தைக்கு ஞான உபதேசத்தை இதமாக உரைத்த அருள் திறத்தை இது குறிக்கின்றது.

சல்லாப :—

குன்றுதோருடிய குருபரன் திருத்தணிகையில் இச்சா சக்தியாகிய வள்ளி பிராட்டியைத் திருமணம் புரிந்து எல்லா ஆன்மாக்களுக்கும் மகிழ்ச்சியை வழங்குகின்ற வள்ளன்மையைக் குறிக்கின்றது.

விநோதனும் நீ :—

பழமுதிர்சோலையில் ஞானதயாபரனாக வேதாகமங்களுடன் விளையாடி அருள்புரியும் ஞானத்திறத்தை இது குறிக்கின்றது.

எனவே, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணிகை, பழமுதிர் சோலை என்ற ஆறுபடை வீடுகளில், ஆறுமுகப் பெரு

மான் புரியும் அருள் திறங்களை இந்த ஆறு சொற்கள் குறிக்கின்றன,

"வேதாகம ஞான விநோத மனோதீதா" —கந்தரநுபூதி

முருகா :—

இச்சொல்லுக்கு அழகு, இளமை, தெய்வத்தன்மை, ஞானமணம், மகிழ்ச்சி, இனிமை என்ற ஆறுபொருள்கள் உண்டு.

"முருகு கள் இளமை நாற்றம் முருகவேள்
விழா வனப்பாம்" —நிகண்டு

எல்லாமற என்னையிழந்த நலம்:—

வானில், மண்ணில், மனைவி மக்களில், நிலபுலங்களில், பொன் பொருள்களில் வைக்கும் புறப்பற்றும், யான் என்ற அகப்பற்றும் அறவே அற்ற இடத்தில் பேரின்ப நலம் சித்திக்கும். முதலில் புறப்பற்றும் முடிவில் அகப்பற்றும் நீங்கும்.

"வானத்தில் மண்ணில் பெண்ணில்
மைந்தரில் பொருளில் ஆசை
தானற்றுத்தனையும் அற்ற தத்துவம் உணர்ந்தயோகர்"
—பரஞ்சோதி முனிவர்.

யான் எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும். —திருவள்ளுவர்.

இழந்த நலம் :—

இழப்பதில் நலம் விளைகின்றது என்ற அரிய உபதேசத்தை ஆழமாகச் சிந்தியுங்கள்.

ஒரு பெண் உற்றார், பெற்றார், நண்பர், பழகிய பொருள் அத்தனையுந் துறந்து கணவனைத் தனிமையான இனிமையில் சந்தித்து நலம் பெறுகின்றாள்.

அதுபோல் ஆன்மா, தன் ஆன்ம நாயகனாகிய கந்தவேளை நாடி, அகம், புறம் என்ற எல்லாப் பற்றுக்களையும் வேருடன் களைந்து, அப்பெருமானுடன் அத்துவித

மாக ஒன்றுபட்டுப் பேரின்ப நலத்தைப் பெறுதல் வேண்டும்.

சொல்லாய் :-

'அந்த அருள்நலத்தைப்பெறும் உபதேசமொழியை அடியேனுக்கு உபதேசித்தருள்' என்று அடிகளார் குருபரனை வேண்டுகின்றார்.

அப்படியருளுகின்ற அப் பரம நாயகனை மேலேயுள்ள இரண்டு அடிகளில் "உல்லாசனும் நீ, நிராகுலனும் நீ, யோகனும் நீ, இதனும் நீ சல்லாபனும் நீ, விநோதனும் நீ" என்று கூறியருளினர்.

"ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்" என்றதையும் இங்கு உன்னுக.

சுரபூபதியே :—

சுரபதியே! பூபதியே! எனப் பிரித்துப் பொருள் கொள்க.

தேவலோகபதியென்றதனால் பரலோக இன்பத்தையும், பூபதி யென்றதனால் இகலோக இன்பத்தையும், எனவே இகபர நலன்களை, அருள வல்லான் முருகன் எனத் தெளிக.

கருத்துரை

ஆறுபடை வீட்டிலமர்ந்த முருகா! பற்றற்ற நிலையில் விளையும் பேரின்ப நலத்தை அடியேற்கு உபதேசித்தருள்.

3. வானோ புனல் பார்கனல் மாருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண்டவிடம்
தானோபொரு ளாவது சண்முகனே.

பதவுரை

சண்முகனே-ஆறுமுகக் கடவுளே!

பொருள் ஆவது-உண்மைப்பொருள் (நித்தியப் பொருள்) என்பது,

வானோ-ஆகாயமோ ?
புனலோ-தண்ணீரோ ?
பாரோ-நிலனோ ?
கனலோ—நெருப்போ ?
மாருதமோ—காற்றோ ?
ஞான உதயமோ—அறிவு தோன்றும் நிலைதானோ ?
நவில் நான்மறையோ-ஓதப்படுகின்ற நான்கு வேதங்களோ ?
யானோ-யான் என்கிற புருட தத்துவமோ ?
மனமோ-மனமோ ?
எனை ஆண்ட இடம்தானோ-அடியேனை ஆட்கொண்ட இடமோ ?

(அறியுமாறு அருள் செய்வீராக)

பொழிப்புரை

ஆறுமுகக் கடவுளே! உண்மைப் பொருள் நிலனோ? நீரோ? நெருப்போ? காற்றோ? விண்ணோ? மனமோ? அறிவு தோன்றிய நிலையோ? ஓதுகின்ற நான்கு வேதங்களோ? யான் என்கின்ற புருட தத்துவமோ? அடியேனை ஆட்கொண்ட இடமோ? அடியேனுக்கு அருள் செய்வீர்!

விரிவுரை

வானோ புனல்பார் கனல் மாருதமோ :—

மண், நீர், நெருப்பு, வளி, வெளி என்ற ஐம்பூதங்கள் செய்யுளாதலின் முன்பின்னாக வரிசைமாறி நிற்கின்றன.

ஓ-எதிர்மறை ஐய வினா என்பாரும் உளர். எதிர் மறைதான் அடிகளார் கருத்து என்பதைப் பின்வரும் கந்தரலங்காரப் பாடலால் தெளிக.

"வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன்று அசரீரியன்று சரீரியன்றே"

(9-ஆவது பாடல்)

ஐம்பூதங்களும், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும் ஏனைய கருவிகரணங்களும் கடந்த இடத்தில் விளங்குவது உண்மைப் பொருள்.

பூதமும் கரணமும் பொறிகளும் புலனும்
பொருந்திய குணங்களோர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்குநாள் உளதோ ?
—பட்டினத்தார்.

ஞானேதயமோ :—

இங்கு கூறப்பட்ட ஞானம் புறப்பொருளையறிகின்ற உலக அறிவைக் குறிக்கும், பிரகிருதி தத்துவத்திலுள்ள புத்தி தத்துவமாகும்.

உலக அறிவு பிறக்குமிடம் பிரகிருதி தத்துவத்திலுள்ள புத்தி தத்துவமாகும்.

நவில் நான்மறையோ :—

மறை-இரகசியங்களைத் தன்னிடத்தே கொண்டது. ஆதலால் மறையெனப்பட்டது. இது பரம்பரையாக ஆசிரியர் கூறக்கேட்டு ஓதுவது. எழுதாக் கிளவி ஆதலால் நவில் நான்மறையென்ருர்.

அன்றியும், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களை நவில்வது என்றும் பொருள்படும்.

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்பவை நான்கு வேதங்கள்.

நான் மறைகளும் அபரஞானமாகிய கருவியறிவைத் தருவன. ஆதலால் இவைகள் பொருள் அன்று.

யானே :—

யான் என்பது—உயிரானது காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் தத்துவங்களோடு கூடி அவற்ருலே உலக இன்பத்தை நுகர்வதற்குத் தகுதி பெற்ற புருடன் என்ற பெயரால் வழங்கப்படுகின்ற புருட தத்துவமாகும்.

மனமோ :—

மனம் அந்தக் கரணங்களுள் ஒன்று. ஆதலால் மனம் பொருளன்று.

எனை ஆண்ட இடந்தானே :—

நான் எனது என்ற இரு பற்றுக்களும், காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்ற திரிபுடிகளும் அற்ற மோனநிலை இது. தான் என்பது அசை.

முன் பாடலில் கூறிய, "எல்லாமற என்னை யிழந்த நலம்" என்றதை இங்கே அடிகளார் "எனையாண்ட இடம்" என்று குறிப்பிடுகின்றார்.

எனையாண்ட இடம் என்பதற்கு, அடிகளாரை ஆட்கொண்ட இடம், திருவண்ணாமலை என்றும் பொருள் படும். திருமாலும், பிரமனும் "நான் பரம்" "நான் பரம்" என்று அடிமுடி தேடி அயர்ந்து செருக்கு அற்ற இடம் அருணை.

கருத்துரை

ஆறுமுகப் பெருமானே! மெய்ப் பொருள் எது?

4: வளைபட்டகைம் மாதொடு மக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டெழு சூருரமுங் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவேலவனே.

பதவுரை

கிளைபட்டு எழு-சுற்றத்தினர் சூழப் போருக்கு எழுந்த.
சூர் உரமும்-சூரபன்மனுடைய மார்பையும்,
கிரியும்-கிரவுஞ்ச மலையையும்,
தொளைபட்டு உருவ-தொளைத்து ஊடுருவிப் போகும் படி,
தொடு வேலவனே-தொடுத்த வேலாயுதத்தையுடையவரே,
வளைபட்ட கை-வளையலை யணிந்த கைகளையுடைய,
மாதொடு-மனைவியுடன்,

மக்கள் எனும்-மக்களும் (பிற செல்வம், உறவினர்) என்று கூறப்படுகின்ற,

தளைபட்டு அழிய-கட்டுப்பாட்டில் அடியேன் கட்டுண்டு அழிந்துபோதல்,

தகுமோ? தகுமோ?-தக்கது ஆகுமோ? தக்கது ஆகுமோ? (இது தகாது)

பொழிப்புரை

சுற்றத்தவர் சூழப் போருக்கு எழுந்துவந்த சூரபன்மனுடைய மார்பையும், கிரவுஞ்ச மலையையும் தொளைத்து ஊடுருவிப் போகுமாறு ஏவியருளிய வேலாயுதப் பெருமானே! வளையல் அணிந்த மனைவி மக்கள் சுற்றம் பொருள் என்கின்ற கட்டில் அடியேன் கட்டுண்டு அழிவது நீதியோ? நீதியோ? இது நீதியாகாது.

விரிவுரை

வளைபட்ட கைம்மாதொடு மக்கள் எனும்
தளைபட்டழியத் தகுமோ? தகுமோ?:—

பெண்கள் கையில் வளையல் சூழ்ந்திருப்பதுபோல் ஆன்மாக்களை ஆசாபாசம் சூழ்ந்திருக்கின்றது.

மாது-அழகு. இது பண்பாகு பெயராகப் பெண்ணைக் குறிக்கின்றது.

மனைவி, மக்கள், என்றதனால் இனம்பற்றி ஏனைய சுற்றத்தார், பொன், பொருள், நிலம்புலம் என்பவைகளையும் சேர்க்க. இவைகள் மீது ஆசை வைத்து, அந்த ஆசையாகிய தளையால் ஆன்மா கட்டுண்டு அறிவு குன்றி அவலமுறுகின்றது.

தகுமோ என்ற சொல்லில் உள்ள ஓ என்ற இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் வந்தது.

முருகனுடைய திருவடிப்பேற்றை விரும்புகின்ற ஒருவர் மனைவி மக்கள் என்ற உயிர்ப்பற்றும், பொன் பொருள் என்ற புறப்பற்றும் அறவே நீங்கி நிற்க வேண்டும்.

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு"

என்கின்றார் தெய்வப் புலவர்.

தளைபட்டழிதல் தகாது என்பதை வற்புறுத்தும் பொருட்டுத் தகுமோ தகுமோ என்று இருமுறை கூறுகின்றார்.

அடுக்கு-அச்சத்தையும் அவலத்தையும் குறிக்கும்.

"....................மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே"

—திருஞானசம்பந்தர்.

"இது தகுமோ இது முறையோ இது தருமந்தானோ"

—திருவருடபா

பெண்டிர்மக்கள் சுற்றமென்னும் பேதைப் பெருகடலை
விண்டுபண்டே வாழமாட்டேன் வேதனை நோய் நலியக்
கண்டுகண்டே உன்றன் நாமம் காதலிக் கின்றதுள்ளம்
வண்டு கிண்டிப் பாடுஞ்சோலை வலிவல மேயவனே.

—திருஞானசம்பந்தர்.

மனைவி தாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக்கிடம் ஆகாதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகாரோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே.

—திருநாவுக்கரசர்.

"தளைபட்டழியத் தகுமோ" என்று அருணகிரிப் பெருமான் கூறியது உலக மக்கள் நிலையைத் தம்மீது வைத்துக் கூறினார் என வுணர்க.

"மனை மக்கள் சுற்ற மெனுமாயா
வலையைக் கடக்க அறியாதே
வினையிற் செருக்கி அடிநாயேன்
விழலுக் கிறைத்து விடலாமோ"

—திருப்புகழ்.

கிளைபட்டெழுசூர் உரமும் :—

கிளை-சுற்றம். சுற்றத்தவர் சூழச் சூரபன்மன் போருக்கு எழுந்து வந்தான்.

பல கிளைகளோடு மாமரமாய் சூரபன்மன் நின்றான் என்றும் பொருள்படும்.

"துன்னுபல் கவடு போக்கிச் சூதமாய் அவுணன் நின்றான்"
—கந்தபுராணம்.

"திரையெறி மலைகளிற் கவடு பல போக்கி நின்ற மா"
—கல்லாடம்.

சூரபன்மன்-ஆணவ மலம். வேல் ஞானம்; ஞானம் ஒன்றுதான் ஆணவத்தை யழிக்கும்.

"கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன் கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேல் கந்தனே"
—கந்தரலங்காரம் (32)

கிரியும் :—

தாரகனுடைய மாயைக்கு உதவ கிரவுஞ்ச மலையாய் அரக்கன் நின்றான்.

அன்றி, சூரபன்மனுக்கு ஏழு மலைகள் துணை செய்து நின்றன. அவற்றை முருகவேள் வேலால் அழித்தருளினார்.

"தணியாச் சாகரமேழும் கிரியேழும்
சருகாக் காய் கதிர் வேலும்"
—(தவர்வாட்) திருப்புகழ்.

"ஏழுமலை பொடித்த கதிரிலை நெடுவேல்"
—கல்லாடம்.

தொடுவேலவனே:—

சூரனையும் மலையையும் உருவுமாறு தொட்ட வேலாயுதரே!

தொட்ட என்று இறந்த காலத்தாற் கூறற்பாலதாகிய இச்சொல் தொடு என்று நிகழ்காலத்தில வந்தது

என்ன எனின், ஆன்மாக்களின் மல வலியை எப் போதுமே கெடுக்கும் இயல்பு பற்றி யென வுணர்க.

“சூரனாகிய ஆணவத்தையும், கிரவுஞ்சமாகிய மாயையையும் வேல்கொண்டு அழித்த தேவரீர், அடி யேனுடைய மாயா பாசத்தை அழிக்கக்கூடாதா?” என்று அடிகளார் முருகனிடம் முறையிடுகின்றார்.

கருத்துரை

வேலாயுதக் கடவுளே! பாசபந்தத்தில் அடியேன் கட்டுண்ணாமல் காத்தருள்.

5. மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே.

பதவுரை

மகமாயை-வலிமைமிக்க பெரிய மாயைகளையெல்லாம்,
களைந்திட வல்ல-நீக்க வல்லவராகிய,
பிரான்-உயிர்களைவிட்டுப் பிரியாதவராகிய முருகப் பெருமானுடைய,
முகம் ஆறும்-ஆறு திருமுகங்களையும்:
மொழிந்தும்-அடியேனுடைய நாவானது “ஆறுமுகம்” “ஆறுமுகம்” என்று பன்முறை கூறியும்,
அகம்-வீடு,
மாடு-செல்வம்,
மடந்தையர் என்று-மாதர் என்று இவைகளைச் சதா நினைந்து.
அயரும்-சோர்வு அடையச் செய்கின்ற,
சகமாயை உள் நின்று-உலக மாயையுள் கிடந்து,
தயங்குவது ஒழிந்திலனே-கலங்குவதை அடியேன் விட்டுவிலகப் பெற்றேனில்லையே.

பொழிப்புரை

மிகுந்த வலிமையுள்ள பெரிய மாயைகளையெல்லாம் நீக்கவல்லவராகிய-உயிர்களை விட்டுப் பிரியாதவராகிய

முருகப்பெருமானுடைய ஆறுமுகங்களையும் எனது நாவினால் பலகாலும், "ஆறுமுகம்" "ஆறுமுகம்" என்று கூறியும், வீடு, செல்வம், பெண்கள் என்ற இவற்றையே நினைந்து தளர்ச்சியடைகின்றதை அடியேன் விட்டு விலகினன் இல்லையே.

விரிவுரை

மகமாயை களைந்திட வல்ல பிரான் :

மகாமாயை என்பது மகமாயை எனக் குறுகியது. மாயை என்பது திரோதான சக்தி வயப்பட்ட உலகச் சிற்றின்ப வாழ்வு மயக்கத்தைக் குறிக்கின்றது. கேவல நிலையில் ஆணவமல இருளில் உயிர்கள் மூழ்கிக் கிடந்திருந்தன. அறிவு சிறிதும் இன்றி இருந்த அவ்வுயிர்கள் படி முறையில் சிறிது சிறிதாய் இருளிலிருந்து நீங்கி, தன்னையறிந்து, தலைவனையறிந்து உய்யும் பொருட்டு இறைவனோடியைந்து நிற்கின்ற அருட்சக்தி, திரோதான சக்தியாகி, உயிர்களுக்கு, தனு கரண புவன போகங்களை யுதவி, சகல நிலையில், உலக இன்பங்களை நுகருமாறு மயங்கி அருள் செய்கின்றான். அங்ஙனம் மயங்குவது, உலக நலன்களை நுகர்ந்து, அவைகள் நிலையில்லாதவையென்று உணர்ந்து, பொய் வாழ்வைக் கழித்து, பேரின்ப நாட்டமுற்று, மெய்யறிவையடைந்து நிலையான பேரின்ப வாழ்வையடையும் பொருட்டேயாம். ஆணவ மலம் நீங்கியவுடன் அந்த திரோதான சக்தி அருட்சக்தியாக மாறி யருள்புரிகின்றாள்.

இந்த உலக மயக்கம் நீங்குதல் அரிது. ஆதலின் மகமாயை யென்றார். மகமாயையை ஞானவாளால் சேதித்தல் வேண்டும். அந்த ஞானவாளை அடியார்க்கு அருளி மகமாயையைப் போக்கவல்ல பிரான் முருகப் பெருமான்.

"தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி"

—கந்தரலங்காரம் (69)

"அவிரோத ஞானச்சுடர் வடிவாள் கண்டாயடா
அந்தகாவந்துபார் சற்றென் கைக்கெட்டவே"
—கந்தரலங்காரம் (25)

முகமாறு மொழிந்து மொழிந்திலனே :—

(1) 'ஆறு முகம், ஆறு முகம்' என்று பலகாலும் கூறியும் அடியேன் உலக மாயையில் நின்று கலங்குவதை ஒழிந்தேனில்லை. ஏன்? வாக்கு மட்டும் கூறுகின்றது. மனம் அதனோடு ஒன்றவில்லை. அதனால் சக மாயை நீங்கிற்றில்லையென்கின்றார்.

( ) ஒரு முகமே என் மாயையைப் போக்கவல்லது. ஆறுமுகங்களைக் கூறியும் அடியேன் மாயையைக் கடந்தேனில்லை. என்னே என் தவக் குறைவு? என்றும் கூறுகின்றார்.

(3) முகமாறு மொழிந்து மொழிந்திலனே.

முருகன் ஆறுமுகமாகத் தோன்றி மொழிந்தும், உபதேசித்தும், அடியேன் மாயையை ஒழியப் பெற்றேனில்லை என்றும் பொருள்படும்.

(4) முகமாறு மொழிந்து மொழிந்திலனே.

ஆறுமுகத்தை மொழிந்து மொழிந்திலனே என்றே கொண்டு ஆறு முகத்தைப் பலகாலும் கூறுகின்றேனில்லையே? சகமாயையுள் நின்று தயங்குவதோ? இதுவோ என் விதி? என்றும் பொருள் படும்.

(5) மொழிந்திலனே என்ற சொல்லில் உள்ள ஏகாரம் எதிர்மறையாகக் கொண்டால் ஒரு முகத்தைக் கூறினாலே உலக மாயை ஒழியுமே? ஆறு முகத்தைக் கூறியும் ஒழிந்திலனே! ஒழிந்துவிட்டேன் என்றும் பொருள் கூறலாம்.

அகமாடை மடந்தையர் என்றயரும் சகமாயை :—

அகம்-வீடு; மண்ணாசை.

மாடு-செல்வம். (ஐ சாரியை) பொன்னாசை.

மடந்தையர்-பெண்கள். பெண்ணாசை.

இந்த மூவாசைகளாகிய உலக மாயையில் சிக்குண்டு கலங்குவதை ஆறுமுகப் பெருமானுடைய அருளின் வலிமையால் அகற்ற வேண்டும்.

பிரான் :—

பிரியான் என்ற சொல்லின் மரூஉ. உயிர்களை விட்டு ஒருபோதும் இறைவன் கருணையினால் பிரிய மாட்டான். இப் பொருள் பாம்பனடிகள் கூறியது. ஆறுமுகம், ஆறுமுகம் என்று பலகாலும் ஒன்றுபட்ட உள்ளத்துடன் ஓதி உலக மாயையைக் களைந்து நாம் உய்ய வேண்டும்.

முகம்ஆறும்-என்பதில் உள்ள உம்மை முற்றுமை.

கருத்துரை

ஆறுமுகப் பெருமானுடைய திருநாமத்தை ஒருமைப்பாட்டுடன் கூறி உலக மாயையை வெல்லுதல் வேண்டும்.

6. திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ
பணியாஎன வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே.

பதவுரை

பணி யா என—எனக்கு நீ இடும் கட்டளைகள் எவையோ என்று வினவி,
வள்ளி பதம் பணியும்—வள்ளியம்மையின் பாதத்தை வணங்குகின்ற,
தணியா—குறைவு இல்லாத,
அதிமோக—மிகுந்த காதல் கொண்டுள்ள,
தயாபரனே—மிகுந்த கருணைக் கடவுளே!
திணிஆன—மனோசிலை மீது—மிகவும் கடினமான மனமாகிய கல்லின்மீது,

உன தாள்-உமது திருவடியாகிய,
அணிஆர் அரவிந்தம் அது அரும்புமதோ-அழகு நிறைந்த தாமரை மலருமோ?

பொழிப்புரை

எனக்கு வேலை என்ன என்று கேட்டு, வள்ளியம்மையின் திருவடியை வணங்குகின்ற, குறைதல் இல்லாத மிகுந்த அன்பையுடைய கருணைக்கடவுளே! கடினமான என் மனமாகிய கல்லின்மீது, உமது பாதமாகிய அழகு நிறைந்த தாமரை மலர் மலருமோ?

விரிவுரை

திணியான மனோ சிலை :—

மனம் இறைவனை நினைந்து உருகுதல் வேண்டும். அங்ஙனம் உருகாது கெட்டியான கல்லைப்போல் இருக்கின்றது.

மனம் சிலை என்ற சொற்கள் மனோசிலை என்று வந்தது.

உனதாள் அணியார் அரவிந்தம் அரும்புமதோ :—

அணி ஆர் : அணி-அழகு; ஆர்-நிறைதல்.

மனம் கல்லைப்போல் கடினமாக இருப்பதால் அது உருகுவதில்லை.

அம் மனம் இறைவனை நினைந்து உருகி மென்மையடையுமானால் மென்மையான மனத்தில் முருகன் பாத தாமரை மலரும்.

தாமரைக்கு "பங்கஜம்" என்று ஒரு பேருண்டு. பங்கம்-சேறு; ஜம்-தோன்றுவது. சேற்றில் தோன்றுவதால் தாமரை பங்கஜம் எனப்பட்டது. சேற்றில் மலரும் தாமரை கல்லின்மீது மலராது.

உனதாள் என்ற சொல்லில் உன என்றதன் ஈற்றிலுள்ள அகரம் அசைநிலை.

இறைவனை நினைந்து நினைந்து உருகும் அடியாருடைய உள்ளத்தில் இறைவன் புகுந்து உறைவான் என்கிறார் 'அப்பரடிகள்.

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்"

'அரும்புமதோ!' ஈற்றிலுள்ள ஓகாரம் எதிர்மறை.

பணியா என வள்ளி பதம் பணியும் :—

பணியா என—'நான் உனக்குச் செய்யும் ஏவல் என்ன?" என்று வள்ளியிடம் வடிவேற் பெருமான் வினவி அவரை ஆட்கொள்ளும் பெருங் கருணையினால் வணங்கினார்.

'நீ செய்ய வந்த வேலை என்ன?' என்று கேட்டு அருளினார் எனவும் பொருள்படும்.

வள்ளியம்மை முருகனுடைய அருளுக்காக அரும் பெரும் தவஞ் செய்தவர். ஆதலினால் அவரை இரந்தும் பணிந்தும் ஆட்கொண்டருளினார்.

."தெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந்து......நின்றவன்"

—குமரகுருபரர்.

அன்புசெய்வார்க்கு இறைவன் ஏவல் புரிவான்; இது அவனுடைய அளப்பருங் கருணை. சுந்தரருக்கு இறைவன் இரவில் தூது சென்ற அருட் செயலை உன்னுக.

"நின் ஆர்வலர் தொழுதகை அமைதியின்
அமர்ந்தோயும் நீயே! அவரவர் ஏவலாளனும் நீயே"

—பரிபாடல் 4-70-72.

"கூம்பித் தொழுவார்தம் குற்றேவலைக்
குறிக் கொண்டிருக்கும் குழகா போற்றி"

—அப்பர் 6-5-4;

"வனசரி பதயுக கஞ்சம் வணங்கும்
பாக்ய கதம்பன்"

—திருவகுப்பு (18)

இறைவன் வள்ளியைப் பணிந்தது அளவற்ற கருணையினால் நிகழ்ந்தது என்பதைக் குறிக்கும் பொருட்டு 'தயாபரனே' என்றார்

கருத்துரை

வள்ளி மணவாளா! உன் பாதமலர் என் மனததில் மலர அருள் செய்.

7. கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

பதவுரை

மனனே-ஏ மனமே!

கெடுவாய்-வீணே கெட்டொழிகின்றாய்;

கதிகேள்-நீ உய்யும் வழியைக் கூறுகின்றேன்; கேட்பாயாக,

கரவாது இடுவாய்-இரப்பவர்க்கு ஒளியாமல் இயன்றதைத் தருவாயாக,

வடிவேல் இறைதாள் நினைவாய்-கூரிய வேலாயுதத்தையுடைய முருகப் பெருமானுடைய திருவடியை மறவாமல் தியானிப்பாயாக,

நெடுவேதனை-இவ்வாறு முருகவேளை நினைத்து வந்தால் நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகின்ற பிறவித் துன்பத்தை,

தூள்படவே சுடுவாய்-பொடிப் பொடியாகப் போகுமாறு ஞானாக்கினியால் சுட்டு எரிப்பாயாக;

வினை யாவையும் விடுவாய் விடுவாய்-வினைகள் அனைத்தையும் விட்டுவிடுவாயாக.

பொழிப்புரை

ஏ மனமே! நீ அவமே கெட்டழிகின்றனை; உய்யும் வழியை உபதேசிக்கின்றேன் கேட்பாயாக; யாசிப்பவர்க்கு ஒளித்துவைக்காமல் அன்புடன் கொடுப்பாயாக.

கூர்மையான ஞான வேலாயுதத்தையேந்திய முருகப் பெருமானுடைய திருவடியை மறவாமல் நினைவாயாக; தொடர்ந்து நெடுங்காலமாக வருகின்ற பிறவித் துயரை ஞானத் தீயினால் தூளாகுமாறு சுட்டெரிப்பாயாக; வினைகள் அனைத்தையும் அறவே விட்டுவிடுவாயாக.

விரிவுரை

கந்தரநுபூதியில் மனத்தை முன்னிலையாக்கி அழைத்து உபதேசிக்கின்ற பாடல் மூன்று.

7-வது பாடல் "கெடுவாய்"

14-வது பாடல் "கைவாய்"

37-வது பாடல் "கிரிவாய்"

கெடுவாய் மனனே :—

மனன் என்பது மனம் என்பதன் போலி. தவநெறி விட்டு அவநெறி பட்டு அழிகின்ற உலகினர்க்கு அறிவுறுத்தும் பொருட்டு, அடிகளார் தமது மனதை முன்னிலையாக்கிக் கூறியருள்கின்றார்.

மனமே பந்தத்துக்கும் முத்திக்கும் காரணமாகிறது. "மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:" மனம் ஐம்பொறிகளின் வழியே சென்று உலக இன்பத்தை விழைகின்றபோது கீழ்மனம் என்றும், அக நோக்கிச் சிவத்துடன் ஒன்றும்போது உயர்மனம் என்றும் பேர் பெறுகின்றது.

'தவநெறியை மேற்கொள்ளாது அவநெறியைப் பற்றி அலைகின்ற மனமே! நீ வீணே கெட்டொழிகின்றனையே?' என்று அடிகளார் இரங்குகின்றார்.

இவ்வாறு மணிவாசகப் பெருந்தகையாரும் தனது நெஞ்சத்தை முன்னிலைப்படுத்தி உபதேசிக்கின்ற அருட்பாடல் இதோ.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே! வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே,

திருப்புகழிலும் மனதை விளித்து அடிகளார் பாடியிருக்கின்றார்.

"அந்தோமன மேநம தாக்கையை
நம்பாதெஇ தாகித சூத்திரம்
அம்போருக ஞடிய பூட்டிது இனிமேல் நாம்

"அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ ஞர்க்கியல்
அங்கா குவம் வா......
மைந்தா குமரா எனும் ஆர்ப்புய மறவாதே"
—(அந்தோ) திரும்புகழ்

கதிகேள் :—

கதி-வழி. ஏ மனமே! நீ பிழைக்கும் வழியைக் கூறுகின்றேன். கவனமாய்க் கேள்.

கரவா திடுவாய் :—

உன்பால் வந்து இரப்பவர்க்கு இல்லையென்று கூறி உள்ளதை ஒளிக்காமல் இயன்ற வரை அன்பாகக் கொடுப்பாயாக.

வறியவர்க்கு வழங்காது செல்வத்தை ஒளித்து வைக்கின்றவர்கட்காக இறைவன் கொடிய நரகத்தைப் படைத்து வைத்தான்.

"கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்"
—அப்பர்

கரப்பவர்க்கு இறைவனும் தன்னைக் கரந்துகொள்கின்றான்;

"கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியான் இறைவன்"
—அப்பர்.

"பரவப்படுவார் பரமனை ஏத்தார்
இரவலர்க்கு ஈதலை யாயினும் ஈயார்
நரகத்தில் நிற்றிரோ?" —திருமந்திரம் (264)

இரக்கமுடன் இட்டது எங்காயினும் வந்து நமக்கு உதவும்.

''எங்காயினும் வரும் ஏற்பவர்க்கிட்டது''
—கந்தரலங்காரம் (59)

இவ்வாறு வழங்காதார் செல்வத்தைத் தீயோர் கவர்வர்.

''வைத்தீட்டினுர் இழப்பர் வான்தோய் மலைநாட!
உய்த்தீட்டுந் தேனீக் கரி.'' —நாலடியார்

வடிவேலிறை தாள் நினைவாய் :—

இங்ஙனம் வறியவர்க்கு வழங்கும்போது, "இது என் செல்வம்; யான் வழங்குகின்றேன்'' என்று நினையாது "இச் செல்வம் முருகன் தந்தது; முருகனுக்குத் தருகின்றேன்'' என்று தருதல் வேண்டும். தான தருமம் புரியும்போது, நான், எனது என்ற செருக்கற்றுச் சிவமயமாய் நிற்க வேண்டும். அதனுல் தருகின்ற நல்வினைப் பயன் சேராது. இல்லையேல் நல்வினையும் பிறவியைத் தரும். நல்வினை பொன் விலங்கு போல்வது.

இக்கருத்தைக் கந்தாலங்காரத்திலும் அடிகளார் அழகாக உபதேசிக்கின்ருர்.

''வையிற் கதிர்வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கு என்றும்
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்''
—கந்தரலங்காரம் (18)

உய்யும் வழி இரண்டு. பறவை பறப்பதற்கு உதவியாக இரு சிறகுகள் இருப்பதுபோல், மாந்தர் உய்யும் வழி இரப்பார்க்கு இடுவதும், இறைவனை நினைப்பதுமே யாகும்.

வடி கூர்மை. வேல்-வெல் என்ற முதல்நிலை நீண்ட தொழிற்பெயர்.

எல்லாவற்றையும் வெல்வது ஞானம் ஒன்றேயாகும். ஞானமே வேல். அறிவு கூர்மையானது.

''கூர்த்த மெய்ஞ்ஞானத்தால்'' —சிவபுராணம்

இறை-இறு என்ற பகுதியடியாகப் பிறந்தது. எல்லாப் பொருள்களிலும் இருப்பவன்.

சுடுவாய் நெடுவேதனை தூள்படவே :—

நெடுவேதனை-பிறவித் துன்பம்.

அதுதான் நெடுங்காலமாக உயிருக்குள்ள துயரமாகும். எண்ணில்கோடி காலமாக உயிர் இறப்பதும் பிறப்பதுமாகவே உழன்று வேதனைப்படுகின்றது.

இப் பிறவித் துயரம், தனக்கென்று வைக்காமல் தருவதனாலும், இடையறாத இறைவனுடைய திருவடி தியானத்தாலும் விலகும்.

இறவாதவனும் பிறவாதவனும் ஆகிய வேற்பரமனை மறவாது தியானிப்பதனால் உண்டாகும் ஞானக்கினி பிறவித் துயரை எரித்துப் பொடிபொடியாக்கி விடுகின்றது.

விடுவாய் விடுவாய் வினையாவையுமே :—

வினை ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என்றும், நல்வினை, தீவினையென்றும், இன்ப துன்பங்கள் வினையால் ஆதி தெய்விகம், ஆதி பௌதிகம், ஆதியான்மிகம் என்றும் வந்து சேரும்.

இதனால் வினை யாவையும் விடுவாய் என்று அருளிச் செய்தார்.

ஆதி தெய்விகம்-தெய்வத்தால் வரும் இன்ப துன்பங்கள்.

கருவில் துயர் செனிக்கும் காலைத் துயர்மெய்
திரைநரைமூப் பில்திளைத்துச் செத்து—நரகத்தில்
ஆழுந் துயர்புவியை ஆள்இன்பம் ஆதியெலாம்
ஊழுதவும் தைவீகம் என்று ஓர்.

ஆதி பௌதிகம்-ஐம்பெரும் பூதங்களால் வரும் இன்ப துன்பங்கள்.

பனியால் இடியால் படர்வாடையினுலும்
துனிதென் றலினுல் சுகமும்—தனையனைய
நீரினும் இன்பின் னலுநெருப்பி னும்துயரின்
போரில் பவுதிக மாகும்.

ஆதியான்மிகம்-உயிர்களால் வரும் இன்ப துன்பங்கள்.

தன்னுல் பிறரால் தனக்குவருந் தீங்குநலம்
இன்னு விலங்கரவம் தேள்எறும்பு—சென்முதல்நீர்
அட்டைஅல வன்முதலே மீன்அரவம் ஆதியினும்
கட்டமும் இங் கான்மிகமே காண்.

வினைகளே இன்ப துன்பங்கட்குக் காரணம். வினைப் போகமே உடம்பு. ஆதலால் வினைகள் யாவையும் விட்டுவிடு, விட்டுவிடு என்று அடுக்குத் தொடரால் கூறியருளினுர்.

முன் பாடலில் முருகனை நினையாத மனம் உருகாது கல்லாக இருக்கும் என்று கூறி, அடுத்த இப்பாடலில் அம் மனத்துக்கு உபதேசமாக "இடு; நினை" என்று அழகாக உபதேசிக்கின்ருர்.

கருத்துரை

மனமே! பிழைக்கும் வழி, ஈதலும் இறைவனை நினைத்தலுமாகும். பிறவித் துயரைப் பொடியாக்கி, வினைகளை விட்டு அநுபூதி பெறுவாய்.

8. அமரும் பதிகேள் அகமாம் எனுமிப்
பிமரங்கெட மெய்ப்பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம்பொரு தானவ நாசகனே.

பதவுரை

குமரன்-குமாரக் கடவுள்,
கிரிராச குமாரி மகன்-மலையரசனது மகளாகிய பார்வதி புதல்வர்,

சமரம்பொரு தானவ நாசகனே-போர் புரிந்த அசுரர்களை அழித்தவரே!
அமரும் பதி-யான் விரும்புகின்ற ஊர்,
கேள்-உறவினர்கள்,
அகம்ஆம்-நான் என்று கூறப்படுகின்ற,
இபிமரம் கெட-இந்த மயக்க அறிவு கெட்டொழியுமாறு,
மெய்ப்பொருள் பேசியவா-மெய்ப்பொருள் இன்னதென்று உபதேசித்த அருள்திறம் ஆச்சர்யமாக இருக்கின்றது.

பொழிப்புரை

குமாரக் கடவுளும் மலையரசனது மகளாகிய பார்வதி தேவியின் திருப்புதல்வரும், போர் புரிந்த அசுரர்களை அழித்தவரும் ஆகிய முருகப் பெருமான், யான் விரும்புகின்ற ஊர், விரும்புகின்ற மனைவி மக்கள் முதலிய சுற்றத்தினர் என்ற புறப்பற்று, நான் என்ற அகப்பற்று ஆகிய இவைகள் ஒழியுமாறு, அடியேனுக்கு உண்மைப் பொருளை உபதேசித்த அருட்டிறத்தின் தன்மை ஆ! ஆச்சரியமாக இருக்கின்றது.

விரிவுரை

இப்பாடல் முருகவேள் அருணகிரிநாதருக்குச் செய்த உபதேசச் சிறப்பைக் கூறுகின்றது. இது அடிகளாருடைய வரலாற்றைக் குறிக்கின்றது.

அமரும் பதி கேள் :—

அமர்தல்-விரும்புதல். அமரும் பதி.

அமரும் கேள் என்று கூட்டுக.

பிறந்தவூரிலும், மனைவி மக்கள் முதலிய சுற்றத்தினர் பாலும் அதிக விருப்பங்கொண்டு மனிதர்கள் மயங்குகின்றனர். இவை புறப்பற்றுக்கள்.

அகமாமெனும் :—

அகம்-நான் என்னும் அகப்பற்று.

அகம் என்ற சொல்லுக்கு வீடு என்றும் பொருள். அப்பொருள் சிறப்புடையதன்று.

புறப்பற்று, அகப்பற்று என்ற இருவகைப் பற்றுக்களும் அற்ருல்தான் பிறவியறும்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப்படும். —திருக்குறள்.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"

"பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்முற்ற"
—கம்பர்.

பிமரங்கெட :—

பிரமம்-மயக்கம். பிரமம் என்ற சொல் பிமரம் என வந்தது.

ஆகையால் சினமும், சினத்தால் மயக்கமும் வரும்.

இதனை முக்குற்றம் என்பர் ஆன்ருேர். இதனைத் திருமூலர் கூறுமாறு காண்க.

மூன்றுள குற்றம் முழுதும் நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே.

காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி
ஓமெனும் ஓசையி னுள்ளே யுறைவதோர்
நாம மதனைத் தலைப்பட்ட வாறே.

பிரமம் என்பது வடசொல்.

மயக்கம் என்பது மூலமலமாகிய ஆணவ மலத்தின் காரியமாகும் இந்த அவிச்சையாகிய மயக்க அறிவானது நிலையில்லாத பொருளை நிலையானதாகவும், தூய்மையில்லாததைத் தூய்மையானது என்றும், துன்பத்தை இன்பம் என்றும், தானல்லாத பொருளைத் தான் என்றும், உலக வாழ்வில் மாறுபடக் காணும் சுட்டறிவாகும்.

இந்தச் சுட்டறிவு காரணமாக நான் என்ற அகங்காரமும், இந்தப் பொருள்கள் என்னுடையவை என்று எண்ணும் மமகாரமும், அப்பொருள்களின்மீது அவாவும், அப் பொருளைப் பிறர் விரும்பும்போது சினமும், சினத்தால் மயக்கமும் முறையே உண்டாகின்றன.

பிமரங்கெட மெய்ப்பொருள் பேசியவா :—

மேலே கூறிய மயக்க அறிவு அடியோடு அழியுமாறு உண்மைப் பொருளை உபதேசித்தவாறு என்ன ஆச்சரியம்.

பேசியவாறு என்ற சொல்லில் உள்ள ஈறு கெட்டுள்ளது. ஆச்சரிய உணர்விஞல் ஆ: என்று நின்றுவிட்டது.

மெய்ப்பொருள் என்ற சொல் அநுபூதியில் நான்கு இடங்களில் பயிலப்பட்டுள்ளது.

8-ஆவது பாடல்	மெய்ப்பொருள் பேசியவா
11-ஆவது பாடல்	மெய்ப்பொருள் பேசியவா
20-ஆவது பாடல்	மெய்ப்பொருளுக்கடியேன்
45-ஆவது பாடல்	மெய்ப்பொருள் ஈகுவையோ

குமரன் :—

கார்த்திகேயோ மஹாஸேநச் சரஜன்மா ஷடாநந:
பார்வதீ நந்தன ஸ்கந்தஸ் ஸேநாநீரக்நிபூர்குஹ:
பாஹுலேயஸ் தாரகஜித் விசாகச் சிகிவாஹந:
ஷாண்மாதுரச் சக்திதர: குமார:க்ரவுஞ்சதாரண:

இந்த வரிசையில் வரும் குமார என்ற சொல்லுக்கு ஐந்து பொருள்கள் உள. அவை வருமாறு :

(1) ஸதா பாலத்வாத் குமார :—எப்பொழுதும் இளையோஞக இருப்பதால் குமாரன்.

(2) குத்ஸிதான் மாரயதீதிவா குமார :—குத்ஸிதானைக் கொல்லுகின்றவர். (குத்ஸிதாள் - வெறுக்கப்பட்டோர்; நிந்திக்கப்பட்டோர்)

(3) கௌ ப்ருதிவ்யாம், மாரயதி மன்மதவத் ஆசர தீதி வா குமார :—பூமியில் மன்மதனைப்போல் அழகாக இருப்பவர்.

(4) கௌ ப்ருதிவ்யாம் மாம் லக்ஷ்மீம் ராதி ததா தீதி வா குமார : பூமண்டலத்தில் லட்சுமி சம்பத்தை வழங்குகின்றவர்.

(5) ஸதா ப்ரஹ்மசாரித்வாத் வா குமார :

எப்பொழுதும் பிரம்மசாரியாக இருக்கின்றவர்.

முருகனுடைய திருநாமங்களுள் குமாரன் என்ற நாமம் உயர்ந்தது. முருகனுடைய மகாமந்திரமாகிய சடக்கரத்தில் இந்த மூன்றெழுத்து இடையில் விளங்குகின்றது.

"முருகன் குமரன் குகன் என்று மொழிந்து"

"நாதா குமரா நம என்றரனர்"

என்ற அநுபூதி வாக்குகளால் அறிக.

கிரிராச குமாரி மகன் :—

மரங்களுக்கு அரசு—அரசமரம்.

விலங்குகட்கு அரசு—மிருக ராஜா—சிங்கம்

பறவைகட்கு அரசு—பட்சி ராஜா—கருடன்

நாகங்கட்கு அரசு—நாகராஜா—ஆதிசேடன்

யானைகட்கு அரசு—கஜராஜா—ஐராவதம்

நடிகர்கட்கு அரசு—நடராஜா—அம்பலவாணன்

தியாகிகட்கு அரசு—தியாராஜா—ஆரூரண்ணல்

தேவர்கட்கு அரசு—தேவராஜா—இந்திரன்

இதுபோல் மலைகட்கு அரசு-பர்வதராஜா-இமவான்.

இமவானுடைய தவத்திற்கு இரங்கி உலகன்னை மானச வாவியில் தாமரை மலரில் குழவியாகத் தோன்றி இமவான் வளர்க்க அவன் புதல்வியென வளர்ந்து அருள் புரிந்தாள்.

சமரம் பொரு தானவ நாசகனே:—

காசிபருடைய மனைவியர் பதின்மூவர். இவருள் தநு என்பவள் பிள்ளைகள் தானவர்கள். தானவர்கள் குலத்தை அழித்தவர் முருகவேள்.

அசுரர்கள் சதா போரிலேயே நாட்டம் உள்ளவர்கள். அதனால் சமரம் பொரு தானவர் என்றார்.

கருத்துரை

முருகவேள் மெய்ப்பொருள் உபதேசித்தது என்ன ஆச்சரியம்?

9. மட்டூர்குழல் மங்கையர் மையல்வலைப்
பட்டூசல படும்பரிசென் றொழிவேன்
தட்டூடற வேலசயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே.

பதவுரை

சயிலத்து-கிரவுஞ்ச கிரியின்மீது,
தட்டு ஊடு அற-தடைகள் இன்றி அதன் நடுவிடம் ஊடுருவிச் செல்லும்படி,
வேல் எறியும்-வேலாயுதத்தை யேவிய,
நிட்டூர-கடுமை வாய்ந்தவரே!
நிராகுல-கலக்கம் இல்லாதவரே!
மட்டு ஊர் குழல்-தேன் துளிக்கின்ற மலர் சூடிய கூந்தலையுடைய,
மங்கையர்-பெண்களது,
மையல் வலை பட்டு-மோகவலையில் அகப்பட்டு,
ஊசல் படும் பரிசு-ஊஞ்சல் ஆடுவதுபோல், உள்ளம் தடுமாறுகின்ற தன்மையை,
என்று ஒழிவேன்-எக்காலத்தில் அடியேன் நீங்குவேன்? விரைவில் விலக்கி அருள்புரிவீராக!

பொழிப்புரை

கிரவுஞ்ச மலையின்மீது, தடைகள் இன்றி நடு இடம் ஊடுருவிச் செல்லும்படி வேலாயுதத்தை யேவிய

கடுமை வாய்ந்தவரே! கலக்கம் இல்லாதவரே! பயம் இல்லாதவரே! தேன் துளிக்கின்ற மலர்களைச் சூடிய கூந்தலையுடைய மாதர்களின் மோக வலையில் சிக்கி, அடியேன் ஊஞ்சல்போல் உள்ளம் அலையுந் தன்மையை என்று விட்டு ஒழிவேன்?

விரிவுரை

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலை :—

மடடு-தேன். வாசனையென்றும் பொருள் உண்டு.

"மட்டவிழ் மலர்" என்கின்றார் 'கைத்தல நிறை கனி' என்று தொடங்கும் திருப்புகழில். மட்டூர்குழல் மங்கையர் என்பது பொது மகளிரைக் குறிக்கின்றது. பொது மகளிர் ஆடவரைக் கண்ணாகிய வலைவீசி, தமது காம வலையில் சிகும்படிச் செய்வர்.

> "திண்ணிய நெஞ்சப்பறவை சிக்கக் குழற்காட்டில்
> கண்ணிவைப்பார் மாயங் கடக்குநாள் எந்நாளோ"
>
> —தாயுமானார்.

> பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
> மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
> தையலிடங்கொண்டபிரான் தன்கழலேசேரும் வண்ணம்
> ஐயன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.
>
> —திருவாசகம்.

ஊசல்படும் பரிசென் றொழிவேன் :—

ஊஞ்சல் இங்கும் அங்குமாக அலையும். அதுபோல் உயிர்கள் புண்ணியப்பயனால் பூதசார தநுவுடன் சுவர்க்கவுலகங்களிலும் பாவப் பயனால் பூதமா தநுவுடன் நரகவுலகங்களிலும், கலப்பு வினைப்பயனால் பூதபரிணும தநுவுடன் பூவுலகிலும் எண்ணில் காலமாக அலைந்து கொண்டிருக்கின்றன.

பசுவுக்கு ஒரு கயிறு, யானைக்கு இரு கயிறுகள், குதிரைக்கு மூன்று கயிறுகள், ஊஞ்சலுக்கு நான்கு

கயிறுகள், உயிர்கட்கு ஐந்து கயிறுகள். ஆணவம். கன்மம், மாயை, மாயேயம், திரோதம் என்ற பஞ்சமலங்களால் கட்டுண்டு உயிர்கள் சுவர்க்கம் நரகம் பூவுலகம் என்ற மூவிடங்களிலும் உழன்று திரிகின்றன. ஐந்து சங்கிலிகளால் கட்டுண்ட உயிருக்கு அடுத்து நான்கு சங்கிலிகளால் கட்டுண்ட ஊசல் உவமையாயிற்று.

ஒரு அருளாளன் நான்கு சங்கிலிகளையும் அறுத்தவுடன் ஊஞ்சல் தரையையடைகின்றது அதுபோல் ஞான ஆசாரியர் ஞான வாளால் பஞ்சமலங்களைச் சேதித்தவுடன் ஆன்மா இறைவன் திருவடியைச் சேர்கின்றது.

உறுகயி றூசல்போல ஒன்றுவிட் டொன்றுபற்றி
மறுகயி றூசல்போல வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையான் பாதத்து
அறுகயி றூசலானேன் அதிகைவீ ரட்டனீரே. —அப்பர்

'படரென் றுழிவேன்' என்றும் பாடம்,

தட்டுடறவேல் சயிலத்தெறியும் :—

சயிலம் - கிரவுஞ்ச மலை.

கிரவுஞ்சன் வரலாறு

தாரகாசுரன் அரசுபுரிந்த மாயமாபுரியில் கிரவுஞ்சன் என்ற ஒரு அரக்கன் இருந்தான்.

இவன் முனிவர்கள் செல்லும் வழியில் மாயையின் ஆற்றலினல் மலைவடிவாக நின்று, மலைக்குள் வழியிருப்பது போல் காட்டுவான். அவ் வழியிற் சென்ற முனிவர்களை மயக்கிக் கொன்று தின்று கொண்டிருந்தான்.

அகத்திய முனிவர் மேருமலையினின்றும் புறப்பட்டு பொதிய மலையை நோக்கித் தென் திசைக்குச் செல்லும் வழியில் பல சிகரங்களையுடைய பெருமலை யுருவதாக நின்று அதற்குள் வழியிருக்குமாறு காட்டினுன்.

அகத்தியர் அவ்வழியே குரோச தூரம் போக அவ் வழி முடிந்தது. வந்த வழியே திரும்ப, அங்கும் வழி காணாது மயங்கினர். அவர் அறிவுக் கண்ணால் அசுர மாயையென்று அறிந்து, கைத் தண்டினால் குத்தி வெளிப்பட்டு, "நீ இம் மலைவடிவாகவே இருந்து, அசுரர் கட்கு இருப்பிடமாய், அமரர்கட்கும் அருந்தவர்க்கும் அலக்கண் புரிந்துகொண்டிருந்து அறுமுகப் பெரு மான் அயில்வேலால் அழியக் கடவாய்" என்று சபித்தார். அவன் அம்மலை வடிவாக இருந்தான்.

தாரகனுடன் முருகவேள் போர் புரிந்தபோது, கிர வுஞ்சன் தாரகனுடன் பல மாயைகளைப் புரிந்தான். வீர வாகு தேவர் முதலியோரை மலைக்குள் புகுமாறு செய்து மயக்கினான். கந்தவேள் வேலாயுதத்தால் மலையைப் பிளந்து அழித்தருளினர்.

நிட்டூர :—

தீவினை புரிவோர்க்கு குமரவேள் கடுமையுடையவ ராக இருந்து, தண்டித்து மறக்கருணை புரிவார்.

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன். —திருவருட்பயன்.

"சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச்சாராது
பேர்ந்தார்க்கு தீக் கொடியின் பெற்றியவாம்"
—அற்புதத் திருவந்தாதி.

நிராகுல நிர்ப்பயனே :—

நிராகுலம் - கலக்கம் இல்லாதவர்

நிர்ப்பயன் - பயம் இல்லாதவர்.

தன்னையடைந்த அடியாருடைய கலக்கத்தையும் பயத்தையும் போக்கி அறக்கருணை புரிகின்றார்.

"முருகா! கிரவுஞ்ச மலையாகிய மாயையை அழித் தனை நீ. மாதர் மயலாகிய மாயையை யழித்தருளும் உன் திருவருள் என்று கிடைக்குமோ?

நிட்டுர நிராகுல நிர்ப்பயன் என்ற மூன்று விளிகளால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை அழிப்பவன் முருகன் என்ற குறிப்பையும் உணர்க.

கருத்துரை.

மலைபிளந்த வேலவனே! மாயவலை நீக்கியருள் செய்.

10, கார்மாமிசை காலன் வரிற்கலபத்
தேர்ம மிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரிதலாரி யெனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே:

பதவுரை

தார் மார்ப—மலர்மாலையணிந்த திருமார்பினரே!
வலாரி தலாரி எனும்-வலன் என்ற அசுரனையழித்த இந்திரனுடைய நகரமாம் பொன்னுலகையழித்தவனுகிய,
சூர் மா மடியதொடு-சூரனுகிய மாமரம் அழிவுபடும்படி செலுத்திய,
வேலவனே-வேலாயுதரே!
கார் மா மிசை-கரிய எருமையின்மீது,
காலன் வரில்-காலன் என்பவன் வருகின்றபோது,
கலபத்து ஏர்மா மிசை வந்து-தோகையினுல் அழகிய மயில் வாகனத்தில் எழுந்தருளிவந்து,
எதிரப் படுவாய்-அடியேன் எதிரே தரிசனந் தந்தருளுவீராக:

பொழிப்புரை

மலர்மாலையணிந்த திருமார்பினரே! வலாசுரனை யழித்த இந்திரனுடைய தவத்தையழித்த சூரனுகிய மாமரத்தை யழியுமாறு தொடுத்த வேலாயுதத்தை யுடையவரே! அடியேனுடைய உயிரைப் பிரிக்கும் பொருட்டு, கரிய எருமையின் மீது காலன் வரும்போது, தேவரீர், தோகையினுல் அழகுடைய மயில்வாகனத்தின்

மீது எழுந்தருளி வந்து அடியேன் எதிரில் காட்சி தந்து அருள்புரிவீராக.

விரிவுரை

கார் மா மிசை காலன் வரில் :—

மனிதனுக்குப் பெரிய பயம் யமபயமாகும். மரணம் தவிர்க்க முடியாதது. ஆனால் அடியார்க்கு மரணமில் பெருவாழ்வு சித்திக்கும். சிறந்த முருகனுடைய அடியார்க்குக் காலபயம் நேராது.

இயமனுடைய வாகனம் கரிய பெரிய எருமை. அது ஆலகாலவிடம் போன்ற கொம்பும், பார்வையில் கொளுத்தும் கொடிய கடிய கண்களும் உடையது.

காலன் - இயமனுடைய அமைச்சன். அறக்கடவுளின் பிரதிநிதி இயமன்.

"........தருமராசர்க்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர்போலும் குறுக்கை வீரட்டனாரே"
—அப்பர்.

வரில் என்ற சொல்லால் வராது என்பது பொருள். ஒருக்கால் இயமன் வழி தவறி என்பால் வருவானானால் முருகா! நீ மயிலின்மீது வந்தருளவேணும் என்று முறையிடுகின்றார் அடிகளார்.

கலபத் தேர் மாமிசை வந்தெதிரப்படுவாய் :—

கலபத்து ஏர்மாமிசை. கலபமாகிய தோகையினால் ஏர் - அழகுடைய, மா - புரவி போன்ற மயில்.

கலபத் தேர் என்றேயும் பொருள் கொள்ளலாம். கலபத் தேராகிய, மா - மயில்.

"நீலக்ரீவ கலாபத் தேர் விடு நீபச் சேவக"
:—(சேமக்) திருப்புகழ்.

"அன்னத் தேர் ஏறி அயன் வலப்பால்......போத"
—கைலாய ஞானவுலா.

"அன்னத் தேர் அயன்முடிசேர் அடிகள் போலும்"
—அப்பர்.

கூற்றுவன் வரும்போது குமரவேல் மயிலின் மீது ஆட்கொள்ளுமாறு அடிகளார் திருப்புகழிலும் வேண்டுதல் புரிகின்ருர்.

"........பகடது முதுகினில் யமராஜன்
அஞ்சவே வரும் அவதர மதிலொரு
தஞ்சமாகியெ வழிவழி யருள்பெறும்
அன்பிஞலுன தடிபுகழ் அடிமையென் எதிரேநீ
அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்தமோகர மயிலினில் இயலுடன் வரவேணும்"
—(பஞ்சபாதக) திருப்புகழ்

"கூற்றுவன் பாசத்திஞல்
பிடிக்கும்பொழுது வந்தஞ்சலென்பாய்,"
—கந்தரலங்காரம் (50)

"மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன் வந்தால் என் முன்னே
தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்"
—கந்தரலங்காரம் (80)

காலம் அறிந்து வருவதஞல் காலன் எனப்பட்டான்.

தார்மார்ப ;—

கடப்பமலர், வெட்சிமலர் முதலிய மலர் மாலைகள் முருகப்பெருமானுக்கு உகந்தவை.

வலாரி :—

வலன் என்ற அசுரன் பேராற்றல் படைத்தவன். இவன் சிவபூசை செய்து, தான் இறந்தால் தன்னுடல் நவமணிகள் ஆகவேண்டும் என்று வரம் பெற்ருன்.

இந்திரன் இவனுடன் போர்புரிந்து தோல்வி அடைந்தான். வலவனைப் பார்த்து இந்திரன், "உனக்கு வரந்தருகின்றேன் கேள்" என்ருன்.

வலன் சிரித்து, "தோல்வியுற்ற நீ எனக்கு வரந்தருவதா? உனக்கு என்ன வரம் வேண்டும் கேள். நான் தருகிறேன்" என்ருன்.

இந்திரன் யாகப் பசுவாகுமாறு வரம் இரந்தான். அதுபடியே வலன் யாகப் பசுவாக வந்தான். அவனை இந்திரன் கொன்றான். முன்பு பெற்றிருந்த வரத்தின்படி வலாசுரனுடைய உடல் விலையுயர்ந்த நவரத்தினங்கள் ஆயின.

உதிரம்—மாணிக்கமாயிற்று
பற்கள்—முத்துக்கள் ஆயின
மயிர்கள்—வைடூரியம் ஆயின
எலும்புகள்—வைரம் ஆயின
பித்தம்—மரகதம் ஆயிற்று
நிணம்—கோமேதகம் ஆயிற்று
தசைகள்—பவளம் ஆயின
கண்கள்—நீலம் ஆயின
கபம்—புஷ்பராகம் ஆயிற்று

அத்தகை ஆவின் சோரி மாணிக்க மாம்பல் முத்தம்
பித்தவை டூயம் என்பு வச்சிரம் பித்தம் பச்சை
நெய்த்தவெண் ணிணங்கோ மேதம் தசைதுகிர்
நெடுங்கண் நீலம்
எய்த்தவை புருடராகம் இவைநவ மணியின் தோற்றம்:
—திருவிளையாடற் புராணம்.

தலாரி :-

வலனையழித்த இந்திரனுடைய தலமாகிய பொன்னுலகைப் பானுகோபனை யேவி அழித்தவன் சூரபன்மன். வலாரி தலாரி என்ற சொற்றிறம் அழகியது. இரண்டும் வட மொழி தீர்க்க சந்தி.

சூர்மா மடியத் தொடு வேலவனே :-

சூரபன்மன் உறுதி குலைந்து இறுதியில் கடல் நடுவே ஆயிரத்தெட்டண்டங்களிலும் நிழல்படுமாறு இரும்புமயமான மாமரமாய் நின்று உலகங்களைத் துன்புறுத்தினான்.

முருகவேள் வேலாயுதத்தால் அம் மாமரத்தைப் பிளந்து எறிந்தார்.

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் உறுத்திப்பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்த்துமுன் இயற்றி யன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு செலவின் ஏகி
மடம்பிடித் திட்டவெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே.

—கந்தபுராணம்.

ஆயிரத்தெட்டண்டங்களையும் ஆண்ட சூரனை யழித்த முருகா! அந்த இயமனை யடக்கி என்னை ஆட் கொள் என்பது குறிப்பு.

கருத்துரை

சூரபன்மனை வென்ற வேலவரே! காலன் வரும் காலம், கோலமயிலின் மீது வந்து காத்தருள்.

11: கூகாஎன என்கிளை கூடிஅழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலுகவித்
த்யாகாசுர லோக சிகாமணியே.

பதவுரை

நாக அசல—நாககிரியாகிய திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளியுள்ளவரே!

வேலவ-வேலாயுதக் கடவுளே!

நாலு கவி த்யாகா=ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்ற நாற்கவிகளைப் பாடுந் திறத்தைத் தந்தருள்பவரே!

சுரலோக சிகாமணியே-தேவலோகத்துக்குச் சிகாமணியாக விளங்குபவரே!

என் கிளை கூடி-எனது சுற்றத்தார் ஒன்றுகூடி,

கூகா என அழ-கூகா என்று ஓலமிட்டு அழும்படி:

போகா வகை-இறந்து போகாத வண்ணம்,

மெய் பொருள் பேசியவா-உண்மை ஞானப் பொருளை அடியேனுக்கு உபதேசித்த அற்புதந்தான் என்னே!

பொழிப்புரை

திருச்செங்கோட்டு வேலவரே! ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நான்குவகையான கவிகளைப் பாடும் ஆற்றலை அடியார்க்கு வழங்குபவரே! தேவலோகத்துக்குத் தலைவரே! என் உறவினர் ஒன்றுகூடி கூகா என்று கதறிப் பதறி அழுமாறு, அடியேன் இறந்து போகாவண்ணம், உண்மை ஞானப் பொருளை உபதேசித்த உமது கருணைத் திறந்தான் என்னே!

விரிவுரை

கூகா என என்கிளை கூடி அழ போகாவகை :—

உயிர் பிரிகின்றபோது உறவினர் ஒன்றுகூடிச் சுற்றியிருந்து கூகா என ஓலமிட்டு அழுவது கண்கூடு. ஆனால் அதனை நாம் மறந்து விடுகின்றோம். இறப்பு என்ற ஒன்று உண்டு என்பதை மறப்பதைக் காட்டிலும் கேடு மற்றில்லை யென்று கம்பநாடர் கூறுகின்றார்.

"இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேல் கேடுமற்றுண்டோ?"

"கூகா என்று குரைப்பதல் லால்சமன்
வாவா என்னில் வரேம்என வல்லிரே"
—சிதம்பரச் செய்யுட் கோவை (75)

"கணங்கொண்டு சுற்றத்தார் கல் என்றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்" -நாலடியார் (25)

மெய்ப்பொருள் பேசியவா :—

முன்னே எட்டாவது பாடலில் கூறியவாறு அடிகளார், ஆறுமுகப் பெருமான் தனக்கு உபதேசித்த அருட்டிறத்தை வியந்து பாராட்டுகின்றார்.

சிவஞானிகட்குக் காலபயம் இல்லை என்பதைப் பின்வரும் திருமூலர் திருமந்திரத்தாலும் உணர்க.

நமன் வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நானுடன் போவது திண்ணமே

பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம்வரும் சிந்தைக்குத் தான் எதிராரே. —திருமந்திரம்,
"அவமே பிறந்தவளை இறவாமல் அன்பர்புகும்
அமுதாலயம்பதவி அருள்வோனே"
—(சிவஞான) திருப்புகழ்.

நாகாசல :—

நாகாசலம் என்பது திருச்செங்கோடு. இம்மலை செந்நிறமாக இருத்தலால் செங்கோடு எனவும், நாகவடிவில் விளங்குவதால் நாககிரி எனவும் பேர்பெறும். கொடி மாடச் செங்குன்றூர் என்று தேவாரத்தில் வரும்.

அந்தக் காலத்தில் அடியார்க்கு உற்ற நச்சுக் காய்ச்சல் தீர ஆளுடைய பிள்ளையார், "அவ்வினைக் கிவ்வினை" என்ற அருட்பதிகம் பாடியருளினர். இத்தலத்தில் சிவபெருமான் அர்த்தநாரியாகக் காட்சிதருகின்றார். சிவமூர்த்தியின் திருவுருவும், வேலவர் திருவுருவும் நவபாஷாணத்தால் ஆகிய வெண்மை வடிவங்கள்.

நாகாசலம் என்பதை சேஷகிரியெனக் கொண்டு திருவேங்கடம் என்பாரும் உளர்.

நாலு கவித் த்யாகா :—

செந்தமிழ்ப் பரமாசாரியராகிய செவ்வேட்பெருமான் தன்னுடைய அடியார்கட்கு நாலு கவிகளையும் பாடுங் கவித் திறத்தை வழங்கியருள்புரிவார்.

நாலுகவியின் விவரம் பின்வருமாறு.

ஆசு கவி :—

ஆசு-விரைவு. கொடுத்த பொருளை அடுத்த பொழுதில் பாடும் பாட்டு. பொருள், அடி, பா, அணி முதலியன கொடுத்தவுடனே அவைகள் பொருந்தப் பாடுவது.

மதுர கவி :—

இனிமை பெருகப் பாடுங்கவி. பொருட் செல்வம், சொல்லாற்றல், தொடை, தொடை விகற்பம் செறிய உருவகம் முதலிய அலங்காரத்தோடு இனிய ஓசை

பயப்ப, ஆராய்வோர் மனங்கட்கு அமுதம்போல் தித்திக்கப்பாடுவது மதுரகவி.

சித்திரகவி :—

சித்திரத்தில் அமைத்தற்கு ஏற்பப் பாடும் இறைக்கவி.

மாலைமாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறை, தூசங்கொளல் வாவன் ஞாற்று, பாதமயக்கு, பாவின் புணர்ப்பு, கூடசதுக்கம், கோமூத்திரி, ஓரெழுத்தினம், ஒற்றெழுத்துத் தீர்ந்த ஒரு பொருட்பாட்டு, சித்திரப்பா, விசித்திரப்பா, விகற்பநடை, வினுவுத்தரம், சருப்பதோ பத்திரம், எழுத்து வருத்தனம் முதலியன.

வித்தார கவி :—

விரிவாகப் பாடும் பிரபந்தம்.

மும்மணிக்கோவை, பன்மணி மாலை, மறம், கலிவெண்பா, தசாங்கம், மடலூர்தல், இயல், இசை, நாடகம், பல்வகைக் கவி, கூத்து, கிரீடை, பாடாண்டத்துறை, வகுப்பு, விருத்தக்கவிதை இவை முதலியவற்றை விரித்துப் பாடுவது வித்தாரக்கவி.

இந்த நான்கு கவிகளை அருளுவதோடன்றி ஏனைய அறுபத்து நான்கு கலைகளையும் வழங்கவல்லவர் முருகவேள்:

"அறிவுமறி தத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறியென இமைப் பொழுதில் வாழ்வித்தவேதியனும்"
—வேடிச்சி காவலன் வகுப்பு (12)

சுரலோக சிகாமணியே :—

தேவலோகத்துக்கு முடிமணியாக விளங்குபவன் முருகன்.

கருத்துரை

வேற்பெருமான் மரணமில்லாப் பெருவாழ்வ தந்த கருணை ஆச்சரியமானது.

12. செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மாஇரு சொல்லற என்றலுமே
அம்மாபொருள் ஒன்றும் அறிந்திலனே.

பதவுரை

செம் மான் மகளை-செவ்விய மானின் புதல்வியாகிய வள்ளியம்மையாரை,
திருடும் திருடன்—வேடரிடமிருந்து களவில் கவர்ந்து போன கள்வரும்,
பெம்மான்-பெருமையுடையவரும்,
பிறவான் இறவான்-பிறப்பு இறப்பு இல்லாத முழு முதற் கடவுளுமாகிய முருகப் பெருமான்,
சொல் அற சும்மா இரு-சொல்லொழிந்து மௌன நிலையில் இருப்பாய்,
என்றலும்-என்று உபதேசித்தவுடனே,
பொருள் ஒன்றும் அறிந்திலனே—உலகப் பொருள் ஒன்றையும் அறியாது நின்றேன்,
அம்மா-இது என்ன அதிசயம்.

பொழிப்புரை

செவ்விய மானிடம் தோன்றிய புதல்வியாகிய வள்ளிநாயகியை, வேட சேரியினின்றும் கரவு செய்த கள்வரும், பெருமையுடையவரும், பிறப்பும் இறப்பும் இல்லாத முழுமுதற் கடவுளும் ஆகிய முருகவேள் குரு மூர்த்தமாக வந்தருளி, "சொல்லொழிந்து சும்மா இரு" என்று உபதேசித்த உடனேயே, உலகப் பொருள் ஒன்றையும் அடியேன் உணர்ந்தேனில்லை. ஆ! இது என்ன அதிசயம்!

விரிவுரை

செம்மான் மகளை :—

செவ்விய மானின் மகள் என்றும், செவ்விய மால் மகள் என்றும் பொருள்படும்.

திருமால் சிவமுனிவராகத் தோன்றி, தொண்டை நன்னாட்டில் மேல்பாடிக்கு அருகில் மகா புனிதமுடன் விளங்கும் வள்ளிமலையில் தவஞ் செய்து கொண்டிருந் தார். மகா லட்சுமி மான் வடிவாக வந்து உலாவினாள். அம் மானை சிவமுனிவர் விரும்பிப் பார்த்தார். பார்வை யின் ஒளிபட்டு அம் மான் கருவுற்று, சூல் முதிர்ந்து, வள்ளிக்கிழங்கை அகழ்ந்த குழியில் குழவியைப் பெற் றது. உபேந்திரனே நம்பி ராஜனாகப் பிறந்திருந்தான். அவன் எடுத்து வளர்த்தான்.

மானி டத்தின்வரு மைந்தன் முந்துநீ
மானி டத்தின்வரு கென்ற வாய்மையால்
மானி டத்தின் வயினடைந் தாள்மரு
மானி டத்தின் மானுகுமம் மான்மகள்.

—கந்த புராணம்,

முருகவேள் நள்ளிரவில், தாய் தந்தையர் அறியா வண்ணம் வள்ளியைக் கவர்ந்து கொண்டு சென்றார். அதனால் "செம்மான் மகளைத் திருடும் திருடன்" என்று அருளிச் செய்தார். கற்பியல், களவியல் என்ற இருவகை மணங்களில் இது களவியலை அறிவுறுத்துகின்றது.

"சேணுணுயிடு மிதண்மே லரிவையை
மேவியே மயல் கொளலீலைகள் செய்து
சேரநாடிய திருடா அருள்தரு கந்தவேளே"

—(காணுணுதது) திருப்புகழ்.

"கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனை" —கந்தரலங்காரம் (91)

"திருவீழிமிழலையில் திருமால் அர்ச்சனை செய்யும் போது ஒருமலரைச் சிவபெருமான் மறைத்துக் களவு செய்தார். திருமால் கண்ணனாக அவதரித்தபோது வெண்ணெய் திருடினார். கந்தவேள் பெண்ணையே திரு டினார். ஆதலால் இவர்தான் பெரிய திருடர்" என்று பாம் பனடிகளும் பாடி யருளினார்.

கோத்தயிர்வெண் ணெய்த்திருடன் மால்மருகா நறிய
பூத்திருடன் தன்மதலாய் பொங்குகுறக்-கோத்திரத்தோர்
பெண்டிருடிச் சென்ற பெருந்திருடா! என்போதம்
உண்டுதிரு டத்தெரியா யோ.

இறைவனைத் திருடன் என்பது இகழ்ந்ததுபோல் புகழ்ந்ததாம், நிந்தாஸ்துதி என்பர்.

பெம்மான் முருகன் பிறவான் இறவான் :—

கடவுளின் சிறந்த இலக்கணம் பிறப்பிறப்பில்லாமை. முருகவேள் பிறப்பிறப்பில்லாத முழுமுதற் கடவுள்.

சும்மா இரு சொல்லற :—

இது அருணகிரிப் பெருமான் திருமுன், முருகன் குருநாதராகத் தோன்றி உபதேசித்த அருள் திருவாக்கு.

இது சூக்குமம், பைசந்தி, மத்திமை, சூட்சும வைகரி, தூலவைகரி என்ற ஐந்து வாக்குகளும் அடங்கி மோன நிலையில் நிற்கும் அருள் நிலையாகும்.

"குறியுங் குணமும் அறக் கூடாத கூட்டத்
தறிவறியாய் நின்றுவிட ஆங்கே—பிறிவறவும்
சும்மா இருத்திச் சுகங்கொடுத்த மோனநின்பால்
கைம்மாறு நானுஞற்றுதல் காண்."

"சும்மா இருக்கச் சுகம் உதயமாகுமே
இம்மாய யோகமினி யேன்"

"சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணம் என்
றெம்மால் அறிதற் கெளிதோ பராபரமே.?"

"சும்மா இருக்கச் சுகம்சுகம் என்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவும்" —தாயுமானர்.

சும்மா இருவெனநீ சொல்லப் பொருள் ஒன்றும்
அம்மா அறிந்திலமென் றன்றுரைத்த—எம்மான்
அருணகிரி நாதன் அநுபவம்நா யேற்குக்
கருணை புரி போரூரா காட்டு.

- திருப்போரூர்ச் சந்நிதிமுறை

"சும்மா இருக்கச் சொன்னதோர் வார்த்தை
அம்மா அதிசயம் யாருடன் புகல்வேன்"
—திருச்செந்தூர் அகவல்.

என்னுணே என்னுணே என்னுணே ஏகமிரண்
டென்னுமல் சும்மா இருஎன்று—சொன்னுன்
திருஞான சம்பந்தன் சீகாழி நாடன்
அருளாளன் ஞானவிநோ தன். -ஒழிவிலொடுக்கம்.

"சும்மா இருக்க வைத்தான் சூத்திரத்தை நானறியேன்.
அம்மா பொருளிதென அடைய விழுங்கினண்டி.
—பட்டினத்தார்.

இது மிகவும் அரிது என்று கூறுகின்ருர் தாயுமாஞர்.

"சும்மா இருக்கின்ற திறமரிது"

கந்தரலங்காரம் பத்தாவது பாடலிலும் இந்த அநுபவத்தை அடிகளார் கூறுகின்ருர்.

"சொல்லுகைக் கில்லையென் றெல்லாம் இழந்து
எல்லையுட் செல்ல எனைவிட்டவா" [சும்மாவிருக்கும்

இன்றுவருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்
றென்றுவருமோ அறியேன் எங்கோவே-துன்றுமல
வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம். —இராமலிங்க அடிகளார்.

அம்மா :—

அம்மா அதிசயச் சொல்.

"அப்பொழுதலர்ந்த செந்தாமரையினைவென்ற தம்மா"
—கம்பர்

பொருளொன்றும் அறிந்திலனே :—

சொல்லற்ற இடத்தில் பொருள் ஏது? காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்ற மூன்றும் அற்று இறைவனுடன் அத்துவிதமாய் நிற்கும் பரிபூரண மோன நிலையாகும்.

இந்தக் கந்தரநுபூதிப் பாடல் மிகவுயர்ந்த அருட் பாடலாகும். இதை உன்னுந் தோறும் உள்ளம் குளிரும், உணர்வு மிளிரும், அஞ்ஞானம் தளரும்; மெய்ஞ்ஞானம் வளரும்.

அநுபூதியாகிய மணிமாலையில் இது மாணிக்க மணியாகத் திகழ்வது.

துவாதசாந்தமான மேலைப் பெருவெளியில் அமர்ந்த மகாமோன நிலையையுணாத்தும் இப்பாடல் பன்னிரண் டாவதாக விளங்குவதையும் உன்னி உவகையுறுக.

கருத்துரை

முருகவேள் அருட்குருவாகத் தோன்றிச் "சும்மா இரு" என்று உபதேசித்த மாத்திரத்தில் சுட்டியறி கின்ற உலகம் யாவும் மறைந்து அதுவாக எங்கும் நிறைந்து எனக்குக் காட்சியளித்தது.

13. முருகன் தனிவேல் முநிநம் குருவென்
றருள்கொண் டறியார் அறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

பதவுரை

உரு அன்று-உருவப் பொருளும் அன்று:
அரு அன்று-அருவப் பெ ருளும் அன்று,
உளது அன்று-உள்ள பொருளும் அன்று,
இலது அன்று-இல்லாத பொருளும் அன்று,
இருள் அன்று-இருளும் அன்று,
ஒளி அன்று-ஒளியாகிய பொருளும் அன்று,
என நின்ற அதுவே-என்று சொல்லுந் தன்மையில் நின்ற அப்பரம் பொருளே,
முருகன்-முருகப்பெருமான் என்றும்,
தனி வேல் முனி-ஒப்பற்ற வேலையேந்திய முநிவன் என்றும்,

நம் குரு என்று-நமது பரமகுரு என்றும்,
அருள்கொண்டு அறியார்-அப்பரமனது திருவருளைக் கொண்டு அறியமாட்டாதவர்கள்,
அறியும் தரமோ-அறியவல்லவர் ஆவரோ ? ஆகார்.

பொழிப்புரை

உருவமான பொருள் என்றும், அருவமான பொருள் என்றும், உள்ள பொருள் என்றும், இல்லாத பொருள் என்றும், இருள் என்றும், ஒளியான பொருள் என்றும் சொல்லக்கூடியதாக நின்ற அப்பரம் பொருளே நமது முருகன்; அவர் வேல் தாங்கிய முனிவர். அவரே நமது பரம குருநாதர் ஆவார். ஆதலால் அவருடைய திருவருளையே துணையாகக் கொண்டு அதனுல் உண்டாகிய மெய்யுணர்விஞல் அறியமாட்டாதார், நூலறிவினுல் அறிய வல்லவரோ? வல்லவர் ஆகார்.

விரிவுரை

முருகன் :—

இறைவனுடைய திருநாமங்களுள் தலை சிறந்த நாமம் முருகன் என்பது.

''அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக''
—திரு முருகாற்றுப்படை.

தனிவேல் முனி :—

ஒப்பற்ற மெய்ஞ்ஞானமே வேலாயுதம். மந-நினைப்பது. ஞானிகளால் நினைக்கப்படுகின்றவன் முனி, சதா இறைவனை நினைப்பவர்கள் முனிவர்கள்.

நம்குரு என்று :—

முருகனே நமக்குக் குருநாதன். ஆதிகுருவும் அவனே. தட்சிணுமூர்த்திக்குப் பிரணவத்தை உபதேசித்த குருபரன்.

அருள்கொண்டறியார் அறியும் தரமோ :—

இறைவனை, அவன் அருளாலேயே அறிந்து அடைதல் வேண்டும்.

"அவனருளாலே அவன் தாள் வணங்கி" —சிவபுராணம்.

முருகன் என்றது சத்து
தனிவேல் முநி - சித்து
குரு - ஆனந்தம், ஆக சச்சிதானந்தப் பொருள்.

"அவனருளே கண்ணுகக் காணினல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே"
—(மைப்படிந்த) அப்பர்.

"காட்டுவித்தால் ஆரொருவர் காணுதாரே"
"காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே"
—அப்பர்.

முருகனைக் குருமூர்த்தியாக உபாசனை செய்து, பல காலம் தவங்கிடந்தால் அப் பரமன் ஒருகால் குருவாக வந்து அருள்புரிவான். அங்ஙனம் அருள் பெற்ருர் அநுபூதியடைவார்கள்.

பாம்பனடிகள் பிரப்பன் வலசையில் மயானத்தில் 35 நாட்கள் தன்னை மறந்து தவங்கிடந்து முருகனே குருவாக வந்து உபதேசிக்கப் பெற்ருர். தரமோ-ஓ எதிர்மறை.

உருவன்று அருவன்று :—

இறைவன் உரு, உருவரு, அரு என்ற இந்த மூன்று நிலைகளையுங் கடந்தவன். இது அவனுடைய சிறப்பியல்பு.

இவ்வாறு எல்லாங் கடந்துள்ள இறைவன், பலதர அறிவும் பக்குவமும் படைத்த மக்கள் தன்னை அறிந்து அன்பு செய்து வழிபட்டு உய்யும் பொருட்டு, உருவத் திருமேனி நான்கு, உருவருவத் திருமேனி ஒன்று, அருவத்திருமேனி நான்கு ஆகிய நவந்தரு திருமேனி தாங்கி அருள் புரிகின்ருர். இதனை, சொரூபம், தடஸ்தம் என்று கூறுவர்.

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர்முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய.
—கந்தபுராணம்.

புறத்தே வழிபடும் சரியை யாளர்க்கு உருவத்திரு மேனியும்,
புறத்தேயும் அகத்தேயும் வழிபடும் கிரியை யாளர்க்கு உருவருவத்திருமேனியும்,
அகத்தே மட்டும் வழிபடும் யோகியர்க்கு அருவத் திருமேனியுங் கொண்டு இறைவன் இன்னருள் புரிகின்றான்.

இவ்வாறு முத்திற வடிவங்களை இறைவன் கொண்டாலும் அவன் அவற்றால் யாதொரு விகற்பமும் அடையாது அவற்றைக் கடந்து தன்னியல்பில் நிற்கின்றான். ஆதலின் உருவன்று அருவன்று என்று அடிகள் கூறுகிறார். மெய்ஞ்ஞானிகள் அப் பரம்பொருளை அறிவு வடிவாக வழிபடுகின்றார்கள்.

இறைவனுடைய பொது இயல்பு, சிறப்பு இயல்பு என்ற பாகுபாடுகளையும், ஆன்மாக்கள் பக்குவம் அடைஉதற்காக அரும்பு, மலர், காய், கனி போன்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிபாட்டு முறைகளையும், பதமுத்தி பரமுத்தி வேறுபாடுகளையும் ஒரு சிறிதும் அறியாதவர்கள் உருவ வழிபாட்டையே வெறுத்தும் மறுத்தும் பழிக்கின்றார்கள். உருவமாயிருக்கின்ற உலகில், உடலுருவில் வாழ்கின்ற உயிர்கள் உருவருவங்களிலன்றி வழிபட்டுப் பக்குவமடைய முடியாதென்ற உண்மையை யுணர்கின்றார்களில்லை. அந்தோ! பரிதாபம்.

இறைவனது திருமேனி நிலைகளை வடலூர் வள்ளலார் வகுத்துக் கூறும் அழகிய அருட்பாடல் இதோ.

உருநான்கும் அருநான்கும் நடுவேநின்ற
உருவருவம் ஒன்றும்இவை யுடன்மே லுற்ற
ஒருநான்கும் இவைகடந்த ஒன்றுமாய் அவ்
ஒன்றி னடு வாய்நடுவுள் ஒன்ருய் நின்றே
இருநான்கும் அமைந்தவரை நான்கிஞேடும்
எண்ணுன்கின் மேலிருந்தும் இறையே? மாயைக்
கருநான்கும் பொருள்நான்கும் காட்டும் முக்கட்
கடவுளே! கடவுளர்கள் கருதுந் தேவே.

இந்த ஒன்பது நிலைகளாயும், அவைகளைக் கடந்து நின்றும் விளங்கும் முருகன் ஒருவனையே பாடும் நியமங் கொண்ட அருணகிரிநாதர் அவன் அருள் பெற்று அவனையே குருநாதராகப் பெற்றவர் என்பனை அடியில் வரும் தித்திக்குஞ் செந்தமிழ்ச் சிவஞானப் பாடலால் அறிக.

அருவமொரு நான்காகி உருவமொரு நான்காகி
அவையிரண்டும்
மருவியுள உருவருவம் ஒன்ருகி முத்திறமும்
வழுத்த வொண்ணுப்
பெருவெளிக்கும் அப்பாலாய் உள்ளபொருள் ஈதெனவே
பெரிதும் சேயோன்
ஒருவனையே புகழ்ந்த அருள் அருணகிரி சேவடிப்போ(து)
உளத்துள் வைப்பாம். —தகராலய ரகசியம்.

இறைவன் எல்லாமாய் அல்லவுமாய் இருக்கின்ருன்.

"உருவன்று அருவன்று" என்று கூறிய அடிகளார் இறுதிப் பாடலில் "உருவாய் அருவாய்" என்று கூறியருளினர். இந்தக் கருத்தை அப்பரடிகள் கூறும் அமுதப் பாடல்களாலும் அறிக.

மண்ணல்லை விண்ணல்லை வலயம் அல்லை
மலையல்லை கடலல்லை வாயு அல்லை
எண்ணல்லை எழுத்தல்லை எரியும் அல்லை
இரவல்லை பகலல்லை யாவும் அல்லை

பெண்ணல்லை ஆணல்லை பேடும் அல்லை
பிறிதல்லை ஆனுயும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
உணர்வரிய ஒற்றியூர் உடைய கோவே,

மண்ணுகி விண்ணுகி மலையுமாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானேயாகிக்
கண்ணுகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக்
கலையாகிக் கலைஞானந் தானேயாகிப்
பெண்ணுகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப்
பிரளயத்துக் கப்பாலோர் அண்டமாகி
எண்ணுகி எண்ணுக்கோர் எழுத்துமாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்றவாறே,

உளதன் றிலதன்று :—

இறைவன் எல்லா இடங்களிலும் எப்பொருள்களிலும் நீக்கமின்றி உள்ளவனுய் இருக்கின்ருன். இன்ப துன்பங்கட்கு வேருகி இல்லாதவனுகத் திகழ்கின்ருன்

ஒரு நாடகம் நடக்கும் இடத்தில் விளக்கு ஒளி எங்குங் கலந்து உளது. நாடகத்தை நடத்துகின்றது. அது காண்கின்றது. நம்மை நாடகத்தைக் காணச் செய்கின்றது. சோகமான காட்சியில் நாம் அழுகின்ருேம்; நகைச்சுவை காட்சியில் நாம் சிரிக்கின்ருேம்; காதல் காட்சியில் நாம் மகிழ்கின்ருேம்; கொலைக் காட்சியில் நாம் அஞ்சுகின்ருேம். விளக்கொளி அழுவதில்லை; சிரிப்பதில்லை; மகிழ்வதில்லை; அஞ்சுவதில்லை; சுகதுக்கத்துக்த அப்பாலாய் உள்ளது. உடனுகியும் இலதாகியும் விளக்கொளி இருப்பதுபோல் இறைவன் இவ்வுலகில் இருந்தும் இல்லாதவனுகத் திகழ்கின்ருன். இவ்வுலகம் எங்கும் இறைவன் இருப்பான் என்னில் உலக சுகதுக்கந் தாக்காதோ? தாக்காது. உவர்க் கடலில் பிறந்து வளர்ந்து உவர்நீரைக் குடித்து வாழ்கின்ற கடல்மீனில் உப்பு ஏருது. அதுபோல் இறைவன் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கின்ருன்.

இல்லதும் உள்ளதும் யாவையுந் தானுகி
இல்லது உள்ளது மாயன்றும் அண்ணலைச்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமென்
றெல்லை யுணர்ந்தால் உயிர்க்குயிராமே.

—திருமந்திரம், 2335.

இருளன் றெளியன்று :—

இருளும் ஒளியும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பொருள்கள். இருள் என்ற ஒரு பொருள் தனியேயில்லை யென்றும், ஒளியின்மையே யிருளென்றும் கூறுவார் உளர்.

இருள் தனிப் பொருள் என்றே ஆன்றோர்கள் உறுதிப் படுத்தியுள்ளார்கள்.

இறைவன் புறச்சமயத்தவர்க்கு இருளாகவும் தன்னையடைந்த அகச் சமயத்தவர்க்கு ஒளியாகவும் இருக்கின்ருன் என அடியில் வரும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தால் உணர்க.

"புறச்சமயத் தவர்க் கிருளாய் அகச்சமயத் தொளியாய்"

ஒரே அரசாங்கம் நல்லோர்க்குப் பாதுகாவல் தந்து உதவுகிறது. தீயோர்க்குத் தண்டனை தந்து ஒறுக்கின்றது. அதுபோல் எனவுணர்க.

இருளென் பதுவுமன்றி ஒளியென் பதுவுமன்றி
எவையுந் தனுளடங்க—ஒருமுத லாகும்
உளதென் பதுவுமன்றி இலதென் பதுவுமன்றி
உலகந் தொழ இருந்த. —தாயுமானுர் வண்ணம்.

என நின்றதுவே :—

மேற்கூறிய அன்று அன்று என நின்ற பொருள் எதுவோ அதுவே முருகன் எனக் கூறி முடிக்கின்றது.

அது என்ற சொல் தத்வமசி என்ற மகாவாக்கியத்திலும் வருவதையறிக.

நின்ற அதுவே என்ற சொல் அகரம் தொக்கி, நின்றதுவே என வந்தது.

கருத்துரை

உரு அரு உளது இலது இருள் ஒளி என யாவையும் கடந்த தனிப்பொருளாகிய முருகனைக் குருவாக அடைந்தோர் அவனருளால் உண்மையை யுணர்வார்கள்

14. கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநாசி யொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே.

பதவுரை

மனமே-ஏ மனமே!
மெய்-உடம்பு,
வாய்-வாய்,
விழி கண்,
நாசி-மூக்கு,
செவியாம்-காது ஆகிய,
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே-ஐம்பொறிகளின் வழியே செலும் ஆசைகளை,
ஒழிவாய் ஒழிவாய்-முற்றிலும் விடுவாய் விடுவாய் அதனால்,
கைவாய் கதிர்வேல்-திருக்கரத்தில் ஒளிபெற்ற வேலாயுதத்தையுடைய,
முருகன் கழல்பெற்று-முருகப்பெருமானுடைய திருவடியைப் பெற்று,
உய்வாய்-உய்தி பெறுவாயாக.

பொழிப்புரை

ஏ மனமே! மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளின் வழியே சென்று உலக இன்பங்களை நுகர வேண்டும் என்ற ஆசைகளை அறவேவிட்டொழிப்

பாயாக. அதனால் வேலைத் திருக்கரத்தில் ஏந்திய முருகனுடைய திருவடியைப் பெற்று உய்தி பெறுவாய்.

விரிவுரை

கந்தரநுபூதி ஏழாவது பாட்டில் மனதை விளித்து முருகனை நினைத்துக் கொடு என்று உபதேசித்தார். இந்தப் பாடலில் மனதை விளித்து அவ்வாறு கொடுப்பதற்கு அவா தடையாக நிற்கும், அவாவற்றாரே அறஞ் செய்வர்; ஆதலால் அறம் புரியத் தடையாக நிற்கும் அவாவை விடு என்று உபதேசிக்கிறார்.

கைவாய் கதிர்வேல் முருகன் :—

ஞான பண்டிதன் ஞானமேயாகிய வேலாயுதத்தை அடியார்க்கு வழங்கும் பொருட்டுத் தமது திருக்கரத்தில் ஏந்தியுள்ளார்.

கதிர்-ஒளி. ஞானம் ஒளியாகும்.

கழல் பெற்றுய்வாய் :—

முருகனுடைய திருவடி நான், எனது என்ற அகங்காரம் மமகாரம், அற்ற இடமாகும்.

"யானெனதென் றற்ற இடமே திருவடியா"
—கந்தர் கலிவெண்பா,

முருகன் திருவடி பெறுவது என்பது அகங்கார மமகாரங்களறுவது எனவுணர்க. இந்த இரண்டும் அற்ற இடத்து திருவருள் பதிகின்றது.

இங்ஙனம் முருகன் திருவடியை யடைவதற்குத் தடையாக நிற்பன அவா முதலிய குற்றங்களாகும். அதனால் அடுத்த அடியில் அவாவறுத்தலை உபதேசிக்கின்றார்.

ஒழிவாய் ஒழிவாய் மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே:

மெய் வாய் கண் காது நாசி என்ற ஐம்பொறிகளின் வழியே மனம் வெளிப்பட்டு உலக இன்பங்களை நுகர அவாவுகின்றது.

இனிய சயனத்தை உடம்பும், இனிய சுவைகளை வாயும், நறுமணத்தை நாசியும், நல்ல காட்சிகளைக் காணக் கண்ணும், இனிய கானங்களைக் கேட்கச் செவியும் விரும்புகின்றன.

இந்த மெய், வாய், கண், நாசி, செவி என்ற ஐம்பொறிகளின் வழியே சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களை நாடுகின்றது மனம்.

ஐம்பொறிகளின் கொடுமைகளைக் கந்தரலங்காரத்திலும் கூறுகின்ருர்.

"ஓரவொட்டார் ஒன்றை உன்னவோட்டார் மலர்
இட்டுனை தாள்
சேரவொட்டார் ஐவர் செய்வதென்யான்"

எல்லா வகையான துன்பங்களையும் தருவது அவாவேயாகும். ஆதலால் துன்பம் இன்றி வாழ வேண்டுமாயின் அவாவை யறுக்க வேண்டும்.

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். —திருக்குறள்

மெய், வாய், கண், மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய் வேட்கை அவாவினைக்—கைவாய்க்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும். —நாலடியார் (39)

கருத்துரை

மனமே! அவாவை அறுத்து, முருகன் திருவடியைப் பெற்று உய்வாயாக.

15. முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே.

பதவுரை

பொரு புங்கவரும்-அன்பு பொருந்தியுள்ள தேவர்களும்,
புவியும்-மண்ணுலகத்தோரும்,
பரவும்-புகழ்ந்து துதி செய்கின்ற,

குரு புங்கவ-சிறந்த குருமூர்த்தியே!
எண்குண பஞ்சரனே-அருட்குணங்கள் எட்டுக்கும் உறைவிடமானவரே!
முருகன் குமரன் குகன் என்று மொழிந்து-முருகன், குமரன், குகன் என்று உமது திருநாமங்களை மெய் யன்புடன் கூறி,
உருகும் செயல் தந்து-உள்ளம் உருகும் தன்மையைத் தந்து,
உணர்வு என்று அருள்வாய்-மெய்யுணர்வை எப்போது அடியேனுக்கு அருள்புரிவீர்?

பொழிப்புரை

அன்பு பொருந்திய விண்ணவரும் மண்ணவரும் துதி செய்கின்ற சிறந்த குருமூர்த்தியே! எண் குணங் கட்கும் இருப்பிடம் ஆனவரே! முருகன், குமரன், குகன் என்று மெய்யன்புடன் உரைத்து, அதனுல் உள்ளம் உருகும் தன்மையை அடியேனுக்கு வழங்கி, மெய் யுணர்வை எந்நாள் அருள்புரிவீர்! விரைவில் அருளு வீராக.

விரிவுரை

முருகப்பெருமானுடைய திருநாமங்கள் பல்லாயி ரங்கள்! அவற்றுள் சிறந்தவை மூன்று. முருகன், குமரன், குகன் என்பவை! இந்த மூன்றனுள்ளும் சிறந்தது முருகன் என்ற திருநாமம். "சிறப்புடைப் பொருளை முந் துறக் கிளத்தல்" என்ற சூத்திரப்படி முருக நாமத்தை முதலில் வைத்துக்கூறுவாராயினர். ஏனைய ஆயிரநாமங் கட்குச் சமானம் முருகன் என்ற ஒரு நாமம் எனவுணர்க.

அதனுல் கந்தரலங்காரத்தில், 'மொழிக்குத் துணை முருகா எனு நாமங்கள்' என்றனர். முருகா, ஒருமை. நாமங்கள் பன்மை.

தமிழில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்று ஓசைகள் உண்டு. மு,ரு,கு இந்த மூன்று எழுத்துக்களும் மூவோசைகளுடன் கூடியவை.

அ—ஆக்கல்; உ—காத்தல், ம—அழித்தல்.

இந்த மூன்று எழுத்துகளில் காத்தல் எழுத்தாகிய உகரம் முருகு என்ற மந்திரத்தில் வருகின்றதை உய்த்துணர்க.

ம்+உ; ர்+உ; க்+உ. என்ற மூன்று இடங்களிலும் காக்குங் கடவுள் முருகன்.

"முருகா எனவோர் தரமோதடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே"
—(எருவாய்) திருப்புகழ்

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

குமரன் :—

முருகனுடைய சடக்கரத்தில் இடையில் உள்ள எழுத்துக்கள் குமர என்பது.

சிவபெருமான் உபதேசம் கேட்டபோது 'குமரா' என்று துதி செய்தார். "நாதா குமரா", என்றார்.

"குமரா சரணம் சரணம் என்று அண்டர்குழாந்துதிக்கும்
அமராவதியிற் பெருமாள்," —கந்தரலங்காரம்

குமரசர ணென்று கூதளப்
புதுமலர் சொரிந்து கோமளப்
பதயுகள புண்ட ரீகமுற் றுணர்வேனோ
—(கறைபடு) திருப்புகழ்

கு—உலக மாயை; மர—போக்கடிப்பவன்

முருகனுடைய ஆகமம் குமார தந்திரம் எனப்படும்.

குமரா நமஎன்று கூறினர் ஓர்கால்
அமரா வதிசென் றரசாள்வர்—எமராசன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம்.
—திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

குகன் :—

மலைக் குகைகளில் இருப்பவன் குகன்.

ஆன்மாக்களின் இதய குகையில் இருப்பவன் குகன்

அணோரணீயாந் மஹதோ மஹீயாநாத்மா குஹாயாம்
நிஹிதோஸ்ய ஜந்தோ: தமக்ரதும் பச்யதி வீதசோகோ,
தாது: ப்ரஸாதாந் மஹிமாநமீசம்.
—தைத்திரீயாருண சாகை.

அணுவிலு மணுவாய், பெரிதிலும் பெரிதாயுள்ள பரம ஆன்மா இந்தச் செந்துவினது இருதய குகையிலுளது. தன்னுடைய மகிமைக்கு ஏதுவாயுள்ள அதனைக் கன்ம நீக்கமுள்ளோன் தனக்கு ஆதாரமான ஈசனது பிரகாசத்தினால் சோகமில்லாதவனாய்க் காண்கின்றான்.

உருகும் செயல் தந்து :—

உள்ளம் உருகினால் உயிர் உருகும். உயிர் உருகினால் உயிருக்குயிராயுள்ள சிவத்துடன் ஒன்றுபடும் அத்துவித முத்தி சித்திக்கும்.

உள்ளம் உருகில் உடனாவர் அல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற. —திருவுந்தியார்.

உணர்வென்றருள்வாய் :—

உணர்வு—மெய்ஞ்ஞானம். உருவம் அடியார்க்கு இறைவன் மெய்ஞ்ஞானத்தைவழங்குவான்.

பொருபுங்கவர் :—

பொரு—பொருந்துதல்.

"பொய்பொரு முடங்குகை" —சிலப்பதிகாரம்

பொரு...போர் புரிகின்ற என்றும் பொருள்படும்.

உட்பகையாகிய காமாதியறுவர்களுடனும் அசுரர் களுடனும் போர் புரிகின்றவர் தேவர்.

அன்றி சூராதியவுணருடன் போர் புரிந்த வீரவாகு தேவர் முதலியோர் எனினும் அமையும்.

புவியும் பரவும் :—

விண்ணுளோரும் மண்ணுளோரும் முருகனையே பரம் பொருள் என்று கருதித் தொழுது துதித்து நலம் பெறுகின்றார்கள்.

குருபுங்கவ :—

சிவபிரான், அகஸ்தியர், பராசரபுதல்வர் ஆகியோருக்கு உபதேசித்தபடியால், "குருபுங்கவ" என்றார்.

புங்கவன்—சிறந்தோன்.

எண் குண பஞ்சரனே :—

எண் குணங்கள்:

1. தன் வயத்தனாதல்,
2. தூய உடம்பினனாதல்,
3. இயற்கை யுணர்வினனாதல்,
4. முற்றும் உணர்தல்,
5. இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல்,
6. பேரருளுடைமை,
7. முடிவிலாற்றலுடைமை,
8. வரம்பிலின்பமுடைமை.

அநந்தஞானம் அநந்தவீரியம்
அநந்த தரிசனம் அநந்த சுகம்
நிர்நாமம் நிர்க்கோத்திரம்
நிராயுஷ்யம் அழியா இயல்பு:

—சிலப்பதிகார உரை, 10 188.

ஸர்வஜ்ஞுதா த்ருப்தி ரநாதிபோத:
ஸ்வதந்த்ரதா நித்யமலுப்த சக்தி:
அநந்தசக்திஸ்ச நிராமயாத்மா
விசுத்ததேஹஸ்ஸ சிவத்வமேதி:

—சர்வஞானோத்தராகமம்.

பஞ்சரம் :—

மேலே கூறிய எட்டு அருட்குணங்கட்கும் உறைவிடமானவன் முருகன்.

கருத்துரை

எண்குணங்களும் படைத்த இறைவனே ! முருகன் குமரன் குகன் என்று கூறி உருகும் செயல் தந்து மெய்ஞ் ஞான உணர்வைத் தந்தருள்.

16. பேராசை எனும் பிணியில் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர் படவேல் எறியும்
சூரா சுரலோக துரந் தரனே.

பதவுரை

வீரா-வீரமூர்த்தியே!
முதுசூர்பட-பழமையான சூரபன்மனுடைய அசுர வடிவம் அழியும்படி,
வேல் எறியும்-வேலாயுதத்தைச் செலுத்திய,
சூரா-சூரமணியே!
சுரலோக துரந்தரனே-தேவவுலகத்தைக் காத்தருளியவரே!
ஓரா வினையேன்-ஆராய்கின்ற நல்லறிவு இல்லாத தீவினையுடைய அடியேன்,
பெரு ஆசை எனும்-பெரிய ஆசையாகிய,
பிணியில் பிணிபட்டு-தளையில் கட்டுண்டு,
உழலத் தகுமோ-சுழலுதல் தகுதியோ ?

பொழிப்புரை

வீர மூர்த்தியே! பழமையான சூரபன்மனது அசுரத் தன்மையை யழித்த சூரமூர்த்தியே ! தேவ உலகத்தைக்

காத்தருளியவரே! ஆராய்தல் இல்லாத தீவினையேனுகிய அடியேன் பேராசையென்ற பெருந்தளையினுல் கட்டுண்டு நிலையின்றிச் சுழலுதல் தகுதியோ? தேவவுலகத்தையே காத்த நீர் இச் சிறியேனைக் காத்தருளும்.

விரிவுரை

பேராசை யெனும் பிணி :—

மனிதனை நல்வழியில் போகவிடாமல் கட்டும் வலிமையுடையது ஆசையாகிய சங்கிலி.

ஆசைதான் வறுமை என்கிறுர் குமரகுருபரர்.

"அல்கா நல்குரவு அவா வெனப் படுவது
செல்வம் என்பது சிந்தையின் நிறைவே"
-குமரகுருபரர்.

எத்தனை வந்தாலும் போதாது என்று எண்ண வைத்து மனிதனைப் பேயாய் அலையவைத்து ஆட்டி வைப்பது ஆசை.

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். —திருக்குறள்;

"ஆசைச் சுழற்கடலுள் ஆழாமல் ஐயாநின்
நேசப் புணைத்தாள் நிறுத்தினுல் ஆகாதோ?"

ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாங் கட்டி
ஆளினுங் கடல்மீ திலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன் மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேயினும் காயகற்பந் தேடி
நெஞ்சுபுண் ணுவர் எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நான் நான்எனக் குளறியே
ஒன்றைவிட் டொன்றுபற்றிப்

பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ஞானந்தமே. —தாயுமானுர்

பெருங்காற்றிலே அகப்பட்ட பஞ்சைப்போல் ஆசையால் மனம் அலையும். அதனுல் கல்வி கேள்விகள் யாவும் அழிந்து ஐம்புலன்களால் அழிக்கப்பட்டு அழிவர். நிராசையில்லையேல் இறைவனையடைய முடியாது என்கிறுர் தாயுமானுர்.

ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ்
செனவு மன தலையுங் காலம்
மோசம்வரும் இதனுலே கற்றதுங் கேட்
டதுந்தூர்ந்து முத்திக் கான
நேசமும்நல் வாசமும் போய்ப் புலனுயிற்
கொடுமைபற்றி நிற்பர் அந்தோ !
தேசபழுத் தருள்பழுத்த பராபரமே
நிராசையின்றேல் தெய்வம் உண்டோ ?

ஐந்து வீடு தர மறுத்து மண்ணாசையால் பதினேரு அக்ஷௌரோணி சேனைகளுடன் குலத்தோடு துரியோதனன் அழிந்தான்.

பெண்ணாசையால் அசுரகுலம் முழுவதும் அழிய இராவணன் மாண்டான். ஆசையால் அழிந்த சாம்ராஜ்யங்கள் பலப்பல.

ஓரா வினையேன் உழலத் தகுமோ :—

ஓர்தல்—ஆராய்தல்.

"ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே"
—சிவபுராணம்

தனக்கு நன்மை பயப்பது எது? தீமை பயப்பது எது? உயிர்த் துணை யார்? உய்யும் நெறி எது? நித்தம் எது? அநித்தம் எது? நான் ஏன் பிறந்தேன்? எங்கிருந்து

வந்தேன்? எங்கே போகவேணும்? எங்கே போய்க் கொண்டிருக்கின்றேன்?" என்று ஆராய்தல் வேண்டும்.

வினையிலே கிடந்து அழுந்துவதனால் "வினையேன்" என்றார்.

வீரா :—

முருகவேள் வீரமூர்த்தி.

முதுசூர் பட வேலெறியும் சூரா :—

ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசு புரிந்த சூர பன்மனை அடக்கிய சூரனே ! எனது பேராசையை அடக்கியருள் என்கின்றார்.

"சூர சூர சூராதி சூரர்க் கெளிவாயா
தோகையா" –(பேரவா) திருப்புகழ்.

சுரலோக துரந்தரனே :—

துரந்தரன்—பொறுப்பை வகிப்பவன்; தேவலோகத்தைக் காக்கும் பொறுப்பை வகிக்கின்றவன்.

கருத்துரை

சூரசங்கார மூர்த்தியே! ஆசைப் பிணியையகற்றி அடியேனை யாண்டருள்.

17. யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல்மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல்நடவீர் நடவீர் இனியே.

பதவுரை

யாம் ஓதிய-நாம் நல்லாசிரியர்பால் ஓதியுணர்ந்த,
கல்வியும்-கல்வியறிவையும்,
எம் அறிவும்-நமது இயற்கை யறிவையும்
பெற-நாம் பெற்றுக்கொள்ளுதல்,
வேலவர் தாமே தந்ததனால்-மெய்யாக வேலை ஏந்திய

முருகவேள் அவராகவே நமக்கு வழங்கிய காரணத்தால்,

பூமேல்-பூமியில் உள்ள வரை.

மயல் போய்-நீங்கள் மயக்கங்களை நீக்கி,

அறமெய் புணர்வீர்-அறத்தொடும் உண்மையொடும் சேருங்கள்,

இனி நாமேல் நடவீர்-இனிமேல் நாவில் நடவுங்கள், நடவுங்கள்; அப் பெருமானைப் பாடுங்கள் பாடுங்கள்.

பொழிப்புரை

நாம் ஆசானிடம் ஓதியுணர்ந்த கல்வியறிவையும் இயற்கையறிவையும் நாம் பெரும் பொருட்டு, ஞானவேலராகிய முருகப் பெருமான் அவராகவே நமக்குத் தந்தருளிய காரணத்தால், உலகத்தவரே! பூதலத்தில் வாழ்கின்ற வரை மயக்கத்தை நீக்கி, அறநெறியுடனும் உண்மை நெறியுடனும் சேருங்கள். இனிமேல் நாவினுல் அப்பெருமானைப் பாடுங்கள், பாடுங்கள்.

விரிவுரை

யாமோதிய கல்வியும் எம்மறிவும் :—

அறிவு இருவகைப்படும். ஒன்று கல்வியறிவு. மற்ருென்று இயற்கையறிவு.

அன்றி அருள் நூல்களை ஓதியதால் உண்டாகிய கல்வியறிவாகிய கருவியறிவையும் அருளாசிரியரால் உணர்த்தப்பட்டு, உபதேச மொழியைக் கேட்டுச் சிந்தித்து, தெரிந்து நிட்டை கூடியதனுல், முருகனுடன் அத்துவிதமாகக் கலந்து உணர்ந்த மெய்யறிவையும் என்றும் பொருள் கொள்ளலாம்.

தாமே பெற வேலவர் தந்ததனுல் ;—

மேலே கூறிய இருவகை அறிவுகளையும் நாம் பெறுமாறு வேலவர் தாமே தந்ததனுல் என்று பொருள் செய்யப்பெற்றது.

இவ்வாறன்றி,

தாமே பெற-முருகன் இந்த அறிவுகளைத் தாமே பெற்றுக்கொள்ளுமாறு தந்தான் என்றும் பொருள்படும்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

—திருமந்திரம் *(81)*

தாம்பூலத்தை மடித்துத் தன் குழந்தைகள் கையில் கொடுத்து அக் குழந்தைகள் கையால் வாயில் இட, பிதா அதனை அமுதமாக உண்டு மகிழ்வது போல், இறைவன் தமிழையும் தமிழறிவையும் அடியாரிடம் தந்து, அடியார்கள் தமிழ்பாடத் தம் செவியால் உண்டு களிகூர்கின்றான்.

பூமேல் மயல் போயற மெய்ப்புணர்வீர் :-

பூமேல்—பூதலத்தில் நீங்கள் வாழ்கின்ற வரை.

மயல்போய்—மயக்கம் நீங்கப்பெற்று.

அற-அறத்துடனும், மெய்-உண்மையுடனும்,புணர்வீர்-சேருங்கள்.

மயல்போய் அற-மயக்கம் போய் அற்றுப்போக என்றும் பொருள்படும்.

மெய் புணர்வீர்-உண்மையோடு கலந்தவர்களே ! என்றும் பொருள்படும்.

மெய்ப்பு உணர்வீர்-உண்மையை உணர்ந்தவர்களே ! என்றும் பொருள்படும்.

அற-நன்றாக உண்மை நெறியில் சேர்ந்து நிற்பீர் எனவும் பொருள்படும்.

தருமத்தையும் சத்தியத்தையும் புணர்ந்தவர்களே ! என்றும் பொருள்படும.

நாமேல் நடவீர் நடவீர் இனியே :—

மனிதனுக்குக் கால்நடை, நாநடை, மனநடை என மூன்று நடைகள் உண்டு.

விலங்குகட்கு மனநடையும் நாநடையும் இல்லாமையால் அவைகள் கால்நடைப் பிராணிகள் ஆயின.

நன்ருகப் பேசுபவர்களைப் பார்த்து, பேச்சு நடை நன்ருகவுளது என்கின்ரேும். மனதில் ஒழுக்கமில்லாதவர்களை அவர் நடை தவறியவர், நடை பிசகியவர், நல்ல நடையில்லாதவர் என்கிரேும்.

காலால் நடக்கின்ற உலகினரே! இனி நாவினுல் முருகனைப் பாடி நடவுங்கள் என்று அருணகிரியார் இப் பாடலில் உலகினரைப் பார்த்து உபதேசிக்கின்ருர்.

நாமே நடவீர் என்பதற்கு, நாம்—அச்சம் எனப் பொருள் கொண்டு அச்சம் ஏன்? அப் பெருமானை நோக்கி நடவுங்கள் என்று உபதேசிப்பதாகவும் கொள்ளலாம்.

நாமேல் நடவீர்—நாவினுல் நடவுங்கள், நாவைக் கொண்டு நடவுங்கள். உருபு மயக்கம்.

இப் பாடல் உலக மக்களுக்கு அடிகளார் உபதேசித்தது.

கருத்துரை

முருகப் பெருமான் நமக்குக் கலையறிவையும் மெய்யுணர்வையும் தந்தருளியதனுல் அப் பரமனையே பாடுங்கள்.

18. உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிகாவல சூர பயங்கரனே.

பதவுரை

உதியா-பிறவாமலும்,
மரியா-இறவாமலும்,

உணரா-நினையாமலும்,
மறவா-மறவாமலும்;
விதி மால் அறியா-நான்முகனும் நாரணனும் தேடிக் காணு தவனுமாய் விளங்கும்,
விமலன் புதல்வா-மலமில்லாத சிவபெருமானுடைய திருக்குமாரரே,
அதிகா-எல்லார்க்கும் மேலானவரே!
அநகா-பாவம் இல்லாதவரே!
அபயா-பயம் இல்லாதவரே!
அமராவதி காவல-அமராவதியைக் காப்பாற்றியவரே[
சூரபயங்கரனே-சூரபன்மனுக்கு அச்சத்தைத் தந்தவரே!

பொழிப்புரை

பிறப்பும் இறப்பும் நினைப்பும் மறப்பும் இல்லாதவரும், மாலும் அயனும் தேடிக்காணுதவரும், மலம் இல்லாதவரும் ஆகிப சிவபெருமானுடைய திருக்குமாரரே! எல்லோருக்கும் மேலானவரே! பாவம் இல்லாதவரே! பயம் இல்லாதவரே! சூரபன்மனுக்கு அச்சத்தையளித்தவரே!

விரிவுரை

இந்த அநுபூதிப்பாடல் துதிமயமானது; வேண்டுதல் இன்றி அமைந்தது.

உதியா மரியா:—

சிவபெருமான் இறப்பும் பிறப்பும் இல்லாதவர். கடவுளுக்கு இருக்க வேண்டிய இலக்கணங்களுக்குள் முதன்மையானது இறப்பும் பிறப்பும் இன்மையாகும்.

“அஜம் த்ருவம்” “அஜாத இத்யேவம்,” பிறப்பு இல்லாத அவரே நமது பிறப்பையறுக்க வல்லவர்.

பிரமன் மால் உருத்திரன் இவர்கள் பிறப்பிக்க மாட்டார்கள். ஆகையால் அவர்கள் காரணராகார்.

சம்புவே காரணர்; அவரைத் தியானிக்க வேண்டியது.

ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே நகாரணம்
காரணந்து த்யேயச் சம்பு: —அதர்வசிரஸ்

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்"
—சிலப்பதிகாரம் (5-169)

எல்லார் பிறப்பும் இறப்புமியல் பாவலர் தம்
சொல்லால் தெளிந்தோம் நம் சோணேசன்—இல்லில்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.
—அருணகிரியந்தாதி (70)

"உன்பிறப்போ பத்தாம் உயர்சிவனுக் கொன்றுமில்லை
என்பிறப்பெண் ணத்தொலையா" —காளமேகம்

"பெண்ணமரும் சடைமுடியார்.........
பிறப்பிலார் இறப்பிலார்" —அப்பர்

"பிறப்பிலி இறப்பிலி பிறங்கலர சன்றன்மகளார்
நாதன்"
—வில்லிபாரதம் (அர்ச்சுனன் தவநிலை)

உணரா மறவா ;

சிவபெருமான் நினைப்பும் மறப்பும் இல்லாதவர்.

ஆன்மாக்கள் நினைக்கும் மறக்கும்.

இதனைச் சகல கேவலம் என்பர். பகலும் இரவும் என்பர். இந்த இரவு பகல் அற்ற இடத்தே இறைவன் தரிசனை கூடும்.

இரவுபகல் அற்றஇடத் தேகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே.—தாயுமானர்.
நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றிருக்கும் விமலன் இருக்கும்.
—திருமந்திரம் (2970)

விதிமாலறியா விமலன்;—

"நான் பரம்" "நான் பரம்" என்று நான்முகனும் நாராயணரும் எதிர்த்து மலைந்தபொழுது, இருவருக்கும்

இடையே ஒரு சிவசோதி எழுந்தது. இதன் அடிமுடி கண்டோர் பெரியவர் என்று முடிவுசெய்து, நான்முகன் அன்னமாகவும், நாரணர் பன்றியாகவும் மேலும் கீழும் தேடியும் காண முடியவில்லை.

(1) கீழ்நோக்குவது தாமதகுணம்; மேலோங்கி நிமிர்வது ராஜஸ குணம். தாமத குணத்தாலும் ராஜஸ குணத்தாலும் இறைவனைக் காணமுடியாது. சத்துவ குணத்தால் காணலாம் என்று உணர்க.

"குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிக மேயாக"
—பெரிய புராணம்.

(2) பன்றி—காட்டில் வாழும் இயல்புடையது. அன்னம் தாமரையில் வாழும் இயல்புடையது. காட்டில் வாழும் பன்றி பாதமாகிய தாமரையைத் தேடிச் சென்றது. தாமரையில் வாழும் அன்னம் சடையாகிய காட்டைத் தேடிச் சென்றது. இயல்புக்கு மாருகச் சென்ருல் இறைவனைக் காண முடியாது.

(3) திருமால்—திருமகள்—நாயகன். பிரமன்-கலைமகள் நாயகன். பணத்தின் துடுக்கினுலும், படிப்பின் முறுக்கினுலும் பரமனைக் காணமுடியாது. பக்தி ஒன்ருலேயே காணலாம்.

(4) இறைவன் உயிர்க்குயிராய் இருக்கின்ருன். உள் முகத்தாலேயே காண முயலுதல் வேண்டும். மாலும் அயனும் உள்ளேயிருக்கின்ற இறைவனை வெளியே தேடியதனுல் காண முடியவில்லை.

"தேடிக் கண்டுகொண்டேன், திருமாலுடன் நான்முகனும் தேடித் தேடொண்ணுத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்."

நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதம்என் நெஞ்சுள் இருக்கவே. —அப்பர்.

(5) இறைவனை அன்பினால் அகங்குழைந்து உருகி அழுதால் காணலாம். ஆராய்ச்சியால் காணமுடியாது.

"அழுதால் உன்னைப் பெறலாமே" —திருவாசகம்

உதித்தும், உணர்ந்தும், மறந்தும் இருக்கும் நிலையில் மாலும் அயனும் மாதேவனைக் காண இயலவில்லை.

விமலன் புதல்வா :—

சிவபெருமான் மலம் இல்லாதவர்; அநாதி மல முத்தர்.

இத்தனை பெருமையும் அவருடைய திருக்குமாரருக்கு உண்டு.

நீண்ட ஆடையில் இருந்து ஒரு துண்டு கிழித்தால் நீண்ட ஆடைக்கு உரிய பெருமையனைத்தும் துண்டுக்கும் உண்டுதானே?

அதிகா :—

அதிகன் - மேலானவன்.

"அதிகனுமாகி" —(அகரமுமாகி) திருப்புகழ்.
முருகவேள் மூவர்க்குந் தேவர்க்கும் மேலானவன்.

"படைத்தளித் தழிக்குந் த்ரிமூர்த்திகள் தம்பிரானே"
—(கனைத்த) திருப்புகழ்.

அநகா :—

அகம் - பாவம்; பாவம் இல்லாதவன் அநகன்.

அபயா :—

பயம் இல்லாதவன் அபயன், ஆன்மாக்களின் பாவத்தையும் பயத்தையும் போக்க வல்லவன். பாவமில்லாதவனும் பயமில்லாதவனும் தானே பாவத்தையும் பயத்தையும் போக்க முடியும்?

அமராபதி காவல :—

அமராவதி - தேவலோகத்தின் தலைநகர். பொன்னகரில் உள்ள அந் நகரை முருகவேள் பாதுகாத்தருளினூர்.

சூரபயங்கரனே :—

பயம்-அச்சம், கரம்-செய்வது. சூரனுக்கு அச்சத்தைச் செய்தவர்.

கருத்துரை

பிறப் பிறப்பில்லாத சிவகுமாரரே! எனக்கும் பிறப்பைப் போக்கியருள்.

19. வடிவுந் தனமும் மனமும் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வேல் அரசே
மிடியென்ருெரு பாவி வெளிப்படினே;

பதவுரை

அடி அந்தம் இலா-முதலும் முடிவும் இல்லாத,
அயில்வேல் அரசே-கூரிய வேற்படையை ஏந்திய அரசே!
மிடி என்ற ஒரு பாவி-வறுமையென்ற ஒரு பாவி,
வெளிப்படினே-தோன்றினுல்,
வடிவும்-உடலழகும்,
தனமும்-செல்வமும்,
மனமும்-நல்ல மனமும்,
குணமும்-நற்குணமும்,
குடியும்-பிறந்த குடியின் பெருமையும்,
குலமும்-பிறந்த குலத்தின் பெருமையும்,
குடி போகியவா-விட்டுவிட்டு வேறு இடத்திற்குக் குடி போய்விட்டன. ஆ, வியப்புக் குறிப்பு.

பொழிப்புரை

முதலும் முடிவும் இல்லாத கூரிய வேலை ஏந்திய தலைவரே! வறுமை என்ற ஒரு பாவி தோன்றுமாளுல்,

உடலழகும், செல்வமும், நல்ல மனமும், நற்குணமும், குடிப்பிறப்பின் உயர்வும், குலப் பெருமையும் அடியோடு விட்டு வேறு இடத்திற்குக் குடிபோய்விடும்.

விரிவுரை

அடியந்தமிலா அயில்வேலரசே :—

இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி"

—திருவாசகம்.

அயில்-கூர்மை.

ஞானம் கூர்மையானது. "கூர்த்த மெய்ஞ்ஞானத் தால்" என்பார் மாணிக்கவாசகர்.

எல்லா ஆன்மாக்களுக்கும் ஞானத்தை வழங்கும் பொருட்டு ஞானபண்டிதன் ஞானவேலைத் தாங்கியுள்ளான். அப் பரமனை மெய்யன்புடன் வழிபட்டோர் ஞானம் எய்தி, அதனால் அநுபூதி பெறுவர்.

மிடியென்றொரு பாவி :—

வறுமை மனிதனை அடியோடு அழிக்கும் இயல் புடையது. அதனால் அதனைப் "பாவி" யென்றார். பண்பைப் பண்பியாக உருவகஞ் செய்தார்.

இன்மை யெனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். —திருக்குறள்

வடிவுந் தனமும் மனமும் குணமும் குடியும் குலமும் குடி போகியவா :—

அழகு, செல்வம், நன்மணம், நற்குணம், குடியின் உயர்வு; குலப் பெருமை என்று ஆறு நலன்களையும் வறுமை யழித்துவிடும்.

"வறுமை போல இன்னாது வறுமையன்றி வேறில்லை
மறுவின் மொழிகள் சோர்வுபடும் வாய்ந்த
குடிநற் செயல் மொழிகள்
இறுதிபடும்மற் றிரப்பாதி எல்லாத் துயரும்
உடனாகும்"

—விநாயக புராணம்.

தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை
உலர்தர வாட்டும்
தரித்திரந் தலைவர் தலைவியர்க்கிடையே தடுப்பரும்
கலாம்பல விளைக்கும்
தரித்திரம் அளவாச் சோம்பலை யெழுப்பும் சாற்றரும்
உலோபத்தை மிகுக்கும்
தரித்திரம் மிக்க பொய்ம்மை பேராசை தரும் இதில்
கொடிய தொன்றிலையே.
—குசேல உபாக்யானம்.

இதனை நன்கு ஆராய்ந்த ஔவையார்,

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்றார்.

அருணகிரிநாதர் பழநித் திருப்புகழில், "முருகா பாழ்த்த வினையின் காரணமாகச் சிறியேனுக்கு மறு பிறப்பு வருமாயின் சிறிது மிடியும் அணுகாதே அருள்" என்கின்றார்.

"நினைவுபாழ்பட வாடி நோக்கிழந்து
வறுமையாகிய தீயின்மேற் கிடந்து
நெளியும் நீள்புழு வாயினேற் கிரங்கி அருள்வாயே"
—(அறிவிலாதவர்) திருப்புகழ்.

இல்லானை இல்லாளும் மதியாள் என்றால் மற்றவர் மதிப்பது யாங்ஙனம்?

முற்பிறப்பில் அறஞ்செய்யாது தீவினை புரிந்தோரை வறுமைப் பேய் பிடித்து அல்லற்படுத்தும்.

அநுபூதி பெற்று அருட் செல்வம் இல்லாதவரிடம் உயிரில் ஒளியும், ஞானச் செல்வமும், நன்மனமும், அருட் பண்பும், அடிமைத் திறமும், அடியார் கூட்டமும் விலகி விடும் என்ற குறிப்பை அடிகளார் உய்த்துணர வைத்தார்.

வறுமையால் மேலே கூறிய ஆறும் விலகுவது போல், அருட் செல்வம் இல்லாதவரிடம் இவை நீங்கும் என்பது போதரும்.

ஆதலால் ஒவ்வொருவரும் அருட்செல்வத்தைப் பெறுதல் வேண்டும் என்று உபதேசித்தருளினூர்.

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
இவ்வுலக மில்லாகி யாங்கு: —திருக்குறள்:

கருத்துரை

வேலாயுதக் கடவுளே! வறுமை வந்தால் அழகு முதலியன அகலுவதுபோல், அருள் இல்லாதார்க்கு உயிர், ஒளி முதலியன அகலும். ஆதலால் அருட் செல்வத்தை அளித்தருள்.

20: அரிதாகிய மெய்ப்பொருளுக் கடியேன்
உரிதாஉப தேசம் உணத்தியவா
விரிதாரண விக்ரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந்தரனே.

பதவுரை

விரி தாரண-விரிந்து பரந்த உறுதியுள்ளவரே!
விக்ரம-மிகுந்த வலிமையுடையவரே!
வேள்-எல்லோராலும் விரும்பப்படுகின்றவரே!
இமையோர் புரிதாரக-தேவர்கள் விரும்பும் பிரணவப் பொருளே!
நாக புரந்தரனே-தேவர் உலகத்தைத் தாங்குபவரே!
அரிது ஆகிய-அடைதற்கு அரிது ஆகிய,
மெய்ப்பொருளுக்கு-உண்மைப் பொருளைப் பெறுவதற்கு.
அடியேன் உரிதா-அடியேனுகிய நான் தகுதியுடையவனுகும்படி,
உபதேசம் உணர்த்தியவா-உபதேசத்தினுல் உணர்த்தியருளிய அருள்திறம் ஆச்சரியமானது.

பொழிப்புரை

விரிந்து பரந்த உறுதியுள்ளவரே! பேராற்றல் படைத்தவரே! எல்லோராலும் விரும்பப் பட்டவரே!

தேவலோகத்துக்கு ஆதாரமானவரே! தேவர்கட்குப் பாதுகாப்பானவரே! அடைதற்கரிய உண்மைப் பொருளை அடியேன் பெறுவதற்குத் தகுதியுடைய வனுதம்படி உபதேசத்தினுல் உணர்த்திய அருட்டிறம் ஆ! ஆச்சர்யமானது.

விரிவுரை

அரிதாகிய மெய்ப்பொருள் :—

அரிதினும் அரிது மெய்ப்பொருளையுணர்தல். பண்டைத் தவத்தின் பயனுல் அருணகிரியார்க்கு முருகன் குருவாக எழுந்தருளி இதை உணர்த்தி யருளினுர்.

உரிதா உபதேசம் உணர்த்தியவா :—

முருகா! மிகப் பெரியவனுகிய நீ, மிகச் சிறியவனு கிய அடியேன் மெய்ப் பொருளையடைவதற்குத் தகுதி யுடையவனுகக் கருதி உபதேசித்து உயர்த்திய அருட் டிறந்தான் என்னே! இது அதிசயம்.

"அன்னமாய் விசும்பு பறந் தயன்தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னை யாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்"
—திருவிசைப்பா.

உப - சமீபம். தேசம் - இடம். இறைவனுடைய சமீபத்தில் ஆன்மாவைச் செலுத்துவது உபதேசம்.

உணர்த்தியவா - உண்ணின்று உணர்த்தியருளி னுர்.

அருணகிரிப் பெருமானுக்குக் குமாரக் கடவுள் குரு மூர்த்தமாக எழுந்தருளி உபதேசித்த அருட்டிறத்தை நன்றி பாராட்டு முகத்தால் பல இடங்களில் கூறுகின் ருர். கந்தரநுபூதி 8-வது செய்யுளிலும், 11-ஆவது 12-வது செய்யுட்களிலும் கூறியதைக் காண்க.

விரிதாரண :—

விரி முதனிலைத் தொழிற் பெயரால் விரிந்து பரந்திருப்பதை அறிவிக்கின்றது. தாரணம்-உறுதி.

விக்ரம ;—

விக்ரமம் - பராக்கிரமம்.

"உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமல்"
—பெரியாழ்வார் (5-4-6)

வி க்ரமம் என்று பிரித்து மேலான நீதிமுறையுடையவனே எனவும் பொருள் கொள்ளலாம்.

வேள் :—

வேள்-விருப்பம்; எல்லோராலும் விரும்பப்படுகின்றவன்.

இமையோர் புரிதாரக :—

புரி–விருப்பம்; தாரகம்-பிரணவம். "புகழ் புரிந்தார் மாட்டு" என்ற திருக்குறள் வாக்காலறிக. தேவர்கள் விரும்புகின்ற பிரணவ சொரூபி முருகன். பிரணவம் தாரகம் எனப்பட்டது.

"ஓங்காரத்துள் ளொளிக்குள் ளேமுருகன் உருவங்கண்டு
தூங்கார்" —கந்தரலங்காரம் (55)

"தாரகத் துருவமாம் தலைமை யெய்திய
ஏரகத் தறுமுகன்" —கந்தபுராணம்.

தாரகம்-கடப்பதற்கு உதவுவது; பிறவிப்பெருங்கடலைத் தாண்டச் செய்வதனுல் பிரணவம் தாரகம் எனப்பட்டது.

"கர்ப்ப ஜன்ம ஜரா மரண சம்சார மஹத் பயாத்
ஸந்தாரயதி தஸ்மாத் தாரகம்"
—அத்வய தாரகோபநிஷத்

காசியில் மரித்தவர்கள் செவியில் விச்வநாதர் உபதேசிப்பது இத் தாரகமாகிய பிரணவமேயாகும்.

"காசிதன்னிடை யிறந்தவர்க் கெம்பிரான் கழறும்
ஆசில் தாரகப் பிரமமாம் அதன் பொருள்
ஆய்ந்தான்"
—கந்தபுராணம்.

நாகபுரந்தரன் ;—

நாகம்-சுவர்க்கம்:

"எம்மை நாகமேல் இருத்துமாற்ருல்"
—கந்தபுராணம் (திருவிளை, 99)

நாகபுரம்-தேவநகரம். தரன்-தரித்தவன். தாங்குகின்றவர்.

கருத்துரை

ஓங்கார வடிவாய ஞானபண்டிதனே! அரிய.பெரிய மெய்ப்பொருளுக்குச் சிறியேன் தகுதியாகுமாறு உபதேசித்தது ஆச்சரியமானது.

21: கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந்தரஎன் றிசைவாய்
வரதா முருகாமயில் வாகனனே
விரதா சுரசூர விபாடணனே.

பதவுரை

வரதா-கேட்ட வரங்களை வழங்குபவரே!
முருகா-முருகக் கடவுளே!
மயில் வாகனனே-மயிலை வாகனமாகக் கொண்டவரே!
விரத அசுர சூர-அருவருப்புடைய அசுரனாகிய சூரபன்மனை,
விபாடணனே-வேலால் பிளந்தவரே!
கருதா மறவா நெறிகாண-நினைப்பு மறப்பு அற்ற வழியைக் கண்டுகொள்ள,
எனக்கு-அடியேனுக்கு,
இரு தாள் வனசம் தர-இரு பாதங்களாகிய தாமரைகளைத் தருவதற்கு,
என்று இசைவாய்-எப்பொழுது திருவுள்ளம் இசைந்தருளுவீர் ?

பொழிப்புரை

கேட்ட வரங்களை வழங்குபவரே! முருகவேளே! மயில் வாகனக் கடவுளே! அருவருப்புள்ள அசுரனாகிய சூரபன்மனை வேலால் பிளந்தவரே! நினைப்பு மறப்பில்லாத நெறியை அடியேன் அடைய, உமது திருவடிக் கமலங்களை எந்நாள் தந்தருளுவீர்!

விரிவுரை

கருதா மறவா நெறிகாண ;—

கருதல், மறத்தல், இது சகல கேவலம், நினைப்பதும் மறப்பதும் அநுபூதிக்குத் தடைகளாகும்.

"அந்திபக லற்றஇடம் அருள்வாயே"
—(ஐங்கரனை) திருப்புகழ்.

"இராப்பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே"
—கந்தரலங்காரம் (74)

"இரவுபக லில்லா இன்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற"   —திருவுந்தியார் (20)

இரவு-தத்துவங்களின் தொழிற்பாடின்றி ஆணவ மலத்துடன் மாத்திரம் கூடியிருக்கும் ஆன்மாவின் கேவல நிலை.

பகல்-ஆன்மா தத்துவங்களோடு கூடி விஷயங்களை நுகரும் சகல நிலை.

"இராப்பகலற்ற இடத்தே யிருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்"
—திருமந்திரம் (331)

இருதாள் வனசந்தர வென்றிசைவாய் :

'முருகா! உமது திருவடித்தாமரையைச் சிறியேற்கு என்று தருவீர்? உமது திருவுளம் என்று இசையும்? என்று அருள்தாகத்துடன் அடிகளார் வேண்டுகின்றார்.

வரதா :—

அடியார்கள் கேட்ட வரங்கள் அனைத்தையும் ஒரு சிறிதும் தாமதிக்காமல் வழங்கும் வரதன் முருகன்.

"தேவர் வரதா முருக தம்பிரானே"
—(ஆறுமுகம்) திருப்புகழ்.
"வரதா மணிநீ எனவோரில்" —திருப்புகழ்.

விரதா சுர சூர விபாடணனே ;—

விரத அசுர சூர, விரத-அருவருப்பு.

"விரதமாயைபுரி சகுனி" —பாரதம் (நாடுகர 32)

விபாடணம்-பிளத்தல். இனி, பாடணம்-பேச்சு வி என்ற உபசர்க்கம் இன்மைப் பொருள் தரும்; சூரனுடன் பேச்சு இல்லாதவன் என்றும்,

சூர் அவி பாடணம்—சூரனுடைய ஆண்மையை அவித்த பேச்சையுடையவனே என்றும் பொருள் கோடலாம்.

விரதா சுர-எனக் கொண்டு, அடியாரைக் காக்கும் விரதத்தையுடையவனே! சுர - தேவனே! என்றும் பொருள் கொள்ளலாம்.

இந்த அநுபூதிப் பாடல் மிகவும் சிறந்தது. ஆறுமுகப் பெருமானுடைய அருளைப் பெற்று அநுபூதியடையும் அவாவுடைய ஒவ்வொருவரும் முருகவேளிடம் கருதாமறவா நெறிபெறும் பொருட்டு வேண்டும் அரிய வேண்டுகோள் இது.

கருத்துரை

சூரசம்மார வரதமூர்த்தியே! நினைப்பு மறப்பற்ற அநுபூதி நிலை பெற உன் பாதத்தைத் தந்தருள்.

22. காளைக்கும ரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம்எய் தியவா
பாளைக்குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச்சுர பூபதி மேருவையே:

பதவுரை

பாளை குழல்-கமுகின் பாளைபோன்ற நீண்ட கூந்தலை யுடைய,
வள்ளி பதம் பணியும்-வள்ளிபிராட்டியின் பாதங்களைத் தொழுகின்ற,
வேளை-செவ்வேளாகிய முருகப்பெருமானை,
சுரபூபதி-தேவர்களுக்குத் தலைவராய,
மேருவை-மேருமலைபோன்ற பெருமையுடையவரை,
காளை குமர ஈசன் என கருதி-காளைப்பருவம் உள்ள குமார மூர்த்தியென்று தியானித்து,
தாளை பணிய-அவருடைய திருவடியை வணங்கும்படி,
தவம் எய்தியவா—தவத்தினை அடியேன் பெற்றபேறு ஆச்சரியமானது.

பொழிப்புரை

கமுகின் பாளைபோன்ற கூந்தலையுடைய வள்ளி நாயகியின் பாதத்தைத் தொழுகின்ற செவ்வேளும் தேவர் தலைவரும், மேருமலை போன்றவரும் ஆகிய முருகப் பெருமானை, இளம்பூரணன் என்று தியானித்து, அப்பெருமானுடைய திருவடியை அடியேன் வணங்குகின்ற தவத்தைப் பெற்றேனே, இது மிகவும் ஆச்சரிய மானது.

விரிவுரை

காளைக் குமரேசன் எனக்கருதி :—

காளை எனவும், குமரன் எனவும், ஈசன் எனவும் விரித்துரைக்க.

குமரன் ஈசன் என்ற வடமொழிச் சொற்கள் புணருங்கால் நிலைமொழியாகிய குமரன் என்ற சொல்லில்

ஈற்றிலுள்ள னகர வொற்றுக் கெட்டு வருமொழி முதலிலுள்ள ஈகாரம் ஏகாரமாகித் திரிந்து குமரேசன் என வந்தது. இது வடமொழி குணசந்தி.

நாளை—என்றும் நிலையாயுள்ளது. இது சத்து.

குமரன்—உலக மாயையைப் போக்குவது. இது சித்து.

ஈசன்—எப்பொருட்கும் தலைவனுயிருக்கும் தன்மை இது ஆனந்தம்.

உண்மையறிவின்பமாகிய இது முருகனுடைய சிறப்பியல்பு. இவைகளையறிந்து, உள்ளத்தில் நினைந்து தியானித்தால் அநுபூதி எய்தும். திருவடியின்பம் விளையும்.

தாளைப் பணியத் தவம் எய்தியவா :—

தாள்-முருகன் திருவடி. தாளைப் பணிதல் என்பது (முருகனடி) திருவருள் நிறைவில் தற்போதமடங்கி நிற்றல்.

சரியை கிரியா யோகங்களைச் செய்தல் மெய்த்தவமாகும்; தவத்தைச் செய்வோரே சிவத்தைச் சார்வார். நித்த அநித்த வேறுபாடுகளை உணர்ந்து அறஞ் செய்தல் வேண்டும். அறத்தால் அன்பு விளையும். அன்பினுல் அருள் விளையும், அருளால் தவம் சித்திக்கும். தவத்தால் சிவமாம் பெற்றி கைகூடும்.

அப்பர் பெருமான் முன் செய்த தவத்தின் பயனுல் சிவத்தையடைந்தார். இதனைச் சிவபெருமான் திலகவதியார் கனவில் தோன்றி "முன்னமே முனியாகி எனையடையத் தவமுயன்ருன்" என்று அருள் புரிந்த திருவாக்கினுல் உணர்க.

'எய்தியவா" என்று தவத்தின் பயனைக் குறித்து அதிசயப்படுகின்ருர்.

"முன்பு செய் தவத்தினீட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட"

—பெரியபுராணம் (கண்ணப்பர்)

பாளைக்குழல் வள்ளி பதம் பணியும் :—

குழலுக்கு உவமை பாக்கின் பாளை.

வள்ளிநாயகி முருகப்பெருமானுடைய இச்சா சக்தி. உலக நுகர்வில் இச்சை வைக்கும்படி மாந்தருயிர்கட்கு இச்சையையூட்டுவது இச்சாசக்தி. மாந்தர்க்கு இச்சக்தி இச்சையை ஊட்டாவிட்டால் மாந்தர் தங்கள் வாழ்வில் ஐம்புல நுகர்வு இச்சித்தலும், அவ்விச்சையின் வழி ஐம்புல நுகர்வை யறிதலும் அவ்வறிவின் வழி ஐம்புல நுகர்வை நுகர்தலும் செய்து, உலக ஐம்புல நுகர்வு நிலையில்லாததென்றும், இன்ப அமைதியைத் தரமாட்டாததென்றும் அறியும் உலக அநுபவத்தை அறியமாட்டார்கள். அறியாவிடில் அவர்கட்கு அநுபூதி அடைதற்கு இச்சையுண்டாகாது.

எனவே முருகன் வள்ளிபதம் பணிகின்றார் என்பதன் உட்பொருள், இச்சா சக்திக்கு இயைந்து ஒழுகுதல் என்பதாகும்.

உயிரிச்சை யூட்டி உழிதருஞ் சக்தி
உயிரிச்சை வாட்டி ஒழித்திடு ஞானம்
உயிரிச்சை யூட்டி உடனுற வாலே
உயிரிச்சை வாட்டி உயர்பதம் சேருமே.

—திருமந்திரம் (2356)

வேளைச்சுரபூபதி மேருவையே :—

வேள் சுரபூபதி மேரு. வேள்-விருப்பம். நிலவுலகத்தில் வாழும் மாந்தருக்கு உலக நுகர்வில் அவர்களோடு ஒன்றாய் நின்று இச்சையை ஊட்டுகின்ற கருணையைக் குறிக்க 'வேள்' என்றும்;

இச்சித்து நுகர்கின்றபோது அவர்கட்கு வேருய் நிற்கின்றதை 'பதி' என்றும்,

அவர்கள் அறிய உடனுய் நிற்கும் தன்மையை 'மேரு' என்றும் குறிப்பிட்டருளினுர்.

இது அவருடைய பொதுவியல்பு எனவுணர்க. (தடஸ்தம்)

இறைவன் ஒன்ருய், வேருய், உடனுய் நிற்கும் சித்தாந்தக் கருத்தை உணர்த்தினுர். மேருமலை இத்தன்மைத் தென்று அளக்கவும் கிளக்கவும் முடியாதது. முருகனுடைய பெருமையும் அளக்கவோ கிளக்கவோ முடியாதது எனவுணர்க.

கருத்துரை

முருகப்பெருமானுடைய திருவடியைப் பணிய அடியேன் என்ன தவஞ் செய்தேனே?

23- அடியைக் குறியா தறியா மையினுல்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே;

பதவுரை

வடி விக்ரம வேல் மகிபா-கூர்மையும் வலிமையும் உடைய வேலாயுதத்தையேந்திய தலைவரே!

குறமின் கொடியை புணரும்—குறவர் குலத்தில் வளர்ந்த மின்னல் கொடிபோன்ற வள்ளிநாயகியைத் தழுவுகின்ற,

குணபூதரனே-குணக் குன்றமே!

அடியை குறியாது-உமது திருவடியைத் தியானிக்காமல்

அறியாமையினுல்-அறிவின்மையினுல்,

முடிய கெடவோ-அடியோடு அடியேன் அழிந்துபடலாமோ?

முறையோ முறையோ-இது நீதியோ? நீதியோ?

பொழிப்புரை

கூர்மையும் வலிமையும் கொண்ட வேலையேந்திய தலைவரே! குறமகளாம் மின்னல் கொடிபோன்ற வள்ளியைத் தழுவும் குணக்குன்றமே! உமது திருவடியைத் தியானிக்காமல், அறிவின்மையினுல் அடியேன் அடியுடன் அழிந்து போகலாமா? இது நீதியோ? நீதியோ? நீதியாகாது.

விரிவுரை

அடியைக் குறியாது :—

இறைவனுடைய வலது திருவடி-ஞானசக்தி; இடது திருவடி—கிரியாசக்தி.

பிற ஒன்றையுங் குறியாது, இறைவனுடைய திருவடி ஒன்றை மட்டும் குறித்து நிஷ்டை கூடுதல் வேண்டும்.

அறியாமையினுல் முடியக் கெடவோ :—

அறிவின்மையினுல் ஆன்மாக்கள் முருகனடியைத் தியானிக்காது அவலமுறுவதை நோக்கி, அவர்களின் குறையைத் தன்மீது ஏற்றிக் கொண்டு அடிகளார் இவ்வாறு கூறுகின்ருர். அறியாமை யென்பது, இங்கே முருகனது திருவடிகளை நினைந்து தியானிக்கும் அறிவாற்றல் இல்லாமையாகும்.

முறையோ முறையோ :—

இந்த அடுக்குத் தொடர் இரக்கத்தை உணர்த்தி நின்றது.

வடிவிக்ரம வேல் மகிபா :—

வேல் - ஞானம். விக்ரமம் - வலிமை. வி - சிறந்த. க்ரமம்-நீதி, அறிவு கூர்மையும் நீதியும் பொருந்தியது,

மகி-பூமி. மகிபன்-பூமிக்குத் தலைவன்.

குறமின் கொடி :—

திருமாலின் கண்ணில் தோன்றிய சுந்தரவல்லி, முருகவேளை நோக்கித் தவஞ்செய்து, அவருடைய ஆணையின்படி மான் வயிற்றில் தோன்றி, குறவர் குலத்தில் வளர்ந்தார்.

கொடி போன்ற மெல்லிய திருமேனியுடையவர். இச்சா சக்தியாதலின் ஒளியுடையவர், மின்கொடி.

குணபூதரனே :—

கந்தரநுபூதி 15—ஆவது பாடலில் கூறிய எட்டு அருட் குணங்களையுடைய மலை போன்றவன், குறக் கொடி படரும் மலையாகக் காட்சி தருகின்றான்.

பூ - பூமி. தரம் - தாங்குவது. பூமியைத் தாங்கு வதனால் பூதரம் எனப்பட்டது.

புயலால் மரங்கள் அசையும். மலையசையாது. அதுபோல் முருகன் உலகெலாம் ஒன்றி நிற்பினும் உலக அவலம் அவனைப் பற்றாது எனவுணர்க.

இந்தப் பாடலில் இறைவனுடைய இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியென்ற முச்சக்திகளையும் கூறினார். இவை தமிழில் வேட்கையாற்றல், செய லாற்றல், அறிவாற்றல் என வரும்.

அநுபூதியடைய விரும்புகின்ற அடியார்கள் முரு கனுடைய திருவடியை எப்போதும் மனதில் தியானித் துக்கொண்டு உலக நிலையால் கலக்குணாது மலை போல் நிற்கவேண்டும் என்பது கருத்து.

கருத்துரை

வேலரசே! உனது திருவடியைத் தியானிக்காமல் அழிவது நீதியோ? அடியேன் இடையறாது தியானிக் கும் அருளைத் தந்தருள்.

24: கூர்வேல்விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேனருள் சேரவும் எண்ணுமதோ
சூர்வேரொடு குன்று தொளைத்தநெடும்
போர்வேல புரந்தர பூபதியே:

பதவுரை

சூர் வேரொடு-சூரபன்மன் குலம் முழுவதையும்,
குன்று தொளைத்த-அவனுக்கு அரண்புரிந்த ஏழு கிரிகளையும் தொளைத்த,
நெடும்போர் வேல-நெடிய போர் செய்யவல்ல வேலாயுதத்தை ஏந்தியவரே!
புரந்தர பூபதியே-இந்திரனுடைய நகரத்துக்குத் தலைவரே?
கூர் வேல் விழி-கூரிய வேல் போன்ற கண்களையுடைய,
மங்கையர் கொங்கையிலே-மாதர்களுடைய தனங்களை,
சேர்வேன்-சேர விரும்புகின்றவனாகிய சிறியேன்,
அருள் சேரவும் எண்ணுமதோ-திருவருட்பெற்றியை கூடுமாறு எண்ணும் பேறு பெறுமோ?

பொழிப்புரை

சூரனையும், அவன் குலத்தையும், அவனுக்கு உதவி புரிந்த மலைகளையும் அழிக்குமாறு செய்த,நெடும்போரில் வல்ல வேலாயுதக் கடவுளே! கூரிய கண்களையுடைய பெண்களின் தனத்தில் சேர விரும்பும் அடியேன், உமது திருவருளைச்சேர நினைக்கமாட்டேனே? (திருவருளைச் சேர அருள் செய்வீர்.)

விரிவுரை

கூர்வேல் விழி மங்கையர் :—

கூரிய வேல் பகைவனைப் பிளந்து அழிப்பதுபோல் பெண்களின் கண்கள், விரும்பும் ஆடவரது உள்ளத்தைப் பிளந்து வதைக்கும்.

ஆதாரமிலேன் :—

"............துறந்தோருளத்தை
வளைத்துப்பிடித்துப் பதைக்கப் பதைக்க
வதைக்குங் கண்ணார்க்
இளைத்துத் தவிக்கின்ற என்னை
எந்நாள் வந்திரட்சிப்பையே" —கந்தரலங்காரம் (32)

செவி மெய் கண் வாய் மூக்கு என்ற ஐம்பொறிகளாலும் முறையே, கேட்டும், தீண்டியும், கண்டும், உண்டும் மோந்தும் நுகரப்பெறும் ஐம்புல நுகர்வுகளும் ஆண்களுக்கு ஒருங்கே மங்கையரிடத்து உளவாதலின், இம் மையல் வலைப்பட்டுப் பலர் தவிக்கிறார்கள்.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள; —திருக்குறள்;

கொங்கையிலே சேர்வேன் ;—

முருகன் திருவடி சேர்தல் அருள். அது ஒளி. மாதர் மயல் சேர்தல் இருள். ஒளியும் இருளும் ஒன்றுக்கொன்று நேர்மாறானவை. ஒன்று விட்டால் ஒன்று உண்டாகும். ஆதலால் இருள் நெறியை விட்டு அருள் நெறி சேர்தல் வேண்டும். சேர்வேன் வினையாலணையும் பெயர்.

அருள் சேரவும் எண்ணுமதோ :—

முருகன் திருவருளைச் சேரவேண்டும் என்ற எண்ணம் அதிவேகமாகவும் மிகுந்த தாகத்துடனும் உண்டாகுதல் வேண்டும். "திருவருள் சேர, முருகா! எனக்கு அருள்செய்" என்று அடிகளார் வேண்டுகின்றார். இப் பாடல் மூலம் அநுபூதியடைய விரும்பும் ஒருவருக்குத் தடையாயுள்ளதை யகற்றி உய்யுமாறு உபதேசிக்கின்றார்.

சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும் போர்வேல் ;—

சூரனை வேருடன் களைந்து எறிந்தார். அவனுக்கு உதவி புரிந்த ஏழுமலைகளையும் அழித்து எறிந்தார்.

சூரபன்மன் - ஆணவமலம். குன்றங்கள் - சஞ்சித வினைகள். வேல்-ஞானம். ஞானம் ஒன்றுலேயே ஆண வத்தையும் சஞ்சித வினைகளையும் அழிக்கலாம் என்பது இதன் குறிப்பு.

புரந்தர பூபதியே :—

புரந்தரன் - புரங்களை வென்றவன் - இந்திரன். முருகன் இந்திரனுடைய உலகத்துக்குத் தலைவன். புரந் தரபதி, பூபதி என்றும் பொருள்படும்; விண்ணுலகிற் கும் மண்ணுலகிற்கும் தலைவன் முருகன். ஆயிரத் தெட்டு அண்டங்களை வென்ற சூரனை வென்ற வேலா யுதராகிய நீர் இந்த அற்பமான மாதர் மயலைப் போக்க முடியாதோ? முடியும். ஆதலால் முருகா! தையலார் மையலையகற்றி அநுபூதி ஞானத்தைத் தந்தருள்வீர்.

மாதர்மீது வைத்த அன்பை மடைமாற்றி ஞான வேலன் மீது வைத்துவிட்டால் அநுபூதி கிடைக்கும்.

"தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்டு
அத்தில் அங்கொரு கூறுன்கண் வைத்தவருக்
கமருல களிக்கு நின் பெருமை" —திருவிசைப்பா.

"செம்பவள இதழ் மடவார்திறத் தழுந்தும்
எனதுளத்தைத் திருப்பித் தன்சீர்க்
கொழும்புகழி னினிதழுத்திப் புதுக்கியருள்
தணிகைவரைக் குமரன்" —தணிகைப் புராணம்

இப்பாடல் அருணகிரியார் தன் பொருட்டுப் பாடிய தன்று. அவர் ஆசா நிகளந் துகளாக்கினவர். முரு கனருளால் காமக் கடலைக் கடந்தவர்.

"கடத்தில் குறத்தி பிரானருளால் கலங்காத சித்தத்
திடத்தில் புணையென யான்கடந்தேன் சித்ர மாதரல்குல்
படத்தில் கழுத்தில் பழுத்தசெவ்வாயில் பணையிலுந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும் வெங்காம சமுத்திரமே;
—கந்தரலங்காரம் (29)

கருத்துரை

வேலாயுதரே! தையலார் மையலையகற்றித் திருவருளை நாட அருள்செய்.

25. மெய்யேஎன வெவ்வினை வாழ்வையுகந்
தையோ அடியேன் அலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய்மயி லேறிய சேவகனே;

பதவுரை

கையோ-திருக்கரங்கள் மட்டுமோ?

அயிலோ-கையில் ஏந்தும் வேலாயுதம் மட்டுமோ?

கழலோ-திருவடிகள் மட்டுமோ?

முழுதும் செய்யோய்-திருமேனி முழுதும் செம்மை நிறம் அமைந்தவரே!

மயில் ஏறிய சேவகனே-மயிலின்மீது ஏறிய வீர மூர்த்தியே!

வெவ் வினை வாழ்வை—கொடிய தீவினையால் வந்த வாழ்க்கையை,

மெய்யே என உகந்து-என்றும் நிலைத்ததாகக் கருதி மகிழ்ந்து:

ஐயோ-அந்தோ!

அடியேன் அலைய தகுமோ-அடியேன் உழலுதல் நீதியோ?

பொழிப்புரை

திருக்கரங்கள், கரத்தில் ஏந்திய வேல், வீரக் கழல் அணிந்த பாதம், திருமேனியாகிய அனைத்தும் செம்மையானவரே! பச்சை மயிலில் ஏறிய வீர மூர்த்தியே! கொடிய தீவினையால் வந்த வாழ்வை, என்றும் நிலை பேறுடையதாகக் கருதி மகிழ்ந்து அந்தோ! அடியேன் உழலுவது நீதியோ? நீதியாகாது. அதனை நீக்கியருள் புரிவீராக.

விரிவுரை

மெய்யே என வெவ்வினை வாழ்வையுகந்து ;—

பொய் வாழ்வை மெய் வாழ்வாக உலக மாந்தர் கருதி உழலுகின்றனர்.

பொய் என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள். இல்லாத ஒன்று பொய், இன்றிருந்து நாளை மறையக் கூடியதாகிய நிலையில்லாதனவும் பொய் யெனப்படும்.

உலகில் பெரும் செல்வம், பெரும்பதவி அரச வாழ்வு அனைத்தும் சிலகாலம் இருந்து, பின்னர் அடிச் சுவடு கூடத் தெரியாமல் மறைந்தொழிகின்றன. மநு எங்கே? மாந்தாதா எங்கே? திலீபன் எங்கே?

சேர சோழ பாண்டியர்கள் எங்கே? அவர்கள் வாழ்ந்த அரண்மனைகள் எங்கே? அவர்கள் அணிந் திருந்த அணிகலன்கள் எங்கே? அவர்கள் ஏந்திய செங் கோல் எங்கே? ஒன்றையுங் காணோம்.

"குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"
—நறுந்தொகை

பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் யாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடிவிட்டன. விஜயநகர சாம்ராஜ்யம் கானல் நீராகிவிட்டது. பட்டினத்துப் பாலையில் பாடிய காவிரிப்பூம் பட்டினம் இருந்த இடமே தெரியவில்லை. ஆதலால் எத்துணைப் பெரிய வாழ்வும் மறைந்து ஒழிகின்றது. எனவே இந்த வாழ்வைச் சதம் என்று எண்ணி நிதம் நிதம் மாந்தர் சிவயோக சாதனை செய்து, சிவபோகத்தைப் பெருது, அவநெறி சென்று வீணே அழிகின்றனர்.

ஆதலால் பொய் வாழ்வை மெய் வாழ்வாகக் கருதி மகிழ்கின்ற அவல நிலையைக் குறித்து அடிகளார் கழி

விரக்கங் கொண்டு இந்த அநுபூதிப் பாடலில் கூறி யருளினுர்.

வெவ்வினை வாழ்வை :—

முன்செய்த வினையால் உடம்பு வருகின்றது. மீளவும் உடம்பு வினை செய்கின்றது. செய்த வினை யால் மாறிப் பிறக்கின்றுர்கள். மரம் பல விதைகளை உற்பத்தி செய்கின்றது. ஒவ்வொரு வித்தும் ஒரு மர மாகின்றது. இப்படி அவிச்சின்ன தாரையாக வித்தால் மரமும் மரத்தால் வித்தும் தோன்றுகின்றன.

இதுபோல் வினையால் உடம்பும், உடம்பால் வினை யும் விளைகின்றன. தீவினை புரியாது, நல்வினையைப் பயன் கருதாது, எல்லாம் அவன் செயல் என்று சீவ போதம் இன்றிச் செய்தால் வினை விளையாது; அதனுல் பிறவியறும்.

சிவபெருமான் சிவகோசரியார் கனவில் தோன்றிக் கண்ணப்பர் செயலை "அவனுடைய செயலெல்லாம் நம் முடைய செயல்கள்" என்று கூறியருளினுர்.

ஐயோ :—

எல்லாம் என் செயல் என்று செய்து வினைக்குள்ளா கும் அவல நிலையைக் குறித்து "ஐயோ" என்று இரங்கு கின்றுர்.

அடியேன் அலையத் தகுமோ .—

எடுத்த இப்பிறப்பால், இனிப் பிறவாமையைப் பெற வந்த அடியேன், மீளவும் மீளவும் பிறவிக்கே விதைகளை வித்திட்டு அலைவது தகுமோ? என்கின்றுர்.

ஊருஞ் சதமல்ல; உற்றுர் சதமல்ல; உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல; பெண்டீர் சதமல்ல; பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல; செல்வஞ் சதமல்ல; தேசத்திலே
யாருஞ் சதமல்ல; நின்தாள் சதங்கச்சி யேகம்பனே:

—பட்டினத்தார்:

கையோ அயிலோ கழலோ முழுதுஞ் செய்யோய்;—

முருகவேள் முற்றிலும் செம்மையுடையவர், கையும் செம்மை; கையிலுள்ள வேலும் செம்மை; திருவடியும் செம்மை. அடியவர்க்கு வாரி வாரி வழங்குவதால் அவருடைய கரமும் சிவந்துள்ளது.

"உலாஉதயபானு சதகோடி யுருவானவொ
ளிவாகுமயில்வேலங் கையி லோனே"
—(அவாமரு) திருப்புகழ்.

வேல் நூறுகோடி சூரிய ஒளியுடன் சிவந்து விளங்கும்.

கழல்-வீரக்கழல். தானியாகு பெயராக இது திருவடியைக் குறித்தது.

"................புண்டரீகத்தினுஞ்
செக்கச்சிவந்த கழல்வீடு தந்தருள்"
—கந்தரலங்காரம் (81)

முழுதும் செய்யோய் ;—

எல்லாம் சிவந்தவன்:—

"செய்யன் சிவந்த ஆடையன்" —திருமுருகாற்றுப்படை
உடையும் ஒலியலும் செய்யைமற் றுங்கே
படையும் பவளக் கொடிநிறங் கொள்ளும்
உருவும் உருவத்து ஒத்தி, முகனும்
விரிகதிர் முற்று விரிசுடர் ஒத்தி. —பரிபாடல் (19-97)
சிவப்பின் செக்கர் நிறமாயிருக்கும் பெருமாளே"
—(எத்தனை கலாதி) திருப்புகழ்.
"சிவனெனுநாமந் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்"
—அப்பர்.

இதனைச் செம்பொருள் என்றார் திருவள்ளுவர்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

"திருவருளானந்தி செம்பொருளாமே"

—திருமந்திரம் (2341)

"செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே"

—திருமந்திரம் (2473)

அன்றி திருமேனிச் செம்மையேயன்றி, ஆன்மாக்களைப் பயன் கருதாது ஆட்கொள்ளும் அருட்செம்மையுமாகும். இக்கருணையை வடநூலார் அவ்வியாஜ கருணையென்பர். செம்மையாய செவ்வேட் பரமன் தரும் பதமும் செம்மையானது.

"செம்மையேயாய சிவபதமளித்த செல்வமே
சிவபெருமானே"

—திருவாசகம்.

மயிலேறிய சேவகனே :—

முருகன் மாணிக்கம் போன்ற செம்பொருள். மயில் மரகதம் போன்றது; மரகதத்தின் மீது மாணிக்கம் பதித்தாற்போல் திகழும் காட்சி முருகன் மயில் வாகனக் காட்சி.

"வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய மாணிக்கமே"

—கந்தரலங்காரம்.

மயிலேறிய மாணிக்கமாகிய முருகா! நீ அருட்செம்மை யுடையவன். அடியேன் வெவ்வினை கருமை வாழ்வில் கலங்கலாமோ? ஆதலால் என் கருமை வாழ்வைக் கழித்து உன் செம்மை வாழ்வை ஈந்தருள் என்பது குறிப்பு.

கருத்துரை

முழுதும் செம்பொருளே! வெவ்வினை வாழ்வையகற்றிச் செம்பதம் தந்தருள்.

26: ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான்ஒரு சற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோதமனோ
தீதாசுர லோக சிகாமணியே;

பதவுரை

வேத ஆகம ஞான விநோத-வேதங்களினாலும் ஆகமங்களினாலும் விளைகின்ற ஞானத்துடன் பொழுது போக்குபவரே!

மன அதீதா-மனத்திற்கு எட்டாதவரே!

சுரலோக சிகாமணியே-தேவலோகத்தின் முடிமணியாக விளங்குபவரே!

ஆதாரம் இலேன்-உமது திருவடியையன்றி வேறு எவ்விதப் பற்றுக்கோடும் இல்லாதவனாகிய அடியேன்,

அருளை பெறவே-திருவருளைப் பெற்று உய்யுமாறு.

நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே-தேவரீர் ஒரு சிறிதளவேனும் நினைக்கவில்லையே:

பொழிப்புரை

வேதங்களினாலும் ஆகமங்களினாலும் விளைகின்ற ஞானத்துடன் பொழுது போக்குபவரே! மனத்திற்கு எட்டாதவரே! தேவலோகத்துக்கு முடிமணியாக விளங்குபவரே! உமது திருவடியன்றி வேறு ஒரு பற்றுக் கோடும் இல்லாதவனாகிய அடியேன் திருவருளைப் பெற்று உய்யுமாறு தேவரீர் ஒரு சிறிதும் நினைக்கவில்லையே? (நினைந்து அருள் புரியும்).

விரிவுரை

ஆதாரம்—பற்றுக்கோடு, புகலிடம். ஆன்மாக்களுக்குப் புகலிடம் இறைவனுடைய திருவடியன்றிப் பிறிதில்லை. ஒருவனுக்கு மரணபயம் வரும்போது யார் அவனுக்குத் துணை செய்ய வல்லார்? எத்தனை அமைச்சர்கள், எத்தனை கோடீச்சுரர்கள், உறவாகவும் நண்பர்

களாகவும் இருப்பினும், இறுதியான அந்நாளில் உறுதியளிப்பார் யாவர்? உயிர் சேதாரம் ஆகும் அன்று இறைவனுடைய பாதாரவிந்தம் அன்றி ஆதாரம் எது?

"யாவரே யிருந்தும் யாவரே வாழ்ந்தும்
யாவரே எனக்குற வாயும்
தேவரீ ரல்லால் திருவுளம் அறியத்
திசைமுகம் எனக்கு வேறுளதோ"

—பட்டினத்தார்

ஆதாரமிலேன் - குறிப்பு வினையாலணையும் பெயர். அருணகிரிநாதர் பரமஞானி. உடற்பற்று, உயிர்ப்பற்று பொருட்பற்று அனைத்தும் விட்டவர்; திருவடிப் பற்று ஒன்றே உடையவர். ஆதலால், இந்த வுலகில் ஆதாரமானவை ஒன்றும் இல்லை. முருகன் திருவடி ஒன்றே புகலிடம் என்று தெளிந்து, தெளியாதவர் தெளியுமாறு உபதேசித்தருளினர்.

அருளைப் பெறவே :—

அருள் என்பது, இங்கே முருகனுடைய திருவடியருளால் பெறப்படும் அநுபூதியைக் குறிக்கின்றது.

நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே :—

முருகன் அகில உலகமும் உய்யும்பொருட்டு ஆறுமுக உருவாய் விளங்குபவன், கருணையே வடிவானவன் கருணைபொழி கமலமுகம் உள்ளவன்.

சிவபெருமானுடைய பழைய வடிவு ஆறுமுக வடிவு; அது அளவற்ற அருள்மயமானது.

"அருட்பெருமானே! நீ ஒரு சிறிதும் அடியேன் உய்ய வேண்டும் என்று கருதவில்லையே?" என்று அடிகளார் வேண்டுகின்றார். இறைவன் ஆன்மாவை நினைத்தால்தான் ஆன்மா இறைவனை நினைக்க முடியும். ஆன்மாக்களாகிய நாம் இறைவனை நினைத்த பிறகு இறைவன் நம்மை நினைக்கின்றான்! அவன் நினைத்த

பின் அருள் விளக்கமுற்று உயிர் இறைவனை நினைக்கத் தலைப்படுகின்றது.

உதாரணம்: பிறந்த குழந்தை இவள் தாய் என்று நினைக்கும்படியான அறிவு பெறுவதில்லை. இது என் குழந்தையென்று அன்னை நினைந்து அரவணைக்கின்றாள். பிறகு சேய் சிறிது அறிவு விளக்கம் பெற்று இவள் என் தாய் என்று நினைத்துத் தாயிடம் ஓடுகின்றது.

இதுபோல் உலகங்கட்கு அம்மையும் அப்பனுமாயிருக்கின்ற இறைவன் உயிர்களை நினைத்து அருள்புரிகின்றான். பின்னர் உயிர்கள் இறைவனை நினைத்துச் சார்ந்து உய்வு பெறுகின்றன.

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்.—நம்பியாண்டார் நம்பி.

ஒரு என்ற சொல் சிறுமையை உணர்த்த வந்தது. "ஒரு சிறிதும் நினைக்கவில்லையே" என்கின்றார்.

வேதாகம ஞானவினோத :—

வேதம்: வித்-என்பது ஞானம்; ஆதலால் வேதம் என்ற சொல்லுக்கு அறிவு நூல் என்பது பொருள்.

சர்வ ஜகலட்சணம், ஜீவபந்த லக்ஷணம் அவற்றின் உற்பத்தி இலயம், மோட்ச லட்சணம், பரலட்சணம், யோக முறை, ஞானமுறை, முதலியனவெல்லாம் அறிவிக்கும் ஆற்றலுடையது வேதம். அது ஆதி நூல், ஆரணம், எழுதாக் கிளவி, அத்தியாயம், அந்தணர் வாக்கு, ஓத்து, சாகை, சுருதி, நிகமம், மறை, முதல் நூல் எனப் பல பெயர் கொண்டு விளங்கும்.

ஆதி நூல் :—

எல்லா நூல்கட்கும் ஆதியாயிருத்தலின் ஆதி நூல்.

ஆரணம் :—

அருண மண்டலத்துள் விளங்கும் சிவ சூரிய சம்பந்த துதிகளும், ஆரண்ய முனிவர் செய்த துதிகளும் அடங்கியது.

எழுதாக் கிளவி :—

எழுத அமையாப் பொருளோடு எழுதாமல் பரம்பரையாக ஒருவர்க்கொருவர் சொல்லி வந்தது.

அத்தியாயம்—விளக்கும் பொருளை விளக்கியுரைக்கும் கூறுபாடு உடையது.

அந்தணர் வாக்கு—அருளாளருடைய வாக்கிலிருந்து வெளிப்படுவது.

ஓத்து—ஓதப்படுவது.

சாகை—பல பிரிவுகளையுடையது.

சுருதி—கேள்விக்கு உரிமைப்பட்டிருப்பது.

நிகமம்—நிலைபேருயிருபபது.

மறை—எல்லாப் பொருள்களையும் தனக்குள் மறைத்து வைத்திருப்பது.

முதல் நூல்—ஆன்மாக்களுக்கு முன்னர் இகபர சுகங்களைக் கொடுத்துப் பின்னர் பிறப்பு இறப்புத் துயர்களைப் போக்கவல்ல சாத்திரங்கள் எல்லாவற்றுக்கும் முதன்மையானது.

சிவபெருமானுடைய திருவருளால், நாதப் பிரமமாகிய குடிலையிலிருந்து, அகர உகர மகரங்களாகிய மூன்று கூடிய பிரணவம் விந்து நாதங்களோடு தோன்ற, அவற்றின்கணிருந்து அற்புதமும் வேத மந்த்ர ரூபமும் பலமும் பெருகற்கு ஏதுவான, மூன்று பேத பாதத்தால், காயத்ரி பிறந்து, அது சமஷ்டியென வியஷ்டியென இரண்டாயிற்று.

சிவபிரானுடைய கீழ், தெற்கு, மேற்கு, வடக்கு என்ற நான்கு திசைகளை நோக்கிய நான்கு திருமுகங்களும் இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களை நல்கின.

இருக்குவேதம் 21 சாகைகளையுடையது.

யஜுர்வேதம் 101 சாகைகளையுடையது.

சாமவேதம்—ஆயிரம் சாகைகளையுடையது.

அதர்வண வேதம்-ஒன்பது சாகைகளையுடையது.

வேதம்-கருமகாண்டம், ஞானகாண்டம் என்று இரு பிரிவுகளையுடையது. அக்கினியிலிருந்து இருக்கையும், வாயுவிலிருந்து யஜுரையும், சூரியனிலிருந்து சாமத்தையும் பிரமதேவர் வெளிப்படுத்தினர் .

அகாரம்-அக்கினி, உகாரம்-வாயு, மகாரம்-சூரியன் என்பதை ஐதரேய பிராஹ்மணத்தில் காண்க.

ருக்-மந்திரம். மந்-நினைப்பவரை, திர-காப்பது யஜுர்-கட்டளை, சாமம்-துதி. விரிக்கிற் பெருகுமென ஒரு சிலவே இங்கு சிந்தனைக்குக் கொணர்ந்தேன்.

இனி வேதாங்கங்கள் ஆறு. சிட்சை, கற்பம், வியாகரணம்; நிருத்தம், சந்தோபிசிதம், ஜோதிடம் என்பவை.

1. சிட்சை-வேதமொழியை உதாத்த அநுதாத்தமாதி சுர வேறுபாட்டான் உச்சரிக்கும் ஒழுங்கையறிவிப்பது.

2. கற்பம்-வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களை அநுஷ்டிக்கும் ஒழுங்கை யறிவிப்பது.

3. வியாகரணம்-வேதத்தின் அட்சரம், சொல், பொருள் முதலிய இலக்கணங்களை யறிவிப்பது.

4. நிருத்தம்-வேதத்தின் வாக்கியப் பொருளை அறிவிப்பது.

5. சந்தோபிசிதம்-வேத மந்திரங்களில் காயத்திரியாதி சந்தங்களின் பெயர்களையும், அவற்றுக்கு அட்சரம் இம்மட்டு என்பதையும் அறிவிப்பது.

6. ஜோதிடம்-வேதத்தில் விதித்துள்ள கருமங்களைப் புரிதற்குள்ள காலங்களை அறிவிப்பது.

இவையன்றி உபாங்கங்கள் நான்குண்டு. அவை புராணம், நியாயம், மீமாஞ்சை, ஸ்மிருதி, எனப்படும். உபவேதங்கள் நான்கு, ஆயுர்வேதம், தநுர்வேதம். காந்தர்வ வேதம், அர்த்த வேதம் என்பன.

ஆயுர்வேதம்-உடம்பை நோயின்றிக் காத்தற்கு உரியவற்றை உணர்த்துவது.

தநுர்வேதம்-நாடு காத்தற் பொருட்டு படைக்கலங்களைப்பற்றிக் கூறுவது.

காந்தர்வ வேதம்-இசைநூல்.

அர்த்த வேதம்-பொருள் தேடும் வழிவகைகளைக் கூறுவது.

ஆகமம் :—

ஆகமம் என்னும் சொல்லுக்கு "வந்தது" என்பது பொருள். எங்கிருந்து வந்தது? பரம ஆப்தருடைய திருநாவிலிருந்து வந்தது; ஆப்த வாக்கியம் ஆகமம். ஆப்தர்-உள்ளது உரைப்போர், அந்த ஆப்தர் எல்லாவுலகங்களுக்குந் தலைவரான பரசிவமே யாவர்.

ஆ-பாசம்; க-பசு; ம-பதி. பதி பசு பாசங்களைச் சால விளக்குவது ஆகமம்.

ஆ-ஞானம்; க-மோட்சம், ம-மலநாசம்; என்றும் பொருள்படும்.

ஆகமத்துக்குத் தந்திரம், சித்தாந்தம், முதலிய பல பெயர்கள் உண்டு. ஆகமங்கள் எண்ணில்லாதவை.

"ஆசில் நான்மறைப்படியும் எண்ணில் கோடி
ஆகமத்தின்படியும் எழுத்தைந்துங் கூறிப் பூசினன்"
—வில்லி பாரதம்.

ஆகமங்களுள் சிறந்தவை 28. காமிகம், யோகசம் சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்

திரம், அஞ்சுமான், சுப்ரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்பன.

சிவபெருமான், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவகை யான்மாக்களுள் உயர்வுடைய விஞ்ஞானகலரில், பிரணவர் முதலிய பதின்மருக்கும் உபதேசித்தருளினர்.

பின்னர் விஞ்ஞானகலரில் அஷ்டவித்யேசுரர்களில் சிறந்தவரான அநந்த தேவருக்கு உபதேசித்தருளினர்.

அநந்ததேவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களில் சிறந்தவரான ஸ்ரீகண்ட பரமசிவனர்க்கு உபதேசித்தருளினர். ஸ்ரீகண்டர் சிவகணங்களுக்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் உபதேசித்தருளினர்.

மிருகேந்திரம் ஆகிய நாரசிங்கம் முதல் விசுவான்மகம் முடிவாகவுள்ள இருநூற்றேழும் உபாகமங்கள். இவைகள் வழி நூல்கள்.

உக்கிரச் சோதி, சத்தியச் சோதி, பிரகற்பதி முதலியோர் கூறிய, போக காரிகை, மோட்ச காரிகை, பரமோட்ச நிராச காரிகை, நாத காரிகை, தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், இரத்தினத்ரயம் என்னும் எட்டும் அஷ்டப் பிரகரணம் எனப்படும். இவைகள் சார்பு நூல்கள்.

இத்தகைய வேதாகமங்களைப் பயிலுவதனல் சிவ ஞானம் உதிக்கும். அந்த சிவஞானத்துடன் பொழுது போக்குபவர் முருகன். விநோதன்—பொழுது போக்கு பவன்.

"நீயான ஞானவினோதந்தனை யென்று நீயருள்வாய்"
—கந்தரலங்காரம் (46)

மனோதீதா :—

மனுதீதன் என்ற சொல், மனோதீதன் என வந்தது. மனம் என்பது பசு ஞானத்தைக் குறிக்கும். சிவஞான போதம் ஆறும் சூத்திரம் 2ஆம் அதிகரணத்தில் சிவ ஞான சுவாமிகள் உரையைப் பார்க்க.

சுரலோக சிகாமணியே ;—

தேவலோகத்தைச் சூரனிடம் இருந்து மீட்டு இந்திர னுக்கு அருளினார்.

கருத்துரை

சுரலோக சிகாமணியே! அடியேன் ஆதாரமில்லாத வன்; அருள்பெற நினைந்தருள்.

27. மின்னேநிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே.

பதவுரை

பொன்னே-பொன்போல அருமை வாய்ந்தவரே!
மணியே-மணிபோல ஒளி வீசுபவரே!
பொருளே-பேரின்பப் பொருளே!
அருளே-பேரருளுடையவரே!
மன்னே-நிலைபெற்ற தலைவரே!
மயில் ஏறிய வானவனே-மயிலை வாகனமாகக் கொண்ட மேலானவரே!
மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்—மின்னலைப் போல் தோன்றி உடனே மறையும் நிலையில்லாத உலக வாழ்வை நிலைத்ததென எண்ணி விரும்பி யுள்ள அடியேன்,
என்னே-என்ன என்று சொல்வேன்?

இங்கு-இந்தவுலகில்,
விதியின் பயன் இதுவோ-என் தலைவிதியின் பயன் இது தானோ?

பொழிப்புரை

பொன்போன்ற அருமை வாய்ந்தவரே! மணிபோல் ஒளி வீசுபவரே! உண்மைப் பொருளே! பேரருளுடையவரே! நிலைபெற்ற தலைவரே! மயிலை வாகனமாகவுடைய மேலானவரே! மின்னலைப்போல் தோன்றி உடனே மறையும் இந்த நிலையில்லாத உலக வாழ்வை நிலையாக எண்ணி விரும்பியிருக்கின்றேன்? இதற்குக் காரணம் என்ன? முன் செய்த தீவினை காரணமாக என் விதிப் பயன்தானோ? அறிகிலேன்.

விரிவுரை

மின்னே நிகர் வாழ்வை :—

இந்த உலக வாழ்வும் செல்வமும் மின்னல் தோன்றி உடனே மறைவது போல் மறையற்பாலன. நிலையில்லாத இல்வாழ்வை விரும்புவது அறியாமை.

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. —திருக்குறள்.

"மின்னு மொக்குளும் எனநனி வீயினும் வீயும்"
—சிந்தாமணி (2754)

"இன்பம்.........மின்னின் ஒத்திருக்கும்"
—சிந்தாமணி (2537)

"நீர்க்குமிழிக்கு நிகரென்பர்யாக்கை நில்லாது செல்வம்
பார்க்குமிடத்தந்த மின்போலும்"
—கந்தரலங்காரம் (66)

என்னே விதியின் பயனிங்கிதுவோ :—

அழியும் உலக வாழ்வை விரும்புவது என்ன செயல்? அது அநுபூதிக்குத் தடையாயிற்றே?

அப்படி விரும்புவதற்குக் காரணம், முன் செய்த வினையின் காரணமாக விதித்த விதியின் பயன்தானோ?

ஊழ்வினை வலிமையானது என்பதைக் கீழே வரும் பாடல்களால் அறிக.

முதிர்தரு தவமுடை முனிவராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் மன்ன ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்:

—கந்தபுராணம்.

வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்
தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினன்
சூழ்வினை நான்முகத் தொருவர்ச் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ.

—இராமாயணம்.

பொன்னே மணியே :—

பொன் உலகப் பொருள்களில் அருமையானது. ஆதலால் இறைவன் அருமையானவன் என்பதைக் குறிக்க "பொன்னே" என்றார். "அரும் பொன்னே மணியே என் அன்பே" என்கின்றார் தாயுமானார். "மாற்றறியாத செழும் பசும் பொன்னே" என்கின்றார் வள்ளல் பெருமானார்.

மணி இயல்பாக ஒளி வீசுவது. இறைவன் ஞான ஒளி வீசுபவன். 'பொன்போன்றவனே, மணி போன்றவனே' என்றார். இந்த இரண்டும் உவமையாகு பெயர்கள்.

பொருளே அருளே :—

உலகப் பொருள்கள் அழியுந் தன்மையன என்று முன்னே கூறினர். ஆதலின், இறைவன் என்றும் அழியாத உண்மைப் பொருள் என்றார். அன்றியும் பேரருள் வடிவாகத் திகழ்பவன்.

மன்னே :—

மன்—நிலைபேறு, இறைவன் நிலையானவன். நிலையான இன்பத்தை யருளுபவன்.

"மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே"
—சுந்தரர்

மயிலேறிய வானவனே :—

சூரபன்மனுகிய ஆணவ மலத்தின் வலியையடக்கி அவனை மயிலாகக் கொண்டவன் முருகன். ஆதலால் என் விதி வலியை யடக்கி என்னை யாண்டருள் என்பது குறிப்பு. வானவன்—மேலானவன்.

கருத்துரை

மயிலேறிய வானவனே! நிலையில்லாத வாழ்வை விரும்பும் அறியாமையை அகற்றி, அநுபூதி ஞானத்தை யருள் செய்.

28. ஆனு அமுதே! அயில்வேல் அரசே
ஞானு கரனே! நவிலத்தகுமோ!
யானுகிய என்னைவிழுங்கி வெறுந்
தானுய் நிலை நின்றது தற்பரமே:

பதவுரை

ஆனு அமுதே-கெடுதலில்லாத அமுதம் போன்ற இனியவரே!

அயில் வேல் அரசே-கூரிய வேலை யேந்திய அரசே!

ஞான ஆகரனே-ஞானத்துக்கு இருப்பிடமானவரே!

யான் ஆகிய என்னை விழுங்கி-யான் என்னும் ஆணவ முனைப்பில் அழுந்தியிருக்கும் உயிராகிய என்னை, எனது சீவபோதத்தைப் போக்கி, சிவபோதத்துள் அடக்கிக்கொண்டு,

வெறும் தானுய்-வேறு ஒன்றும் இல்லாது எல்லாம் தானேயாய்,

நிலைநின்றது-நிலைத்திருப்பதான,

தற்பரமே-மேலான நிலையை (அநுபவித்து அநுபவத்தில் காண்பதேயன்றி பிறருக்கு இத்தன்மைய தென்று)

நவில தகுமோ - சொல்லத் தக்கதோ? (சொல்ல முடியாது)

பொழிப்புரை

கெடுதல இல்லாத அமுதம் போனற இனியவரே! கூரிய வேலேந்திய அரசே! ஞானத்துக்கு இருப்பிடம் ஆனவரே! .யான் என்னும் ஆணவ முனைப்பில் அழுந்தி யிருக்கும் உயிராகிய எனது சீவ போதத்தைப் போக்கி, சிவபோதத்தில் அடக்கிக்கொண்டு, வேறு ஒன்றும் இன்றி எல்லாம் தானேயாய் நிலை நின்றது. அந்த அநுபவத்தை இத் தன்மைத்து என்று சொல்ல முடியாது.

விரிவுரை

ஆறு அமுதே :—

ஆறு—கெடுதல் இல்லாத, அமுதம்—மரணத்தைத் தவிர்ப்பது.

அமுதத்தை அமரர்களும், அசுரர்களும் சேர்ந்து கடைந்து பெற்றார்கள். அமுதம் அசுரர்கட்குக் கிடைக் காமல் அமரர்கட்கு மட்டும் கிடைத்தது.

இறைவன் நல்லோர்க்கும் பொல்லார்க்கும் அருள் புரிகின்றவன். ஆதலில், கெடுதல் இல்லாத அமுதம் என்றார்.

ஆறு—கெடுதல் இல்லாத. இந்தப் பொருளில் "ஆறாத ஞான புத்தியைக் கொடுத்ததும்" என்று திருப் புகழிலும் வருமாறு காண்க. ஆறு அமுதம், இது சத்து.

அயில்வேலரசே :—

கூரிய வேலரசன். இது சித்து.

ஞானாகரன் :—

ஞானம் இன்பத்தைத் தருவது. அஞ்ஞானம் துன் பத்தைத் தருவது. இது ஆனந்தம்.

"அறிவையறிபவ ரறியும் இன்பந்தனை"

—(அகரமுதல்) திருப்புகழ்.

அமுதே! வேலரசே! ஞானகரனே! இந்த மூன்று சொற்களால் முருகனுடைய சத்து, சித்து, ஆனந்தம் என்ற தன்மைகளைக் குறிப்பிட்டார்.

யானாகிய என்னை விழுங்கி :—

யான் என்பது ஆணவமலத்தின் தன்மை.

என்னை விழுங்கி என்பது, ஜீவபோதத்தை விழுங்கி, சிவபோதத்துள் அடங்கும் நிலையைத் தெரிவிக்கின்றது.

அட்டாங்க யோகமும் ஆதார மாறும் அவத்தை ஐந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே வியப்பொன்று
கண்டேன்
மட்டாகிச் செம்மதிப் பாலூறலுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி யிருக்கின்றதே.

இதனையே முன் "எல்லாமற என்னை இழந்த நலம்" என்று கூறியருளினார்.

வெறுந்தானாய் நிலை நின்றது தற்பரமே :—

யான் போன இடத்தில் எல்லாம் தானாய் காட்சி யளிக்கும்.

அது தற்பரமே. அது என்ற சொல் தத்வமஸி என்ற சாமவேத வாக்கியத்தில் வரும் தத் என்ற பதமாகும். தத்-அது; த்வம்-நீ; அஸி-ஆகின்றாய். அது நீ ஆகின்றாய் இது ஆசாரியன் சீடனுக்கு உபதேசிப்பது. ஆகின்றாய் என்பதனால் சீவன் வேறு சிவன் வேறு. அநுபவத்தில் ஒன்று படுகின்றது. இது சிவாத்வைதம்.

நவிலத்தகுமோ :—

இவ்வாறு சீவன் சிவத்துடன் அத்துவிதமாகி நின்றபோது விளையும் பேரின்பத்தைப் பேசமுடியாது.

வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்
பாரிற் கண்ட யாவும் பருகினை
ஓரிற் கண்ட ஊமன் கனவென
ஆருக்குஞ் சொல வாயில்லை ஐயனே. —தாயுமானார்,

ஊமன் அதிசயமான கனுக் கண்டால் எப்படிக் கூறுவான்?

பற்றிய பற்றற உள்ளே - தன்னைப்
பற்றச் சொன்னான் பற்றிப் பார்த்த இடத்தே
பெற்றதை ஏதென்று சொல்வேன் - சற்றும்
பேசாதகாரியம் பேசினான் தோழி,
உள்ளதும் இல்லது மாய்முன் - உற்ற
உணர்வது வாய்உன் உளங்கண்ட தெல்லாம்
தள்ளெனச் சொல்லி என் ஐயன் - என்னைத்
தானாக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி,

—தாயுமானார்.

கருத்துரை

வேல் முருகா! என்னை யிழந்து அது அதுவாய் நின்ற சுகாநந்தத்தை எவ்வாறு கூறுவேன்? அது சொல்லுக்கடங்காது.

29: இல்லே எனு மாயையில் இட்டனை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவில்என்
சொல்லே புனையுஞ் சுடர்வேலவனே.

பதவுரை

மல்லே புரி-மற்போர் புரிவதற்கு ஏற்றதான,
பன் இரு வாகுவில்-பன்னிரண்டு திருத்தோள்களிலும்,
என் சொல்லே புனையும்-அடியேனுடைய பாமாலைகளையே தரித்துக்கொள்ளும்,
சுடர் வேலவனே-ஒளி வீசும் வேலாயுதக் கடவுளே!
இல்லே எனும் மாயையில்-இல்வாழ்க்கை யென்னும் மாய வாழ்வில்,
நீ இட்டனை-அடியேனை அகப்படச் செய்துவிட்டீர்,
பொல்லேன்-தீயேனாகிய என்னுடைய,
அறியாமை பொறுத்திலையே-அறிவீனத்தால் செய்த பிழைகளைப் பொறுத்தீரில்லையே.

பொழிப்புரை

மற்போர் புரிதற்கு ஏற்ற பன்னிரு திருத்தோள்களிலும் அடியேனுடைய பாமாலைகளையே அணிந்து கொண்ட ஒளி வீசும் வேலாயுதக் கடவுளே! இல்வாழ்க்கையென்ற மாய வாழ்வில் அடியேனை நீர் சிக்கவைத்தீர். தீயேனுடைய அறிவின்மையாலான குற்றங்களைப் பொறுத்துக்கொண்டீரில்லை. (ஆதலால் பொறுத்து அருள்புரிவீர்).

இல்லே யெனுமாயையில் இட்டனை நீ :—

கேவல நிலையில் ஆணவ இருட்டறையில் அழுந்திக் கிடந்த ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு மாயையின் காரியங்களாகிய தனுகரணபுவனங்களோடு கூடி உயிர்கள் வாழும் சகல நிலையாகிய உலக வாழ்க்கையில் இறைவன் இட்டான். இது உயிர்களின் மலத்தைத் தேய்த்து, சுத்த அருள் நிலையாகிய சுத்தநிலையில் சேர்த்து, தனது திருவடியநுபூதியடையும்படி செய்கின்றான்.

செம்புறு களிம்பென அநாதிமலம் மூழ்கியிருள்
 சேரும் அலர் விழி என்னவே
தெளிவற்ற கேவலத் தசைவற் றிருந்துமல
 சேட்டையாற் குழவி குருடர்
தம்பிணியி னல்உற்ற பால்கோலே நோக்க அவை
 தமை அளிப் பார் என்ன நான்
சார்கன்ம மாயையை விரும்பநீ தந்திடச்
 சகலனுய்ச் சுழல் கறங்கு
பம்பரம தென்ன நீள் பிறவிச் சுழிக்குளே
 பட்டுழல் பெரும் பாவியேன்
பாழான மலமற்று வினையற்று மாயையின்
 பற்றுவிட் டுனையறிந்துன்
அம்பொனடி நீழல் சேர்ந் தானந்தம் உண்டு நான்
 அதுவாய் இருப்ப தென்றோ?
அருள் ஞான வாரியே! ராசைமே வியசெல்வ
 அகிலாண்டம் என்னும் அரசே.

ஆதலால் இறைவன் இல்லையெனும் மாயையில் இட்டது அநீதியன்று. நீதியேயாகும்.

புகலறிய நின்விளையாட் டென்னே எந்தாய்!
புன்மையறிவுடைய என்னைப் பொருளாப் பண்ணி
இகல் விளைக்கும் மலமாயை கன்மத் தூடே
இடருறவுஞ் செய்தனையே இரக்கம் ஏதோ;
—தாயுமானார்:

பாசத்தி லிட்டதருள் அந்தப் பாசத்தின்
நேசத்தை விட்டதருள் அந்த நேசத்தில்
கூசற்ற முக்தியருள் அந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்று நிலையரு ளாமே:
—திருமந்திரம் (1802)

எனவே எம்பெருமான் ஆன்மாக்களை சகல நிலையாகிய உலக வாழ்வில் இட்டது, இச்சையறிவு செயல்கள் விளங்கும் பொருட்டே யெனவுணர்க.

ஆணவ மலம் நீங்க, மாயை கன்மம் என்ற இரு மலங்களை ஆகந்துகமாக இடையில் கூட்டியது, துணியில் உள்ள அழுக்கு நீங்க, உவர் மண்ணும் சாணமும் இசர்ப்பதுபோல், என அறிக.

உவர் மண்ணும் சாணமும் துணியின் அழுக்கை நீக்குதல்போல், மாயை, கன்மம் என்ற இரு மலங்களின் சேர்க்கை மூலமலமாகிய ஆணவ மல வலியைக் குறைப்பதற்காகவேயாகும்.

பொல்லேன் அறியாமை பொறுத்திலையே :...

பொல்லேன்-பொல்லாங்கு என்ற பண்புப் பெயரடியாய்ப் பிறந்தது. "பெருமானே! என்னை இம் மாய வாழ்வில் இட்டது நீதானே, ஆதலால் என் அறியாமையால் நிகழும் பிழைகளைப் பொறுத்து ஆள்வதும் நின் கடமையாகும் என்று முறையிடுகின்றார்.

மல்லேபுரி பன்னிருவாகு :—

வாகு-தோள். முருகவேளின் பன்னிரண்டு திருத் தோள்கள் கிரியா சக்தியைக் குறிக்கின்றன. எம்பிரா னுடைய தோள்களைப் புகழ்வதால் தீவினைகள் தீரும்.

"...............முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிருதோளும்"
—கந்தரலங்காரம் (70)

அதனால் கச்சியப்ப சிவாசாரியர், "ஆறிரு தடந் தோள் வாழ்க" என்றார்.

"மற்பொரு திரள்புய மதயானை"
—(கைத்தல) திருப்புகழ்
"ஆனையுரிவை மற்புரி புயத்தினிது மேவுவார்"
—சம்பந்தர்

என் சொல்லே புனையும் சுடர் வேலவனே :—

முருகன் தன்னுடைய பன்னிரு தோள்களிலும் அருணகிரிநாதருடைய திருப்புகழாகிய பாமாலைகளையே அணிந்து அருள்புரிகின்றார்.

"அடிமை தொடுத்திடு புன்சொல் ஒன்றும்
நிந்தியாமல் புனைந்தன" —புய வகுப்பு.
"கவிமாலை சூடுவதும்" —சீர்பாத வகுப்பு.
"அடிமை சொலும் சொல் தமிழ்ப்பனீரொடு
பரிமளமிஞ்சக் கடப்பமாலையும் அணிவோனே"
—(மலரணி) திருப்புகழ்

கருத்துரை

வேலவனே! இவ்வுலக வாழ்வாகிய சகல நிலையில் இட்ட நீ என் பிழைகளைப் பொறுத்தருள்செய்.

30. செவ்வா னுருவில் திகழ்வே லவன்அன்
றொவ்வாத தென உணர்வித்தது தான்
அவ்வா றறிவார் அறிகின்ற தலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப்பதுவே.

பதவுரை

செவ்வான் உருவில் திகழ்-செம்மையான வானவுருவத்துடன் விளங்கும்,
வேலவன்-வேற்பெருமான்,
அன்று-அந்நாளில்,
ஒவ்வாதது என-இந்த உபதேசத்துக்கு நிகரானது வேறொன்றுமில்லை என்று சொல்லும்படி.
உணர்வித்ததுதான்–உபதேசத்தால் உணர்த்திய சுவாநுபூதியை,
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்-அங்ஙனம் உபதேசமுறையில் தமக்குள் உள்ளுணர்வால் உணர்வதல்லாமல்,
ஒருவர்க்கு எவ்வாறு இசைவிப்பது-அதனை மற்றொருவருக்கு வார்த்தைகளால் எப்படிச் சொல்ல முடியும்? (முடியாது)

பொழிப்புரை

செம்மையான ஞான வானாகிய திருவுருவுடன் விளங்குகின்றவேலாயுதக் கடவுள், அந்நாளில் குருவடிவாய் வந்து, எனக்கு உபதேசித்து உணர்த்திய சமானமில்லாத சுவானுபூதியை அந்த முறையில் உணரவேண்டுமேயன்றி அதனை இத்தன்மைத்து என்று வெறும் வார்த்தைகளால் எப்படிச் சொல்ல முடியும்? (முடியாது).

விரிவுரை

செவ்வானுருவில் திகழ்வேலவன் :—

மேற்கடற்கரையில் நின்றால், கதிரவன் கடலில் முழுகுகின்ற பொழுது, வானம் ஒரே செக்கச் செவேல் என்று இருக்கும். கண் கொள்ளாத காட்சியாக விளங்கும். அங்கே பிறைமதி தோன்றும். முருகன் திருவுருவம் அந்தச் செவ்வானம்போல் திகழ்கின்றதாம். அந்தப் பிறைமதி போல் வேல் காட்சி தருகின்றது.

இறைவனுக்கு உவமை கூற முடியாது. அவன் உவமனிலி. அவனுக்கு ஒப்பான ஒரு பொருள் ஏது? இல்லை. அப்பரம் பொருளை நேரில் தரிசித்த அடிகளார், தெரிசிக்காத நமக்கு அறிவிக்க எண்ணுகின்றார். தெரிந்ததைக் கொண்டு தெரிவிக்கின்றார். நாம் கண்ணால் பார்க்கின்ற செவ்வானைச் சுட்டிக் காட்டுகின்றார்.

சிவபெருமான் பகல்போல் திருநீறுபூசிய திருமேனியுடன் வெளேல் என்று திகழ்கின்றார். உமாதேவியார் பசுமையாகிய மரகத நிறத்துடன் திகழ்கின்றார். இருவருக்கும் இடையே சிவந்த மலைபோல் வேலவன் விளங்குகின்றார்.

ஏலவார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞாலமேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்
மாலையானதொன் றழிவின்றி வைகுமாறொக்கும்;

—கந்தபுராணம்.

முருகவேள் செம்மை நிறம் உடையவர். வெறும் செந் நிறம். இது வெளிப்பொருள். உட்பொருள் ஒன்று உண்டு.

செவ்வான் என்பது புறக்கண்ணால் பார்க்கின்ற இந்தப் பூத வான் அன்று. அகக் கண்ணால் பார்க்கின்ற ஞான வானாகும். ஞான வான் என்பது, 36 தத்துவங்கட்கும் அப்பாற்பட்டு இரவு பகலின்றிப் பேரொளியாய் விளங்கும் தூவெளியாகும். இதைப் பரவெளி, வெட்டவெளி, ஞானாகாசம், சிற்பர வியோமம், திருச்சிற்றம்பலம், சிதம்பரம் முதலிய சொற்களால் தமிழ் மறைகள் கூறுகின்றன.

எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை
அவ்வா றருட்செய்வன் ஆதியரன் தானும்
ஒவ்வாத மன்றுள் உமை காண ஆடிடும்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம்.

—திருமந்திரம் (130)

அரிய பெரிய தவம் புரிந்த அருணகிரிநாதருக்கு முருகன் அருட்குருவாகித் தோன்றியபொழுது, செக்கச் செவேலென்று தூவொளி ஒளிராகிய திருமேனியுடன் காட்சி தந்து பரஞானத்தை வழங்கி, உபதேசத்தால் உணர்த்தி அவருடன் அத்துவிதமாகக் கலந்து சுவாநுபூதியை வழங்கியருளினர்.

ஞானமே வடிவாகியவன் முருகன். ஆதலால் அப் பெருமான் திருக்கரத்தில் உள்ள வேலைக் குறிக்கின்றார் "திகழ் வேலவன்" என்று.

மணிவாசகப் பெருமானுக்குத் திருப்பெருந் துறையில் இறைவன் குருவடிவாக எழுந்தருளியபோது, அவர் கண்ட காட்சியையும் இப்படியே கூறுகின்றார்.

"மின்னிய தூவொளி மேதக்க செவ்வொளி"

—திருமந்திரம் (2686)

"..................உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே." —திருச்சதகம் (26)

"செந்தழல்புரை திருமேனியுங் காட்டி"

—திருவெம்பாவை.

அன்று ஒவ்வாததென உணர்வித்ததுதான் :—

அன்று-தனக்கும் முருகனுக்கும் மட்டும் தெரிந்த நாள் அது.

முருகன் அருணகிரியாருக்கு உபதேசத்தால் உணர்த்தியருளினர். அது உரையற்ற வான் பொருள். வாக்கும் மனமும் இறந்த இடத்தில் நிகழ்வது. நூலறிவும் அற்ற அமைதியில் காண்பது.

"உரையவிழ உணர்வவிழ உளமவிழ உயிரவிழ
உளபடியை உணருமவர் அநுபூதி யானதுவும்"

—சீர்பாத வகுப்பு.

முருகன் குருவாய் வந்து உணர்த்தியருளிய அநுபவத்தைக் கந்தரலங்காரம் 61-வது பாடலிலும் கூறுகின்றார்.

வரையற் றவுணர் கிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்தவா! பஞ்ச பூதமுமற்று
உரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாய மற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்
கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொருபத் திருத்தினன் சொல்லிறந் தோமே.

—திருமந்திரம் (1593)

இனிய மாம்பழத்தை யொருவன் உண்டான். உண்ணாதவன், "பழம் எப்படியிருக்கின்றது" என்று கேட்டான். "இனிப்பாக இருக்கிறது" என்றான். "இனிப்பு எப்படியுள்ளது?" என்றான்; அதை எப்படிச் சொல்ல முடியும்? உண்டால்தானே தெரியும். கேவலம் நாவினால் வரும் சுவையுணர்வையே வரையறுத்துக் கூறமுடியாதே? பொறி புலன்கள் யாவும் கடந்த அநுபவத்தில் விளைகின்ற அநுபூதியின்பத்தை எப்படி உரைக்க முடியும்?

அவ்வாறறிவார் அறிகின்றதலால் எவ்வாறொருவர்க் கிசைவிப்பதுவே :—

அனுபவத்தில் விளையும் ஞான இன்பத்தைக் கூற வார்த்தைகளே கிடையா. அவரவர்கள் தத்தம் அனுபவத்திலேயே அதனை உணர்தல் வேண்டும். நெருப்பில் கை வைத்தவனே அதன் வெப்பத்தை யுணர்வான். நீரில் கை வைத்துக் கொண்டிருப்பவன் எப்படி உணர முடியும்? அந்த அநுபவம் காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்ற ஞாதிரு ஞான ஞேயம் ஆகிய முப்பாழுங் கடந்த இடத்தில் விளைவது; சொல்லிறந்த பூரணம்,

"ஞானகா ரத்தினொடு ஞேயம் அற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவிநிற்கும்

ஆனாலும் இதன் பெருமை எவர்க்கார் சொல்வார்
அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்.
—(தானான) தாயுமானார்.

"எங்ஙன் இருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ஙன் இருந்ததென் றுந்தீபற
அறியு மறிவ தென் றுந்தீபற" —திருவுந்தியார்.

கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்பது ஆன்றோர் கூற்று.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே.
—திருமந்திரம்.

கருத்துரை

முருகவேள் உணர்த்திய ஞான அநுபூதி நிலையை அவரவரே யனுபவித்து உணரலாமேயன்றி அது உரையால் உரைக்குந் தரமன்று.

31. பாழ்வாழ் வெனுமிப் படுமாயையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாமுளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வாகனனே.

பதவுரை

மயில் வாகனனே-மயிலை வாகனமாகக் கொண்ட முருகப் பெருமானே!

பாழ் வாழ்வு எனும்-பாழ்படுவதான உலக வாழ்வு என்கின்ற,

இப்படுமாயையிலே—இந்தப் பெரிய மாயையாகிய படுகுழியிலே,

வீழ்வாய் என-நீ விழுவாயாக என்று,

என்னை விதித்தனையே-அடியேன் தலையில் எழுதி விட்டீரே.

தாழ்வு ஆனவை-(இதற்குக் காரணமான) இழிவான செய்கைகள்,

செய்தன உளவோ-அடியேன் முன்செய்தவைகள் இருக்கின்றனவோ?

இனி நீ வாழ்வாய்-இனி நீர் வாழ்வீராக.

பொழிப்புரை

மயில் வாகனக் கடவுளே! பாழ்படுவதான உலக வாழ்வு என்னும் இம் மாயைப் படுகுழியில் என்னை விழுமாறு தேவரீர் விதி செய்து அனுப்பினீரே? அடியேன் முற்பிப்பில் செய்த குற்றங்கள் இருக்கின்றனவோ? எது எப்படியிருப்பினும் இருக்கட்டும். இனி நீர் வாழ்வீராக.

விரிவுரை

பாழ் வாழ்வெனும் இப் படுமா யையிலே :—

உலக வாழ்வானது நிலையில்லாதது. தோன்றி மறையும் இயல்புடையது.

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்"
—சுந்தரர் (7-78-1).

மாயை என்பது, மாயையின் காரியமாகிய தநு கரண புவன போகங்களைக் குறிக்கும். இம் மாயப் படுகுழியில் விழுமாறு என்னை விதித்தருளினீரே! நான் என்ன பிழை செய்தேன்.

வீழ்வாயென என்னை விதித்தனையே :—

இறைவன் ஒவ்வொரு ஆன்மாவும் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைக்கு ஏற்ப நியாயத் தீர்ப்புக் கூறி வினைப் பயன்களை நுகருமாறு, பிறக்கவைக்கின்றார்.

நாம் நுகரும் இன்ப துன்பங்கட்குக் காரணம் நாம் செய்த நல்வினை தீவினைகளேயாகும். இறைவன் காரணனன்று.

இவறலும் இகலும் இன்றி எவர்க்குமோர் பெற்றித்தாகி
அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம் சிறந்தநோன்
பியற்றிடாதே
தவறு செய்தனம் என்றெம்மை நோவதேதக்க தென்றார்.
—கந்தபுராணம்

ஒரு தாய் ஒரு குழந்தைக்கு நல்லுணவு வேண்டு மளவு தருகின்றாள். மற்றொரு குழந்தைக்கு உப்பில் லாத கஞ்சி தருகின்றாள். காரணம் யாது? நோய் வாய்ப்பட்ட குழந்தைக்கு உடல் நிலைக்கு ஏற்பத் தரு கின்றாள். தாயின் கருணையிலே தாரதம்மியம் இல்லை. அது போல் இறைவன் முன் செய்த நலந் தீங்குகளின் பயனாக சுக துக்கங்களை விதித்தருளுகின்றார்.

மாயை ஒரு படுகுழி. அதனால் வீழ்வாய் என்று கூறினார்; அதில் வீழ்த்தியருளினார்.

தாழ்வானவை செய்தன தாமுளவோ:—

இப்பிறப்பில் அடியேன் அநுபூதி பெறுவதற்கு முன் மாய வாழ்வில் உழன்றேனே, அப்படி உழல்வதற் குக் காரணம் யான் முற பிறப்பில் ஏதோ குற்றங்கள் செய்திருக்க வேண்டும். அப்படி செய்த குற்றங்கள் என்னவோ? அறிகிலேன்.

வாழ்வாயினி நீ :—

ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் தேவரீர் வாழ்வீராக.

அன்றி, "முருகா! உன்னடிமையாகிய என்னை இந்த மாயப்படுகுழியில் தள்ளிவிட்டீரே. இது நியா யமா? எனக்கு உம்மையன்றி புகலிடம் ஏது? என்னை ஆட்கொள்பவர் உம்மையன்றியாருளர்? நம்பிய என்னை இப்படிச் செய்தீரே! இனி நீர் நன்கு வாழ்ந்து போம்" என்று நிந்தாஸ்துதியாகப் பாடுகின்றார்.

"காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து
போதீரே"
"மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து
போதீரே"
—சுந்தரர்

மயில்வாகனரே :—

முருகா! நூற்றெட்டு யுகங்களாக ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆண்டு அமரர்களையும் முனிவர்களையும் அடக்கிக் கொடுமைபுரிந்த சூரபன்மனுக்கு உன் விசுவரூபத்தைக் காட்டி அவனை மயிலாகக் கொண்டு அருள்புரிந்தீரே?

அவனை விடவா நான் கொடியவன்? அவனுக்கு அருள் புரிந்த கருணைக் கடலாகிய நீர் எனக்கு அருள் புரியக் கூடாதா? என்று வேண்டுகின்ற குறிப்பு இதில் உள்ளடங்கி யுள்ளது.

கருத்துரை

மயில்வாகனா! அடியேன ஏதோ குறை செய்தேன் போலும். அதனால் என்னைப் பாழ் வாழ்வில் தள்ளி விட்டாய். ஆயினும் நீ வாழ்க என்றுதான் நான் உன்னைத் துதி செய்வேன்.

32. கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையேபுரி வேடர் குலப்பிடி தோய்
மலையே! மலை கூறிடு வாகையனே.

பதவுரை

கொலையே புரி-கொலைத் தொழிலையே செய்கின்ற,
வேடர்குல பிடி தோய்-வேடர் குலத்தில் வளர்ந்த பெண் யானை போன்ற வள்ளி நாயகியார் தழுவி மகிழ்கின்ற,
மலையே-மலை போன்றவரே!
மலை கூறு இடு வாகையனே-கிரவுஞ்சமலையைப் பிளந்து வெற்றி பெற்றவரே!

தலை ஊடலையே படும் ஆறு-முதன்மையாகச் சமயவாதி
களுடன் வாதஞ்செய்து பிணங்குதலையே பொருந்து
முறையில்,

கலையே பதறி கதறி-சாத்திர நூல்களை மனங்கலங்கிச்
சத்தம் போட்டுப் பேசி,

அதுவாய் விடவோ-அந்த வாதமயமாகவே அடியேன்
ஆகிவிடலாமோ? (ஆகாது)

பொழிப்புரை

கொலைத் தொழிலே செய்கின்ற வேடர் குலத்தில் வளர்ந்தவரும் பெண்யானை போன்றவரும் ஆகியவள்ளி பிராட்டியார் மருவுகின்ற மலைபோன்றவரே! கிரவுஞ்ச மலையைப் பிளந்த வெற்றியுடையவரே! சமயவாதிகளுடன் முதன்மையாக வாதிட்டுப் பிணங்குஞ்செயலைக் கொண்டு, சாத்திரங்களைக் கலக்கத்துடன் கத்திப் பேசி அந்த வாதத்தின் மயமாக அடியேன் ஆகலாமோ? (ஆகக்கூடாது).

விரிவுரை

கலையே பதறி கதறி :—

கலை என்பது இங்கே கருவி நூல்களைக் குறிக்கும். இலக்கண இலக்கியங்களைக கற்றும்; தத்தம் சமய நூல்களைப் பயின்றும், வாது புரிவார்கள்;

கல்வியின் பயன் வாலறிவனையடைவதாகும். கற்றவர்க்கு அழகு அடக்கமாகும்.

ஒருவரை ஒருவர் எதிர்த்திட்டு வாதிடுவதற்கன்று.

தலை ஊடலையே படுமாறு :—

ஊடல் - பிணக்கு. ஊடுவது - மனம். பதறுவது - உடம்பு. கதறுவது - வாய். மனம் வாக்கு காயம் என்ற மூன்றினலும் அமைதியின்றி நலங்குன்றுவர்.

தலை-முதன்மை. முதன்மையான சண்டை. தலையூடு அலையே படுமாறு-தலையில் உள்ள மூளை கலங்குமாறு

போர் புரிவர் என்றுங் கூறலாம். அருணகிரிநாதர் சமயவாதங்களைப் பல இடங்களில் கண்டிக்கின்றார்.

"சமய விரோத
சாங்கலை வாரிதியை நீந்தவொணாது"
—(சாந்தமில்) திருப்புகழ்;

"கருக்கடலூடும் கதற்றுமநேகம்
கலைக்கடலூடும் கழலாதே" —(பெருக்கவு) திருப்புகழ்;

"சிவகலை யலதினி
உலக கலைகளும் அலம் அலம்"
—(குருதிகிருமி) திருப்புகழ்;

"கலகக்கலை நூல்பல கொண்டெதிர்
கதறிப்பதரு" —(உலகத்தினில்) திருப்புகழ்

"பதறிய சமயிகள் எட்டாப்பேரொளி"
—(பதறிய) திருப்புகழ்;

"கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்கவாதிகள்.
கதறிய வெகுசொற் பங்கமாகிய பொங்களாவும்
கலைகளுமொழிய" —(அலகிலவுண) திருப்புகழ்.

அநுபூதி நிலை சமயவாதங் கடந்த மோன நிலையில் சித்திக்கும்.

"வாதமும் சமய பேதமுங் கடந்த
மனோலய இன்பசாகரமே" —பட்டினத்தார்.

"கற்றதுங் கேட்டதுந்தானே ஏதுக் காகக்
கடபடம்என் றுருட்டுதற்கோ? கல்லால் எம்மான்
குற்றமறக் கைகாட்டும் கருத்தைக்கண்டு
குணங்குறியற்று இன்பநிட்டை கூடஅன்றோ?"
—தாயுமானார்;

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்" —அப்பர்;

"சமயவாதிகள் தத்தம் மதத்தையே அமைவதாக
அரற்றி மலைந்தனர்?"

"கல்வியென்னும் பல் கடல் பிழைத்தும்"
—மணிவாசகர்.

சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே.

—திருமந்திரம் (1631)

"திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கையொடும் உளற அறிவார்"

என்று தாயுமானுர் கூறியபடி சினத்தால் மனத்தில் அமைதியின்றி தர்க்கமிட்டு வாழ்நாளை வீழ்நாள் ஆக்குதல் கூடாது.

அதுவாய் விடவோ :—

ஆன்மா சார்ந்ததன் வண்ணம் ஆகும் இயல்புடையது ஆதலின் தர்க்க மயமாகவே ஆகிவிடுகின்றது?

ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது.

இதனுல் அருணகிரிநாதர், வாதித்து அறியும், பாச ஞானமாகிய கருவியால் கந்தவேளின் திருவடி அநுபூதியை அடைய முடியாது என்பதை அநுபூதியடைய விரும்புவோர்க்கு உபதேசிக்கின்ருர்.

இனி இனம்பற்றி "நாம் பிரமம்" என்கின்ற பசு ஞானத்தாலும் அடைய முடியாதென வுணர்க. அருட் குருநாதன் உணர்த்தும் பதிஞானம் ஒன்ருலேயே அடையலாம் என்பதையும் உய்த்துணர வைத்தார்.

கொலையேபுரி வேடர் :—

கொலையே - ஏகாரம் பிரிநிலை.

வேடர்கள் கொலையே புரியுங் கொடுந்தொழிலாளர்கள்.

குலப்பிடி :—

குலப்பிடி – வள்ளி. உவம ஆகுபெயர்,

யானை ஓசையின்றி நடக்கும். அதுபோல் பெண்களும் ஓசையின்றி நடக்கவேண்டும் என்பது போதருகின்றது.

குலப்பிடிதோய் மலையே :—

ஆன்மாக்கள் தன்னையடையும் பக்குவம் வகுக்கும் பொருட்டு, உலக போக நுகர்வில், இச்சையுண்டாகும் படி, இச்சா சத்தியாகிய வள்ளியுடன் கூடி, போக வடிவினனாக முருகவேள் இருப்பினும், யாதொருமாறுபாடும் அடைகிலன்என்பதைஉணர்த்தும் பொருட்டு காற்றாலும் மழையாலும் மாறுபடாத "மலையே" என்றார்.

இறைவனை மலையென்று கூறுவது ஆன்றோர்மரபு.

மலைகூறிடு வாகையனே :—

மாயையாகிய கிரவுஞ்ச மலையைப் பிளந்தவன், ஆதலினால் மாயையைக் கடந்த அப்பெருமான், ஆன்மாக்களின் மாயைகளைப் போக்கவல்லவன்.

"அலைகொள் வார்புனல் அம்புலி
மத்தமும் ஆடரவுடன் வைத்த மலையை"—சம்பந்தர்.

"காட்டூர் கடலே கடம்பூர் மலையே" —சுந்தரர்.

வள்ளியாகிய பெண் யானை தழுவுவதால் முருகன் மலை-கைம்மலை. ஆண் யானையாக, ஞான வேழமாக விளங்குகின்றான். யானை மலையில் வாழ்வதையும் குறிக்கும்.

யானை கிரிசரம், நதிசரம், வனசரம் என்று மூவகையது. வள்ளி—கிரிசரப்பிடி. அதனால் "பிடிதோய்மலை" யென்றார்.

கருத்துரை

"வள்ளி மணவாளா! கலைகளைக் கற்று வாதிட்டு அலையாமல் திருவடியநுபூதியைத் தந்தருள்.

33 சிந்தாகுல இல்லொடு செல்வமெனும்
விந்தாடவி என்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா முருகா கருணா கரனே.

பதவுரை

மந்தாகினி தந்த-கங்காநதி தாங்கிக் கொடுத்த,
வரஉதயனே-தேவர்கள் கேட்ட வரத்தின்படி சிவமூர்த்தியிடத்தில் உதித்தவரே!
கந்தா-கந்தக் கடவுளே!
முருகா-முருகப் பெருமானே!
கருணாகரனே-கருணைக்கு உறைவிடமானவரே!
சிந்தை ஆகுலம்-மனதில் துன்பத்தைத் தருவதற்கு ஏதுக்களாயுள்ள,
இல்லொடு செல்வம் எனும்-மனைவி செல்வம் என்கின்ற,
விந்த அடவி-விந்தமலைக்காடு போன்ற இத் துயரத்தை,
என்று விட பெறுவேன்-அடியேன் என்று நீங்கப் பெறுவேன்?

பொழிப்புரை

கங்காநதியின் மைந்தரே! வரத்தால் தோன்றியவரே! கந்தக் கடவுளே! முருகவேளே! கருணைக்கு இருப்பிடமானவரே! மனதில் துயரத்தைத் தருகின்ற மனைவி செல்வம் என்கின்ற இந்த விந்தியமலைக்காடு போன்ற, அச்சத்தைத் தரும் சூழலை அடியேன் என்று நீங்கப் பெறுவேன்?

விரிவுரை

சிந்தாகுல :—

சிந்தை ஆகுலம்—மனதில்உள்ள துன்பம். வடமொழி தீர்க்கசந்தி.

இல்லொடு செல்வமெனும் :—

இல்—வீடு. இது இடவாகு பெயராக வீட்டிலுள்ள மனைவியைக் குறிக்கின்றது. இனம் பற்றி மனைவி

மக்கள் உறவினர் இவர்களையும் குறிக்கும். மனைவி மக்கள் செல்வம் முதலியவைகள் துன்பம் பயக்கும் பொருள்கள்.

"உலக பசுபாச தொந்த மதுவான
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசல சுவாச சஞ்ச லமதாலென்
மதிநிலை கெடாமலுன்ற னருள்தாராய்"
—திருப்புகழ்.

மனைவி மக்கள் - உயிர்ப்பற்று; செல்வம்-பொருள் பற்று.

இந்தப் பற்றுக்களால் மனிதன் சதா அலைந்து திரிந்து அமைதியின்றிக் கெடுகின்றான்.

விந்தாடவி :—

விந்த அடவி—விந்தியமலைக் காடு.

நமது பாரத நாட்டின் வட பாகத்துக்கும் தென் பாகத்துக்கும் இடையில் உள்ள பெரிய மலை விந்தியம்.

இம்மலையில் வானளாவிய மரங்கள் செறிந்த காடு அச்சத்தைத் தந்து கொண்டிருக்கும் கடத்தற்கரியது. இதனுள் சென்றவர் திரும்ப வழி தெரியாது திகைத்து வாடி வருந்துவர்.

அதனால் குடும்ப வாழ்வில் சிக்கியவர்க்கு இது உவமையாயிற்று.

என்று விடப் பெறுவேன் :—

மேலே கூறிய துன்பங்கட்கு ஏதுவான இருவகைப் பற்றுக்களை என்று விடப்பெறுவேன்?

பற்றுக்களை விட்டாலன்றி அநுபூதி விளையாது.

"மனை மக்கள் சுற்ற மெனுமாயா
வலையைக் கடக்க அறியாதே
வினையிற் செருக்கி அடிநாயேன்
விழலுக் கிறைத்து விடலாமோ" —திருப்புகழ்.

ஞானநெறியிலே முதலிலிருந்து முடிவுவரை இன்பந்தான். உலக நெறியில் முதலிலிருந்து முடிவு வரை துன்பந்தான்.

பெண்ணால் வரும் துன்பம் :—

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கள் நிமலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்து முத்தி பெறுமளவும்
பெரியசுகம் கிடைக்கும்; காம
வெட்டையிலே மதிமயங்கும், சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்து நடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலைதானே.

மக்களால் வருந் துன்பம் :—

மதலையைப் பெறுநாள் துன்பம் வளர்த்திடு நாளும் துன்பம்
விதலை நோயடையில் துன்பம் வியன்பரு வத்துத் துன்பம்
கதமுறு காலர்வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுறு பாலர் தம்மால் எந்நாளுந் துன்பமாமே.
—குசேல உபாக்யானம்

செல்வத்தால் வருந்துன்பம் :—

ஈட்டலும் துன்பம்; மற்றீட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந் துன்பம்—காத்தல்
குறைபடின் துன்பம்; கெடின் துன்பம்; துன்பக்கு
உறைபதி மற்றைப் பொருள். —நாலடியார் (280)

மந்தாகினி தந்த வரோதயனே :—

மந்தாகினி-இது கேதாரத்தில் அமுதம்போல் ஓடுகின்ற அரிய நதி. கங்கா நதி அவ்விடம் மந்தாகினி என்ற பெயருடன் ஓடுகின்றது. சிவபெருமானிடம் மாலயனாதி வானவர்கள் சென்று, சூராதியவுணர்களின் கொடுமையைக் கூறி ஒரு புதல்வனைத் தந்தருளும் என்று முறையிட்டார்கள்.

ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமுந் துன்பும் இன்றி
வேதமும் கடந்துநின்ற விமல! ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்.
—கந்தபுராணம்.

அவர்களுக்களித்த வரத்தின்படி ஐம்முகச் சிவனார் ஆறுமுகங் கொண்டு ஆறு அனற்கண்களிலிருந்து ஆறு அருட்சுடர்களை யளித்தருளினார்.

அந்த அருட்சோதிகளை வாயுதேவனும் அக்கினி தேவனும் சுமக்க முடியாது சுமந்து கங்கா நதியில் சேர்ந்தார்கள். கங்கை அதனையேந்திச் சரவணப் பொய்கையில் சேர்த்தாள்.

அரனருள் முறையினை அறிந்து கங்கைதன்
சிரமிசை யேந்தியே சென்றோர் கன்னலில்
சரவண மெனுந்தடந் தன்னில் சேர்த்தனள்
மரையித ழாயிடை மல்குற்றாலென. —கந்தபுராணம்.

இதனால் "மந்தாகினி தந்த" என்றார்.

தேவர்கள் சிவபிரான்பால் கேட்ட வரத்தினால் தோன்றிய படியால் "வரோதயன்" என்றார்.

வரோதயன்—வரங்கட்குப் பிறப்பிடமானவன் என்றும் பொருள்படும்.

கந்தா முருகா கருணாகரனே ;—

கருணைக்கு இருப்பிடமானவன்.

கந்தன், முருகன் என்ற பெயர்களுக்கு முன்னரேயே பொருள் கூறப்பட்டுள்ளது.

கருத்துரை

கந்தவேளே! உலகப் பற்றுக்களாகிய கவலைகள் என்று நீங்கப் பெறுவேன்? விரைவில் நீக்கியருள்செய்.

34; சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரந்தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே
கங்காநதி பால க்ருபாகரனே.

பதவுரை

சங்க்ராம சிகாவல–போரில் வல்ல மயிலை உடையவரே!
சண்முகனே-ஆறுமுகக் கடவுளே!
கங்காநதி பால—கங்காநதியின் புதல்வரே!
க்ருபாகரனே-கருணைக்கு இருப்பிடமானவரே!
சிங்கார மடந்தையர்-அலங்காரம் புரிந்துகொள்ளு கின்ற பொது மாதர்களின்,
தீ நெறி போய்-தீய வழியிலே சென்று,
மங்காமல்-கெட்டுப் போகாமல்,
எனக்கு வரம் தருவாய்-அடியேனுக்கு வரம் தந்தருளு வீராக.

பொழிப்புரை

போரில் வல்ல மயிலை உடையவரே! ஆறுமுகக் கடவுளே! கங்கா நதியின் புதல்வரே! கருணைக்கு உறைவிடமானவரே! அலங்கரித்து ஆடவரை மயக்கும் பொது மாதர்களின் தீய வழியில் சென்று கெடாத வாறு, அடியேனுச்கு வரம் தந்தருளுவீராக.

விரிவுரை

சிங்கார மடந்தையர் தீநெறி ;—

சிருங்காரம் என்ற வடமொழிச் சொல் சிங்காரம் எனத் திரிந்து வந்தது. இது விலைமகளிரைச் சுட்டி யது. குலமகளிரையன்று. விலைமாதர் ஆடையணி கலன்கள், மலர் முதலிய சாதனங்களால் சதா தம்மை நன்கு அலங்கரித்துக் கொண்டு இளைஞரை யன்றி முதியவரைக்கூட, துறந்தோரையும்கூட, மயக்கி அல்லல் கடலில் அழுத்துவர்.

முருகனுடைய திருவடிப் பேரின்ப அநுபூதியை அடைய விரும்பும் பக்குவப்பட்டவர்க்கு நெறி, சன்மார்க்கமாகும். அதற்கு நேர் மாருனது ஆசை வயப்பட்ட புன்னெறியாகும்.

மங்குதல்—மழுங்குதல்.

ஞான விளக்கத்தை மழுங்கச் செய்வது பெண் மயல் என்று குறிப்பிடுகிருர்.

தீ நெறி போய் மங்காமல் ;—

" பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளி"

—திருவாசகம்.

தீமையுள்ளன யாவையும் தந்திடும், சிறப்பும்
தோமில் செல்வமும் கெடுக்கும்; நல்லுணர்வினைத்
தொலைக்கும்
ஏம நன்னெறி தடுத்திருள் உய்த்திடும்; இதனுல்
காமம் அன்றியே ஒரு பகை உண்டுகொல் கருதில்?

—கந்தபுராணம்.

"காமமே நரகபூமி காணியாக் கொடுப்பது"

—திருவிளையாடற்புராணம்.

"வாமமேகலை மங்கைய ரால்வரும்
காமமில்லை யெனிற் கடுங்கேடெனும்
நாமமில்லை நரகமும் இல்லையே" —கம்பராமாயணம்.

எனக்கு வரந்தருவாய் :—

பெண்மயலால் தடுமாறும் ஒருவருடைய விண்ணப்பமாக, காமாதியறுபகையும் அறவே களைந்த அடிகளார் இதனைக் கூறுகின்ருர் எனக்கொள்க.

சங்க்ராம சிகாவல :—

சங்க்ராமம்—போர்.

"பணிபாச சங்க்ராமபணமகுட
நிகராட்சம பட்ச பட்சிதுரங்க" -கந்தரலங்காரம்(52)

சிகாவலம்—மயில்.

"சிகாவல கலாபமேல்" —மகாபாரதம் (காண்டவ, 2)

கங்காநதி பால :—

ஆறு அருட்சோதிகளும் சில நேரம் கங்கையில் தவழ்ந்த காரணத்தால் முருகன் காங்கேயன் என்று பேர் பெற்றுன்; உண்மையில் அவன் கங்கையின் மகன் அன்று.

கங்கையின் புதல்வனென்றும் கார்த்திகை மைந்தனென்றும்
செங்கண்மால் மருகனென்றும் சேனையின் செல்வனென்றும்
பங்கயன் முதலோர் தேருப் பரஞ்சுடர் முதல்வன் தன்னை
இங்கிவை பலவுஞ் சொல்வது ஏழைமைப் பாலதன்றே;
—கந்தபுராணம்;

கங்கை மீதுள்ள கருணையால் கங்காபாலன் என்ற பெயரைத் தாங்கினுன். ஆதலினுல் "க்ருபாகரன்" என்று விளித்தார்.

க்ருபா ஆகரன்—வடமொழி தீர்க்க சந்தி.

"...............அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே"
—கந்தரலங்காரம் (1)

கருத்துரை

ஆறுமுகப் பெருமானே! மாதர் மயல் படாத வரம் அருள்.

35. விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்
மதிவாணுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா சுரபூ பதியே.

பதவுரை

மதிவாள் நுதல்-பிறைச் சந்திரனை யொத்த ஒளிவீசு கின்ற நெற்றியை யுடைய.

வள்ளியை அல்லது-வள்ளியம்மையைத் தவிர,

பின் துதியா-வேறு ஒருவரையும் புகழாத,
விரதா-நோன்பு பூண்டவரே!
சுரபூபதியே-விண்ணுலகிற்கும், மண்ணுலகிற்குந் தலைவரே!
விதி காணும்-பிரமதேவன் படைத்த,
உடம்பை விடாவினையேன்—உடம்பைவிடாத வினைகளை யுடைய அடியேன்,
கதிகாண-நல்ல கதியை அடையும்படி,
மலர் கழல்-தாமரை மலர்போன்ற உமது திருவடியை,
என்று அருள்வாய்—எப்போது என் தலைமீது சூட்டி அருள் புரிவீர்?

பொழிப்புரை

பிறைச் சந்திரனைப் போன்றதும், ஒளி வீசுவதுமாகிய நெற்றியையுடைய வள்ளிபிராட்டியைத் தவிர வேறு யாரையும் புகழாத விரதம் உடையவரே! விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலைவரே! பிரமதேவன் படைத்த இந்த உடம்பை விடாத வினையையுடைய அடியேன் நற்கதியடையுமாறு, உமது தாமரை போன்ற திருவடியைத் தலைமேல் சூட்டி எந்நாள் அருள் புரிவீர்?

விரிவுரை

விதிகாணும் உடம்பை விடா வினையேன் :—

விதி—பிரமன். அல்லது முன்னை விதி எனினும் அமையும். விதிக்கப்பட்டது விதி. விதிக்கின்றவன் பிரமன்.

வினையினால் உடம்பு வருகின்றது: உடம்பால் வினையேறுகின்றது. வினையின்றி உடம்பில்லை; உடம்பின்றி வினை இல்லை. வித்தால் மரம் வருகின்றது; மரத்தால் விதை விளைகின்றது. வித்து முந்தியா? மரம் முந்தியா? என்ற ஐயப்பாடு நிகழும். சுத்தியால் அடித்துக் கொரடா செய்யப்படுகின்றது. கொரடாவால்

பிடித்து சுத்தி செய்யப்படுகின்றது. 'எது முந்தி' என்பதும் ஒரு வினு.

இதனைச் சிவஞான சுவாமிகளும் பின்வருமாறு கூறுகின்ருர்.

நீயுள்ள தென்றன்று நானுமுளன் அன்று முதல்
நீங்காமல் என்னிடத்தில்
நேசம்வைத் தேநீ யிருக்கநான் மலமாகி
நின்றதேது உடலெனக் கங்கு
ஏயுமுறை எங்ஙனே வினைகள்தரும் எனிலவைகள்
ஏறிடா தநுவி லாமல்
எட்டாத கேவலம் இருப்பமேல் ஒருகன்மம்
ஏயா(து) அவிச்சை கண்டு
காயம தளிப்பதெனில் இன்பதுன் புறமுன்பு
கன்மம் ஏ(து) இதனை யருள்வாய்
ககனமுக டுங்கடந் தளவிற்புவ னங்களும்
கரைபுரண் டெங்கும் ஓங்க
ஆயுமறை காணு(து) அகண்டமாய் நின்றதிரு
அக்கினீ சுரர்மருவு நீள்
அருள்ஞான வாரியே! ராசைமேவியசெல்வ
அகிலாண்டம் என்னும் அரசே.

இதற்கு விடை காண வேண்டும்.

கேவல திசையில் ஆன்மாக்கள் இருட்டறையில கட்டுண்டு கண்ணிலாக் குழவிகள் போலக் கிடந்தன. அங்ஙனம் இருந்த ஆன்மாக்களுக்கு இறைவன் கண்ணில்லாத ஒருவனுச்குக் கோல் தருவதுபோல், கருணையினுல் சூட்சும சரீரத்தைப் படைத்து வழங்கியருள் புரிந்தார்.

அந்த நுண்ணுடம்புடன் கூடிய ஆன்மாக்கள் விருப்பு வெறுப்பு எய்தி மனதால் செய்த நல்வினை தீவினை காரணமாக இந்தத் தூலவுடம்பு எய்தியது. பிறகு தூல உடம்பால செய்யப்படுகின்ற நல்வினை தீவினை காரணமாக, அவிச்சின்ன தாரையாக உடம்

பும், உடம்பால் வினையுமாக வந்து கொண்டேயிருக்கின்றன.

ஆதி கன்மம், மூல கன்மம் என்று விடை கூறுவாரும் உளர்.

"தூளேறு தூசுபோல் வினையேறு மெய்யெனும்
 தொக்கினுட் சிக்கிநாளும்
சுழலேறு காற்றிடை அழலேறு பஞ்செனச்
 சூறையிட் டறிவை யெல்லாம்
நாளேற நாளேற வார்த்திக மெனுங்கூற்றின்
 நட்பேற உள்ளுடைந்து
நயனங்கள் அற்றதோர் ஊரேறு போலவே
 நானிலந்தனில் அலையவோ"

என்கின்றார் தாயுமானார்.

"வினைப்போகமேயொரு தேகங் கண்டாய்" என்கின்றார் பட்டினத்தடிகள்.

வினையா லசத்து விளைதலால்; ஞானம்
வினைதீரி லன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பில் தொழு.

—சிவஞானபோதம் (உதாரண வெண்பா)

"உடம்பின் கண்ணதாகிய பிராரத்த வாசனை உயிர்க்குத் தாக்குவதாயுள்ள துணையும், அதனால் வரும் விருப்பு வெறுப்புக்களும், அவைபற்றிக் காட்சிப்படும் மண்முதன் மாயைகளும், அவைபற்றி நிகழும் விபரீத வுணர்வுமாகிய அசத்துக்கள் ஒருவிய வழியும் வந்து கூடி மேம்படுவனவாகலான், அவ்வளவிற்கெல்லாம் மூலமாகிய பிராரத்தவாசனை சற்றறக் கழிந்தாலன்றி, அவசத்தைக் கீழ்படுத்தும் மெய்யுணர்வு மேம்படுதல் கூடாதாகலின், வினைதீர ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்" என்ற சிவஞான சுவாமிகளின் உரையாலறிக.

உயிர்கள் செய்த நல்வினை தீவினைகளின் பயனை நுகருமாறு, சிவன் ஆணையால், பிரமன் அவ்வினைகளுக்கு ஏற்ற நியாயத் தீர்ப்பைத் தலையில் எழுதிப் பிறப்பிக்கின்றான்.

சிவபிரான் ஆணையாலேயே பிரமன் விதிக்கின்ற படியால்,

"இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி
விட்ட சிவனுஞ் செத்து விட்டானோ ?"

என்றனர் ஔவையார்.

முருகனுடைய அநுபூதி பெற்ற சிவஞானிகள் தலையில் அயன் எழுத முடியாது.

"தீட்டப்படா இனி யுன்னால் என் சென்னிகறைப் பிறப்பில்
தீட்டப் படாவியவரல்லன் யான்திசாமுகனே"

—கந்தரந்தாதி (72)

ஞானிகள் ஞானவாளால், பிரமன் பிணித்த வல்வினைப் பிணிப்பை அறுத்தெறிவார்கள்.

பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசம்
தெரிந்தேன் சிவகதி செல்லும் நிலையை
அரிந்தேன் வினையை அயில் மனவாளால்
முரிந்தேன் புரத்தினை முந்துகின் றேனே.

—திருமந்திரம் (2961)

வினைகளைப் பற்றி விளக்கம் :

வினை நல்வினை, தீவினையென இருவகைப்படும். இரண்டும் பிறவிக்கு ஏதுக்களே.

நல்வினை பொன் விலங்கு; தீவினை இரும்பு விலங்கு.

இப்போது செய்கின்ற வினை ஆகாமியம்.

முன்செய்து பக்குவத்துக்கு வராமல் இருப்பாகக் குவிந்துள்ள வினை சஞ்சிதம்.

பக்குவப்பட்டு இப்போது நுகர்கின்ற வினை பிராரத்தம்.

ஆகாமியம் - அப்பொழுது வயலில் விளைவிக்கின்றது போன்றது.

சஞ்சிதம்-குதிரில் சிறை கட்டப்பட்ட நெல் போன்றது.

பிராரத்தம்-குத்திய அரிசி சமையலறையில் அன்றுடம் சமைத்து உண்பது போன்றது.

ஞானிகட்குப் பிராரத்தம் உடலூழாய் நுகர்ந்து கழியும்.

சஞ்சிதம் ஞானுக்கினியால் எரிந்து கரிந்துபோகும்.

ஆகாமியம் நிஷ்காம்ய தவத்தால் விளையாது.

ஆகவே வினைகள் மாய்ந்து பிறப்பு எய்தாது

காணுதல்—படைத்தல். சதா பிரமன் படைத்துக் கொண்டேயிருக்கின்ருன். ஆதலின் "காணும்" என்று நிகழ்காலத்தால் கூறினுர்.

உடம்பை விடா என்றது ஆகு பெயராய் உடம்பிலுள்ள பற்றை விடாதிருத்தலாகும். ஞானிகளுக்கு உடம்பும் மிகையாகும்.

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்ருர்க்(கு) உடம்பும் மிகை. —திருக்குறள்

"உடம்பென்ற பொதுமையான் உருஉடம்பும் அருவுடம்பும் கொள்ளப்படும்; அவற்றுள் அருவுடம்பாவது பத்து வகை இந்திரிய வுணர்வோடும், ஐவகை வாயுக்களோடும், கர்ம வினை விளைவுகளோடுங் கூடிய மனம்; இது நுண்ணுடம்பெனவும் படும். இதன்கட் பற்று நிலையாமை யுணர்ந்த துணையான் விடாமையின் விடுதற்குபாயம் முன்னர்க் கூறுப. இவ்வுடம்புகளால் துன்பம் இடையருது வருதலையுணர்ந்து இவற்ருனய கட்டினை இறைப்பொழுதும் பொருது வீட்டின் கண்ணே விரைதலின் உடம்பு மிகை என்ருர்" என்ற பரிமேலழகர் உரையாலறிக.

உடற்பற்றை விடாதிருத்தல் உடலை யான் என்றும், உடலால் நுகரும் பொருள்களை எனது என்றும் அபிமானித்து, யான் எனது என்னும் செருக்கை விடாதிருத்தலாகும்.

கதிகாண மலர்க் கழல் என்றருள்வாய் :—

கதி—ஆன்மா அடையும் நற்கதியாகும். சிவகதி என்றும் முத்திநிலம் என்றும் சொல்லப்படும்.

காண—என்பது உணர்தலாகும்.

"ஒன்றி நின்றுள்ளே உணர்ந்தேன் சிவகதி."
—திருமந்திரம் (2953)

காண என்ற எதிர்கால வினையெச்சம், அருள்வாய் என்ற வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

மலர் - தாமரை மலர் ஆகும்.

கழல்—வீரக்கழல்; முருகன் வீர மூர்த்தியாதலின் வீரக் கழலைத் திருவடியில் புனைந்திருக்கின்ருர். இது தானியாகு பெயராகத் திருவடியைக் குறித்தது.

திருவடியை அருள் என்றது, அடியேன் தலைமீது சூட்டியருள் என்று வேண்டுகின்ருர். திருவடி தீட்சை பெறுதலாகும்.

"இணையார் திருவடியென் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்"
—திருவாசகம்

தனித்து நில்லாத இயல்புடைய சதசத்தாகிய ஆன்மா உடலினைப் பற்றி உலகிலும், அல்லது இறைவனைப்பற்றி இறைவனிடத்திலும், வாழும் இயல்பினை யுடையது

உயிரானது உடலினைப்பற்றி, உலகில் வாழும் போது இருவினைகளும், அவற்றிஞல் உண்டாகிய விருப்பு வெறுப்புக்களும் உடையதாய் மயங்கி, சிற்றின்பம் நுகர்ந்து பிறந்திறந்துழலும்.

உயிர் இறைவனைப்பற்றி நிற்கும்போது, இருவினைப் பற்றும், அது பற்றிய துவந்துவ மயக்கங்களும் உண்டாதற்கு ஏதுவாய உடற்பற்றினை நீங்கி மெய்யுணர்வு பெற்று, இறைவனுடைய திருவடிகளையடைந்து, பேரின்ப வாழ்வில் நிலைபெற்றிருக்கும். ஆதலால் "மலர்க்கழல் என்றருள்வாய்" என்று அடிகளார் வேண்டுகின்றார்.

"அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காயமாயத்தைக் கழித்தருள் செய்யாய்"
—(ஆட்டுத்) திருவாசகம்

மதி வாணுதல் வள்ளி :—

மதி - அட்டமிப்பிறைச் சந்திரன்; இது நெற்றிக்கு உவமையாகும்.

வாள் - ஒளி; வள்ளியம்மையின் நெற்றி அஷ்டமிச் சந்திரனைப்போலவும், ஒளியுடனும் அழகாக விளங்கும்.

வள்ளியை யல்லது பின் துதியா விரதா :—

வள்ளியை முருகன் துதிக்கின்றார் என்றது, வள்ளி இச்சாசக்தியாகலின், இச்சாசக்தியின் குறிப்பின் வழியே முருகன் ஞானசக்தியால் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உயிர்களுடைய பக்குவம் அறிந்து அவைகட்கு அருள்புரிகின்ற அருள்திறத்தைக் குறிக்கும்.

துதியா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் துதியாத என்று பொருள்படும்.

சுரபூபதியே :—

சுரபதியே! பூபதியே! என்று ஆகும். விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் முருகனே தலைவன்.

கருத்துரை

வள்ளி மணவாளா! பிறப்புக்கள் தீர உன் திருவடி தீட்சை செய்தருள்.

36: நாதா குமரா நமஎன் றரனார்
ஓதாய்என ஓதிய தெப்பொருள்தான்
வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசேகரனே:

பதவுரை

வேதா முதல் விண்ணவர் — பிரமதேவன் முதலிய தேவர்கள்,

சூடும் மலர் பாதா—தங்கள் தலையில் சூடிக்கொள்ளுகின்ற தாமரையன்ன திருவடிகளையுடையவரே!

குறமின்பத சேகரனே—மின்னல்கொடிபோன்ற வள்ளியம்மையின் பாதத்தைச் சூடிக்கொண்டவரே!

அரனார்—சிவபெருமான்,

நாதா—தலைவனே !

குமரா நம என—குமாரக் கடவுளே! வணக்கம் என்று வணங்கி,

ஓதாய் என—எனக்கு உபதேசிப்பாய் என்று கேட்க,

ஓதியது எப்பொருள்தான்—உபதேசித்தது எத்தகைய பொருள்? (அதை அடியேனுக்கும் உபதேசித்தருளுவீராக).

பொழிப்புரை

பிரமாதி தேவர்கள் தங்கள் சென்னிமேல் சூடிக்கொள்ளுந் திருவடியுடையவரே! மின்னல் கொடி போன்ற வள்ளியம்மையின் திருவடியைச் சூடிக்கொண்டவரே! "தலைவரே! குமாரக் கடவுளே! வணக்கம். எனக்கு உபதேசித்தருள்" என்று சிவபெருமான் வணங்கிக் கேட்க, நீர் அவர் செவியில் உபதேசித்த பொருள் எது? அதை அடியேனுக்கும் உபதேசித்தருள் வீராக.

விரிவுரை

நாதா :—

நாதன் - தலைவன்.

நாதத்தின் முடிவில் விளங்குபவன்.

நாத வடிவாகத் திகழ்பவன் என்றும் பொருள்படும்

'நாதா' என்னும் சொல் வடமொழியில் இருவகை யாகப் பொருள்படும்.

நாத—தலைவன். நாத—ஓசை.

தமிழின்கண் பொதுப்பட நின்று இரு பொருளை யும் உணர்த்தும்.

குமாரநம என்று அரனர் :—

சிவபெருமான் முருகனிடம் உபதேசம் கேட்கத் தொடங்குமுன் கூறிய மந்திரம் இது.

"குமாராய நம" என்பது சடக்கரம். இம்மகா மந்தி ரத்தைக் கூறி முருகனைத் துதி செய்தார்.

தமிழில் முருகா என்ற மந்திரம் சிறந்தது. வட மொழியில் குமார என்ற மந்திரம் சிறந்தது. பஞ்சாக் கரத்தில் "சிவ" என்பது சிறந்ததுபோல் சடக்கரத்தில் குமார என்பது சிறந்தது. இம்மந்திரத்தை ஒருமுறை கூறினுல் தீயில் பஞ்சு எரிவது போல் சகல வினைகளும் எரிந்து கரிந்துபோம்.

குமரா நம என்று கூறினர் ஓர்கால்
அமராவதி யாள்வ ரன்றி—யமராஜன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம்.

—திருப்போரூர்ச் சந்நிதி முறை (மாலை 47)

இம் மகா மந்திரத்தை ஒருமுறை உள்ளம் ஒரு மைப் பட்டுக் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி உணர்வு ஒன்றி உரை செய்தோர் இந்திரனுலகத்தை யும் அரசுபுரிவார்கள். காலன் கைவசம் அடையார்கள். மற்றீண்டு வந்துப் பிறவார்கள். முருகன் திருவடியில் சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்கள்.

நம:—நமஸ்காரம் (வணக்கம்) என்பது ஒரு பொருள்.

ந—இல்லை. ம—என்னுடையது. என்னுடையது இல்லையென்று சிவபோதம் இழத்தல் ஆகும்.

ஓதியது எப்பொருள்தான் :—

சிவபெருமான் பிரமனைச் சிறையில் இருந்து விடுவித்த பின் சீடபாவத்தை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு, தன்னில் வேருகாத குமாரக் கடவுளிடம் உபதேசம் பெற்று எல்லோருக்குங் குரு இன்றியமையாதது என்று உணர்த்தியருளினுர்.

உண்மையிலேயே தனக்குத் தெரியாததால் உபதேசம் பெற்ருர் என்று நினைக்கக்கூடாது; ஏன்? பிரணவம் ஈசனது பீடம்.

ஈசன் மேவரும் பீடமாய் ஏனையோர் தோற்றும்
வாசமாய் எலா எழுத்திற்கும் மறைகட்கும் முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான் கழறும்
ஆசில் தாரகப் பிரமமாம் அதன்பொருள் ஆய்ந்தான்.
—கந்தபுராணம்

அரனுர் ;—

அரன்—பாவத்தைப் போக்குபவன். அரன் நாமம் எங்கும் ஒலித்தால் உலகத்தில் துன்பங்கள் நீங்கும்.

“அரன் நாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே”
—திருஞானசம்பந்தர்

அரகர என்ன அரிய தொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே. —திருமந்திரம் (916)

அரஹரா என்று கூருதவர்கள் மூடர்கள் என்கின்ருர் அருணகிரிநாதர்.

யார் யார் மூடர்கள் என்று ஒரு அட்டவணை தொகுத்தார். அதில் இவ்வாறு கூறுகின்ருர்.

"அரகராஎனு மூடர் திருவெணீ றிடாமூடர்
அடிகள் பூசியா மூடர் கரையேற
அறிவுநூல்கலா மூடர் நெறியிலே நிலாமூடர்
அறம்விசாரியா மூடர்"
—(இரதமானதேனூறல்) திருப்புகழ்

சிவபெருமானுக்கு முருகன் உபதேசித்த உபதேசப் பொருளைத் தனக்கும் உபதேசிக்குமாறு அருணகிரிநாதர் பல பாடல்களில் வேண்டுதல் புரிகின்றார்.

"உருத்திரனும் விருத்திபெற
அநுக்கிரகி எனக் குறுகி
உரைக்கமறை யடுத்த பொருள்
உணர்த்துநாள் அடிமையும் உடையேனோ?"
—(கருப்புவிலில்) திருப்புகழ்

"உமை பங்காளர்க் கன்று பகர் பொருள் அருள்வாயே"
—(கொண்டாடி) திருப்புகழ்

"நம்பர் உரைமாளச்
செயல்மாண்டு சித்தம் அவிழநித் தத்வம்
பெறப்பகர்ந்த உபதேசம்
சிறியேன் தனக்கும் உரை செயில் சற்றுங் குருத்துவம்
குறையுமோதான்"
—(சயிலாங்கனே) திருப்புகழ்

"விசும்பின் புரத்ரயம் எரித்த பெருமானும்
....
பரவ அருளிய மவுன மந்த்ரந்தனைப் பழைய
நினது வழியடிமையும் விளங்கும் படிக்கினிதுணர்த்தி
அருள்வாயே"
—(அகரமுத) திருப்புகழ்

"பொற்புமத்தை வேணியர்க் கருள்கூரும்
புத்தி சித்தி வாய்கனம் சுத்த சத்ய வாசகம்
புற்பு தப்பிராணனுக் கருள்வாயே"
—(துத்திநச்ச) திருப்புகழ்

உபதேசித்த உட்பொருள் இது என அருணகிரி நாதர் கூறுகின்றார். யான் தான் என்ற துவிதம் அற்ற நிலையில் உண்மையறிவு தோன்றும்.

"யான்றான் எனுஞ்சொல் இரண்டுங்கெட்டாலன்றி
யாவருக்கும்
தோன்றாது சத்தியம்" —கந்தரலங்காரம் (95)

இந்த உண்மையறிவை யறிவதுதான் பிரணவப் பொருள்.

"அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர ஒளிதிகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய பெருமாளே"
—(குமரகுருபரகுணதர) திருப்புகழ்

இந்த உபதேசப் பொருளைத் தாயுமானுர் கூறி வியப்பு அடைகின்றார்.

"அறிவை யறிவதுவே ஆகும் பொருள் என்று
உறுதிசொன்ன உண்மையினை ஒரும்நாள் எந்நாளோ?"

வேதா முதல் விண்ணவர் சூடு மலர்ப்பாதா :—

பிரமாதி தேவர்கள் முருகவேளின் திருவடி மலரைத் தங்கள் தங்கள் சென்னியில் சூடிக்கொள்ளுகின்றார்கள்.

"வீடுஞ் சுரர் மாமுடி வேதமும் வெங்
காடும் புனமும் கமழுங் கழலே" —கந்தரநுபூதி (44)

"இமையவர் முடித்தொகையும் வனசரர் பொருப்புமென
திதையமு மணக்குமிரு பாதச் சரோருகனும்"
—திருவகுப்பு

இதனால் எந்தை கந்தவேளின் முழுமுதற்றன்மை புலனாகிறது.

அப் பரம்பொருளே மூவர்க்குந் தேவர்க்கும் தலைவன்.

குறமின்பத சேகரனே :—

வள்ளி தன்னை நோக்கி அரிய பெரிய தவஞ் செய்தவள் ஆதலின் அடியார்க்கு எளியனாக அவள் பாதமலரைத் தன் முடிமேல் சூடிக்கொள்கின்றான். இது அப் பரமனுடைய கருணையின் எளிமையை உணர்த்துகின்றது.

"பைம் புனமேவும்
தீதிலா வஞ்சியஞ் சீதபா தம்படுஞ்
சேகரா" —(காதல் மோகம்) திருப்புகழ்

சிவமூர்த்தியும் பிரமாதி தேவர்களும் தொழுகின்ற முருகப்பெருமான் வள்ளியம்மையைத் தொழுகின்றார் என்று ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்துக் கூறும் சதுரப்பாடு மிகவும் இனியது. இதேபோல பூதவேதாள வகுப்பிலும் கூறும் அழகிய திருவாக்கையும் கண்டு மகிழ்க.

"மன்றல் பைம்புனத் தாள்பதாம் புயம்
வந்திக் குந்தனிக் காம வாஞ்சையன்
மத்தமு டித்தருள் அத்தர்ப்ரி யப்பட
நித்த மறைப்பொரு ளைத்தெளி வித்தவன்"

கருத்துரை

பிரமாதி தேவர் தொழும் பெருமாளே! சிவனுருக்குச் செப்பிய பிரணவப் பொருளை அடியேனுக்கும் உபதேசித்தருள்.

37. **கிரிவாய்விடு விக்ரம வேலிறையோன்**
பரிவாரம் எனும் பதமே வலையே
புரிவாய் மனனே! பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே.

பதவுரை

மனனே—ஏ மனமே!

கிரிவாய்விடு-கிரவுஞ்சமலையின்மீது அது தொளைபடுமாறு விடுத்த,

விக்ரம வேல் இறையோன்—மிக்க வலிமையுடைய வேற்பரமனுடைய,

பரிவாரம் எனும்—அடியார்களின் திருக் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்ற,

பதம் மேவலையே புரிவாய்—பதவியை அடைவதையே நீ விரும்புவாயாக,

அகந்தையை-நான் என்னும் அகங்காரத்தின் கொடியை,

பொறையாம் அறிவால்—பொறுமையாகிய ஞான வாளால்,

அடியோடு அரிவாய்—வேருடன் அரிந்து தள்ளுவாயாக.

பொழிப்புரை

ஏ மனமே! கிரவுஞ்ச மலைமீது, அது பிளக்குமாறு செலுத்திய வலிமை மிக்க வேலை யேந்திய முருகப் பெருமானுடைய அடியவரது கூட்டத்துள் ஒருவன் ஆகும் பதவியைப் பெறுவதையே நீ விரும்புவாயாக. நான் என்னும் அகங்காரக் கொடியைப் பொறுமையாகிய ஞான வாளால் அடியுடன் அறுத்து எறிந்து நீக்குவாயாக.

விரிவுரை

கந்தரநுபூதியாகிய இந்த மந்திர நூலில் மூன்று பாடல்களை மனத்தை முன்னிலையாக்கிப் பாடியுள்ளார்.

7 ஆவது பாடல், 14 ஆவது பாடல், 37 ஆவது பாடல்.

கிரிவாய்விடு விக்ரம வேலிறையோன் :—

மலை வடிவாயிருந்து இமையவர்க்கும் இருடியர்க்கும் இடுக்கண் பல புரிந்துவந்த கிரவுஞ்சம் என்ற அரக்கனை முருகன் வேலினால் பிளந்து அழித்தருளினார். மாயையை யழித்தார் என்பது பொருள்.

இறையோன்—எங்கும் நிறைந்தவன்.

வேலிறையோன் என்றதனால் உயிர்களைப் பேரின்ப மடையச் செய்கின்றவன் என்று பொருள்.

பரிவாரமெனும் பதம் மேவலையே புரிவாய் :—

பரிவாரம் எனும் பதம்—முருகனுடைய அடியார் என்பது ஒரு சிறந்த பதம்; அது கிடைத்தற்கரியது. ஆதலால் அடியார் நடுவுள் இருக்கும் பதவியை மனமே நீ விரும்புவாய் என்று உபதேசிக்கின்றார்.

மேவலையே—ஏகாரம் பிரிநிலை.

"அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய்" —(உடையாள்) திருவாசகம்

"கதிர்வேல் எறிந்தவன் தொண்டர் குழாம்
சாரிற் கதியன்றி வேறிலை காண்"
—கந்தரலங்காரம் (49)

"கெடுதலிலாத் தொண்டரில் கூட்டியவா"
—கந்தரலங்காரம் (100)

"தொண்டரொடு கூட்டு கண்டாய்" என்கின்றார் தாயுமானார்.

பொறையாமறிவால் அரிவா யடியோடு மகந்தையையே :—

பொறுமையினால் உண்டாகும் அறிவு என்ற வாளினால் அகந்தையான கொடியை அறுத்தெறிய வேண்டும் என்றார்.

பிறர் கூறும் புகழ்ச்சிக்கும், இகழ்ச்சிக்கும் மாறுதலடையாது உள்ளம் ஒத்திருக்கும நிலையான பண்பு பொறையாகும்.

"கமையெலாமுடையராகிக் கழலடிபரவுந் தொண்டர்க்கு
அமைவிலா அருள் கொடுப்பர் ஐயன் ஐயாறனாரே"
—அப்பர்

கமை—பொறுமை.

அகந்தை யென்பது ஆணவத்தின் காரியமாகிய அவிச்சை யென்னும் மயக்க அறிவால் உண்டாகும் யான் என்னுந் தன்முனைப்பு.

அடியோடு அரிவாய் என்றதனுல் அறிவு வாளாகவும், அகந்தை கொடியாகவும் உருவகமாகின்றன. பொறுமையால் யாரிடத்திலும் பகைக்காத அவிரோத ஞானம் உண்டாகும்.

"அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா" —கந்தரலங்காரம் (25)

ஒருவர் முருகன் அடியார் கூட்டத்தைச் சேர்ந்திருப்பாராயின் யான் எனது என்னும் செருக்கற்று முருகனது திருவடியநுபூதியைப் பெறுவர் என்பது இப் பாடலின் கருத்து.

யான் செய்தேன் பிறர்செய்தார் என்னதியான் என்னும்
இக்கோணை ஞான எரியால் வெதுப்பி நிமிர்த்தித்
தான் செவ்வே நின்றிடவத் தத்துவன்றான் நேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட்டோடும்
நான் செய்தேன் எனுமவர்க்குத் தான் அங்கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம்
ஊன் செய்யா ஞானந்தான் உதிப்பின் அல்லால்
ஒருவருக்கும் யான் எனதிங் கொழியா தன்றே.
—சித்தியார் சுபக்கம் (10-2)

கருத்துரை

ஏ மனமே! முருகனுடைய அடியாருடன் சேர விரும்புக; அகந்தையைப் பொறுமையால் அரிந்து எறிக

38. **ஆதாளியை ஒன்றறியேனை அறத்**
தீதாளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கிறைவா
வேதாள கணம்புகழ் வேலவனே.

பதவுரை

கூதாள—கூதாள மலரை யணிந்தவரே!
கிராத குலிக்கு இறைவா—வேடர் குலத்தில் வளர்ந்த வள்ளிநாயகிக்குத் தலைவரே!
வேதாள கணம் புகழ்—பேய்க் கூட்டங்கள் புகழ்ந்து துதிக்கின்ற,

வேலவனே—வேற்படையை யுடையவரே!
ஆதாளியை—வீண் பேச்சுக்களைப் பேசுபவனும்,
ஒன்றும் அறியேனை—நன்மை ஒன்றும் அறியாதவனும்,
அற தீதாளியை—மிகவும் தீக்குணம் உடையவனும் ஆகிய அடியேனை,
ஆண்டது செப்புமதோ—ஒரு பொருளாகக் கருதி நீர் ஆட்கொண்ட அருள் திறத்தைச் சொல்லுந் தரமோ ?

பொழிப்புரை

கூதாள மலரைத் தரித்தவரே! வேடர் குலப்பாவை யாம் வள்ளிக்கு நாயகரே! பேய்க் கூட்டங்கள் புகழ்ந்து துதிசெய்கின்ற வேலாயுதரே! வீண் பேச்சு பேசுபவனும், நலம் ஒன்றும் அறியாதவனும், மிகவும் தீய குணம் உடையவனுமாகிய அடியேனை ஆட்கொண்ட உமது கருணைத் திறத்தை இத்தன்மையதென்று சொல்லுந் தரத்ததோ?

விரிவுரை

ஆதாளி :—

ஆதாளி-வீணன-பயன் இல்லாத வெறும் டம்ப வார்த்தைகள்.

"என் பாட்டனுர் பல்லக்கில் சென்ருர். என் பாட்டி பன்னீரில்தான் காலலம்புவார். என் பாட்டன் தங்கக் கட்டிலில்தான் படுப்பான்" என்பான்; ஆனுல் இவ்வாறு சொன்னவன் பழங் கஞ்சிக்குத் ததிங்கிணதோம் போடுவான்.

"அகதியை மறவனை ஆதாளி வாயனை"

—(அவகுண) திருப்புகழ்

ஒன்றறியேனை :—

நன்மை ஒன்றும் அறியாதவன். உம்மை-தொக்கி நின்றது. நன்மை யறிந்தவனே தீமையை விலக்கி அதனின்றும் விடுபடுவான்.

அற தீதாளியை :—

அற-மிகவும்.

"அறவே துயர் செய்து"

—கந்தபுராணம் (காசிபன் புலம்பு—15)

தீதை ஆளுகின்றவன் - தீதாளி; காமம், வெகுளி மயக்கம் முதலிய குற்றங்களையுடையவன்.

ஆண்டது செப்புமதோ ?:—

நற்குணமில்லாததோடு, தீக்குணங்களும் பூண்டிருந்த சிறியேனைக் குருவடிவாக வந்து நீர் ஆட்கொண்ட அருட் பெருங் கருணைத் திறத்தை இப்படிப் பட்டதென்று கூற வொண்ணுமோ! கூறமுடியாது.

கூதாள :—

கூதாளம் என்பது ஒரு செடி. இங்கே அதன் மலரைக் குறிகின்றது.

"முருகவிழ் கூதாள மாலிகை
தழுவிய சீர்பாத தூளியன்" —(இருகுழை) திருப்புகழ்

"முடியிற் கொண்ட கூதளம்"

—(அலகிலவுணரை) திருப்புகழ்

கிராதகுலிக் கிறைவா :—

கொலை புரிகின்ற வேடர்குலப் பாவைக்கும் வலியச் சென்று அருள் செய்த வள்ளல் ஆதலின், வாசனையில்லாத கூதாள மலரையுந் தரித்துக்கொண்டவன் ஆதலின் ஒன்றுக்கும் பற்ருத அடியேனையும் முருகன் ஆட்கொண்டான் என்று குறிப்பினுல் உணர்த்துகின்ருர்.

வேதாள கணம் புகழ் வேலவனே :—

மேற்கூறிய கருத்தையே வற்புறுத்தி வழிமொழிவார்போல், பேய்க் கூட்டங்கள் புகழ்ந்து துதிசெய்தால் அதையும் வேத மந்திரங்களைக் கேட்குந் திருச்செவியால் கேட்டு "பேஷ்" "சபாஷ்" என்று மெச்சியருளுகின்ற அவ்யாஜ கருணையுடையவன் முருகன் என்கின்ருர்.

"பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா"
—(காவியுடுத்தும்) திருப்புகழ்

இப்பாடல் அருணகிரிநாதரது சரிதத்தைக் குறிக்கும்.

முருகன் அளவற்ற கருணையுடையவன். தீயவை புரிந்தாரையும் தூயவராக்கி ஆட்கொண்டருளுபவன்.

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றல்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங்கொல்லோ? அடுசமர்இந்நாள் செய்த
மாயையின் மகனுமன்றே வரம்பிலா அருள்பெற்
றுய்ந்தான். —கந்தபுராணம்

கருத்துரை

வேலவரே! குற்றம் நிறைந்த சிறியேனை ஆட்கொண்ட நின் பெருங் கருணை பேசுந்தரமோ!

39: மாவேழ் சனனம் கெட மாயைவிடா
மூவேடனை என்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவ சங்கர தேசிகனே.

பதவுரை

கோவே—உலகங்கட்கெல்லாம் அரசே!

குறமின் கொடி தோள் புணரும்—குறவர் குலத்தில் வளர்ந்த மின்னல் கொடி போன்ற வள்ளிநாயகியின் தோள்களைத் தழுவுகின்ற,

தேவே—தெய்வமே!

சிவசங்கர தேசிகனே—மங்கல மூர்த்தியும் சுகத்தைச் செய்பவருமான சிவமூர்த்தியின் குருநாதரே!

மா ஏழ் சனனம் கெட—பெரிய ஏழுவகையான பிறவிகளும் தொலையுமாறு,

மாயை விடா—மாயையினின்றும் நீங்காத,

மூ ஏடணை—மூன்று ஆசைகளும்,

என்று முடிந்திடுமோ—எப்பொழுதுதான் அடியேனைப் பற்றுது அகலுமோ?

பொழிப்புரை

உலகங்கட்கெல்லாம் அரசே! குறவர் குலத்தில் வளர்ந்தவரும், மின்னல் கொடிபோன்றவரும் ஆகிய வள்ளியம்மையின் தோள்களைத் தழுவுகின்ற கடவுளே! மங்கல மூர்த்தியும் சுகத்தைச் செய்பவருமாகிய ஈசனுக்கு உபதேசித்த குருநாதரே! பெரிய ஏழுவகையான பிறவிகளும் நீங்குமாறு, மாயை விடாத மூன்று வகையான ஆசைகளும் என்றுதான் அடியேனை விட்டு விலகுமோ? (விலக அருள் புரிவீராக.)

விரிவுரை

மாவேழ் சனனங் கெட :—

மா - பெரிய. ஏழ் சனனம் - தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பன.

தேவர்	11	லட்சம்	கருவேறுபாடுகள்
மனிதர்	9	,,	,,
விலங்கு	10	,,	,,
பறவை	10	,,	,,
ஊர்வன	15	,,	,,
நீர்வாழ்வன	10	,,	,,
தாவரம்	19	,,	,,
ஆக	84	லட்சம்	யோனி பேதங்களாம்.

"உரை சேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம்
யோனி பேதம்
நிரைசேரப் படைத் தவற்றின் உயிர்க்குயிராய்
ஆங்காங்கே நின்றான்" —திருஞானசம்பந்தர்

"தரையி னூழ்த்திரை யேழே போலெழு
பிறவி மாக்கடலூடே நானுறு
சவலை தீர்த்துன தாளேகுடி" —(நிருதரார்) திருப்புகழ்

எழுகடல்களைப்போல் ஏழு பிறப்புக்கள். இப்பிறவிப் பெருங்கடல் கடத்தற்கரியது.

மாயை விடா :—

மாயையின் காரியம் உடல் முதலிய கருவிகள்.

மூவேடணை :—

தனேடணை, தாரேடணை, புத்திரேடணை.

தனேடணை - செல்வத்தாசை.

தாரேடணை - மனைவியாசை.

புத்திரேடணை - மக்கள் ஆசை.

இந்த மூவாசைகளும் எழுவகைப் பிறப்புக்களை உண்டாக்குகின்றன. இந்த ஆசைகளை விட்டாலன்றி பிறவிப் பெருங்கடலினின்றுங் கரையேற முடியாது.

ஏஷணு - ஆசை; இது வடசொல்; தமிழில் ஏடணை என வந்தது.

ஒருவன் ஆயிரம் பவுன்களைச் சேர்த்துவைத்திருந்தான். அழகிய இளம் மனைவி, ஐந்து வயதுப்பாலகன் இவர்களுடன் இனிது வாழ்ந்தான். மழைபொழிந்து வெள்ளம் வந்து அவன் வாழ்ந்த ஊரே வெள்ளத்தில் மூழ்கி விட்டது. அவன் பவுன் மூட்டையைத் தலையிலும், மனைவியை இடது தோளிலும், மகனை வலது தோளிலும் சுமந்து கொண்டு வெள்ளத்தில் நீந்தலானான்.

மேலும் வெள்ளம் வந்துவிட்டது. மூன்று சுமைகளும் அவனை அழுத்தின. ஏதாவது ஒன்றை விட்டால் சுமை குறையும்; நீந்தி அக்கரை சேரலாம் என்ற அக்கரை வந்தது. பொன் மூட்டையை விட்டான். சிறிது கனம் குறைந்து நீந்தினான்.

மேலும் வெள்ளம் வந்துவிட்டது. இப்போது இன்னும் ஒன்றை விட்டாலன்றி நீந்த முடியாது என எண்ணினான். மனைவியை விடுவதா? மகனை விடுவதா?

என்று சிந்தித்தான். மனைவியைத் தன் விருப்பத்தால் மணந்து கொள்ளலாம். குழந்தை தெய்வங் கொடுத்தாலன்றிக் கிடைக்காது. ஆதலால் மனைவியை விட்டு விட்டான்; சுமை நீங்கிக் கரைசேர்ந்தான்.

வெள்ளம் என்பது பிறவிப் பெருங்கடல். பொன்னாசை மனைவியாசை மக்களாசை என்ற மூவாசையும் ஒன்றொன்றாக விட்ட பின் முத்திக்கரை சேர்ந்தான். அநுபூதிக்கு ஆசைகள் தடை ஆதலால், ஆசைகளை விட்டு முருகன் அநுபூதியைப் பெறவேண்டும்.

கோவே :—

சகலலோக ஏகநாயகன் முருகன்.

"சர்வாண்டாதிபதௌ தஸ்மின் குஹே பரமபாவனே"

குறமின் கொடிதோள் புணருந் தேவே :—

முருகன் வள்ளியை மணந்து உலகங்கட்கெல்லாம் இன்பத்தை வழங்குகின்றான்.

சிவசங்கர தேசிகனே :—

சிவம் - மங்கலப் பொருள்.

சிவம் என்ற சொல் வேதத்தின் இதயமாக விளங்குவது. சிவ சப்தம் உபநிடதங்களுள் பயிலப்படுவது;

"ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவம் அத்வைதம்
சதுர்த்தம் மந்யந்தே" —மாண்டுக்ய உபநிஷத்

"சிவ என்று கொடிய சண்டாளன் சொன்னாலும் அவனுடன் பேசவேண்டும், அவனுடன் வசிக்கவேண்டும், அவனுடன் புசிக்க வேண்டும்" என்று வேதம் கூறுகின்றது.

அபிவா யச் சண்டாள: சிவ இதி வாசம் வதேத்
தேந ஸஹ ஸம்வதேத். தேந ஸஹ ஸம்வஸேத்
தேந ஸஹ புஞ்ஜீத. —முண்டக உபநிஷத்

சங்கரன். சம்-சுகம்; கரம்—செய்கின்றவன்; சுகத்தைச் செய்கின்றவன் சங்கரன். எனவே முருகனுடைய

திருவருளை நாடி அப்பரமனை வழிபட்டு, பிறவிக்கு வித்தாகிய ஆசையை விட்டு அநுபூதி பெறவேண்டும்.

கருத்துரை

சிவசங்கர தேசிகனே! ஏழு பிறவிகட்கும்வித்தாகிய மூன்று ஆசைகளையும் விலக்கி அருள் செய்.

40. வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதனோடு திரிந்தவனே.

பதவுரை

சுனையோடு—சுனையினிடத்தும்,
அருவித் துறையோடு—மலையருவிகள் விழும் துறைகளிடத்தும்,
பசும் தினையோடு—பசிய தினைப்புனத்திடத்தும்,
இதனோடு—பரணிடத்தும்,
திரிந்தவனே—வள்ளிநாயகிக்கு அருள் செய்யும் பொருட்டுத் திரிந்த பெருமானே!
வினை ஓட விடும்—ஆன்மாக்களின் நல்வினை, தீவினை என்ற இரு வினைகளும் ஓடும்படிச் செய்கின்ற,
கதிர்வேல் மறவேன்—ஞான ஒளி வீசுகின்ற வேலாயுதத்தை ஒருபோதும் மறக்கமாட்டேன்,
மனையோடு தியங்கி மயங்கிடவோ—மனைவியுடன் கூடி வாழும் இல்வாழ்வில் கலக்கங்கொண்டு மயக்கங் கொள்ளலாமோ ?

பொழிப்புரை

சுனைகளிடத்திலும், அருவித்துறைகளிடத்திலும், பசிய தினைப்புனத்திலும், பரணிடத்திலும் வள்ளிக்கு அருள் செய்யும் பொருட்டுத் திரிந்த பரமனே! ஆன்மாக்களின் வினைகள் விலகுமாறு செய்யும் வேலாயுதத்தை ஒருபோதும் அடியேன் மறக்கமாட்டேன். அப்படியுள்ளவனாகிய நான் மனைவியுடன் கூடிய இல்வாழ்வில்

கலங்கி மயங்கலாமோ? மயங்கக்கூடாது. அம் மயக் கத்தைப் போக்கி அருள் செய்வீராக.

விரிவுரை

வினை யோட விடும் கதிர்வேல் மறவேன் :—

ஆன்மாக்களின் வினைகள் மாயும் பொருட்டு வேல் அருள்புரியும். "வேலுண்டு வினையில்லை. மயிலுண்டு பயமில்லை" என்பர்.

"நீசர்கடமோடெனது தீவினை யெலாமடிய
நீடுதனி வேல்விடு மடங்கல் வேலா"
—(ஆறுமுகம்) திருப்புகழ்

வேலை வழிபடுவதையே வேலையாகவுடைய அடியார்க்கு வினைகள் தொடரமாட்டா.

"மூலமாம் வினையறுத் தவர்கள் வெம்பகையினை
முடித்து............வேலே" —வேல் விருத்தம் (5)

மனையோடு தியங்கி மயங்கிடவோ :—

ஞானவேலை மறவாதவனுகிய அடியேன் இல்வாழ்வில் தியங்கி மயங்கலாமோ? மயங்குதல் கூடாது. அம் மயக்கத்தைப் போக்கியருள் என்று வேலவனை வேண்டுகின்ருர் அடிகளார்.

சுனையோ டருவித்துறையோடு பசுந்தினையோ டிதணோடு திரிந்தவனே :—

சுனையின் கண்ணும், துறையின் கண்ணும், தினைப் புனத்தின் கண்ணும், பரணின் கண்ணும் திரிந்தார் முருகர். ஏன்? தன்னை நோக்கித் தவஞ்செய்த வள்ளியை ஆட்கொள்ளும் பொருட்டு. வள்ளி பிராட்டி செய்த பயிர் ஞானப்பயிர். சுனையென்பது. ஆனந்தவூற்று. அருவித் துறை-சத்திநிபாதம். இதண்-உறுதிப்பாடு. வள்ளி-பக்குவப்பட்ட ஆன்மா.

ஒடு என்ற உருபுகள் நான்கும் உருபு மயக்கம். இவை ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தன.

மறவேன் - வினையாலணையும் பெயர். மனை, தினை என்பவை இடவாகு பெயர்கள்.

கருத்துரை

முருகா! வேலாயுதத்தை மறவேன். மனைவாழ்வின் மயக்கத்தை மாற்றியருள்.

41. சாகா தெனையே சரணங்களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வாகனனே
யோகா சிவஞா னொப தேசிகனே,

பதவுரை

வாகா—அழகரே!
முருகா—முருகக் கடவுளே!
மயில் வாகனனே—மயில்மீது வரும் பெருமானே!
யோகா—சராசரங்களில் கலந்திருப்பவரே!
சிவஞான உபதேசிகனே—சிவஞானத்தைப் பக்குவ ஆன்மாக்களுக்கு உபதேசிக்கின்றவரே!
நமனார் கலகம் செயும் நாள்—இயமன் வந்து என் பரு உடம்பில் இருந்து உயிரைப் பிரிக்கும் பொருட்டு பாசக் கயிற்றை வீசிக் கலகம் புரிகின்ற நாளிலே,
சாகாது—அடியேன் இறவாதபடி,
எனை சரணங்களில் காகா—அடியேனை உமது திருவடி நிழலில் தங்குமாறுசெய்து காத்தருள்வீராக.

பொழிப்புரை

அழகரே! முருகவேளே! மயில்வாகனரே! சராசரங் களில் கலந்திருப்பவரே! சிவஞானத்தைப் பக்குவ ஆன் மாக்களுக்கு உபதேசிப்பவரே! இயமன் என்பால் வந்து கலகம் புரியும் நாளில் சாகாதபடி, உமது திருவடி நிழ லில் என்னைச் சேர்த்துக் காத்தருளுவீராக.

விரிவுரை

சாகாதெனையே :—

முருகன் திருவடியை நினைக்கும் மெய்யடியார் சாகா வரம் பெறுவர். ஏனையோரைப்போல் இறந்து மறைந்து போகமாட்டார்கள்.

அருணகிரியார் மரணமிலாப் பெருவாழ்வு பெற்றவர். இப்பாடல், நம்போன்ற பக்குவம் பெறாதவர்களுக்காகப் பாடியுதவினர் எனவுணர்க.

சரணங்களிலே காகா நமனர் கலகஞ் செயுநாள் :—

மரணத்தின்போது, முருகா உன் சரணத்திலே வைத்துக் காப்பாற்று. கா கா விரைவுபற்றி வந்த அடுக்குத் தொடர். நமனர்-இயமன்.

"அறியாரோ நமனர் அதன்றெனில்
சிறியாரோ உபகாரம் சிந்தியார்"

—கம்பராமாயணம் (தாரை புலம்பல்)

அடியார்க்கு மரண பயம் இல்லை என்பதைப் பின் வருவனவற்றால் அறிக.

"சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி" –அப்பர்

இறையென் சொல் மறவேல் நமன் தூதுவீர்
பிறையும் பாம்பும் உடைப்பெரு மான்தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வார் எதிர் செல்லலே. —அப்பர்

அருணகிரிநாதர் நமனுக்கு அஞ்சாதவர் என்பதனை அடியில் வரும் கந்தரலங்காரப் பாடல்களால் அறிக.

"ஓலையுந் தூதருங் கண்டு திண்டாடல் ஒழித்தெனக்குக்
காலையு மாலையு முன்நிற்குமே" (27)

"தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன்விட்ட கடையேடுவந்தினி என்செயுமே" (87)

"சூலம்பிடித் தெமபாசஞ் சுழற்றித் தொடர்ந்து வரும்
காலன் தனக்கொரு காலும் அஞ்சேன்" (107)

தண்டாயுத முந்திரி சூலமும் விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டிவிழ விடுவேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோதஞானச் சுடர் வடிவாள்
கண்டாயடா அந்தகா வந்துபார் சற்றென்
கைக்கெட்டவே. (25)

பட்டிக்கடாவில் வரும் அந்தகா உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண்டலாது விடேன்
வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருத செவ்வேற் பெருமாள்
திருமுன்பு நின்றேன்
கட்டிப் புறப்படடா சத்திவாள் என்றன் கையதுவே.(64)

தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி எனைத்தேற் றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை என்செய்யலாஞ் சத்தி
வாளொன்றினால்
சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்
த்ரிசூலத்தையே. (69)

வாகா :—

வாகு—அழகு. வாகா—அழகனே!
வாகு—தோள். சிறந்த தோள்களையுடையவனே!
வாகை—வெற்றி என்றும் பொருள்படும்.
பகைவரை வென்று சூடும் மாலை வாகை மாலை.

ஆண்பால் படர்க்கை விகுதி சேரும்போது 'ஐ' கெட்டு அன் விகுதி பெற்று வாகன் எனப்படும். இது விளியாகிய பொழுது வாகா என வந்தது.

உயிர்களுடைய மல இருளை நீக்கி அருள் ஒளியை விளங்கவைத்து, தனது திருவடி அநுபூதியைத் தருவதில் வெற்றியுடையவன் முருகன்.

"வெற்றிவீரப் பெருமானே! நமன் கலகம் புரியும் போது கலகந் தீர்த்துக் காத்தருள்" என்றார்.

இன்னும் ஒரு பொருள். கா கா—காத்தருள் காத்தருள் என்றதனுல் இருந்த இடத்திலேயே எம்பெருமான் காலன் கலகத்தைப் போக்க வல்லவன்.

அப்படிக்கு இன்றி,
வா-வந்தருள்.
கா-காத்தருள்.
வா கா-வந்து காத்தருள்.

அப்படி உடனே ஒரு நொடிப்பொழுதுக்குள் வருவதற்கு உன்னிடம் மயில் வாகனம் உளதல்லவா? எனவே "மயில் மீது வா" "வந்து கா முருகா!" என்று நயமாகக் கூறுகின்றுர்.

யோகா:—யோகி என்பது பொருள்.

"யோகியாய் யோகமூர்த்தி உதவுதல் அதுவும் ஓரார்"
—சித்தியார் (70)

யோகம்-ஒன்றுபடுதல். உயிரில் பொருள், உயிருள் பொருள் ஆகிய சராசரப் பொருள்களில் எங்கும் அத்துவிதமாகக் கலந்து அருள் புரிபவன் முருகன். "உம்பர் கட்கரசே ஒழிவற நிறைந்த யோகமே" என்று பிடித்தப் பத்தில் முதற் பாட்டில் மாணிக்கவாசகர் இந்தப் பொருளில் கூறுமாறுங் காண்க.

சிவஞானேபதேசிகனே :—

ஞானேப என்ற சொல்லில், ஓகாரம் குறுகிற்று.

முருகன் சிவஞானத்தைப் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குக் குரு வடிவாய் வந்து உபதேசிக்கும் பெருமான். அதனுல் அப்பெருமான், குரு, குருநாதன், குருசாமி, குமரகுரு, சிவகுரு, ஞானகுரு, என்றெல்லாம் பேர் பெற்றுன்.

கருத்துரை

முருகா! கூற்றுவன் குறுகி என்னைப் பற்றும் பொழுது காத்தருள்.

42. குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற் றுலகோடுரை சிந்தையுமற்
றறிவற் றறியாமையும் அற்றதுவே.

பதவுரை

குறியை—தியானிக்கப்படுகின்ற பொருளை,

குறியாது குறித்து—காலம் இடம் முதலியன இன்றி பிற வற்றை நினையாமல் அதனையே தியானித்து,

அறியும் நெறியை—பசுஞான பாசஞானங்களா லன்றி பதிஞானத்தால் அறியும் உண்மை வழியை,

தனி வேல் ஐ நிகழ்த்திடலும்—ஒப்பற்றவேலாயுதத்தை யுடைய கடவுள் மௌனகுருவாய் வந்து உள் நின்று உணர்த்தியவுடனே,

உலகோடு செறிவு அற்று—உலகத்தாரோடு நெருங்கும் உறவு அற்று,

உரை அற்று—வாக்கும் அற்று,

சிந்தையும் அற்று-நினைவும் அற்று,

அறிவற்று—சுட்டியறிகின்ற அறிவும் அற்று,

அறியாமையும் அற்றதுவே—அறியாமையும் அடியுடன் நீங்கிவிட்டன.

பொழிப்புரை

தியானத்துக்குரிய அருட் குறியை, பிறவற்றைக் குறியாது குறித்துத் தியானித்து, பாச ஞானம் பசு ஞானங்களை விட்டு பதிஞானத்தால் அறிந்து நிலைத்து நிற்கும் உண்மை நெறியை, ஒப்பற்ற வேலையுடைய முருகன் அருட்குருவாய் வந்து, உபதேசித்து உள் நின்று உணர்த்தியவுடனே, உலகத்தவரோடு நெருங் கிய தொடர்புகளும், பேச்சும், மனமும் சுட்டியறி கின்ற அறிவும் அறியாமையும் அடியுடன் அற்றுவிட் டன.

விரிவுரை

இந்தப் பாடல் மிகச் சிறந்தது. இதில் அடிகளார் தமக்குப் படைத்த சுவாநுபூதியைக் கூறுகின்றார்.

இதில் ஒரு நயம், தனக்கு என்ன வந்தது என்று கூருமல், என்ன என்ன அற்றுவிட்டன் என்று கூறுகின்ருர். ஒருவன் ஒரு நண்பனைப் பார்த்து வள்ளல் ஒருவன் எனக்கு உதவினுன். அதனுல் கடன் தொல்லைகளும் பஞ்சமும் பட்டினியும் போய்விட்டன என்று சொல்வது போல் அமைந்துள்ளது.

முன் தனக்கு முருகன் உணர்த்திய அநுபூதி ஞானத்தைச் சொல்லவில்லை என்று 12, 20, 28, 30,— ஆவது பாடல்களில் கூறினுர். அப்படிச் சொன்ன அடிகளார் எப்படியாவது அன்பர்கட்கு அறிவிக்கவேண்டும் என்ற கருணையினுல் உடன்பாட்டு முகத்தால் கூருது எதிர்மறை முகத்தால் கூறிய பாடல் இது.

குறியை :—

வேத சிவாகமங்களாலும், திருமுறைகளாலும், சித்தாந்த சாத்திரங்களாலும், "சிவம் ஒன்றே குறிக்கத் தக்க பொருள், தியானப்பொருள்" என்று உறுதியுடன் அறுதியிட்டுக் கூறப்படுகின்றது.

"ப்ரம்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே
நகாரணம்—காரணந்து த்யேயச் சம்பு:"

என்று வேதம் முழங்குகின்றது.

இத்தகைய சிவமே முருகன் ஆதலின் தியானப் பொருள் அப் பரமனேயாகும்! அவனன்றி வேறு பொருள் தியானிக்கற் பாலதன்று.

ஆதலால் தியானிக்கத்தக்க அந்த அருட்குறியைக் குறித்துத் தியானிக்கின்ற போது, பிறவற்றைக் குறியாது குறிக்கவேண்டும்.

குறியாது குறித்தறியும் நெறியை :—

துரோணர், குருகுலத்தில் ஒரு மரத்தின் கிளையில் ஒரு கள்ளிக் காக்கையின் பதுமையை வைத்து, மாண

வர்களை அழைத்து, "இந்தக் குறியை ஒரே கணையால் அடிக்க வேண்டும். அடித்தவனுக்கு முதற் பரிசு அளிக்கப்படும். குறிபார்த்து நில்லுங்கள்" என்றார். எல்லோரும் ஆடாமல் அசையாமல் வில்லும் அம்பும் ஏந்தி நின்றார்கள். துரோணர், "துரியோதனா! லட்சியத்தைப் பார்க்கின்றாயா?" என்றார்.

துரியோதனன்: "பார்க்கின்றேன்"
துரோணர்: "பதுமை கட்டிய கிளை தெரிகின்றதா"?
துரியோதனன்: "தெரிகின்றது"
துரோணர்: "மரம் தெரிகின்றதா?"
துரியோதனன்: "தெரிகின்றது".
துரோணர்: "நான் தெரிகின்றேனா?"
துரியோதனன்: "தெரிகின்றீர்".
"கீழே வை வில்லை" என்றார் துரோணர்.

தருமர் முதல் எல்லா மாணவர்களும் அவ்வாறே கூறினார்கள்.

முடிவில் அர்ச்சுனனைப் பார்த்து, "பார்த்தா! இந்தக் குறியைப் பார்க்கின்றனையா?" என்றார்.

அர்ச்சுனன்: "ஆம் பார்க்கின்றேன்" என்றான்.
துரோணர்: "கிளை தெரிகின்றதா?"
அர்ச்சுனன்: "இல்லை"
துரோணர்: "மரம் தெரிகின்றதா?"
அர்ச்சுனன்: "இல்லை"
துரோணர்: "நான் தெரிகின்றேனா?"
அர்ச்சுனன்: "இல்லை"
துரோணர்: "இப்போது அந்தப் பட்சி தெரிகின்றதா?"
அர்ச்சுனன்: "இல்லை"
துரோணர்: "என்ன தெரிகின்றது?"
அர்ச்சுனன்: "பட்சியின் தலைமட்டும் தெரிகின்றது"

துரோணர்: "நல்லது. இப்போது தலை தெரி கின்றதா?"

"இல்லை, தலையுந் தெரியவில்லை; பறவையின் உடம் பும் தெரியவில்லை. கழுத்து மட்டுந்தான் தெரிகின்றது" என்றான் பார்த்தன்.

"விடு கணையை" என்றார் குருதேவர்.

அர்ச்சுனன் கணையைவிட்டான். பதுமையின் தலை கீழே விழுந்தது.

"துரியோதனா! குறிவைத்துப் பார்க்கின்ற உனக் குக் கிளையும் தெரிகின்றது. மரமும் தெரிகின்றது. நானும் தெரிகின்றேன் என்றால் கணையை யார் மேல் எதன் மேல் ஏவுவாய்? குறிபார்க்கின்ற உனக்கு மற் றவை தெரியலாமா?" என்று அறிவுறுத்தினார் துரோணர்.

இதுபோல் முருகன் திருவடியிலே குறிவைத்துத் தியானிக்கின்றவர்கள் பிறவொன்றையுங் குறிக்கக் கூடாது. தியானப் பொருளில் அது அதுவாய் ஒன்றி விடவேண்டும். இந்த அரிய பெரிய அருள் நலமாகிய உண்மை நெறியை அருணகிரியார் முருகனருளால் கைவரப் பெற்றார். "நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்" என்ற திருவிளையாடற் புரா ணப் பாடலையும் இங்கு நினைவு கூர்க.

நெறியை :—

நெறி—வழி, அருள் நிறைந்த உண்மை நெறி; இது காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என்ற திரிபுடி யற்ற நிலை.

தனிவேலை நிகழ்த்திடலும் :—

தனிவேல் ஐ. ஐ-கடவுள்.

ஒப்பற்ற வேலை யேந்திய கடவுளாகிய முருகன் அருட் குருவாகத் தோன்றி என்னுள் அத்துவிதமாகக்

கலந்து இந்த நெறியை உணர்த்தியருளினுன். இது வாக்கினுல் உரைக்கற்பாலதன்று. அதனுல் நிகழ்த்தி யருளினுர்.

இதனைக் கல்லாலின்கீழ் எழுந்தருளிய தட்சிணு மூர்த்தி சனகாதி முனிவர்கட்கு உணர்த்தியருளினுர். அவர் கூறும் அருள் வசனம் இது.

நன்னல மைந்தர்காள் ஞான போதகம்
சொன்னடை யன்றது துயரம் நீங்கியே
இந்நிலே மோனமோ டிருந்து நந்தமை
உன்னுதலே என உணர ஓதினுன். —கந்தபுராணம்

இதனைச் சிவஞானசித்தியார் 8 ஆம் சூத்திரம் 30 ஆவது பாடலால் அறிக. அப்பாடல் இது.

அறியாமை அறிவகற்றி அறிவின் உள்ளே
அறிவுதனை யருளினுன் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயில்
பிறியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெல்லாம் தானுய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்லவாகி
நின்றென்றும் தோன்றிடுவன் நிராதாரனுயே.

இதன் பொருள் :—

அறியாமை அறிவகற்றி-அறியாமையாகியகேவலா வத்தையையும் அறிவாகிய சகலாவத்தையையும் சிவ ஞானத்தால் நீக்கி, அறிவின் உள்ளே அறிவுதனை அருளினுல் அறியாதே அறிந்து—ஆன்மாவினிடத்துப் பர மான்மாவாய்ப் பிரிவற உள்ளிருந்த சிவத்தை அருளி னுலே பகுத்தறியாது அறிந்து, குறியாதே குறித்து— தற்போதத்தால் சுட்டி நிச்சயிக்காது, அருளினுல் விரிய நிச்சயித்து, அந்தக் கரணங்களோடும் கூடாதே வாடாதே-பின்பு கருவிகளோடு கூடிச் சகலப்படாமலும்

கேவலப்படாமலும், குழைந்து இருப்பையாயின்—அவ் வருளோடுகூடி நிட்டை செய்து இருக்கப்பெறின், பிறி யாத சிவன் தானே பிரிந்து தோன்றி—பெத்த நிலையில் ஆன்மாவோடு பிரிவின்றி அபேதமாய் நின்ற சிவன் இச் சுத்த நிலையில் பிரிந்து பேதமாய்த் தோன்றி, பிர பஞ்சபேதம் எலாம் தானாய்த் தோன்றி—தநுகரணாதி உலகப் பொருள்கள் யாவும் சிவ சொரூபமாய்த் தோன் றக் காட்டி, நெறியாலே இவையெல்லாம் அல்ல ஆகி நின்று—உண்மையிலே இவ்வுலக பேதமெல்லாம் தானல்லவாக வேறாய் நின்று, என்றும் நிராதாரனாய்த் தோன்றிடுவன்-என்றும் பற்று ஒன்றின்றித் தனியே தோன்றுவன்.

குறியாக் குறியினில் கூடாத கூட்டத்
தறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றும்
செறியாச் செறிவே சிவமென லாமே.

—திருமந்திரம் (2638)

இந்தத் திருமந்திரப் பாடலும், மேலே கண்ட அநு பூதிப் பாடலும் ஒத்திருப்பதை உய்த்துணர்க.

"குறியுங் குணமுமறக் கூடாத கூட்டத்
தறிவறிவாய் நின்றுவிட ஆங்கே—பிறிவறவும்
சும்மா இருத்திச் சுகங்கொடுத்த மோனநின்பால்
கைம்மாறு நானொழிதல் காண்"

என்று தன் அநுபவத்தைத் தாயுமான அடிகளார் அழ காகக் கூறுகின்றார்.

பின்னேயுள்ள இரண்டு அடிகளில் தன் அநு பவத்தை அடிகளார் கூறுகின்றார்.

செறிவற்றுலகோடு :—

உலகு-என்பது உலகத்திலுள்ள மக்களைக் குறிக் கும். உலகில் வாழும் மக்களோடு பழகும் கலப்பு அற்று விட்டது. செறிவு-கலப்பு.

உரை சிந்தையும் அற்று:—

பேச்சும், பேச்சுக்கு மூலமான சிந்தையும் அற்று விட்டன.

"மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே"

—சிவபுராணம்

"உரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே"

—கந்தரலங்காரம் (61)

அறிவற்றறியாமையு மற்றதுவே;—

அறிவு என்பது-பாச ஞானத்தையும் பசு ஞானத்தையுங் குறிக்கும்.

"பாசஞா னத்தாலும் பசு ஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடி"

—சிவஞான சித்தியார் (9-ம் சூத்திரம்)

பாச ஞானம் என்பது வேத முதலிய நூல்களால் வருவது. பசு ஞானம் - நான் பிரமம் என்று எண்ணுவது.

எனவே பாச ஞானம் பசு ஞானம் என்ற இருவகையான அறிவும் அற்றது

"அறிவறியாமை கடந்தறிவானல்
அறிவறியாமை அழகியவாறே" —திருமந்திரம் (2362)

"அறிவும் அறியாமையுங் கடந்த அறிவுதிரு மேனி
யென்றுணர்ந்துன்
அருண சரணர விந்தமென்று பெறுவேனே"

—(குகையில்) திருப்புகழ்

கருத்துரை

தியானப் பொருளை தனிவேற் கடவுள் குருவாக உள் நின்று உபதேசித்து உணர்த்தியவுடனே, மனம், அறிவு அறியாமை யாவும் நீங்கிவிட்டன.

43: தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

பதவுரை

தூசு ஆம் மணியும்-தூய்மையான இரத்தின மணிகளும்,
துகிலும் புனைவாள்—ஆடையும் அணிகின்ற வள்ளி பிராட்டியாரின்,
நேசா—காதலரே!
முருகா—முருகப் பெருமானே!
நினது அன்பு அருளால்—தேவரீருடைய அன்புடன் கூடிய அருளினால்,
ஆசா நிகளம்—ஆசையாகிய விலங்கு,
துகள் ஆயினபின்—தூள் தூளாக முற்றிலும் பொடியா யினபின்பு,
பேசா அநுபூதி பிறந்தநுவே—மௌனம் என்ற அநுபூதி நிலை அடியேனுக்குத் தோன்றியது.

பொழிப்புரை

தூய்மையான இரத்தினமணிகளும், ஆடையும் அணிந்த வள்ளி நாயகியின் காதலரே! முருகப் பெருமானே! உமது அன்புடன் கூடிய திருவருளினால், ஆசையாகிய சங்கிலி பொடிப் பொடியாக ஆனபின் மௌன நிலையாகிய அநுபூதி நிலை அடியேனுக்குத் தோன்றியது.

விரிவுரை

தூசாமணியும்:—

தூசு-தூய்மை, தூய்மையான இரத்தின மணிகள். முத்து பவளம் பச்சை முதலிய மணிமாலைகள்.

தூசு ஆம் அணியும் எனப் பிரித்து, தூய்மையான அணிகலன்கள் எனினும் பொருந்தும்.

துகிலும் புனைவாள்:—

துகில்-ஆடை: முன்தானையில் இரத்தினமணிகள் பதித்த உயர்ந்த ஆடை. புனைவாள்-வினையாலணையும் பெயர்.

“மரகத மணிப்பணியின் அணிதழையு டுத்துலவும்
வனசரர் கொடிச்சி” —வேடிச்சி காவலன் வகுப்பு

“தருணமணியவை பலபல செருகிய
தலையள் துகிலிடை அழகிய குறமகள்”
—(முருகு செறி) திருப்புகழ்

நேசா:—

வள்ளியம்மை மிகுந்த தவஞ் செய்தவர். அதனால் எம்பெருமான் அவர்மீது அதிக நேசம் பூண்டிருக்கின்றார். இச்சாசக்தியாகிய அப்பிராட்டியைக் கொண்டே ஆன்மாக்களுக்கு அருளுகின்றான். ஆதலின், நேசா என்றார்.

நினதன்பருளால்:—

இறைவன் அறச்செம்மை யுடையார்பால் அன்பு வைக்கின்றான். பக்குவப்பட்டு அருட்செம்மை யுடையார் பால் அருள் வைக்கின்றான்.

ஆன்மாக்கள் இறைவனிடம் அன்பாகிய வித்தை விதைத்தால் அருளாகிய பழம் பழுக்கும். நாம் இறைவனிடம் அன்பு வைக்கவேண்டும். அவன் நம் பால் அருள் வைக்கின்றான்.

பணத்தைக் கொடுத்துப் பண்டத்தைப் பெறுவது போல் அன்பைச் செலுத்தி அருளைப் பெற வேண்டும் எனத் தெளிக.

ஆசா நிகளந் துகளாயின:—

முருகனுடைய அருட்பரிசால் ஆசையாகிய சங்கிலி பொடிப் பொடியாகத் துகள்பட்டொழிந்தது.

அநுபூதிக்கு ஆசை தடையாக இருக்கும்.

இறைவனிடத்திலேகூட அன்புதான் வைக்க வேண்டும். ஆசை வைக்கக்கூடாது.

"ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்"
—திருமந்திரம் (2615)

சீடன் குருநாதனை அணுகி 'இறைவன் எங்கே? எத்தனை தொலைவில் இருக்கின்றான்?' என்று வினவி னான். அதற்கு அவர் "ஆசையாகிய சங்கிலி எத்தனை நீளம் உளதோ அத்தனை தூரத்தில் இருக்கிறான்" என்று விடையிறுத்தார்.

சங்கிலி இரும்பு வளையங்கள் பல சேர்ந்தது. அது போல் ஒவ்வொரு பொருளிலும் உள்ள ஆசை ஒவ்வொரு வளையமாகும். பல வளையங்கள் சேர்ந்தது சங்கிலி. பல ஆசைகள் சேர்ந்து நீளமாகியிருக்கின்றது. ஒவ் வொரு வளையமாகக் கழற்றி எறிவதுபோல், ஒவ்வொரு ஆசையையும் விட்டொழிக்க வேண்டும். ஆசையான சங்கிலி முற்றிலும் அழிந்தால் இறைவனுடன் நாம் ஒன்றுபட்டுவிடலாம். நிகளம்-சங்கிலி.

"கஜக் கடவுள் பதத்திடு நிகளம்" —வேல் வகுப்பு

இந்திராதி தேவர்களின் கால்களில் சூரன் இட்ட சங்கிலிகளை அறுத்த ஐயன் ஆசைச் சங்கிலியையும் விபூதியாக்கிவிட்டான்.

பேசா அநுபூதி பிறந்ததுவே:—

ஆசையானது முற்றும் வலியிழந்தபின் தனக்குப் பேசா அநுபூதியாகிய மௌனநிலை எய்தியது என்று அடிகளார் கூறுகின்றார்.

பேசா அநுபூதி பிறக்க எனதுளத்தில்
ஆசா பசாசை அகற்றுவாய்—தேசாளும்

சிற்பரா னந்தா! திருவால வாயுறையுந்
தற்பரா! சொக்கநா தா!
—சொக்கநாத வெண்பா (குருஞானசம்பந்தர்)

பேசா—என்றதை வாய் பேசாத என்று கொள்ளக் கூடாது பஞ்சவாக்குகளும் அடங்கி மனமும் அடங்கிய பரம மோன நிலையாகும்.

பஞ்சவாக்குகள்—சூக்குமை, பைசந்தி, மத்திமை, சூக்குமவைகரி, தூலவைகரி என்பன.

பேசா அநுபூதியையடியேன் பெற்றுப்பிழைக்கப் பேரருளால்
தேசோ மயந்தந் தினியொருகால் சித்தத் திருளுந்
தீர்ப்பாயோ
பாசா டவியைக் கடந்த அன்பர்பற்றும் அகண்டப் பரப்பான
ஈசா! பொதுவில் நடமாடும் இறைவா குறையா இன்னமுதே!
—தாயுமானர்

பேசாத மோனநிலை பெற்றவர்க்கே நின்னருளாம்
வாசாம கோசரந்தான் வாய்க்கும் பராபரமே! —தாயுமானர்

இந்த அநுபூதிப் பாடல் மிக்க இனியதும் உயர்ந்ததும் ஆகும். அடிகளாருடைய அனுபவத்தைக் கூறுவது. ஆசை வயப்பட்ட ஆன்மாக்களுக்குக் கூறும் அறவுரையுமாகும்.

கருத்துரை

வள்ளி நாயகனே! உனது அன்பருளால் ஆசைச் சங்கிலி பொடியான உடனே பேசா அநுபூதி பிறந்தது.

44: சாடுந் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ
வீடும் சுரர்மாமுடி வேதமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே.

பதவுரை

சாடும்—பகைவர்களேயும்; மலமாயா கன்மங்களேயும் அழிக்கின்ற,

தனி வேல் முருகன் சரணம்-ஒப்பற்ற வேலாயுதத்தை யுடைய முருகனுடைய திருவடிகள்,
வீடும்-முத்தித் தலத்திலும்,
சுரர் மாமுடி-தேவர்களுடைய சிறந்த தலைகளிலும்,
வேதமும்-வேதங்களிலும்,
வெம் காடும் புனமும் கமழும்-வள்ளியம்மை வாழ்ந்த வெப்பமான காட்டிலும் தினைப்புனத்திலும் மணக்கும்படி விளங்கும்,
கழல் சூடும்படி தந்தது - அத்தகைய திருவடியை அடியேன் சென்னியின்மீது சூட்டிக்கொள்ளும்படி தந்தருளிய கருணையை,
சொல்லுமதோ-சொல்ல முடியுமோ? முடியாது.

பொழிப்புரை

அசுரர்களையும் மலமாயா கன்மங்களையும் அழிக்க வல்ல ஒப்பற்ற வேலாயுதத்தையுடைய முருகனுடைய பாதமலர், முத்தித் தலத்திலும், தேவர்களின் சிறந்த தலைகளிலும், வேதங்களிலும், வள்ளி பிராட்டியின் கானகத்திலும், தினைப்புனத்திலும் கமழ்வது ஆகும். அத்தகைய ஞானத் திருவடியை அடியேனுடைய சென்னியில் சூட்டிக் கொள்ளுமாறு தந்தருளிய அப்பரமனுடைய கருணைத் திறத்தைச் சொல்ல முடியுமோ? முடியாது.

விரிவுரை

இந்த அநுபூதிப் பாடல் அருணகிரியாருக்கு ஆறுமுகப் பெருமான் திருவடி தீட்சை தந்த அருள் திறத்தைக் கூறுவது.

சாடும்:—

சாடுதல்—அழித்தல்.

இங்கே, சூராதியவுணரையும், ஆன்மாக்களின் மலமாயா கன்மங்களையும் அழிக்கின்றதைக் குறிக்கின்றது

தனிவேல் முருகன்:—

தனி—ஒப்பற்ற. முருகனுடைய வேல் சமானமில்லாதது.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்ன வில்வேல் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

சரணம்:—

அடியார்க்குப் புகலிடமாயிருப்பது முருகனுடைய திருவடி. இந்த சரண கமலாலயம் நான்கு இடங்களில் கமழ்ந்தது.

வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெங்காடும், புனமும் கமழும்:—

(1) வீடு—முத்தித்தலம். வீடு—விடு என்ற முதனிலை நீண்ட தொழிற் பெயர். பந்தபாசத்திலிருந்து விட்ட இடமே வீடு. இது வடமொழியில்—முக்தி. முச்தி—விடுதலை. நத்தையிலிருந்து விடுபட்டதால் முத்து எனப்பட்டது.

(2) சுரர் மா முடி—தேவர்களின் சிறந்த தலை.

(3) வேதமும்—நான்கு வேதங்கள்.

(4) வள்ளியம்மையிருந்த காடும் புனமும். இந்த இரண்டும் ஒன்றுதான்.

வீடும் சுரர் என்று ஒன்று சேர்ந்து, சூரன் இட்ட சிறையிலிருந்து விடுபட்ட தேவர் என்றும்,

வீடும்-இறந்துபடுகின்ற அநித்தர்களான தேவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

வேதம்-இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம்.

வெங்காடும் புனமும்-வெப்பமான காட்டிலே வள்ளியம்மைக்கு அருள் செய்யும் பொருட்டு எம்பிரான் தன்னுடைய மென்மையான திருவடி வருந்த உலாவினர்.

"இமையவர் முடித்தொகையும் வனசரர் பொருப்பும்என
திதயமும் மணக்கும் இரு பாதச் சரோருகனும்"
—வேடிச்சி காவலன் வகுப்பு

"எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை
இரலைமரை இரவுபகல் இரைதேர் கடாடவியில்
எயினரிடும் இதணதனில் இளகுதினை கிளிகடிய
இனிதுபயில் சிறுமிவளர் புனமீதுலாவுவதும்
........மணநாறு சீறடியே" —சீர்பாத வகுப்பு

"குறமறவர் கொடியடிகள் கூசாது போய் வருட
கரடிபுலி திரிகடிய வாரான கானில்மிகு
குளிர்கணியி னிளமரமதேயாகி நீடியுயர் குன்றுலாவி"
—(உறவின்முறை கதறி) திருப்புகழ்

கழல் சூடும்படி தந்தது சொல்லுமதோ:—

மேலே கூறியவாறு அரியதிலும் அரியதாகிய முருகனுடைய பாதாரவிந்தம் சிறியேனுடைய சென்னியில் சூடும்படி தந்தருளினர். அக் கருணையின் எளிமையை அடியேனல் அளவிட்டு உரைக்க வொண்ணுமோ? என்று அடிகளார் வியந்து விளம்புகின்ருர்.

திருவடி தீட்சை பெற்றவரிடம் கூற்றன் குறுகான்.

"கோவாய் முடுகி அடுதிறற் கூற்றம் குமைப்பதன்முன்
பூவார் அடிச்சுவ டென்மேற் பொறித்துவை" —அப்பர்

"பூவார் அடிச்சுவ டென்மேல் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"
—திருவாசகம்

"இபமுகவ னுக்குகந்த இளையவ மருக்கடம்ப
எனது தலையிற் பதங்கள் அருள்வோனே"
—(களபமுலை] திருப்புகழ்

"நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்"
—(நினைந்துருகு) அப்பர்

"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றேம் என்றவர்தம்
சென்னிமிசை பாதமலர் சூட்டினன் சிவபெருமான்"
—பெரியபுராணம்

அருணகிரியார் தன் சிரத்தில் செவ்வேட்பரமன் திருவடி சூட்டிய கருணையைத் திருப்புகழிலும் கூறியுள்ளார்.

அப்பர் பெருமானுக்குத் திருநல்லூரிலே சிவபெருமான் திருவடி சூட்டியதை அப்பெருமானுங் கூறுகின்றார்.

"முருகா! மூவருக்கும் தேவருக்கும் வேதாகமங்கட்கும் எட்டாத நீர் ஒன்றுக்கும் பற்றாத மிகச் சிறியேனுடைய தலைமீது உமது திருவடியைச் சூட்டினீரே! என் தவமே தவம்! என் பாக்கியமே பாக்கியம்! ஆ! அடியேன் பெற்ற பேறு ஆர்பெறுவார்? என்னே நின் கருணை! அதனை என்னென்று சொல்வேன்! எப்படி வாழ்த்துவேன்! அது சொல்லுக்கு அடங்குமா? அடங்காதே.

உமது திருவடி பட்டதனால் என் தலையின்மீது இருந்த அயன் கையெழுத்து அழிந்துவிட்டதே. நாமகள் கணவன் நாணுகின்றானே!"

என்றெல்லாம் கந்தரலங்காரம் நாற்பதாவது பாடலில் கூறி அடிகளார் இன்பத்தினால் கிளுகிளுத்து உவகையுறுகின்றார்.

தாயுமானவர் தனக்குக் கிடைத்த திருவடி தீட்சையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

> "அன்பருக் கன்பான மெய்யன்—ஐயன்
> ஆனந்த மோனன் அருட்குரு நாதன்
> தன்பாதஞ் சென்னியில் வைத்தான்—என்னைத்
> தானறிந் தேன் மனந் தானிறந்தேனே."

கருத்துரை

முருகா! முத்தியிலும், தேவர் தலைப்பத்தியிலும், வேத வித்தையிலும், தினைப்புனச் சித்தியிலும் மணக்கும் உன் பாதாரவிந்தத்தை என் சிரத்தில் சூட்டிய பெருங் கருணை பேசுந்தரமன்று.

45: கரவாகிய கல்விபுளார் கடைசென்
றிரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ
குரவா குமரா குலிசாயுதகுஞ்
சரவா சிவயோக தயாபரனே.

பதவுரை

குரவா—சற்குருநாதரே!
குமரா—குமரக் கடவுளே!
குலிச ஆயுத—வச்சிரப்படையையுடையவரே!
குஞ்சரவா—தெய்வயானைக்கு நாயகரே!
சிவயோக தயாபரனே—பக்குவப்பட்ட அடியார்கட்குச் சிவயோக நிலையைப் பாலிக்கும் கருணாமூர்த்தியே!
கரவு ஆகிய கல்வி உளார் கடை சென்று—தாம் கற்ற கல்வியைப் பிறருக்குச் சொல்லாமல் ஒளித்து வைக்கின்ற புலவர்களிடம் போய்,
இரவாவகை—அக் கல்வி ஞானத்தை அடியேன் யாசிக்காத வண்ணம்,
மெய்ப்பொருள் ஈகுவையோ—உண்மைப் பொருளை உபதேசித்து அருள் புரிவீரோ? (அருள்புரிவீராக.)

பொழிப்புரை

சற்குருநாதரே! குமாரக் கடவுளே! வச்சிராயுதமேந்தியவரே! தெய்வ யானையின் கணவரே! அடியார்க்குச் சிவயோகத்தை அருள்புரிபவரே! தாம் கற்ற கல்வியைச் சொல்லாமல் ஒளித்து வைக்கும் புலவர்களிடம் போய் அக்கல்வி ஞானத்தை அடியேன் யாசிக்காத வண்ணம் உண்மைப் பொருளைத் தந்தருள மாட்டீரோ? (தந்தருளும்).

விரிவுரை

கரவாகிய கல்வியுளார்:—

கரவு—திருட்டுத்தனம்.

கற்ற கல்வியைப் பிறருக்கு உதவுதல் வேண்டும். அதற்குக் கல்விதானம், அறிவுதானம் என்றுபேர். அங்ஙனம் பிறருக்கு அறிவிக்காமல் தம்முடனேயே அந்த வித்தைகளை மறைத்து வைத்துக் கொள்வார்கள். இத்

தகைய புலவர் பலர் நம் நாட்டில் உண்டு. அதனுல் அநேக கலைகள் மறைந்தொழிந்தன.

கடைசென்று இரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ:—

கடை—வீட்டுவாசல் முன்புறம். கல்வியில் உலோபத்தனம் படைத்த புலவர்களின் வீடுகளின் முன் சென்று கல்விப் பொருளை யாசிக்காவண்ணம் உண்மை ஞானத்தைத் தனக்கு உபதேசித்தருளுமாறு இப்பாடலில் அடிகளார் வேண்டுகின்ருர். ஆனுல் அடிகளார் உண்மை ஞானங் கைவரப் பெற்றவர். இப்பாடலைத் தன்பொருட்டு அவர் பாடவில்லை. ஞானத்தைப் பெற விரும்பும் மற்றவர் பொருட்டுப் பாடியருளினுர் என வுணர்க

குரவா:—

குரவன்—ஆசான். முருகன் ஞானகுருநாதன் ஆதலின் 'குரவா' என்ருர்.

குலிசாயுத:—

குலிசம்—வச்சிராயுதம். முருகப்பெருமானுடைய வலக்கரத்தில் விளங்குவது வச்சிராயுதம். சிங்கமுகனை முருகன் குலிசாயுதத்தால் வதைத்தருளினுர்.

"வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறிலாத வேல் அபயமே வலம்" —கந்தபுராணம்

வித்ருமப்ரப மேகமுகம் விபும் வஜ்ரசக்திவரதாபய
பாணிம்
தேவலோக ரிபுக்ன மவிக்நதம் நௌமி
ருத்ரபவம் சிகிவாஹம். —குமாரதந்த்ரம்

குஞ்சரவா:—

குஞ்சரம்—யானையினுல் வளர்க்கப்பட்ட தெய்வ யானையைக் குறிக்கும்.

குலிசாயுத குஞ்சரவா—எனச் சேர்த்து வஜ்ராயுதனுகிய இந்திரனுடைய யானையால் வளர்க்கப்பட்டவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

குஞ்சரவா—என்பதற்கு யானை வாகனத்தை உடையவனே எனவும் பொருள் கூறலாம். முருகன் யானை வாகனமும் உடையான் ஆதலின்.

ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
—திருமுருகாற்றுப்படை (247)
பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவா
—பரிபாடல் (17-49]
சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து — ,, (5-2)

மயில்—ஆணவ மலம், யானை—கன்ம மலம்,ஆடு—மாயா மலம். இந்த மூன்றையும் முருகன் வாகனமாகக் கொண்டது மும்மலங்களையும் அடக்குகின்றார் என்ற உண்மையை உணர்த்துகின்றது;

வள்ளிநாயகியைப் பற்றிக் கந்தரநுபூதியில் பன்னிரண்டு பாடல்களில் கூறியிருக்கின்றார். தெய்வயானையம்மையை இந்த ஒரு பாடலில் மட்டும் அடிகளார் கூறுகின்றார்.

சிவயோக:—

முருகன்—யோகமூர்த்தி. யோகத்தை உபதேசிக்கின்றவர்.

"யோகத்தாறுபதேசிக" —(சேமக்கோமள) திருப்புகழ்
"யோக விதச் சல்லாப விநோதன்" —அநுபூதி (2)

ஈ—என்பது கீழோர் மேலோரிடம் இரப்பதைக் குறிக்குஞ் சொல்.

தா—தனக்கு ஒப்பானவனிடம் கேட்கும் சொல்.

கொடு—மேலோர் கீழோரை நோக்கிக் கேட்கும் சொல்.

ஈ, தா, கொடு, எனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை.
—நன்னூல் (407)

அதனால் அருணகிரிநாதர் "ஈகுவையோ?" என்ற சொல்லைச் சொன்னார் எனவுணர்க. தயாபரன் ஆதலின் மெய்ப்பொருளை ஈந்தருள் என்றார்.

புலவர்கள் தாமறிந்த ஒன்றைப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்காமல் மறைத்துக்கொள்வர். ஆனால் இதற்கு நேர்மாறான நிகழ்ச்சி ஒன்றுளது.

துரோணரைக் கொல்லும் பொருட்டே வேள்வியில் பிறந்த திருஷ்டத்துய்ம்னன், துரோணாசாரியாரிடம் சென்று கலை பயிற்றி வைக்குமாறு வேண்டினான். துரோணர், அவனை அன்பாக வரவேற்றார். "என் மரணத்துக்கு இவன் காரணன் அல்லன்; விதிதான் காரணம்'' என்று கருதி அசுவத்தாமாவைப்போல் அவனையும் அன்புடன் தன்னிடம் இருத்தி எல்லாக் கலைகளையும் போதித்தார். அதனால் துரோணர் புகழ் ஓங்கியது.

தாமறிந்த கலைகளைப் பிறருக்குப் போதிப்பது ஞான தானமாகும். அன்னதானம் மூன்றுமணி நேரத்தில் செமித்துவிடும். ஞானதானம் பிறவியெழுந்தோறும் பின் சென்று உதவும். ஆதலால் எல்லோரும் அறிவுத் தானம் புரிதல் வேண்டும். ஈகுவை—முன்னிலை வினைமுற்று. ஓ—வினா.

கருத்துரை

தெய்வயானை நாயகனே! நான் கல்வியில் உலோப குணமுடையாரிடம் சென்று இரக்காமல் உண்மைப் பொருளைத் தந்தருள்.

46. எந்தாயும் எனக்கருள் தந்தையுநீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே.

பதவுரை

கந்தா—கந்தக் கடவுளே!
கதிர்வேலவனே—ஒளி நிறைந்த வேலாயுதரே!
உமையாள் மைந்தா—உமாதேவியின் திருக்குமாரரே!
குமரா—குமார மூர்த்தியே!
மறை நாயகனே—வேதங்களுக்குத் தலைவரே!

எம் தாயும்—எங்களுக்கு அன்னையும்,
எனக்கு அருள் தந்தையும் நீ—எனக்கு அருள் புரிகின்ற தந்தையும் நீர்தான்,
சிந்தை ஆகுலம் ஆனவை—அடியேனுடைய மனக் கவலைகள் அனைத்தையும்,
தீர்த்து எனைஆள்—ஒழித்து ஆண்டருள்வீராக.

பொழிப்புரை

கந்தக் கடவுளே! ஒளிமிக்க வேலாயுதரே! பார்வதி தேவியின் பாலகரே! குமார மூர்த்தியே! வேதங்கட்குத் தலைவரே! எங்கள் தாயும், எனக்கு அருள் புரிகின்ற தந்தையும் நீர்தான். மனக் கவலையனைத்தையும் மாற்றி என்னை ஆட்கொண்டருளுவீராக.

விரிவுரை

எந்தாயு மெனக்கருள் தந்தையு நீ:—

இறைவன் எல்லாவுயிர்கட்கும் அம்மையும் அப்பனுமாக இருந்து அருள் புரிகின்றான்.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" —திருவாசகம்
"அப்பனீ அம்மை நீ அய்யனு நீ" —அப்பர்
"தொடர்ந்து நின்ற தாயானை" —(வாயானை) அப்பர்
"ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய்
உடன் தோன்றினராய்" —அப்பர்
"தாயும் நீ தந்தையும் நீ சங்கரனே" —சம்பந்தர்
"எவ்வுயிர்க்குந் தாயானானை"— —சேக்கிழார்

இதில் ஒரு நயம் உள்ளது. தாயைக் குறிக்கும் போது எம் தாய் என்றார். எம்—பன்மை.

தந்தையைக் குறிக்கும்போது என்க்கருள் தந்தை என்றார். எனக்கு—ஒருமை.

பக்குவப்பட்ட ஆன்மாக்கள், பக்குவப்படாத ஆன்மாக்கள் எல்லாவற்றுக்கும் இறைவன் பொதுவாக அன்னையாக இருந்து தண்ணருள் புரிகின்றான்.

இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்ற நிலைகளையடைந்து, பக்குவம் எய்திய ஆன்மாக்களுக்கு மட்டும் சிறப்பாகத் தந்தையாக இருந்து இன்னருள் புரிகின்றான் எனவுணர்க. அதனால் தாய் என்றபோது மற்ற ஆன்மாக்களையும் உடனாக்கி "எந் தாய்" என்றனர்.

பக்குவம் எய்திய தனக்கு அவன் தந்தையாக நிற்கின்றான் என்பதைக் குறிக்க "எனக்கருள் தந்தையு நீ" என்றார்.

சிந்தாகுலமானவை தீர்த்தெனையாள்:—

சிந்தை ஆகுலம்—சிந்தாகுலம். துன்பம் இருவகைப்படும். ஒன்று உடம்புக்கு வருவது, மற்றொன்று உள்ளத்தில் வருவது.

உடம்புக்கு வருந் துயரங்களை ஒருவாறு நாமே தீர்த்துக்கொள்ளலாம். வெய்யிலின் கொடுமை, குளிர்ந்த அறையில் இருந்தால் தீரும். மழையின் கொடுமையைக் குடையாலும், சிறிய வெயிலைக் குடையாலும், குளிரைக் கம்பளத்தாலும், பசியை உணவாலும், தாகத்தைக் குளிர்ந்த நீராலும் தீர்த்துக்கொள்ளலாம்.

மனக் கவலையை அறிவின் முதிர்ச்சியாலும், அறிவு வடிவாய ஆண்டவனாலுமே தீர்க்க முடியும்.

> தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்ற லரிது. —திருக்குறள்

> "புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே"
> —கந்தரலங்காரம் (60)

> "ஆவியீரைந்தை அபரத்தே வைத்தோதில்
> ஆவியீரைந்தை அகற்றலாம்" —இராமலிங்கசுவாமிகள்

ஆவி—உயிரைக் குறிக்கும் எழுத்தாகிய, ஈரைந்து—பத்து. தமிழ்க் கணக்கில் பத்து 'ய'. அபரம்—பின். ய என்ற எழுத்தை சிவ என்பதற்குப் பின் வைத்து

''சிவய'' என்று ஓதினால், ஆவியீரைந்தை யகற்றலாம்— ஆ-வி பத்து ஆ என்ற எழுத்துடன் பத்தைச் சேர்த்தால் ஆபத்து; வி என்ற எழுத்துடன் பத்தைச் சேர்த்தால் விபத்து என்றாகும். ஆபத்து உடலுக்கு வருவது; விபத்து உயிருக்கு வருவது; எனவே, ஆபத்து,விபத்து என்ற இருவகைத் துன்பங்களும் நீங்கும்.

சிந்தாகுலம் ஆனவை: சிந்தாகுலமானவை—என்ற சொற்றொடரை மால் நவை என்று பதச்சேதம் செய்து, மால்—மயக்கத்தையும், நவை—துன்பத்தையும் தீர்த்தருள் என்றும் கொள்ளலாம்,

கந்தா:—பகைவரை யடக்குபவன்.

கதிர் வேலவனே:—

வேலினால் அஞ்ஞான இருளை நீக்குபவன்.

உமையாள் மைந்தா:—

என்றும் இளமையாக இருப்பவன்.

குமரா:—உலக மாயையை ஒழிப்பவன்.

மறைநாயகனே:—வேதங்கட்குத் தலைவன்.

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே. —அப்பர்

கருத்துரை

கந்தக் கடவுளே! தாயுந் தந்தையும் ஆகிய நீ என் மனக்கவலையை மாற்றியருள்.

47. ஆறுறையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறுஅடியேன் பெறுமா றுளதோ
சீறுவருசூர் சிதைவித் திமையோர்
கூறுஉலகம் குளிர்வித் தவனே.

பதவுரை

சீறு வரு—கோபித்து வந்த,
சூர் சிதைவித்து—சூரபன்மனை அழித்து,

கூறு இமையோர் உலகம்—துன்பத்தைக் கூறி முறையிட்ட தேவர்களின் உலகத்தை,
குளிர்வித்தவனே—குளிருமாறு செய்தருளியவரே!
ஆறு ஆறையும் நீத்து—முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து,
அதன் மேல் நிலையை—அவைகட்கு அப்பால் உள்ள அநுபூதியாகிய சாயுச்சிய நிலையை,
அடியேன் பேறு—அடியேன் பெறும் பேறாக,
பெறும் ஆறு உளதோ—பெற்றுக்கொள்ளுகின்ற வழி எப்போது உண்டாகுமோ!

பொழிப்புரை

கோபித்து வந்த சூரபன்மனை அழித்து, துன்பத்தைக் கூறி முறையிட்ட தேவர்களின் உலகத்தைக் குளிருமாறு செய்தருளியவரே! முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து, அவற்றுக்கு அப்பாலுள்ள அநுபூதி சாயுச்சிய நிலையை அடியேன் பெறும் பேறாகப் பெறுகின்ற வழி உண்டாகுமோ? உண்டாகுமாறு செய்தருளுவீராக.

விரிவுரை

ஆறாறையும் :—

ஆறாறு—முப்பத்தாறு என்பது ஆகுபெயராய் முப்பத்தாறு தத்துவங்களையும் குறிக்கும்.

மண்முதல் நாதம் ஈறான 36 தத்துவங்கள்.

ஆன்ம தத்துவம்	24	இது அசுத்த தத்துவம்
வித்தியா தத்துவம்	7	சுத்தாசுத்த தத்துவம்
சிவ தத்துவம்	5	சுத்த தத்துவம்
	36	

ஆன்ம தத்துவம் ;—

பஞ்சபூதங்கள்	5	மண் நீர் கனல் காற்று விண்
ஞானேந்திரியங்கள்	5	மெய் வாய் கண் மூக்குசெவி
கன்மேந்திரியங்கள்	5	வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம்
தன்மாத்திரைகள்	5	சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்
அந்தக்கரணங்கள்	4	மனம் புத்தி அகங்காரம் குணம்

———
24

(குணத்துக்குப் பதிலாக சித்தம் என்றுகொள்ளும் ஒரு மரபும் உண்டு)

வித்தியா தத்துவங்கள் 7: காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பிரகிருதி.

சிவ தத்துவங்கள் 5: சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், விந்து, நாதம். ஞானம் மிகுந்து கிரியை குறைந்தது சுத்தவித்தை: கிரியை மிகுந்து ஞானம் குறைந்தது ஈசுரம். இரண்டும் ஒன்றுபட்டது சாதாக்கியம்.

கிரியை நாடல் சக்தி (விந்து), ஞானம் ஒன்றல் சிவம் (நாதம்).

சுத்தவித்தை ஞானமிகும் தொன்மையாம், ஈசுரந்தான்
அத்தன் தொழிலதிகம் ஆக்கியிடும்—ஒத்தல்இவை
சாதாக் கியமென்றும் சத்தி சிவம்கிரியை
ஆதார ஞானவுரு வாம். —உண்மை விளக்கம் (21)

எந்த எந்த சமயத்தார்கள் எந்த எந்த தத்துவங்களை அறிகின்றார்களோ அந்தந்தத் தத்துவத்தின் எல்லை அந்தந்தச் சமயத்தார்க்கு முத்தித்தானமாகும். புறப் புறச் சமயிகளும், புறச்சமயிகளும் மண்முதல் புருட தத்துவம் வரையுள்ள தத்துவங்களை மட்டும் கொண்டு அத்தத்துவங்களில் முத்தித் தானமாகக் கொள்வர்.

ஏகான்மவாதிகள் 25 தத்துவங்களுடன் நிற்பர். சைவ சித்தாந்தம் ஒன்றுதான் 36 தத்துவங்களேயும் கண்டு அவற்றைக் கடந்து அப்பாலுள்ள பரமுத்தியைக் கூறுகின்றது.

"ஆறுறுமீதில் ஞானுேபதேசம் அருள்வாயே"
—(மாலாசை) திருப்புகழ்.

"பூதமும் கரணம் பொறிகளேம் புலனும் பொருந்திய
குணங்களோர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும் நானுமாய்
நிற்குநாள் உளதோ" —பட்டினத்தார்

ஆறுறின் தன்மை அறியா திருந்தேனுக்
காறுறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி
ஆறுறின் தன்மை அருளால் அறிந்தபின்
ஆறுறுக் கப்புறம் ஆகிநின் றுனே. —திருமந்திரம் (2020)

பேரு அடியேன் பெறுமாறுளதோ :—

பேருக என்ற சொல் கடைக்குறைந்து பேரு என நின்றது. அடியேன் பெறுதற்கரிய பேறு ஆகுமாறு பெரும் வாய்ப்பு உண்டாகுமோ?

"முருகா! பெறுமாறு அருள்செய்" என்று வேண்டுகின்றுர்.

சீருவருசூர் :—

சீரு—செய்யா என்ற வாய்ப்பாட்டு உடன்பாட்டு வினயெச்சம். சீறி வந்தான் சூரபன்மன்.

தட்சயக்ஞத்தில் கலந்து சிவாபராதம் அடைந்த மாலயனுதி வானவர்கள், அதன் பயனுக 108 யுகங்கள் சூரபன்மனுல் துன்புற்றுர்கள். இது அண்டத்தில். பிண்டத்திலும் அருளிலாய நன்மையும், மலத்திலாய தீமையும் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டுப் போர்புரிகின்றன. முருகனேச் சரணடைந்து தீய குணங்களான அசுரர்களே அழிக்க வேண்டும்.

இமையோர் கூறு :—

இமையவர்கள் தாங்கள் அசுரர்களால் பட்ட வேதனைகளை இறைவனிடம் முறையிட்டு வேண்டி நின்றார்கள்.

ஏற்றெழு வன்னிமேல் இனிது துஞ்சலாம்
தோற்றிய வெவ்விடம் எனினுந் துய்க்கலாம்
மாற்றலர் அலைத்திட வந்த வெந்துயர்
ஆற்றரி தாற்றரி தலம்இப் புன்மையே. —கந்தபுராணம்

குளிர்வித்தவனே :—

இமையோருடைய உலகில் அசுரர்களால் வந்த வெப்பத்தை மாற்றி இன்பத்தால் அமரர்களை முருகன் குளிர்வித் தருளினான்.

உலகம் என்பது ஆகுபெயராய் உலகில் வாழ்ந்த தேவரைக் குறிக்கின்றது.

கருத்துரை

தேவருலகைக் குளிர்வித்த தேவதேவா! தத்துவங் கடந்த அநுபூதி இன்பத்தைத் தந்தருள்.

48. அறிவொன் றறநின் றறிவார் அறிவில்
பிறிவொன் றறநின்ற பிரான் அலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும் வேலவனே.

பதவுரை

செறிவு ஒன்று அற வந்து-உலக பந்தபாசத்தில் நெருக்கமான உறவுகள் அற்றுப்போகும் நிலை வந்து,

இருளே சிதைய—அதனால் மல இருள் முற்றிலும் வலி குன்றி ஒழியும்படி,

வெறி வென்றவரோடு—மயக்கத்தை வென்ற சிவஞானிகளுடன்,

உறும் வேலவனே—பொருந்தியிருக்கும் வேலாயுதரே!

அறிவு ஒன்றுஅற—சிவபோதம் என்ற ஒன்று நீங்க.

நின்று அறிவார் அறிவில்—சிவபோத நிலையில் அடங்கி அந்த அருட்காட்சியில் நின்று பதிஞானத்தால் உணர்கின்ற சிவஞானிகளது உள்ளுணர்வில்,
பிறிவு ஒன்று அற—பிரிதல் சிறிதும் இல்லாமல்,
நின்ற பிரான் அலையோ—கலந்து நின்ற பெருமான் நீரேயன்றோ? (ஞானவடிவாய் நின்ற நீர் அந்த ஞானத்தை அடியேனுக்கு அருளுவீராக)

பொழிப்புரை

உலக பந்தபாசத்துடன் கலந்த உறவுகள் அற்றுப் போன அருள் நிலையில் வந்து, ஆணவமலஇருள் முற்றிலும் நீங்கப் பெறுமாறு, மயக்கத்தை வென்ற ஞானிகளுடன் பொருந்தும் வேலாயுதக் கடவுளே! சீவபோதம் அற்ற நிலை வந்து, சிவபோதத்துள் அடங்கி அந்த அருள் நிலையில் நின்று மெய்யுணர்வால் அறிகின்ற சிவஞானிகளுடன் அத்துவிதமாகக் கலந்து நின்ற பெருமான் நீரேயாகும். அந்நிலையை அடியேனுக்கு அருளுவீராக.

விரிவுரை

அறிவொன்றற நின்றறிவார் :—

தான் என்ற சீவபோதம் அற்று சிவபோதத்துள் அடங்கி மெய்யுணர்வால் அறிகின்ற சிவஞானிகள்.

அறிவில் பிறிவொன்றற நின்ற பிரான் :—

அத்தகைய சிவஞானிகளின் மெய்யுணர்வில் ஞான வடிவாய் முருகன் கலந்து நிற்கின்றான். கண்ணொளி கதிரொளியில் கலப்பதுபோல் ஞானிகளின் அறிவும் முருகனுடைய அருள் ஞானமும் ஒன்றிவிடுகின்றன. அத்துவிதமாகின்றன. பிரியான் என்ற சொல்லின் மரூஉ பிரான். பிரிவு என்ற சொல் பிறிவு என எதுகை நோக்கி வந்தது.

செறிவொன்றற வந்து :—

செறிவு—கலப்பு. உலக பந்தபாசத் தொடர்பில் கலந்து நிற்கும் மாய நிலே. இந்தக் கலப்பு அற்ற அருள் நிலே கைவரப் பெற்று.

இருளே சிதைய :—

ஆணவ இருள் முற்றிலும் கெட்டொழிய.

வெறிவென்றவரோடுறும் வேலவனே :—

வெறி—பயித்தியத் தன்மை. இந்த மயக்கத்தை வென்ற சிவஞானிகளுடன் அத்துவிதமாக முருகன் கலந்து நின்று அருள் புரிகின்ருன்.

"பாசம் ஒருவ" என்று சிவஞான போதம் 9ஆம் சூத்திரத்தில் வரும் கருத்தை இங்கு உன்னுக.

கருத்துரை

சிவபோதம் அற்ற சிவஞானிகளது அறிவில் கலந்து நின்ற வேலவனே! அந்நிலேயை எனக்கும் அருள்செய்.

49. தன்னந் தனிநின் றதுதான் அறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினேவார்
கின்னங் களேயுங் க்ருபைசூழ் சுடரே!

பதவுரை

மின்னும் கதிர் வேல்-ஒளி வீசுகின்ற கதிர்வேலேயேந்திய,
விகிர்தா—வேறு வேறு வடிவங்களேயுடையவரே!
நினேவார் கின்னம் களேயும்—தேவரீரைத் தியானிக்கும் அடியார்களின் துன்பத்தைப் போக்குகின்ற,
க்ருபை சூழ் சுடரே—கருணே சூழ்ந்த பேரொளியே!
தன்னந்தனி நின்றதுதான்—கருவி கரணங்களிலிருந்து கழன்று தனிமையான இனிமையில் நிலேநின்ற பேரின்பத்தை,

அறிய—மற்றவர்கள் அறிந்துகொள்ளும்படி,
இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ—இனி மற்ற வர்க்கு விளக்கிச் சொல்ல இயலுமோ? இயலாது.

பொழிப்புரை

ஒளிவீசுகின்ற கதிர்வேலாயுதரே! வேறு பல வடிவங்களையுடையவரே! தியானிக்கின்ற அடியார்களின் துன்பங்களைப் போக்குகின்ற கருணை சூழ்ந்த பேரொளியே! கருவி கரணங்களினின்றும் நீங்கித் தனிமையான இனிய நிலையில் அடியேன் நின்ற பேரின்ப நிலையை இத்தன்மைத்தென்று பிறருக்கு உரைக்கவொண்ணுமோ?

விரிவுரை

தன்னந்தனி நின்றதுதான் :—

தன்னந்தனி என்பது, ஆன்மா பொறி புலன்கள் முதலிய கருவி கரணங்களினின்றும் கழன்று தனியாக நிற்கும் நிலை எனவுணர்க.

"செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகவரம் அருள்வாயே"
—(அறிவழிய) திருப்புகழ்

தன்னந்தனி நின்றது என்பதற்கு தத்துவாதீத ஞன இறைவன் என்று பொருள் காண்பார் சிலர். இது சிறப்புடைய பொருளன்று.

பக்குவப்பட்ட ஆன்மா தான் தனிமையான நிலையில் அடைந்த அருளின்பத்தை நவிலமுடியாது என்ற பொருளில் இது வந்தது. 'இனிது இனிது ஏகாந்தம் இனிது' என்பார் ஔவையார்.

அழகிய ஒரு பெண்மணியை ஒரு ஆடவன் மணஞ் செய்து கொண்டான். அந்த ஆடவனுக்கு உடன் பிறந்த ஆண்கள் அறுவர்; பெண்கள் எழுவர்; தாய் தந்தையர் இருவர்; பாட்டன் பாட்டி அத்தையர், கொழுந்தியர் முதலிய பலர் அந்த வீட்டில் இருந்தார்கள். கண

வன் மனைவியுடன் எப்போது பேச முயன்ருலும் அங்கே ஒருவர் இருந்து தனிமையின் இனிமையைக் கெடுப்பர். அவனுக்கு நிரம்ப வருத்தம். ஒருநாள் வீட்டுக்கு வந்தான். மனைவி தனியாக இருந்தாள். பால் கொடுத்தாள். "கண்ணே! வீட்டிலே ஒருவரும் இல்லையா?" என்ருன். "எல்லாம் திருவிழாப் பார்க்கப் போயிருக்கின்ருர்கள்" என்ருள். "ஒருவரும் இல்லையா?" "ஒருவரும் இல்லையா?" என்று கேட்டான். தன் வாழ்க்கைத் துணையுடன் தனித்திருப்பதைக் கணவன் விரும்புவது போல, ஆன்மா 96 தத்துவங்களும் இல்லாத தனிமையில் இறைவனுடன் கலப்பதில் பரிபூரண பேரின்பம் விளைகின்றது.

அறிய இன்னும் ஒருவர்க்கிசைவிப்பதுவோ :—

மேலே கூறியவாறு ஏகாந்த நிலையில் விளைந்த இன்பத்தை இன்னொருவர் அறியும்படி சொல்ல முடியுமோ? முடியாது.

அத்துவிதப் பேரின்பத்தைச் சொல்ல முடியாது. அது சொல்லுந் தரமன்று—என்று அடிகளார் இந்த அநுபூதியில் பல இடங்களில் கூறுகின்ருர்.

28 ஆவது	பாடலில்	"நவிலத்தகுமோ?"
30 ஆவது	,,	"எவ்வாருெருவர்க் கிசைவிப் பதுவே"
38 ஆவது	,,	"ஆண்டது செப்புமதோ?"
44 ஆவது	,,	"தந்தது சொல்லுமதோ?"

மின்னுங் கதிர்வேல் விகிர்தா :—

வேலாயுதம் ஒளி மயமானது. நூறு கோடி சூரிய ஒளியுடையது.

"உலாவு தயபாநு சதகோடி யுருவானவொளி
வாகுமயில் வேலங் கையிலோனே"

—(அவாமருவி) திருப்புகழ்

விகிர்தா :—

விகிர்தம்—வேறுபாடு.

'விகிர்தங்களா நடப்பார்' என்பது தேவாரம்.

அடியார்கள் பொருட்டு முருகன் பலப்பல வடிவங்கள் கொண்டு காட்சி தருகின்றான்.

இருமூவகை வதனத்தொடும் இளையோனெனத் திரியும்
ஒருமாமுக னெடுசென்றிடும் உயர்காளையி னுலவும்
பெருமாமறை யவரேயென முனிவோரெனப் பெயரும்
தெரிவார்களை மறவீரரில் திரிதந்திடும் செவ்வேள்.
—கந்தபுராணம்

நினைவார் கின்னங் களையும் :—

பிற பொருள்களை நினையாது, வேற்பரமனையே நினைத்துத் தியானிக்கின்றவரது துயரங்களை முருகன் களைந்தருளுவான்.

"வேலுமயிலு நினைந்தவர் தந்துயர்
தீரஅருள் தரு கந்தநிரந்தர
மேலைவயலை உகந்துள நின்றருள் பெருமாளே"
—(வாளின்) திருப்புகழ்

"கின்னங் குறித்தடியேன் செவி கேட்க"
—கந்தரலங்காரம் (24)

க்ருபை சூழ் சுடரே :—

வெப்பஞ் சூழ்ந்த சுடர் சூரியன். கருணை சூழ்ந்த சுடர் முருகன்.

கருத்துரை

வேலவரே! அடியேன் ஏகாந்தமான நிலையை யடைந்தபோது பெற்ற இன்பம் பிறருக்குக் கூற முடியாது.

50: மதிகெட் டறவாடி மயங்கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத்திர ஞான சுகாதிபவத்
திதிபுத்திரர் வீறடு சேவகனே.

பதவுரை

நதி புத்திர—கங்காநதியின் திருக் குமாரரே!

ஞான சுக அதிப—மெய்யறிவுக்கும் அதனுல் விளையும் பேரின்பத்துக்கும் தலைவரே!

அ திதி புத்திரர்—அந்தத் திதி புதல்வராகிய அசுரர்களின்,

வீறு அடு சேவகனே-வலிமையை அழித்த வீரமூர்த்தியே!

மதி கெட்டு—அறிவு குலைந்து,

அற வாடி—மிகவும் வாட்டமுற்று,

மயங்கி—மயக்கமுற்று,

அற கதி கெட்டு—அற நெறியால் வரும் உமது திருவடி யநுபூதியை யிழந்து,

அவமே கெடவோ கடவேன்—வீணுகக் கெட்டொழிந்து விடவோ உரியவன். (அவ்வாறு கெடமாட்டேன்; காத்தருள்)

பொழிப்புரை

கங்காநதியின் திருக்குமாரரே! மெய்ஞ் ஞானத்திஞல் விளையும் பேரின்பத்துக்குத் தலைவரே! அந்தத் திதியின் புதல்வர்களாகிய அசுரர்களின் வலிமையை அழித்த வீரமூர்த்தியே! அறிவு கெட்டு மிகவும் வாடி மயக்கமுற்று, அறநெறியால் வரும் உமது திருவடி யநுபூதியை யிழந்து வீணுகக் கெட்டொழியலாமோ? அவ்வாறு கெடாது அருள் புரிவீராக.

விரிவுரை

மதிகெட்டற வாடி :—

அறிவு என்ற ஒன்றிஞலேயே உயர்வு கிடைக்கின்றது.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.
—திருக்குறள்

இன்பம் அறிவிஞல் உண்டாகும்; துன்பம் அறியாமையால் உண்டாகும். அறிவை வளர்த்தால் துன்பந் தேயும். அறியாமையை வளர்த்தால் இன்பந் தேயும். விதியை மதியால் வெல்லலாம்.

"மற்றது விஜையின் வந்ததாயினும் மாற்றலாற்றும்
பெற்றியர்" —கம்பராமாயணம்

ஒரு விவசாயி பயிரிடும் இடத்தில் ஒரு வேதாளம் இருந்தது. அவன் அறுவடை செய்யும்போது அந்த வேதாளம் எதிர்ப்பட்டு, "மூடனே! என்னிடத்தில் வந்து கதிரறுக்கின்றஜையா? கட்டொன்றுக்கு இரண்டு படி நெல்தான் கிடைக்கும்" என்று சபித்தது.

விவசாயி வருந்திஞன். அறிவு அவனுக்குத் துணை செய்தது. ஆட்களைவிட்டு நெல் தாள்களை அறுத்தான். இரண்டிரண்டு தாள்களை ஒவ்வொரு கட்டாகக் கட்டு மாறு செய்தான். ஒரு தாளுக்கு ஒரு படி நெல் கிடைத்தது. ஒரு கட்டுக்கு இருபடி நெல் என்ற விதியை மதியால் வென்ருன். எனவே மனிதஜை உயர்த்துவது சிறந்த மதியேயாகும்.

மதியிழந்து அதஞல் மிகவும் வாடி வருந்துதல் கூடாது என்கின்ருர்.

அறக் கதி கெட்டவமே கெடவோ கடவேன் :—

கதி என்ற சொல் வழி என்றும், முத்திநிலை யென்றும் பொருள்படும். அறநெறி நிற்பார்க்குச் சிவகதி கைகூடும்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையு மன்றே. —அப்பர்

பயன் கருதாது நல்ல அறங்களைக் கடமையுணர்வுடன் புரிவார் சிவத்துடன் ஒன்றுபடும் அநுபூதி நிலை பெறுவார்.

"அவ்வாறு பெருது வீணே அழியலாமோ?" என்று அடிகளார் வேண்டுகின்ருர்.

நதிபுத்திர :—

நதி கீழ்நோக்குந் தன்மையது. மேலிருந்து கீழ் நோக்கி ஓடிவரும். அதுபோல் முருகவேள் தமது சொரூப நிலையிலிருந்து தடஸ்த நிலைக்கு வந்து பாவப் படுகுழியில் உள்ள ஆன்மாக்களைக் காக்கும்பொருட்டு இறங்கி வருகின்ருர் என்ற குறிப்பையும் உணர்க.

ஞான சுகாதிப ;—

ஞானத்தால் வரும் சுகத்திற்கு அதிபன்.

தேவர்களைச் சூரபன்மன் இட்ட சிறையிலிருந்து மீட்டு ஆட்கொண்டதுபோல், அடியார்களை ஆணவச் சிறையிலிருந்து மீட்டு ஞான சுகத்தை வழங்கும் தலைவன் என்று குறிப்பிடும்பொருட்டு "ஞான சுகாதிப" என்ருர்.

அத் திதி புத்திரர் வீறடு சேவகனே :—

காசிபருடைய பதின்மூன்று மனைவியருள், அதிதியின் மக்கள் ஆதித்யாதி அமரர்கள். திதியின் மக்கள் தைத்தியர்கள்—அசுரர்கள் அவர்களின், வீறு—செருக்கினை அழித்த வீரமூர்த்தி முருகன்.

கருத்துரை

ஞான சுகாதிபனே? அறிவிழந்து அடியேன் அலையலாமோ? திருவடி யநுபூதியைத் தந்தருள்.

51: உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே;

பதவுரை

உருவாய்—உருவுள்ளவராயும்,
அருவாய்—உருவம் இல்லாதவராயும்,
உளது ஆய்—உள்ள பொருளாகவும்,
இலது ஆய்—காண்பதற்கு இல்லாத பொருளாகவும்,
மரு ஆய்—நறுமணமாகியும்,
மலர் ஆய்—நறுமணமுடைய மலராகியும்,
மணி ஆய்—இரத்தின மணியாகியும்,
ஒளி ஆய்—அம்மணியில் உள்ள ஒளியாகியும்,
கரு ஆய்—அகில உலகங்கட்கும் மூலப் பொருளாகியும்,
உயிர் ஆய்—உயிர்க்கு உயிராகியும்,
கதி ஆய்—ஆன்மாக்கள் முடிவில் அடையும் வீடு பேருகியும்,
விதிஆய்—வீடுபேற்றை அடையும் நன்னெறியாகியும் விளங்கும்,
குகனே—குகமூர்த்தியே!
குருவாய் வருவாய் அருள்வாய்—குருமூர்த்தியாக எழுந்தருளி வந்து அருள்புரிவீராக.

பொழிப்புரை

உருவாகவும் அருவாகவும், அன்பர்க்கு உள்ள பொருளாகவும், அன்பரல்லார்க்கு இல்லாத பொருளாகவும், ஞானமாகிய நறுமணப் பொருளாகவும், அம் மணத்தின் மூலமாகிய நறுமணப்பொருளாகவும், அம் மணத்தின் மூலமாகிய மலராகவும், ஒன்பது மணிகளாகவும், மணியின் ஒளியாகவும் எல்லாவற்றுக்கும் மூலப்பொருளாகவும், உயிர்க்கு உயிராகவும், வீடுபேற்றையடையும் நன்னெறியாகவும், அதனுல் அடையும் வீடு பேருகவும் விளங்கும் குகப் பெருமானே! குருவாக எழுந்தருளி வந்து காத்தருள்வீராக.

விரிவுரை

உருவாய் அருவாய் :—

இறைவன் உரு, அரு, உருவரு என்ற சகளம், நிஷ்களம், சகள நிஷ்களம் ஆகிய மூன்று நிலைகளும் கொண்டும், அதனைக் கடந்தும் விளங்குபவன்.

அருவு மாகுவன் உருவமும் ஆகுவன் அருவும்
உருவும் இல்லதோர் தன்மையும் ஆகுவன்; ஊழின்
கருமம் ஆகுவன்; நிமித்தமு மாகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலார்.

—கந்தபுராணம்

"சிவன் அருவுருவும் அல்லன்
சித்தினோ டசித்தும் அல்லன்"

—சிவஞான சித்தியார் (90)

அருவமோ? உருவாரூபம் ஆனதோ? அன்றிநின்ற
உருவமோ? உரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங்
கென்னில்
அருவமும் உருவாரூபம் ஆனதும் அன்றிநின்ற
உருவமும் மூன்றுஞ் சொன்ன ஒருவனுக் குள்ளவாமே.

—சிவஞான சித்தியார் (38)

"அருவனாய் அத்தி யீருரி போர்த்துமை
உருவனாய்"

—அப்பர்

உருவமில்லாத இறைவன் நம் பொருட்டு உருவந் தாங்கி வருகின்றான். ஆனால் அந்த உருவம் பஞ்ச பூதங் களால் ஆய மாயா காரிய உடம்பன்று. அருள் திரு மேனி யென உணர்க.

உளதாயிலதாய் :—

இறைவன் பதிஞானத்தால் விளங்குபவன். பதி ஞானமில்லாதவர்க்கு விளங்காதவன். ஆதலால் உளது இலது என்றார்.

"உண்டிலை என்றே நின்று"

—சம்பந்தர்

மருவாய் மலராய் :—

மணம் மலர் முழுவதும் பரவி அத்துவிதமாய் நிற்றல் போல் இறைவன் உலகெலாம் அத்துவிதமாகக் கலந்து நிற்கின்ருன். இந்தக் குறிப்பை உணர்த்த 'மருவாய் மலராய்' என்ருர்.

"வாச மலரெலாம் ஆனுய் நீயே" —அப்பர்

"துணரில் மலர்க்கந்தம் துன்னி நின்ருனே"
—திருமந்திரம் (3035)

மணியாய் ஒளியாய் :—

உலகப் பொருள்களில் மணி சிறந்தது. அதனுல் முருகனை மணியென்ருர். அப்பெருமானை தெய்வசிகாமணி என்பர். ஆணவ இருளையகற்றும் ஞான வொளியாகத் திகழ்பவன் முருகன்.

கருவாய் உயிராய் ;—

கரு—மூலப்பொருள். இறைவன் எல்லாவற்றுக்கும் மூலமாய் முளைத்தவன். உயிர் தங்கும் கருவாய் நின்றவன். உயிர்க்கு உயிராய் விளங்குபவன்.

"தாயறியாக் கருவிலிருந்து அமுதூட்டுந்
தாய்த்துணையே" —குற்ருலத் தலபுராணம்

"கருவின்றி நின்ற கருவாய்" —கந்தர் கலிவெண்பா

"கருவினு லன்றியே கருவெலாம் ஆயவன்
உருவினு லன்றியே உருவுசெய் தானிடம்" —சம்பந்தர்

கதியாய் விதியாய் :—

கதி-வீடு பேறு. விதி-வீடுபேற்றுக்குரிய வழிவகை.

"விதியாய் விளைவாய் விளைவின் பயனுகி" —சம்பந்தர்

குருவாய் வருவாய் :—

இறைவன் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குக் குருவடிவாக வந்து அருள்புரிவான்.

மணிவாசகருக்குத் திருப்பெருந்துறையில் திருக் குருந்தடியில் இறைவன் குருமணியாக வந்து அருளிய திறம் இங்கு நினைவு கூர்தற்குரியது.

"கோகழியாண்ட குருமணி தன் தாள்வாழ்க"
—சிவபுராணம்

ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே.
—சிவஞானபோதம் (சூத்திரம் 8)

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி யருளிய பெருமையை." —திருவாசகம்

"கருணைத் திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன்என் றோர்திருப்பேர் கொண்டு—திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி" —கந்தர் கலிவெண்பா

"குகனே! உருவாய் வருவாய்; அருவாய் வருவாய்; உளதாய் வருவாய்; இலதாய் வருவாய்; மருவாய் வருவாய்; மலராய் வருவாய்; மணியாய் வருவாய்; ஒளியாய் வருவாய்; கருவாய் வருவாய்; உயிராய் வருவாய்; கதியாய் வருவாய்; விதியாய் வருவாய்; குருவாய் வருவாய்; அருள்வாய்" எனக் கூட்டிப் பொருள் கோடலும் உண்டு.

குரு :—

கு—அந்தகாரம்; இருள். ரு—நீக்குபவர். ஆணவ இருளைப் போக்குபவர் குரு.

கு சப்தஸ்து அந்தகாரஸ்யாத் ருசப்தஸ்தந்நிரோதக:
அந்தகார நிரோதித்வாத் குருரித்யபிதீயதே
குருரேவ பரம்ப்ரஹ்ம" —அத்வயதாரகோபநிடதம்

குருவின் உருவம் ஏனைய ஆன்மாக்களின் கருமேனி தீர்க்கவந்த திருமேனி யென்றுணர்க.

எத்துணைச் சிறந்தவராயினும் உண்டது வெளிப் படுமானால் அது மலம் எனப்படும். ஆனால் பசு உண்

டது வெளிப்படுமாலுல் அதை மலம் என்று அருவருப் படைவதில்லை. ஏனைய மலங்களை எடுத்துத் தூய்மைப் படுத்த பசுவின் சாணம் பயன்படுகின்றது. பசுவின் சாணம் பஞ்ச கவ்யத்துள் ஒன்ருய், அபிஷேகத்திற்கும் பயன்படுகின்றது. மனிதன் தூய்மையடைய பஞ்சகவ் யத்தை உண்ணுகின்ருன். புனிதமான பொருள் சாணம். அதுபோல் நம் உருவினை மாற்றிக் கருவினைப் போக்க வந்த திருவுருவம் குருவுருவம் எனவுணர்க.

இறைவன் குருவடிவாக வந்து பக்குவப்பட்ட ஆன் மாக்களுக்கு அருளுகின்ருன்.

மணிவாசகருக்குத் திருப்பெருந்துறையில் சிவபெரு மான் குருவடிவில் வந்து அருள் புரிந்தார். அதேபோல் அருணகிரிநாதருக்கும் முருகவேள் குருவடிவாக எழுந் தருளி அருள் புரிந்தார்.

திருவடியுந் தண்டையுஞ் சிலம்பும் சிலம்பூடுருவப்
பொருவடிவேலும் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடிவான வதனங்களாறும் மலர்க்கண்களும்
குருவடிவாய்வந்தென்னுள்ளங் குளிரக்குதிகொண்டவே.
—கந்தரலங்காரம் (102)

வேதாகமங்கள் முதலிய அறிவு நூல்களின் உயரிய கருததுக்களை ஒருவன் குருவின் மூலமாக வுணர்தல் வேண்டும். விடாய் கொண்டான் ஒருவன் நேரே கடல் நீரைப் பருகுவானுயின் விடாய் கூடுமேயன்றிக் குறையாது.

மேகமானது கடல் நீரை முகந்து, உவரை மாற்றி நன்னீரைப் பொழிகின்றது. அது விடாய் தீர்க்கும். அதுபோல் குருநாதர் சாத்திரக் கடலைப் பருகி, மாண வன் அறிவின் பக்குவத்துக்கு ஏற்ப உபதேசிப்பார். எனவே குருநாதர் மேகம் போன்றவர்.

கடலைக் கடக்கக் கருதிய ஒருவன் கப்பலில் ஏறு வானுயின் அக்கப்பலைச் செலுத்த மாலுமி இன்றியமை

யாது வேண்டும். அங்ஙனமே கல்விக் கடலைக் கடக்க குருநாதர் மாலுமி போல்வார் என்றும் உணர்க.

"குருலேக எடுவண்டி குணுகி தெலியகபோது"
என்று தியாகராஜ சுவாமிகள் தெலுங்கில் கூறுகின்றூர்.

ஆதலால் ஒவ்வொருவரும் முருகவேளைக் குறித்துத் தியானம் புரிந்து, "பெருமானே! சிறியேனுக்குச் குருவாக வந்து தேவரீர் அருள் புரிவீர்" என்று முழுமனதுடன் ஆராக் காதலாகி தினந்தினம் மனம் உருகி வேண்டுதல் புரிய வேண்டும். இடையருது மெய்ஞ் ஞான பண்டிதனிடம் விண்ணப்பம் புரிந்தால் ஒருநாள் குருவடிவாய் வந்து திருவருள் புரிவான்.

எனவே,

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"
என்று அடிகளார் முறையிடுகின்றூர்.

இந்தத் திருவாக்கு கந்தரநுபூதியாகிய ஞானத் திருக்கோபுரத்துக்குமேல் வைத்த ஆயிரமாற்றுத் தங்ககலசம் போல் ஒளி செய்கின்றது.

குகனே :—

ஆன்மாக்களின் இதய குகையில் இருப்பவன்குகன்.

"சத்யம் ஜ்ஞான மநந்தம் ப்ரஹ்ம யோவேத
நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன்"
—தைந்திரீயோபநிஷதம் (ஆனந்தவல்லி)

அணோரணீயாந் மஹதோ மஹீயாநாத்மா
குஹாயாம் நிஹிதோஸ்ய ஜந்தோ: |
தமக்ரதும் பச்யதி வீதசோகோ
தாது: ப்ரஸாதாத் மஹிமாந மீசம் ||
—தைத்திரீயாருண சாகை

அணுவிலும் அணுவாய், பெரிதிலும் பெரிதாயுள்ள பரம ஆன்மா, இந்தச் செந்துவினது இருதய குகையிலுள்ளது. தன்னுடைய மகிமைக்கு ஏதுவாயுள்ள

அதனைக் கன்மநீக்க முள்ளோன், தனக்கு ஆதாரமான ஈசனது பிரகாசத்தினுல் சோகமில்லாதவனுய்க் காண் கின்ருன்.

பல்கோடிக்கணக்கான எண்ணில்லாத எல்லாவுயிர் களிலும் குமாரக் கடவுள் ஒருவரே உயிருக்குயிராய்ஊடு ருவித் திகழ்கின்ருன்; மணிகள் பலவற்றில் நூல் ஒன்றே ஊடுருவி யிருப்பதுபோல் என அறிக.

மணிகணே ஸூத்ரமிவ ஸர்வக்ஷேத்ரேஷு
அநுஸ்யூதத்வேன
அந்தர்யமயந் ப்ரகாசதேஹ்யாத்மா ஸோந்தர்யாமீ.
—சர்வசார உபநிடதம்

ஒரு கோபுரம் புதுக்கி அதன் உச்சியில் தங்கக் கல சம் அமைப்பதுபோல், இந்தக் கந்தரநுபூதியின் முடி வில் குக என்ற மந்திரம் ஒளி செய்து கொண்டிருக்கின் றது. "குகா, குகா!" என்பார்.பிறவிக் கடலைக் கடப்பர்.

"பவ சாகரத்திலழுந்தி யெழா எழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகா எனும்
வகைவராதோ" —(ஓலமிட்ட) திருப்புகழ்

கருத்துரை

குகனே! குருவாய் வந்து அருள்.

குறிப்பு :—

பேசா அநுபூதி பிறந்ததுவே என்று முடிகின்ற 43 ஆவது பாடலுடன் அநுபூதி முற்றுப்பெற்றது என்று ஒரு சிலர் கூறுவர்.

"அநுபூதி ஐம்பதுமே ஆருயிர் பேரின்ப
அநுபூதி நல்குமணி"

என்று தணிகையுலாவில் வருவதாலும், பாடலின் அமைப்பு அருமை பெருமைகளாலும் 51 பாடல்கள் கொண்டது அநுபூதி என்பதுவே உறுதி.

பின்னர் யாரோ இன்னும் 50 பாடல்களைப் பாடிச் சேர்த்துவிட்டார்கள். அவைகள் அருணகிரியார் வாக்குகள் அல்ல.

இந்தக் கந்தரநுபூதி, திருவருட்பிரசாத அநுபவ ஞான நூலாகும். வானோரும் போற்றும் இதனை ஏனோரும் நாடோறும் பாராயணம் புரிந்து ஆராவமுதம் பெறுவார்களாக. வாழ்க முருகனருள். வெல்க முருகன் சீர். போற்றி அருணை முனிவரடி.

முற்றிற்று.

விருப்புடன் உபய சரண மென்மலரை
வேண்டுவார் வேண்டிய தளிக்கும்
பொருப்புகள் தோறு நின்றருள் ஒருவன்
புகழினை அகநெகப் புகன்று
கருப்புகுதாத கதிதனைக் காட்டும்
கலையுணர் புலவர்கள் திலகம்
திருப்புகழ் அருண கிரியெம தடிகள்
திருவடி குருவடி வாமே.